மீனாட்சி
புத்தக
நிலையம்

# உண்மை சுடும்

ஜெயகாந்தன்

Anand..

# உண்மை சுடும்

பாரதீய ஞானபீடப் பரிசு பெற்ற

## ஜெயகாந்தன்

**மின்னூலாக்கம் : செல்லா**

மீனாட்சி புத்தக நிலையம்

மயூரா வளாகம், 48, தானப்ப முதலி தெரு, மதுரை – 625 001.
தொலைபேசி அலுவலகம்: 2345971 வீடு: 2560517
ஈ–மெயில் meenakshiputhakam@hotmail.com

மின்னூலாக்கம்
செல்லா
www.minnoolakam.blogspot.com

முதற்பதிப்பு செப்டம்பர், 1964
பத்தாம் பதிப்பு ஜுன், 2005
மீனாட்சி-195
உரிமை பதிவு
விலை ரூ. **50.00**

## நூல் விபரம்

| | |
|---|---|
| நூலின் பெயர் | உண்மை சுடும் |
| ஆசிரியர் பெயர் | ஜெயகாந்தன் |
| நூலின் தன்மை | சிறுகதைகள் |
| பத்தாம் பதிப்பு | ஜுன், 2005 |
| தாளின் தன்மை | வெள்ளைத் தாள் |
| நூலின் அளவு | 18 X 12.5 செ.மீ. |
| அச்சு எழுத்து அளவு | 10 புள்ளி |
| மொத்த பக்கங்கள் | 192 |
| நூலின் விலை | ரூ.50.00 |
| நூல் கட்டுமானம் | அட்டைக்கட்டு |
| கணினி அச்சு | சிவா கிராபிக்ஸ், சென்னை. |
| அச்சிட்டோர் | விசாலாட்சி பிரிண்டர்ஸ், .சென்னை. |

**MEENAKSHI PUTHAKA NILAYAM**
48, Dhanappa Mudali Street,
Madurai - 625 001

# முன்னுரை

சென்னை அரசாங்கத்தின் ஆதரவில் ஒரு தமிழ் சிறுகதைத் தொகுப்பு- ஆங்கில மொழி பெயர்ப்பு- The Plough and the stars -என்ற தலைப்பில் ஒரு தொகுதி வெளிவந்திருக்கிறது.

இதைச் சகட்டுமேனிக்கு விளாசித்தள்ளி ஹிந்துப் பத்திரிகையில் ஒரு விமர்சனமும் வந்தது. நமக்குஆட்சேபணையே இல்லை. விமர்சனம் செய்தவரும் ரொம்பக் காலமாகத் தமிழ்ச் சிறுகதையுலகில் குப்பை கொட்டி வந்தவர்தான். இப்போது இவர் குப்பைகள் பத்திரிகைக் காரியாலயங்களில் சென்று இவர் மூஞ்சியிலேயே திருப்பியடிக்கப்படும் 'மர்ம அடி'களை நான் ரசித்துக் கொண்டுமிருக்கிறேன். இதை ஏன் குறிப்பிட நேர்கிறது எனில் திருப்பியடிக்கப்பட்டதை 'இலக்கியம்' என்றும் பிரசுரிக்கப்பட்டதை பத்திரிகைக் குப்பை என்றும் இவர் சொல்லி வரும் மானக்கேட்டைக் கண்டு நீங்கள் சிரிக்க வேண்டுமென்பதற்காகத்தான். பாவம், இவர் கதை இதில் இல்லை போலும்!

இந்த வயிற்றெரிச்சலை 'எனக்கு வயிறு எரிகிறது' என்று மூன்று வார்த்தைகளில் முடித்துக் கொண்டிருக்கலாம். ஆனால், அது விமர்சனமாகாதே! ஆகவே இவர் 'விமர்சனம்' செய்துள்ளார். எப்படி? 'இவருடைய இந்தக் கதையைவிட நல்ல கதைகள் உண்டு- அதைச் சேர்த்திருக்கலாம்; இதை விட்டிருக்கலாம்' என்ற முறையில் சிலரின் கதைகளைக் குறித்து ஏதோ பேசி, 'சிலரை விட்டிருக்கலாம்' என்று உணர்த்தி, (சிலரைச் சேர்த்திருக்கலாம் என்று இதற்குப் பொருள்) இந்தக் காரணங்களுக்காகத் தொகுப்பாளரை ஒரு சாடு சாடி இருப்பது என்ன விமர்சன நேர்மையோ?

இப்படி ஒரு விமர்சனமா? என்பது ஒரு புறமிருக்கட்டும். இதில் எந்த அளவுக்கு உண்மையும், நியாயமும் இருக்கிறது என்று கவனித்தால் 'எழுதியது பிரசுரமாகும்' என்ற தெம்பு வந்து விட்டால் இவர்கள் எவ்வளவு பொறுப்பற்ற (Blackmail-

ers) 'அவதூறுப் பிழைப்புக்காரர்'களாக மாறுகிறார்கள் என்பதை யாரும் அறிய முடியும். நான் பல சமயங்களில் இந்த உண்மையைக் கண்டிருக்கிறேன்.

கலை-இலக்கிய விஷயத்தில் ஒரு சோஷலிஸ்டு அரசாங்கம் எந்த அளவுக்கு ஈடுபாடுகொள்ளுமோ அந்த அளவுக்கு நமது அரசாங்கம் ஈடுபட வேண்டும் என்ற கொள்கையும்- ஈடுபாடு கொள்ளவில்லையே என்ற குறையும் உடையவன் நான். (சோஷலிஸ்டு அரசாங்கங்களின் நடைமுறைத் தவறுகள் எனக்கு உடன்பாடு அல்லதான்!)

ஆனால் நானும்கூட இப்படி ஒரு முயற்சிக்கு என்னிடம் கதை கேட்டபோது பல மாதங்கள் வாளாவிருந்தேன்... ஒரு முறைக்கு மூன்று முறை அவர்களின் கடிதம் வந்தபின்- எனக்கு நான் எழுதியவையெல்லாம் அதனதன் அளவில் சிறந்தது என்பதால் பத்திரிகையிலிருந்து ஒரு கதையைப் பிய்த்து அனுப்பினேன். என் கதைகளில் சிறந்ததைத்தான் அவர்கள் கேட்டார்கள். அதை எனக்கு விருப்பமானவர்களை வைத்தே மொழிபெயர்த்து அனுப்பும்படியும் அதற்குரிய சன்மானத்தை அனுப்புவதாகவும் கூறியிருந்தனர். நான் எல்லாப் பொறுப்பையும் அவர்கள் தலையிலேயே கட்டி விட்டேன்.

தொகுப்பு எப்படி வெளியாயிற்று என்று எனக்குக் கவலையில்லை என்று விமர்சகர்கள் சொன்னால் அதிலிருக்கும் கதைகளைப் பற்றிப் பேசட்டும். நியாயம் ஒன்றுமில்லாமல், காரணம் ஏதும் அறியாமல், வரைமுறையில்லாமல் மட்டையடி அடிப்பது என்று தீர்மானித்தால், திருப்பியடித்து இந்த விமர்சகனை நொறுக்கிவிடும் ஜாம்பவான் அடியும் நமக்குக் கைவந்த கலைதான் என்று காட்ட வேண்டி வரும்; வருகிறது.

இந்தப் புத்தக விமர்சனத்தை ஒரு உதாரணத்துக்குத்தான் எடுத்துக் கொண்டேன்.

தனக்கு ஒவ்வாததை ஒதுக்கி, ஏற்றதை எடுத்து விமரிசையாகக் கூறப்புகும் கலையே விமர்சனம்! இங்கே அது சில 'விமர்சகர்'களால் சுயலாபம் கருதித் துதிபாடும், அல்லது இழித்துப் பழிக்கும் 'தரகு'த்தனமாகிவிட்டது. இவர்கள் வேறு தரகுகள் செய்வதே உசிதம்!

பொதுவாகவே இந்த 'மணிக்கொடிப்பதர்' இலக்கிய உலகத்தில் விதூஷகக் கோமாளி! மிரட்டிக் காரியம் சாதிக்க எண்ணி, பயந்தவர்கள் மத்தியில் ஒளிந்துகொண்டிருப்பதால் கோமாளிக்கே உரிய குறும்புடன் பலரிடம் விளையாடி வருகிறவர். இதை அசட்டை செய்தே வருகிறேன் நான். எல்லாச் சமயங்களிலும் இந்தப் 'பெருந்தன்மை' எனக்கும் இல்லை; இருக்கவும் கூடாது என்பதால் இந்த அவதூறுக்காரர்கள் இலக்கிய சம்பந்தமுடையவர்கள் அல்ல என்று நான் உணர்த்தக் கடமைப்பட்டவன் என்று எண்ணுகிறேன். அதுவும் இந்தத் தொகுதியின் முன்னுரையை இதற்குப் பயன்படுத்திக் கொள்வது சில வகைகளில் பொருத்தமில்லை எனினும் பல வகைகளில் பொருத்தமுடையதாகும்.

இந்தப் பேர்வழி என்னைப்பற்றிக் குறிப்பிடுவதாகக் கருதிக் கொண்டு அண்மையில் வெளிவந்துள்ள தனது பத்திரிகையில்:

'ஒரே இலக்கியாசிரியன் மாதம் ஒரு கதை என்று திட்டமிட்டு கதை எழுதிப் பணம் பண்ணவேண்டிய நிலை ஏற்படுகிறபோது லியோனார்டு மொர்ரிக்கையும், ஆல்பெர்ட் மொரோவியாவையும் நம்ப வேண்டியதாக வந்துவிடுகிறது. இதை எடுத்து எவ்வளவுதான் திறம்படச் செய்தாலும் பத்திரிகைக்குப் போதும்- இலக்கியத்துக்குப் போதாது என்று சொல்கிற விமர்சகனைக் கூறை கூறிப் பயனில்லை' -இதைப் படித்து நான் முதலில் சிரித்தேன். இதற்குமுன் எனது நாவலை விமர்சிக்கப் புகுந்த இவர் 'ஆல்பெர்ட் மொரோவியாவை நினைவூட்டும் கதைப்போக்கு' என்று குறிப்பிட்டிருக்கிறார். 'எவ்வளவு கேவலமாக நம்மை அவமதிக்க முயல்கிறார் இந்த ஆள்' என்று எண்ணியபோதுதான் பெரிதும் அருவருப்படைந்தேன்.

இவ்விதம் மான வெட்கமற்ற ஒரு குற்றச்சாட்டை மறைந்திருந்து வீசுவதுதான் இலக்கிய விமர்சனமோ?

பணத்திற்காக எழுத முயன்று தோற்றுப் போனவர் இந்த ஆள். "சரஸ்வதியின் அருள்பெற்று அவள் கைப்பிடித்து நடந்த எண்ணற்ற கலைக் குழந்தைகளில் கடைசிப் புதல்வனாகவேனும் நான் சென்றால் போதும்! அந்த லட்சுமிதேவி என் பின்னால்

ers) 'அவதூறுப் பிழைப்புக்காரர்'களாக மாறுகிறார்கள் என்பதை யாரும் அறிய முடியும். நான் பல சமயங்களில் இந்த உண்மையைக் கண்டிருக்கிறேன்.

கலை-இலக்கிய விஷயத்தில் ஒரு சோஷலிஸ்டு அரசாங்கம் எந்த அளவுக்கு ஈடுபாடுகொள்ளுமோ அந்த அளவுக்கு நமது அரசாங்கம் ஈடுபட வேண்டும் என்ற கொள்கையும்- ஈடுபாடு கொள்ளவில்லையே என்ற குறையும் உடையவன் நான். (சோஷலிஸ்டு அரசாங்கங்களின் நடைமுறைத் தவறுகள் எனக்கு உடன்பாடு அல்லதான்!)

ஆனால் நானும்கூட இப்படி ஒரு முயற்சிக்கு என்னிடம் கதை கேட்டபோது பல மாதங்கள் வாளாவிருந்தேன்... ஒரு முறைக்கு மூன்று முறை அவர்களின் கடிதம் வந்தபின்- எனக்கு நான் எழுதியவையெல்லாம் அதனதன் அளவில் சிறந்தது என்பதால் பத்திரிகையிலிருந்து ஒரு கதையைப் பிய்த்து அனுப்பினேன். என் கதைகளில் சிறந்ததைத்தான் அவர்கள் கேட்டார்கள். அதை எனக்கு விருப்பமானவர்களை வைத்தே மொழிபெயர்த்து அனுப்பும்படியும் அதற்குரிய சன்மானத்தை அனுப்புவதாகவும் கூறியிருந்தனர். நான் எல்லாப் பொறுப்பையும் அவர்கள் தலையிலேயே கட்டி விட்டேன்.

தொகுப்பு எப்படி வெளியாயிற்று என்று எனக்குக் கவலையில்லை என்று விமர்சகர்கள் சொன்னால் அதிலிருக்கும் கதைகளைப் பற்றிப் பேசட்டும். நியாயம் ஒன்றுமில்லாமல், காரணம் ஏதும் அறியாமல், வரைமுறையில்லாமல் மட்டையடி அடிப்பது என்று தீர்மானித்தால், திருப்பியடித்து இந்த விமர்சகனை நொறுக்கிவிடும் ஜாம்பவான் அடியும் நமக்குக் கைவந்த கலைதான் என்று காட்ட வேண்டி வரும்; வருகிறது.

இந்தப் புத்தக விமர்சனத்தை ஒரு உதாரணத்துக்குத்தான் எடுத்துக் கொண்டேன்.

தனக்கு ஒவ்வாததை ஒதுக்கி, ஏற்றதை எடுத்து விமரிசையாகக் கூறப்புகும் கலையே விமர்சனம்! இங்கே அது சில 'விமர்சகர்'களால் சுயலாபம் கருதித் துதிபாடும், அல்லது இழித்துப் பழிக்கும் 'தரகு'த்தனமாகிவிட்டது. இவர்கள் வேறு தரகுகள் செய்வதே உசிதம்!

பொதுவாகவே இந்த 'மணிக்கொடிப்பதர்' இலக்கிய உலகத்தில் விதூஷகக் கோழை! மிரட்டிக் காரியம் சாதிக்க எண்ணி, பயந்தவர்கள் மத்தியில் ஒளிந்துகொண்டிருப்பதால் கோழைக்கே உரிய குறும்புடன் பலரிடம் விளையாடி வருகிறவர். இதை அசட்டை செய்தே வருகிறேன் நான். எல்லாச் சமயங்களிலும் இந்தப் 'பெருந்தன்மை' எனக்கும் இல்லை; இருக்கவும் கூடாது என்பதால் இந்த அவதூறுக்காரர்கள் இலக்கிய சம்பந்தமுடையவர்கள் அல்ல என்று நான் உணர்த்தக் கடமைப்பட்டவன் என்று எண்ணுகிறேன். அதுவும் இந்தத் தொகுதியின் முன்னுரையை இதற்குப் பயன்படுத்திக் கொள்வது சில வகைகளில் பொருத்தமில்லை எனினும் பல வகைகளில் பொருத்தமுடையதாகும்.

இந்தப் பேர்வழி என்னைப்பற்றிக் குறிப்பிடுவதாகக் கருதிக் கொண்டு அண்மையில் வெளிவந்துள்ள தனது பத்திரிகையில்:

'ஒரே இலக்கியாசிரியன் மாதம் ஒரு கதை என்று திட்டமிட்டு கதை எழுதிப் பணம் பண்ணவேண்டிய நிலை ஏற்படுகிறபோது லியோனார்டு மொர்ரிக்கையும், ஆல்பெர்ட் மொரோவியாவையும் நம்ப வேண்டியதாக வந்துவிடுகிறது. இதை எடுத்து எவ்வளவுதான் திறம்படச் செய்தாலும் பத்திரிகைக்குப் போதும்- இலக்கியத்துக்குப் போதாது என்று சொல்கிற விமர்சகனைக் கூறை கூறிப் பயனில்லை' -இதைப் படித்து நான் முதலில் சிரித்தேன். இதற்குமுன் எனது நாவலை விமர்சிக்கப் புகுந்த இவர் 'ஆல்பெர்ட் மொரோவியாவை நினைவூட்டும் கதைப்போக்கு' என்று குறிப்பிட்டிருக்கிறார். 'எவ்வளவு கேவலமாக நம்மை அவமதிக்க முயல்கிறார் இந்த ஆள்' என்று எண்ணியபோதுதான் பெரிதும் அருவருப்படைந்தேன்.

இவ்விதம் மான வெட்கமற்ற ஒரு குற்றச்சாட்டை மறைந்திருந்து வீசுவதுதான் இலக்கிய விமர்சனமோ?

பணத்திற்காக எழுத முயன்று தோற்றுப் போனவர் இந்த ஆள். "சரஸ்வதியின் அருள்பெற்று அவள் கைப்பிடித்து நடந்த எண்ணற்ற கலைக் குழந்தைகளில் கடைசிப் புதல்வனாகவேனும் நான் சென்றால் போதும்! அந்த லட்சுமிதேவி என் பின்னால்

கைகட்டி வருவதானால் வரட்டும்; வராவிட்டால் போகட்டும்" என்று பேனா பிடித்தவன் நான்.

நானோ- எழுதுவதற்கு ஒரு ஆயுள் போதாது; இருக்கின்ற காலத்தையும் எழுதாமல் அரசியலில் விரயமாக்குகிறேன் என்று எண்ணுகிறேன். இவ்விதம் எனது இலக்கிய நண்பர்களால் எச்சரிக்கவும் படுகிறேன்.

'நாம் காலட்சேபக்காரர்களா? அல்லவே? அல்லது அரசியல்வாதிகளா? அதுவும் அல்லவே?' என்று கேட்கும் இவர் அந்தப் பெரிய பீடங்களில் ஏற முயன்று வழுக்கி விழுந்தவர் என்றும் எனக்குத் தெரியும்.

வையகம் காப்பவரேனும் சிறு வாழைப்பழக் கடை வைப்பவரேனும் செய்யும் தொழிலுக்கு ஒரு தர்மம், ஒரு நேர்மை உண்டு- அது எல்லோருக்கும் பொது. அந்த ஒன்று இல்லாத 'அல்காப் பேர்வழி'கள் எதுவாக இருந்துதான் என்ன பயன்?

தேச நன்மைக்கான ஒரு கருத்துக்காக உயிரைப் பணயம் வைத்துத் தீக்குளிக்கும் அரசியல்வாதிகள் உண்டு என்ற விஷயம் எனக்குத் தெரியும்; அவர்கள் இருக்கும் திசையை நான் வணங்குகிறேன்.

அதே சமயம் அவர்கள் மத்தியில் தனக்கு மாறுபட்ட கருத்துக்களை மனம் திறந்து கிரகிக்கும் பலம் சிலரிடமும், அவ்விதம் முடியாத பலவீனம் பலரிடம் உண்டு என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். எனினும் அந்த ஆத்மபலம் எனக்கும் அவர்களுக்கும் பெருகவே நான் பாடுபடுகிறேன்.

ஒரு பத்திரிகைக்குக் கட்டுரை தருவதாகச் சொல்லித் தரவில்லை என்ற ஒரு நடைமுறைத் தவறுக்காக அவர்களை 'இவர்கள் எழுத்தாளர்களே அல்ல; பொய்யர்கள்' என்று வெடித்துப் பொறியும் அளவுக்குப் பலவீனம் கொண்டு, ஏழாந்தர அரசியல்வாதிகள்கூட செய்யக் கூசும் இழிந்த நடைமுறைகளைக் கையாளும் இவருக்கு எந்த அரசியல்வாதியும் கேவலமாகி விடவில்லை என்று பிரகடனம் செய்ய நான் விரும்புகிறேன்.

நான் இந்தக் கதைகளையெல்லாம் எழுதும்போது பெற்றிருந்த அந்தரங்க சுத்தியைப் பற்றி- எனது பிரிய வாசகரிடம் கூட- விவரித்துக் கொண்டிருப்பது அநாவசியம் என்றே கருதுகிறேன். அதை நீங்களே உணர்வதுதான் சிறப்பு.

இந்தக் கதைகளைப் பற்றி எழுத எவ்வளவோ இருக்கின்றபோது- இப்படிப்பட்ட ஒரு கசப்பான, அல்பமான ஒரு 'விமர்சகரி'ன் பொருட்டு இந்தப் பக்கங்களை அபகரித்துக் கொண்டதற்காக வாசகர்களிடமும் பதிப்பாளரிடமும் மன்னிப்புக் கோருகிறேன். சில உண்மைகள் சுடும், சுடட்டுமே...

இத்தொகுதியில் உள்ள கதைகளில் 'பிம்பம்' கல்கியிலும் 'பத்தினிப் பரம்பரை' தாமரையிலும், 'பித்துக்குளி', 'சலிப்பு' ஆகியவை நண்பர் ரகுநாதன் நடத்திய 'சாந்தி'யிலும் மற்றவை அனைத்தும் ஆனந்தவிகடனிலும் வெளியானவை. அவ் ஆசிரியர்களுக்கு நன்றி.

இலக்கியம் பற்றிய எனது பார்வையிலும் சரி, என் படைப்புக்களிலும் சரி, தவறுகள் இருக்கலாம்! இருக்கும். அவை சுயமான தவறுகளாகவும் புதுமையான தவறுகளாகவும் இருப்பதிலேயே நான் மகத்தான திருப்தியுறுகிறேன்.

இந்த ஆத்ம திருப்தி போதும். விருதுகள் இல்லையே, பரிசுகள் இல்லையே, தகுதியற்றவர்களுக்கெல்லாம் அது கிடைக்கிறதே என்றெல்லாம் தகுதியற்றவர்களே புலம்பிக் கொண்டிருப்பார்கள்.

வாழ்க்கையைப் பற்றிய எனது விமர்சனமே- வாழ்வின் மகத்துவம் குறித்து அதற்கு நான் தரும் எளிய விருதுகளே- எனது கதைகள்! அவற்றின் குறைகளுக்கு நான் பொறுப்பு; நிறைகளுக்கு நீங்களே உரியவர்கள்!

**அன்பு,**
**த.ஜெயகாந்தன்**

**2.9.1964**
**சென்னை—8**

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1. | உண்மை சுடும் | (ஆக: 1963) | 9 |
| 2. | இருளைத் தேடி | (பிப்: 1964) | 29 |
| 3. | சாத்தானும் வேதம் ஓதட்டும் | (டிச: 1963) | 52 |
| 4. | பொய் வெல்லும் | (அக்: 1963) | 69 |
| 5. | பத்தினிப் பரம்பரை | (மே: 1960) | 88 |
| 6. | என்னை நம்பாதே | (நவ: 1962) | 99 |
| 7. | அன்புக்கு நன்றி | (ஜன: 1963) | 113 |
| 8. | பித்துக்குளி | (ஜூலை: 1955) | 120 |
| 9. | பிம்பம் | (ஜூன்: 1962) | 128 |
| 10. | ஆளுகை | (நவ: 1963) | 142 |
| 11. | ஹீரோவுக்கு ஒரு ஹீரோயின் | (ஏப்: 1964) | 153 |
| 12. | சலிப்பு | (மார்ச்: 1955) | 180 |

# உண்மை சுடும்

அது சோமநாதனின் கண்களை உறுத்திற்று. பரமஹம்சரும், விவேகானந்தரும் இருபுறமும் இருக்க, அந்த வரிசையில் தனது படத்தையும் வைத்திருக்கும் கோலத்தை முகம் சுளித்து யோசித்தவாறு மூக்குக் கண்ணாடியை நன்றாக உயர்த்தி விட்டுக்கொண்டு எழுந்து, சுவரருகே சென்று கூர்ந்து நோக்கினார் சோமநாதன்.

அப்போது ஹார்லிக்ஸ் கலக்கிக் கொண்டு வர உள்ளே சென்றிருந்த அவரது மருமகள் கோதை, கையிலேந்திய கப் அண்ட் ஸாஸருடன் ஹாலுக்குள் வந்தாள். சோமநாதன் அவளைத் திரும்பிப் பார்த்தார்.

"இதெல்லாம் யாருடைய வேலை?" என்று தன் படத்தை ஆள் காட்டி விரலால் சுட்டியவாறு கேட்டார்.

கையிலிருந்ததை டிபாயின் மீது வைத்து விட்டு அவரருகே வந்து நின்று அந்தப் படங்களைப் பார்த்தவாறு கோதை சொன்னாள்; "நான் இந்த வீட்டுக்கு வர்ரத்துக்கு முன்னாலிருந்தே இந்தப் படம் இங்கே இருக்கு. தன் வணக்கத்துக்குரிய மேதைகளின் திருவுருவங்கள் இவைன்னு நண்பர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கிறார் அவர். என் கிட்டேயும் அப்படித்தான் சொன்னார்?...." அவள் அதைச் சொல்லி முடிக்குமுன், மூக்குக் கண்ணாடியைக் கழட்டி மேலே போர்த்தியிருந்த சால்வையில் துடைத்தவாறு கிளுகிளுத்த சிரிப்புடன் அவர் சொன்னார்; "என்ன விசித்திரமான இணைப்பு... ஆஸ்திகச் செம்மல்களான அவர்கள் நடுவே, நிரீச்வரவாதியான என் படமா?...." என்று முனகியவாறே, முழங்கையில் தொங்கிய கைத்தடியை வலது கையில் எடுத்து மெள்ள ஊன்றி நடந்து சோபாவில் வந்தமர்ந்தார் சோமநாதன்.

கோதை ஹார்லிக்ஸை எடுத்து அவர் கையில் தந்தாள். வயோதிகத்தால் தளர்ந்த கைகள் நடுங்க அவர் அதைப் பருகினார். சூடான பானத்தைப் பருகியவுடன் அவரது நெற்றி வேர்த்திருப்பதைக் கண்ட கோதை, மின்சார விசிறியைச் சுழல விட்டாள். காற்றில் அவரது நரைத்து அடர்ந்த கிராப்புச் சிகை நெற்றியில் விழுந்து கொத்தாய்ப் புரண்டது. சோமநாதனின் பார்வை ஹாலை நோட்டமிட்டு அங்கிருந்த ரேடியோ, அந்த மூலை ஸ்டாண்டில் உள்ள புத்தர் சிலை, ஜன்னலுக்குப் போட்டிருந்த வெளிறிய நீல நிறத் திரைச்சிலை முதலிய பொருட்களைக் குறிப்பாகக் கவனித்த பின், கோதையின் மேல் வந்து நிலை பெற்றது. அவர் விழிகளில் அன்புணர்ச்சி மின்னிப் புரள ஒரு குழந்தை போல் புன்னகை காட்டினார்.

அந்தப் புன்னகை, "அடி சமர்த்துப் பெண்ணே, வீட்டை ரொம்ப அழகாக வெச்சிருக்கே' என்று பாராட்டுவது போலும், 'சந்தோஷமாயிருக்கிறாயா மகளே' என்று விசாரிப்பது போலும், 'உன்னைப் பார்க்க எனக்கு மிகத் திருப்தியாயிருக்கிறது' என்று பெருமிதத்தோடு குதூகலிப்பது போலும் அமைந்திருந்தது.

அத்தனை அர்த்தங்களுக்கும் பதில் உரைப்பது போல் அடக்கமாய், பெண்மை நலன் மிகுந்த அமைதியோடு பதில் புன்னகை சிந்தினாள் கோதை. அவர் தனது கைக் கடிகாரத்தைப் பார்த்து, "ஓ! மணி அஞ்சாகிறதே... காலேஜிலிருந்து வர இவ்வளவு நேரமா! எனக்கு ஏழு மணிக்கு ரயில்..." என்றவாறு வெளியே எட்டிப் பார்த்தார்.

அதே நேரத்தில் காம்பவுண்ட் கேட் திறக்கப்படும் ஓசை கேட்டுக் கோதை ஆவலுடன் வெளியே நடந்தாள். பரமேஸ்வரனை இரு கைகளிலும் அணைத்துக் கொள்ள பரபரத்த உடலுடன் எழுந்து நின்றார் சோமநாதன்.

"அவர் இல்லை... போஸ்ட்மேன்— அவருக்கு ஏதோ ஒரு கடிதம்" என்று கூறியவாறு, அந்தக் கவரைத் திருப்பித் திருப்பிப் பார்த்தவாறே உள்ளே போனாள் கோதை. சோமநாதன் அருகிலிருந்த போட்டோ ஆல்பத்தை எடுத்துப் புரட்டியவாறு பரமேஸ்வரனின் வருகைக்குக் காத்திருந்தார்.

பரமேஸ்வரன் தற்போது தமிழ்ப் பேராசிரியராய்ப் பணியாற்றும் அதே கல்லூரியில்தான் பத்தாண்டுகளுக்கு முன் ஆங்கிலப் புரபஸராகப் பணியாற்றினார் சோமநாதன். அவரிடம் ஒரு மாணவனாக இருந்து அவர் ஓய்வு பெறுவதற்குள் அதே கல்லூரியில் பரமேஸ்வரன் விரிவுரையாளராகப் பணியேற்கும் அந்த இடைக்காலத்தில், வேறு எவரிடமும் ஏற்பட்ட உறவினும் வலுமிக்க பாந்தவ்யமும் நட்பும் அவர்களிடையே உருப்பெற்றது.

சோமநாதன் கல்லூரியிலிருந்து ஓய்வு பெற்றுச் சொந்தக்கிராமத்துக்குப் போய்விட்ட பிறகு பரமேஸ்வரனுக்கும் சோமநாதனுக்குமிடையே ஏதோ சில சமயங்களில் கடிதப் போக்குவரத்து இருந்தது. இரண்டாண்டுகளுக்கு முன் சோமநாதன் ஏதோ காரியமாகச் சென்னைக்கு வந்த போது பத்தாண்டுகளுக்குப் பிறகு சோமநாதனும் பரமேஸ்வரனும் சந்திக்க நேர்ந்தது. பரமேஸ்வரனைக் கண்ட சோமநாதன் ஒரு விநாடி திகைத்தே போனார். அதற்குக்காரணம் மாணவராய் இருந்து, விரிவுரையாளரான பரமேஸ்வரன் பேராசிரியராய் உயர்ந்திருப்பது மட்டுமல்ல;. புஷ்கோட்டும், கண்ணாடியும் தரித்த, காதோரம் சிகை நரைத்த— சோமநாதன் எதிர்பாராத- பரமேஸ்வரனின் முதிர்ந்த தோற்றம்தான். அதனினும் முக்கிய காரணம் நாற்பது வயதாகியும் அவர் பிரம்மச்சாரியாய் வாழ்ந்து வருவது..

தன் அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய ஆசானைக் கண்டதும் அவரது கைகளைப் பற்றி அன்புடன் கண்களில் ஒற்றிக் கொண்டு நின்ற பரமேஸ்வரனைப் பாசத்துடன் முதுகில் தட்டிக் கொடுத்தவாறு, "நீங்கள் இன்னும் பிரம்மச்சாரியாக இருந்து வருவதைக் காண ஏதோ ஒரு குற்ற உணர்வு என் மனத்தை உறுத்துகிறது... இந்த உறுத்தல் அர்த்தமற்றது என்று நீங்கள் கருதுகிறீர்களா?" என்று ஆங்கிலத்தில் கேட்டார் சோமநாதன்.

சோமநாதன் எப்போதும் தனது அபிப்பிராயத்தை அழுத்தமாகக் கூறிவிடுவார். ஆனால் அத்துடன் நிறுத்திக் கொள்ளமாட்டார்; யாரிடம் தன் அபிப்பிராயத்தைக் கூறுகிறாரோ அவரிடமே ஒரு வகை ஆமோதிப்பை, அல்லது

உடன்பாட்டை விரும்புகிற வகையில் மற்றவரின் அபிப்பிராயத்தையும் எதிர்பார்ப்பார். அது அவரது சிறப்பான பண்புகளில் ஒன்று என்பதைப் பரமேஸ்வரனும் அறிவார்.

பரமேஸ்வரனுக்குப் பெற்றோரோ மிக நெருங்கிய பந்துக்களோ யாரும் தற்போது இல்லை. அவர் தனியன். பரமேஸ்வரனைப் போன்ற அடக்கமான தனியர்களின் வாழ்க்கையில் 'திருமணம்' என்ற வாழ்வின் திருப்பம் நிகழ்வதெனின், நமது இன்றைய சமூகத்தில் நண்பர்களின் —பொறுப்பும் அந்தஸ்தும் மிகுந்த நண்பர்களின்— உதவியால்தானே நடத்தேற வேண்டும்! அப்படிப்பட்ட நண்பனாய், வழிகாட்டியாய், ஞானாசிரியனாய் இருந்து வந்த சோமநாதனின் கடமையல்லவா, அது? என்பனவற்றை யெல்லாம் நினைத்துத்தான் அவர் தன்னிடம் இவ்விதம் கேட்கிறார் என்பதைப் பரமேஸ்வரன் உணர்ந்தார்.

"ஏன்? பிரம்மசரியம் ஒரு குற்றமா?" என்று சிரித்த வண்ணம் கேட்டார். பரமேஸ்வரன்.

"அது குற்றமுமில்லை; சரியுமில்லை. குறையற்ற ஓர் ஆண் பிரம்மச்சரிய விரதத்தை அனுஷ்டிக்க ஒரு லட்சியம் வேண்டும். அப்படி ஒரு காரியத்தோடு இருந்தால் அந்தப் பிரம்மச்சரியம் சரியானது ஆகும். இல்லாமல் பிரம்மச்சரியத்துக்காகவே ஒருவன் பிரம்மச்சாரியாயிருந்தால் அது சரியற்றதும், பின்னால் ஒரு காலத்தில் குற்றமும் ஆகும். எதற்குமே ஓர் அர்த்தம் வேண்டும்; அர்த்தமே இல்லையென்றால் அதுக்குப் பெயரே அனர்த்தம்! உங்கள் பிரம்மச்சரிய விரதத்துக்கு ஒரு அர்த்தம் உண்டுன்னா, நான் என் அபிப்பிராயத்தை மாத்திக்கிறேன்" என்றார் சோமநாதன்.

பரமேஸ்வரன் ஒரு விநாடி யோசித்தார்; அது யோசனை யல்ல; அது ஒருவகை பிரமிப்பு. பிறகு புன்னகை புரிந்தார். அது புன்னகையல்ல! அது ஒருவகை சரணாகதி.

அந்தச் சந்திப்பின் போது அவர்கள் இருவரும் வெகு நேரம் சம்பாஷித்தனர். பத்து வருஷங்களுக்கு முன்பு சோமநாதனுடன்

பழகியபோது அவரை எந்த அளவுக்குப் புரிந்து கொண்டு எந்த அளவுக்கு அவரிடம் மதிப்பு வைத்திருந்தாரோ, அதைவிடவும், பத்தாண்டு முதிர்ச்சியின் பிறகு தனது முதிர்ந்த அறிவோடு அவருடன் சம்பாஷிக்கையில் பன்மடங்கு அதிகம் புரிந்துகொண்டு சோமநாதனிடம் முதிர்ந்த மதிப்பும் முழுமையான சரணும் அடைந்தார். பரமேஸ்வரன்.

பரமேஸ்வரனைப் பிரிந்து ஊர் திரும்பும் போது சோமநாதன் லீவில் தனது கிராமத்துக்கு வரவேண்டுமென்று அவரை அழைத்தார்.

"இந்த அழைப்பைக் கடமை உணர்ச்சியோடு விடுக்கிறேன்" என்று ஆங்கிலத்தில் கூறிப் பின் தமிழில் தொடர்ந்து சொன்னார்." சிறு வயதிலிருந்தே தாய் தகப்பனில்லாம என் தங்கை மகள் ஒருத்தி என் கிட்டே வளர்ப்புப் பெண்ணாய் இருக்கா.. அவளும் கல்யாணமே வேணாம்னு இருந்தவ.. இப்ப அவள் மனம் அதற்குப் பக்குவப்பட்டிருக்கிற மாதிரி தோணுது... எதுக்கும் நீங்க ஒரு தடவை வாங்க. பரஸ்பரம் சரின்னா நடத்தி வைக்கிறது என் கடமை..." -குலம் கோத்திரம் விசாரிக்காமல் மனிதனின் தரத்தையும் நட்பையும் உத்தேசித்து நடக்கும் அவரது உயரிய பண்பை உள்ளூரப் போற்றினார் பரமேஸ்வரன்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன் அந்தத் திருமணம் நடந்தது. திருமணம் நிகழுமுன் பரமேஸ்வரனுக்கு ஒரே ஒரு விஷயம் மனத்தை உறுத்திக் கொண்டே இருந்தது. கோதைக்கு இருபது வயது. பரமேஸ்வரனுக்கு நாற்பது வயது.

பரமேஸ்வரனின் இந்தத் தயக்கத்தை உணர்ந்தபோது சோமநாதன் விளக்கினார். "வயதில் இவ்வளவு வித்தியாசம் வேணாம்னு நீங்கள் நெனைச்சா உங்கள் தனிப்பட்ட விருப்பம்ங்கற முறையில் அது சரிதான். அதற்கு வேறே காரணம் இல்லேன்னாலும் அப்படி ஒரு தனிப்பட்ட மனோபாவனை உங்களுக்கு இருக்குங்கற ஒரு காரணத்தை உத்தேசிச்சே இந்த யோசனையைக் கைவிட்டுவிடலாம்; நீங்களே யோசிச்சு முடிவு செய்யவேண்டியது இது."

கறாராக, முடிவாக என்ன கூறுவது என்று பரமேஸ்வரனுக்குப் புரியவில்லை. சோமநாதன் தனது அபிப்பிராயத்தை வற்புறுத்துகிறவருமில்லை. அவரது யோசனையை மறுத்து விட்டால் வருத்தப்படக் கூறியவருமில்லை என்று பரமேஸ்வரன் நன்கு உணர்ந்ததனாலேயே, இதில் என்ன முடிவெடுப்பது என்று புரியாமல் குழம்பினார்.

அவரது மேலோட்டமான குழப்பத்தையும் உள்ளார்ந்த சம்மதத்தையும் புரிந்துகொண்ட சோமநாதன் பரமேஸ்வரனிடம் தீர்மானமான தோரணையில் கேட்டார்" ஆமாம், உங்கள் தயக்கத்திற்கான பிரச்சனைதான் என்ன?"

பரமேஸ்வரன் தனது நாற்பது வயதை மறந்து- ஒரு வாலிபனுக்கே உரிய சங்கோஜத்துடன் தலை குனிந்து மெல்ல இழுத்தவாறு கூறினார்; "வயது வித்தியாசம் தான்..."

"ஓ!" என்று கூறிச் சிரித்தார். சோமநாதன்; "நான்தான் சொன்னேனே, இந்த வித்தியாசம் அதிகம்னு நீங்க நெனைச்சா, இந்த முயற்சியைக் கைவிட்டுடலாம்னு.. உங்க மனசிலே விருப்பம் இருந்து, பார்க்கறவங்க என்ன சொல்லுவாங்களோங்கற போலிக் கூச்சத்திற்காக ஒரு காரியத்திலே தயக்கம் காட்டறது அவசியமில்லாதது; அர்த்தமில்லாதது...

"உலகத்திற்காகவும் கொஞ்சம் யோசிக்க வேண்டியிருக்கு இல்லையா?" என்று உள்ளங்கையில் கோடு கீறினார் பரமேஸ்வரன்.

"ஆமாம் ஆமாம்; உலகத்திற்காகக் கொஞ்சம் என்ன, முழுக்க முழுக்க யோசிக்கணும், ஆனால், பரமேஸ்வரன்... உலகம்ங்கறது உங்களைச் சுத்தியுள்ள சிறு வட்டம் மட்டுமில்லை; அது எத்தனையோ கண்டங்களாய், நாடுகளாய்ப் பரந்து கிடக்கு... யோசிச்சுப் பார்த்தா அங்கெல்லாம் இந்த வித்தியாசம் ஒரு பொருட்டில்லை; நியாயமானது கூட! உங்கள் வசதிக்கு உங்கள் உலகத்தைச் சுருக்கிக் கொள்ள நீங்கள் விரும்பினா- ஒரு சின்ன அரட்டைக் கூட்டமே உலகம்னு பார்க்காதீங்க- அந்த உலகத்தை உங்களுக்குள்ளேயே உங்க ஹிருதயத்துக்குப்

பக்கத்திலே எளிமையா ஒரு மனிதனின் உலகம்னாவது பாருங்களேன்! அதன்படி சுயமான முடிவு செய்யுங்களேன்..." என்று சொல்லி, மௌனமாய்ச் சற்றுக் கண்மூடி யோசனையில் ஆழ்ந்தார் சோமநாதன்.

"இந்த மனிதர்தான் மனுஷனின் மனத்துக்குள் நுழைந்து எப்படி தீர்க்கமாய்ப் பார்க்கிறார்!" என்று வியந்து நோக்கினார் பரமேஸ்வரன்.

கண்களைத் திறவாமலே தொடர்ந்து பேசினார் சோமநாதன்; "ஒரு ஆண் கல்யாணம் செய்து கொள்ளும் போது தனக்காகவே செய்து கொள்வதாக நினைக்கிறான்; பெண்ணும் அப்படியே நினைக்கிறாள். தனக்காகச் செய்து கொள்கிற எந்தக் காரியமும் அதிருப்தியாய்த்தான் முடியும். கல்யாணத்தின் உண்மைத் தாத்பரியம் அதுவல்ல; தனக்காக வாழ்ந்துகிட்டிருந்த ஒருவனோ ஒருத்தியோ இன்னொருவர்க்காக வாழறதின் ஆரம்பமே திருமணம். சமூக வாழ்வின் சிறு வட்டம்- அடிப்படை வட்டம்- தாம்பத்யம். இந்த அடிப்படைக் கூட்டுறவிலேயே இந்தத் தியாக உணர்வு ஏற்பட்டாத்தான் சமூக வாழ்வே சிறப்பாய் அமையும். ஆனால் 'எனக்காக, என் சுகத்துக்காக'ங்கிற நோக்கிலேயே ஆணும் பெண்ணும் கல்யாணம் பண்ணிக்கிற ஒரு சுயநலப் போக்கினாலேதான், தனிமனுஷனின் குடும்ப வாழ்க்கையும் சரி, சமூக வாழ்க்கையும் சரி அதிருப்தியும் துன்பமுமா மாறிப்போகுது... நீங்கள் உங்களுக்காக அவளைக் கல்யாணம் செய்து கொள்வதாக நினைக்கக் கூடாது.. அவளுக்காக...! இதையேதான் நான் அவளுக்கும் சொல்லியிருக்கேன்... உறவின் அடிப்படையே இந்த பரஸ்பர உணர்வுதான்னு நீங்க நினைக்கிறீங்களா?..."

பரமேஸ்வரன் ஒரு விநாடி யோசித்தார். அது யோசனையல்ல.

இந்த இரண்டு வருட மணவாழ்க்கை, வாழ்க்கையின் அர்த்தத்தை அவருக்கு உணர்த்திற்று, கோதையில்லாமல் அவரால் இனி வாழ இயலாது என்ற உணர்வை ஒரு பந்தத்தை- அவர் ஏற்படுத்திக்கொண்டு விட்டார்- அல்லது

அவள் ஏற்படுத்திவிட்டாள். தன்னை ஒரு முழு மனிதனாகச் சோமநாதனும், தனது வாழ்க்கைக்கு ஒரு முழு அர்த்தத்தைக் கோதையும் உருவாக்கி விட்டதை உணர்ந்து அவரைத்த தனது வணக்கத்திற்குரிய வழிகாட்டியாகவும் அவளைத் தனது உயிருக்கிணையான துணையாகவும் ஸ்வீகரித்நார் பரமேஸ்வரன்.

தங்களது தாம்பத்ய வாழ்க்கை ஆனந்தமாயிருப்பதை, பரஸ்பரத் திருப்தியும் நிறைவும் மிகுந்து விளங்குவதை ஒரு நாள், இந்த வயது வித்தியாசம் குறித்துக் கோதையிடம் அவர் கேட்டு, அவளுரைத்த பதிலில் அவர் நன்கு உணர்ந்தார்.

மங்கிய ஒளி வீசும் சிறு விளக்கின் வெளிச்சத்தில் சயன அறையின் அந்தரங்கச் சூழ்நிலையில் அவரது மார்பில் சித்திரம் வரைந்தவாறு சாய்ந்து, செவியருகே இதழ்கள் நெருங்க ஆத்மார்த்தமான ரகசியக் குரலில் அவள் பேசிய போது அவருக்கு ரோமாஞ்சலி செய்தது...

"நீங்க கேட்டது மாதிரி, ஆரம்பத்திலே எனக்கும் இப்படி ஒரு நெனைப்பு இருந்தது... ஆனா, ஆனா... இப்ப தோணுது; எல்லாருமே உலகத்திலே இந்த வித்தியாசத்தோட கல்யாணம் பண்ணிக்கிட்டா எல்லாருடைய வாழ்க்கையும் சொர்க்கமாயிருக்கும்னு... ஒத்த வயசாயிருந்தா விட்டுக் குடுக்கற குணமோ இணக்கமாகிற குணமோ இருக்காதுன்னு தோணுது... இந்த வித்தியாசத்தினாலேயே ஒரு அந்நியோன்யமும், ஒரு... ஒரு. எனக்குச் சொல்லத் தெரியல்லே. நான் ரொம்ப சந்தோஷமாயிருக்கேன். அவ்வளவுதான் சொல்ல முடியுது" என்று அவரது கேள்விக்குப் பதிலாக அவள் வெகு நேரம் சிரமப்பட்டு வார்த்தைகளைத் தேடிப்பிடித்துத் தன் மனத்தைத் திறந்து அவர் மனத்துள் கொட்டிய போது, இருவர் உள்ளமும் நிறைந்தே வழிந்தன.

காஷ்மீரத்து ஏரிகளிலிருந்து கன்னியாகுமரி முக்கடல் வரை பின்னணியாகக் கொண்டு அவர்கள் இணைந்து இணைந்து காட்சி தரும் போட்டோக்கள் நிறைந்த அந்த ஆல்பத்தின் மூலமே அவர்களின் ஆனந்த மயமான குடும்ப வாழ்க்கையை உணர்ந்தார் சோமநாதன்.

ஆல்பத்தின் கடைசி ஏட்டைப் புரட்டி அதை மூடிய போது, தன் எதிரே “எப்போ வந்தீங்க?” என்று ஆர்வமாய்ப் புன்னகை பூத்து, கரம் குவித்து நிற்கும் பரமேஸ்வரனை ஹால் வாசற்படியில் கண்டு, இரண்டு கைகளையும் விரித்தவாறு எழுந்து நின்ற சோமநாதன் குழந்தை போல் சிரித்தார். பிறகு அருகில் வந்த பரமேஸ்வரனின் கையைக் குலுக்கித் தோளில் தட்டிக் கொடுத்தார்.

“திடீர்னு ஒரு அவசர வேலையா வந்தேன் இப்ப ஏழு மணி ரயில்லே போகணும்” என்று அவர் கூறியது கேட்டு பரமேஸ்வரனின் முகம் சுருங்கிற்று; ‘இப்பவே மணி அஞ்சரை ஆகுது. சரி, நான் உங்களோட ஸ்டேஷன் வரைவரேன்” என்று கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டார்.

“ஆஹா! அதற்கென்ன அவசரம்? இன்னும் ஒண்ணரை மணி நேரம் இருக்கு. நீங்க உடை மாத்தி, காபி சாப்பிட்டுட்டுப் புறப்படலாம்”

அந்த நேரத்தைக்கூட வீணாக்க மனமில்லாமல் ஹாலில் நின்று சோமநாதனைப் பார்த்தவாறே கோட்டைக் கழற்றினார் பரமேஸ்வரன். பக்கத்தில் வந்து தயாராய்க் கை நீட்டி அதை வாங்கிக்கொண்டு உள்ளே போன கோதை திரும்பி வரும் போது டவலுடன் வந்தாள். டவலைத் தோள்மீது போட்டுக் கொண்டு சோபாவிலமர்ந்து பூட்ஸ்களைக் கழற்ற ஆரம்பித்த பரமேஸ்வரனிடம், ஹாலில் இருந்த அந்தப் படங்களைப் பார்த்தவாறு கூறினார் சோமநாதன்” “இந்த வினோதமான இணைப்பைப் பார்க்க எனக்கு வேடிக்கையாக இருக்கு!”

பரமேஸ்வரனும் தலை நிமிர்ந்து பார்த்தார்; “இதில் என்ன வேடிக்கை? ஒருத்தர் எனக்கு அசைக்க முடியாத இறைநம்பிக்கை தந்தவர். இன்னொருத்தர் பிரம்மச்சரியத்தின் மேன்மையை எனக்கு உணர்த்தியவர்! நடுவில் இருக்கிறவர் பிரம்மச்சர்யத்தின் அர்த்தத்தை உணர்த்தி வாழ்க்கைக்கு வழி காட்டியவர். தாயும் தகப்பனும் இல்லாத எனக்கு இரண்டுமாகிய குருநாதர். என் பெற்றோரின் படம் என்கிட்டே

இல்லாத குறையையும் இந்தப்படம் தீர்த்து வச்சிருக்கு... இந்த மூவரும் எனது வணக்கத்திற்குரிய ஞானிகள்..."

"ஓ! டூமச்! நீங்கள் என்னை அதிகமாய்ப் புகழறீங்க"- என்று தோளைக் குலுக்கிகொண்டு எளிமையுணர்வோடு சிரித்தார் சோமநாதன்.

இல்லை, நான் உங்களை எளிமையாய் வழிபடுகிறேன்" என்று புனித உணர்வுடன் எழுந்து நின்றார் பரமேஸ்வரன்.

"வழிபாடா?" என்று புருவங்களைச் சுளித்தார் சோமநாதன் "அதில் எனக்கு நம்பிக்கையில்லை" என்றார்.

"வழிபாட்டில் நம்பிக்கை, வழிபடுகிறவனுக்குத்தானே தேவை! அதன்மூலம் எனக்கொரு மனோபலம் உண்டாகுது... உங்களுக்கு அதில் ஆட்சேபணையா?" என்று கேட்டுக் கொண்டே உள்ளே போனார் பரமேஸ்வரன்.

"மிகவும் உணர்ச்சி வயப்பட்ட மனிதர்!" என்று முனகிக் கொண்டார் சோமநாதன்.

சற்று நேரத்திற்குப்பின் தூய வேட்டியும் முழுக்கைச் சட்டையும் அணிந்து, நெற்றியில் பளீரெனத் தீட்டிய விபூதியுமாய் வந்த பரமேஸ்வரன் சோபாவில் வந்து அமர்ந்தார். கோதை ஹார்லிக்ஸ் 'கப்'புடன், சற்று முன் வந்த கடிதத்தையும் கொண்டுவந்து நீட்டினாள். பரமேஸ்வரன் அமைதியாய் ஹார்லிக்ஸைக் குடித்தபின் கவரைப் பிரித்துக் கடிதத்தைப் படித்தார்.

"பேராசிரியர் பரமேஸ்வரன் அவர்களுக்கு!

இது ஒரு மொட்டைக் கடிதம் என்று தூக்கி எறிந்து விட முடிவு செய்வதற்கு முன், மொட்டைக் கடிதங்களும் உண்மைகளைக் கூற முடியும் என்றறியவும்.

உமது வாழ்க்கையே ஒரு மகத்தான பொய்யை அடித்தளமாகக் கொண்டு எழுந்து நிற்கிறது. நீர் வணங்கத் தகுந்த தெய்வமாகக் கருதியிருக்கிறீரே, அந்த சோமநாதன்-

அவர் எத்தகைய பேர்வழி என்பதை நீர் அறிய மாட்டீர்! கோதையைப் போன்ற குணவதி உமக்கு மனைவியாக வாய்த்தது குறித்துக் குதூகலப்படுகிறீரே, அந்தக் கோதையின் கடந்த காலம் பற்றியும் நீர் அறிய மாட்டீர்! திருமணமாவதற்கு முன் அவள் ஒருவனின் காதலியாய் இருந்து காப்பமுற்றபின் கைவிடப் பட்டவள். தெய்வாதீனமாகவோ, அந்தப் பெரியவரின் ஆலோசனையின் விளைவாகவோ அது குறைப்பிரசவமாகப் போயிற்று. உம்மை ஏமாற்றி அவளைக் கட்டி வைத்துவிட்டார். உமது குரு நாதர். நீர் அவளுடன் மகிழ்ச்சியாக வாழ்க்கை நடத்தலாம். உம்மை நீரே ஏமாற்றிக் கொள்வதன் விளைவே இந்த மகிழ்ச்சி."

கையெழுத்தில்லாத அந்தக் கடிதத்தைப் படித்து முடிந்த வுடன் அதைக் கிழித்தெறிந்துவிட அவரது விரல்கள் துடித்தன. ஒரு விநாடி தயக்கத்துக்குப் பின், ஏனோ அக்கடிதத்தை மடித்துச் சட்டைப் பைக்குள் வைத்துக் கொண்டார்.

"ஏதாவது விசேஷமான செய்தியா?" என்று கேட்டார் சோமநாதன்.

"ம்... அதில் ஒண்ணுமில்லை... என்று பொய்யாகச் சிரித்தார் பரமேஸ்வரன். அந்தக் கடிதத்தை ஒரு பொருட்டாக்காமல் மனத்திலிருந்து ஒதுக்கிவிடவே முயன்றார் அவர். அவர் பார்வை ஹாலில் மாட்டியிருந்த அந்தப் படங்களின் மீதும், பிறகு சுவரோரமாகக் கையில் ஒரு பத்திரிகையுடன் தேவதை போல் நின்றிருக்கும் கோதையின் மீதும், இறுதியாகத் தனது மௌனத்தையும், தவிப்பையும் எடை போடுவது போல் தன்னையே, கவனித்துக் கொண்டிருக்கும் சோமநாதன் மீதும் மாறி மாறித் திரும்பிய போது, திடீரென அவருக்கு 'இந்த மனிதர் தனது உள்ளத்து உணர்வுகளைக் கண்டுபிடித்து விடுவாரோ' என்ற அச்சம் பிறந்தது.

அவர் முகம் திடீரெனக் கலவரமுற்றிருப்பதைக் கோதை உணர்ந்து கொண்டாள். அருகில் வந்தாள். "ஏன் தலை வலிக்கிறதா?" என்றாள்.

"இல்லை... என்று அவர் விழிகளை உயர்த்தி. அவளைப் பார்த்தபோது, அவரது கண்கள் சிவந்து பள பளத்தன.

"கண்ணெல்லாம் திடீர்னு செவந்து இருக்கே" என்று நெற்றியில் கை வைத்துப் பார்த்தாள். "லேசாச் சூடும் இருக்கு."

"எங்கே பார்ப்போம்" என்று எழுந்து வந்த சோமநாதன் பரமேஸ்வரனின் நெற்றியைத் தொட்டுப்பார்த்து, "ஒண்ணு மில்லே. களைச்சுப் போயிருக்கீங்க. நீங்க ரெஸ்ட் எடுத்துக்குங்க...நான் புறப்படறேன். அடுத்த வாரம் நான் வரும்போது ரெண்டு நாள் தங்குவேன்..." என்று தோளில் தட்டிக் கொடுத்தார்.

"எனக்கு ஒண்ணுமில்லே...கொஞ்சம் வெளியே போனாலும் நல்லாத்தானிருக்கும்...நான் உங்களுடன் ஸ்டேஷன் வரை வருவேன். நேரம்தான் இன்னும் இருக்கே. இதோ வரேன்" என்று மிகுந்த சிரமத்தோடு புன்னகை காட்டி விட்டு எழுந்து சென்று, கண்ணாடியில் தானே தன்னை ஒருமுறை பார்த்துக் கொண்டார் பரமேஸ்வரன். பிறகு சற்று நேரம் தனியாக இருக்க வேண்டி, மாடியில் போய் வானத்தை, வெறித்துப் பார்த்தவாறு நின்றிருந்தார். சட்டைப் பையிலிருந்து கடிதத்தை மீண்டும் எடுத்துப் பார்த்தார். 'மொட்டைக் கடிதங்களும் உண்மைகளைக் கூறமுடியும் என்றறியவும்... உமது வாழக்கையே ஒரு மகத்தான பொய்யை அடிப்படையாய்க் கொண்டு எழுந்து நிற்கிறது' என்ற இரண்டு வாக்கியங்களும், அந்தக் கடிதத்தை நம்பவும் முடியாமல் ஒதுக்கவும் முடியாமல் அவரை வதைத்தன.

திடீரென அவர் அந்தக் கடிதத்திடம் கேட்டார்.

'சரி, அப்படியே இருந்தால்தான் என்ன? கோதையின் கடந்த காலம் எத்தகையது என்பது பற்றி எனக்கென்ன கவலை? இன்று அவள் எனக்கு ஏற்ற மனைவி. அப்பழுக்கில்லாத தாம்பத்தியம் நடத்துகிறோம் நாங்கள். ஒரு தவறே நடந்திருந்தாலும் அதனால் ஒருவருக்கு வாழவே உரிமை அற்றுப் போகுமா, என்ன? என்று வாழத் தெரிந்த தெம்புடன் கேட்ட போது, காற்றில் அக்கடிதம் படபடத்தது. அவர் தன்

விரல்களைச் சற்று நெகிழ்த்தினால் அது பறந்தே போயிருக்கும். ஆனால் அவர் விரல்கள் அதை இறுகப் பிடித்திருந்தன. அதைச் சுக்கல் சுக்கலாய்க் கிழித்தெறிய ஒரு வெறியும், அதைச் செய்ய முடியாமல் ஓர் உணர்வும் அவரைத் தடுத்தன.

'இந்தக் கடிதம் என் மனைவியைப் பற்றிப் பேசுகிறது... இது கூறுவது உண்மையாயினும் சரி, பொய்யாயினும் சரி எங்கள் உறவு எவ்வகையிலும் ஊனமுறாது. ஆமாம், அவள் இல்லாமல் என்னால் வாழ இயலாது. நடந்தது பற்றிக் கவலையில்லை' என்று ஆன்ம உறுதியோடு தலை நிமிர்ந்து வானத்தைப் பார்த்தார். அடுத்த விநாடி அவர் நெற்றி சுருங்கிற்று.. கண்கள் இடுங்கின.. உள்ளில் ஒரு குரல் ரகசியமாகக் கேட்டது.

'எனினும் நடந்ததா என்று தெரிய வேண்டுமே! உண்மை எனக்குத் தெரியவேண்டுமே!' என்ற ஓர் எண்ணம் பெருகி வந்து சித்தம் முழுவதும் கவிழ்ந்தது. 'சீ, இந்த அற்பத்தனமான கடிதம் என்னை இவ்வளவு நிலைகுலையச் செய்வதா?" என்று எண்ணி அதை எடுத்துக் கிழிக்கையில், பாதியில் அவர் கைகள் தடைப்பட்டு நின்றன. கடிதம் சரி பாதியில் கால் பாதி கிழிக்கப் பட்டிருந்தது. அதில்...

'மொட்டைக் கடிதங்களும் உண்மைகளைக் கூற முடியும்!...' என்ற வரிகள்!

'ம்... உண்மையா? நீ கூறுவது அனைத்தும் சில பொறாமைக்காரர்களின் விஷமத்தனம் என்று அறிந்தபின் நானும் கோதையும் சேர்ந்து உன்னைக் கிழித்தெறிவோம். அல்லது 'கடந்தகாலத்தின் நினைவே, எங்கள் வாழ்விலிருந்து விலகிப்போ' என்று இருவரும் சேர்ந்து உன்னைக் கொளுத்துவோம்' என்று தீர்மானம் செய்து கொண்டார்.

'ஆனால் உண்மையை யார் மூலம் அறிவது? இந்தக் கடிதத்தை நிர்மூலமாக்கவே இன்று அவர் வந்திருக்கிறாரோ?" என்று எண்ணிய ஆர்வத்தில், வேகமாய் மாடியிலிருந்து இறங்கினார் பரமேஸ்வரன்.

ஒரு டாக்ஸியில் ஷ்டேஷனை நோக்கி இருவரும் போய்க்கொண்டிருக்கையில், மௌனம் கலைந்து பேசினார் பரமேஸ்வரன்.

“உங்களுக்கு என்னைத் தெரியும்.... நாங்கள்- நானும் கோதையும் உங்கள் ஆசீர்வாதத்தால் எவ்வளவு புனிதமான வாழ்க்கையை நடத்தறோம்னு தெரியும்' என்று சொல்லி விட்டு, மேலே பேசமுடியாமல் பாக்கெட்டுக்குள்ளிருந்து அந்தக் கவரை எடுத்தார்.

சோமநாதனுக்கு ஒரு விநாடி திகைப்பு.

பரமேஸ்வரன் டாக்ஸிக்குள்ளிருக்கும் சிறு விளக்கின் ஸ்விட்சைப் போட்டு, அந்த வெளிச்சத்தில் அக்கடிதத்தை நீட்டியவாறு சொன்னார்; 'சுத்தி வளைக்காமல் 'இது உண்மை அல்லது பொய்.' ரெண்டில் ஒண்ணு சுருக்கமாகச் சொன்னாப் போதும். நீங்க சொல்ற உண்மையான பதில்- எதுவா யிருந்தாலும்- யாரையும் எதையும் பாதிக்காதுங்கறது உறுதி” என்று கடிதத்தைத் தன்னிடம் நீட்டும் பரமேஸ்வரனின் கரம் நடுங்குவதைக் கவனித்தார் சோமநாதன். பின்னர் அமைதியாய் முகத்தில் எவ்விதச் சலனமுமில்லாமல், பாதி கிழிந்த அக்கடிதத்தைப் படித்தார். அவர் முகத்தையே வெறித்திருந்த பரமேஸ்வரன் “எனக்கு உண்மை தெரியவேணும். ஆமாம்!.. அவ்வளவு தான்” என்று படபடத்தார்.

சோமநாதன் அவரைப் பார்த்துக் குழந்தை போல் சிரித்தார். அந்தச் சிரிப்பு, 'உங்கள் பலஹீனம் இந்த உண்மையை அறியத் துடிக்கும் துடிப்பில் ஒளிந்து கிடக்கிறது'என்பது போல் இருந்தது.

பரமேஸ்வரனைத் தட்டிக் கொடுத்தவாறு சமாதானப் படுத்தினார் சோமநாதன்; 'நீங்கள் இவ்வளவு உணர்ச்சி வயப்பட்டவரா இருப்பீங்கன்னு நான் நினைச்சதில்லே; இது கெடுதி– இப்படி இருந்தா உங்களுக்கு 'பிளட் பிரஷர்' வந்துடும்.”

“நான் உண்மையைத் தேடித் தவிக்கிறேன்'' என்று கெஞ்சினார் பரமேஸ்வரன்.

"உண்மையைத் தேடியா? அது எதுக்கு நமக்கு? அது சகலமும் துறந்த துறவிகளின் தொழிலாச்சே!" என்று சிரித்தார் சோமநாதன்.

பரமேஸ்வரனுக்கு சோமநாதனிடம் கொஞ்சம் கோபம்கூட வந்தது, அவரது விளையாட்டுப் பேச்சைக் கேட்க; எனினும் மௌனமாயிருந்தார்.

"மிஸ்டர் பரமேஸ்வரன்! முதல்லே இந்தக் கடிதத்தின் நோக்கம் கீழ்த்தரமானதுங்கறதெ நீங்க புரிஞ்சு கொள்ளணும்"- ஏதோ சொல்ல ஆரம்பித்தார் சோமநாதன். பரமேஸ்வரன் குறுக்கிட்டுப் பிடிவாதமான குரலில் சொன்னார்; "இது சம்பந்தமா எனக்கு ஒரு வார்த்தையில்தான் பதில் வேணும்- உண்மை அல்லது பொய்."

அந்தக் குரலின் கண்டிப்பையும், அந்தக் குரல் வழியே அவரது மன நிலையையும் உணர்ந்த சோமநாதன் "ஒரு வார்த்தையிலா?" என்று கேட்டு விட்டு அவர் முகத்தைப் பார்த்தார்.

"ஆமாம், ஒரே வார்த்தையில்- அதை நீங்க சொன்னா நான் நிச்சயம் நம்புவேன்."

ஒரு குழந்தையின் அல்லது ஒரு குடிகாரனின் வாக்குறுதியைக் கேட்டவர் போல் நம்பிக்கையற்றுச் சிரித்தார் சோமநாதன்.

'எனக்கு வருத்தமாக இருக்கிறது. இந்தக் கடிதம் உங்களை இவ்வளவு தூரம் மாற்றிவிட்டதைக் காண.. சரி கேளுங்கள் எனது பதிலை! ஒரே வார்த்தையில் சொல்லுகிறேன். பொய்!" என்று உதடுகள் துடிக்கக் கூறி அந்தக் கடிதத்தை அவரிடமே தந்தார் சோமநாதன்.

அதன் பிறகு இருவருமே ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை.

சோமநாதனை ரயிலேற்றி விடை தந்து அனுப்பும்போது கூட, அவர் பரமேஸ்வரனிடம் அந்தக் கடிதம் குறித்துப் 'பொய்'

என்ற அந்த வார்த்தைக்கு மேல் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை.

ஆனால் பரமேஸ்வரனுக்கோ சோமநாதன் தன்னிடம் இதுவரை பேசிய எவ்வளவோ பேச்சுக்களில் அவர் கூறிய அந்த ஒரு வார்த்தைதான்- 'பொய்' என்ற அந்த ஒரு பதம் தான் பொய்யெனத் தோன்றியது. அடுத்த நிமிஷம் தன் மனத்தில் அவ்விதம் தோன்றுவதற்காகத் தன்னையே அவர் நொந்து கொண்டார்.

'சீ! எவ்வளவு அற்பமாக, கேவலமாக இந்தக் கடிதம் என்னை மாற்றிவிட்டது! இதை நான் அவரிடம் காட்டி இது பற்றிக் கேட்டதே தப்பு.. என்னைப் பற்றி அவர் எவ்வளவு மோசமான முடிவுக்கு வந்திருப்பார்..!" என்று தனது செய்கைக்காக வருந்திக் குழம்பியவாறு வீடு வந்து சேர்ந்தார் பரமேஸ்வரன்.

அவர் வீட்டுக்குள் நுழையும் போது கோதை மாடியிலிருந்தாள். அவ்விதம் இருக்க நேர்ந்தால் பரமேஸ்வரன் நேரே மாடிக்குப் போவதுதான் வழக்கம். ஆனால் இன்று ஹாலிலேயே சோபாவில் உட்கார்ந்து எதிரே இருந்த அந்தப் படங்களை வெறித்துப் பார்த்தவாறிருந்தார்.

அவரை மாடியில் எதிர்பார்த்து, அவர் வராததால் கோதை ஹாலுக்கு இறங்கி வந்தாள்.

"ஏன்? என்ன உடம்புக்கு?" என்று அருகே வந்து நெற்றியைத் தொட்டாள். இப்போது சூடு இல்லை., தன் நெற்றியின் மீது வைத்த அவள் கரத்தை இறுகப் பற்றினார் பரமேஸ்வரன்; அவர் கை நடுங்கியது.

"என்ன.... என்ன உங்களுக்கு?" என்று பதறியவாறு அவர் முகத்தை நிமிர்த்தியபோது,. அவரது உதடுகளில் அழுகை துடித்தது. பார்வை பரிதாபமாய்க் கெஞ்சியது. அதே போழ்தில் அவர் மனத்துள் ஒரு குரல் ஒலித்தது; 'நான் ஒரு மூடன்; இதோ சத்தியத்தின் சொரூபமாய் என் மனைவி நிற்கிறாள். இவளிடமே அந்தக் கடிதத்தைக் காட்டி உண்மையைக் கேட்பதை விடுத்து- நான் ஏன் இப்படித் தவிக்க வேண்டும்?'

அவர் முகத்தில் திடீரென ஒரு மலர்ச்சியும் புன்னகையும் ஒளிவிட "எனக்கு ஒண்ணுமில்லை, இப்படி உட்கார்... என் மனத்திலே ஒரு பிரச்னை... நீ தான் தீர்க்க முடியும்... என்னை உனக்குத் தெரியும்.. நீ இல்லாமல் என்னால் வாழ முடியாதுங்கறதும் உனக்குத் தெரியும்... அவருக்குத் தொண்டையில் என்னவோ அடைத்தது.... "இதைப்படி.. சுத்தி வளைக்காமல் 'உண்மை- அல்லது பொய்' இரண்டில் ஒரு பதில்- அவ்வளவு போதும். நீ சொல்ற பதில் எதுவாயிருந்தாலும் அது யாரையும், எதையும் பாதிக்காது.. இது சத்தியம்.. எனக்கு உண்மை தெரியணும்... என் வாழ்க்கையின் அடிப்படை ஒரு பொய் இல்லைன்னு எனக்கே தெரியணும்..' என்று கடிதத்தை அவளிடம் தந்து அவர் பேசிக் கொண்டேயிருக்கையில் அந்தக் கடிதத்தை அமைதியாய்ப் படித்து முடித்து விட்டுக் கண்களை மூடி மனத்தை இரும்பாக்கிக் கொண்டு, உறுதியான குரலில் அடக்கமாய் அவள் சொன்னாள்; "உண்மை."

அவர் அப்படியே ஸ்தம்பித்து நின்றிருந்தார். அவள் நிஷ்களங்கமான குரலில் தொடர்ந்து சொன்னாள்:

"அது என் வாழ்க்கையில் ஏற்பட்டு விட்ட ஒரு தவறு. அதுக்காக நான் யாரையும் குற்றம் சொல்லத் தயாராக இல்லை., என் வாழ்க்கையே மூளியாகிப் போச்சுன்னு அப்படியே வாழ்ந்து விடத்தான் தீர்மானிச்சேன். அது சரியில்லேன்னு சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் எனக்கு அறிவுறுத்தினார் மாமா. அப்படி ஒரு சந்தர்ப்பத்திலேதான் நான் உங்களை மணக்கச் சம்மதிச்சேன்.

"மாமா சொன்னார்; 'பொய்யாய்ப் போன ஒரு விஷயத்துக்கு நாம் உயிர் கொடுக்கிறது அவசியமில்லே.. இறந்த காலம் இறந்து விட்ட காலமாகவே போகட்டும். உண்மைங்கிறதின் பேராலே ஒரு பொய்க்கு உயிரூட்ட வேணாம். சில உண்மைகள் நெருப்பு மாதிரி, அதைத் தாங்க ஒரு பக்குவம் வேணும். நெருப்போட தன்மையே சுடறதுதான். அதைத் தாங்கிக் கொள்ள எல்லா மனிதர்களுக்கும் மனோபலம் இருக்காது'ன்னார் மாமா. இதை மறைக்க வேணும்னோ, இந்தக் கடிதத்திலே இருக்கிற மாதிரி

உங்களை ஏமாத்தணும்னோ யாருக்கும் எண்ணமில்லை. நான் உங்கள் மனைவி. இந்த உணர்வு வந்தப்பறம் உங்ககிட்டே எதையும் மறைக்கிறது சரியில்லைங்கிறதனாலேயே இந்த சந்தர்ப்பத்திலே இவ்வளவும் சொல்லி விட்டேன். இந்த உண்மை சுடலாம். எனக்குத் தெரியும். அதைத் தாங்கிக்கிற பக்குவம் உங்களுக்கு உண்டு" என்று அவள் சொல்லும்போது, பரமேஸ்வரனின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது. அவர் உடல் பதறிற்று. சோமநாதன் தன்னிடம் பொய்யுரைத்த துரோகத்தை எண்ணியபோது, தன் இருதயத்தையே சுட்டது போல் அவர் அலறினார்; 'நான் உன்னை மன்னிக்கிறேன்.. கோதை!.. ஆனால்.. ஒரு மணி நேரத்துக்கு முன்னே கூட.. இந்தக் கடிதத்தைக் காட்டினப்போ 'பொய்' ன்னு மனமாரப் பொய் சொன்னாரே, அந்தப் பெரிய மனுஷன்- அவரோட நயவஞ்சகத்தை என்னாலே மன்னிக்க முடியாது.. முடியவே முடியாது....!" என்று கூறியவாறு சோபாவிலிருந்து துள்ளிக் குதித்து எழுந்து ஓடினார் பரமேஸ்வரன். சுவரிலிருந்த படங்களில்- அந்த வரிசையின் நடுவே இருந்த, அவரது வணக்கத்திற்குரிய ஸ்தானத்திலிருந்த சோமநாதனின் படத்தை இழுத்து வீசி எறிந்தார்...

ஹாலின் மூலையில் விழுந்து நொறுங்கியது அந்தப்படம். 'சீ! இவன் மேதையாம்... ஞானியாம்" என்று அவ்விதம் எண்ணியிருந்த தன்னைத்தானே நொந்து கொண்டு மாடியை நோக்கி ஓடினார்.

அவர் தன் அறைக்குச் சென்று கதவை அறைந்து சாத்தித் தாழிடும் ஓசை ஹாலில் நின்றிருந்த கோதைக்குக்கேட்டது.

"ஓ! உண்மை சுட்டு விட்டது" என்று முனகிக்கொண்டாள் கோதை.

ஒன்றும் புரியாத பிரமிப்பில், உலகத்தின் மாய்மாலத் தோற்றத்தில் கசப்பும் விரக்தியும் கொண்டு யாரையும் பார்க்க மனமின்றித் தனிமையில் குமுறிக்கொதித்து அடங்கிய மனநிலையோடு அறைக்குள் கட்டிலில் பிரேதம் போலக் கிடந்தார் பரமேஸ்வரன்.

அப்போது அறைக் கதவு லேசாகத் தட்டப்பட்டது.

அந்தச் சப்தத்தைக் கேட்டும் சலனமற்று முகட்டை வெறித்துப் பார்த்தவாறு படுத்துக் கிடந்தார். மீண்டும் தட்டப்படும் என்று எதிர்பார்த்தார். அடுத்த முறை தட்டப்படாததால், மேலும் ஒரு நிமிஷம் காத்திருந்தார். பிறகு எழுந்து வந்து தானாகவே கதவைத் திறந்தார் பரமேஸ்வரன்.

அங்கே கையிலொரு சிறு பெட்டியுடன், விடை பெற்றுக் கொள்வதற்காகக் காத்து நின்றாள் கோதை. சில விநாடிகள் இருவரும் ஒருவரை ஒருவர் தீர்க்கமாகப் பார்த்துக் கொண்டனர். அவள் அவரிடம் தெளிவான குரலில் பேசினாள்: "மாமாவின் மேல் நீங்கள் அர்த்தமற்ற பக்தி வெச்சிருக்கறதா நானும் நெனைச்சதுண்டு. அந்தப் படத்தை நீங்க எடுத்து எறிஞ்சப்பறம் தான் அவர் உண்மையிலேயே பெரிய மேதை- மனுஷ மனத்தின் எல்லா இருண்ட மூலைகளையும் பார்க்கத் தெரிஞ்சவர்னு புரிஞ்சுக்க முடிஞ்சுது. உண்மை சுடும்னு சொன்ன அந்த மேதை- உங்களாலே அதைத் தாங்க முடியாதுன்னும் தெரிஞ்சு வைச்சிருந்தார்... நீங்க என்னெ மன்னிக்கிறதாகச் சொல்றதுதான் உங்களை நீங்களே ஏமாத்திக்கிறது. அந்தக் காரியம் என் குற்றம்னு நெனச்சா என்னைத் தண்டிக்க வேண்டியதுதானே நியாயம்?.. உங்களாலே என்னைத் தண்டிக்க முடியாது.. உங்க நெஞ்சுக்கு அவ்வளவு உரம் இல்லே. அநதக் குற்றத்துக்கு யாரையாவது தண்டிக்காம இருக்கவும் உங்களாலே முடியாது. அதனாலே தான் நீங்க மாமாவைத் தண்டிக்கிறீங்க. தாய் கிட்ட அடி வாங்கின குழந்தை தம்பியைக் கிள்ளிவிடற மாதிரி. நீங்க என்னைத் தண்டிக்காதது உங்க பலவீனம்; சுயநலம். இல்லாவிட்டாலும் நாம் சேர்ந்து வாழற வாழ்க்கையே நம்ம ரெண்டு பேருக்குமே ஒரு தண்டனைதான் இனிமேலே.. எனக்கு உங்க மேலே கொஞ்சமும் வருத்தமில்லே. உண்மை சுடும்னு சொன்னாரே, அந்தப்பெரியவர் கிட்டேப் போயி, 'உண்மை சுடுகிறது மட்டு மில்லே- சிலரைச் சுட்டுப் பொசுக்கிடும்கிற உண்மை எனக்குத் தெரியாம ஒருத்தரைச் சுட்டு எரிச்சுட்டு வந்துட்டேன்'னு

மன்னிப்புக் கேட்டுக்க நான் போறேன்..." என்று சொல்லி விட்டு, அவரது பதிலைக்கூட எதிர்பாராமல் மாடிப்படிகளில் அவள் இறங்கிச் செல்வதைப் பார்த்தவாறு மௌனமாக நின்றார் பரமேஸ்வரன்.

"உண்மையைத் தேடியா? அது எதுக்கு நமக்கு? அது சகலமும் துறந்த துறவிகளின் தொழிலாச்சே!" என்ற சோமநாதனின் விளையாட்டான வார்த்தையை எண்ணிப் பார்த்து- அதன் அர்த்தங்களை யோசித்தார் பரமேஸ்வரன்.

அது யோசனையல்ல. அது ஒரு பிரமிப்பு. பிறகு தனக்குள்ளாக லேசாகப் புன்னகை செய்து கொண்டார். அது புன்னகையல்ல. அது ஒரு சரணாகதி.

தடதடவென மாடிப்படிகளில் இறங்கி ஹாலுக்குள் ஓடி வந்தார்.

அப்போது கோதை வெளிக்கதவருகே வந்து கம்பிக்கதவைத் திறந்து கொண்டிருந்தாள்.

"கோதை!" என்ற பரமேஸ்வரனின் தெளிவான குரல் கேட்டு அவள் திரும்பிப் பார்த்தாள்.

அங்கே...

சுவரில் மூளியாய் இருந்த அந்த இடத்தில் தனது வழிபாட்டுக்கும் மரியாதைக்கும் உரிய அந்தப் படத்தை எடுத்து மாட்டிக் கொண்டிருந்த பரமேஸ்வரன், அவளைத் திரும்பிப் பார்த்து மனம் திறந்த புன்னகை பூத்து நின்றார்.

தன் வாழ்க்கையின் அஸ்திவாரம் என்று அவர் கருதிய ஒரு பிரச்னையில் பொய்யுரைத்த சோமநாதனையே தன் வழி பாட்டிற்குரிய மேதையாக மீண்டும் அவரால் ஏற்றுக் கொள்ள முடியுமானால் அதே பிரச்னையில் உண்மையைக் கூறிய தன் அன்பு மனைவியை அவரால் துறந்து விட முடியுமா என்ன?

# இருளைத் தேடி....

**ப**த்து வருடங்களுக்குப் பின், சிறிதும் எதிர்பாராத நிலையில், சற்று முன் பட்டணத்துச் சந்தடியில் சந்திக்க நேர்ந்துவிட்ட பட்டுவும் ருக்குவும் அந்த ஓட்டலின் தனியறையை நாடி வந்தனர்; காப்பி குடிக்கவும், கொஞ்சம் உட்கார்ந்து மனம் விட்டுப் பேசவும் அது வசதியான இடம்.

வாழ்க்கைச் சந்தியில் இருவர் சந்தித்து இணைய முடிவது எவ்வளவு சாதாரணமும் இயல்புமாகுமோ, அதே அளவு இயல்பானதுதான் இருவர் சந்தித்துப் பிரிந்து விலகிப் போய் விடுவது...

இந்தப் பத்தாண்டுகளில் இருவருக்குமே எத்தனையோ தரப்பட்ட, வகைப்பட்ட சிநேகிதிகள் கிடைத்திருப்பர். வாழ்க்கையும் எத்தனையோ தரத்தில், வகையில் பேதமுற்று வேறுபட்டிருக்கும்... விலகிப் போன அந்த நட்பின் நினைவு கொஞ்சம் கொஞ்சமாய்த் தேய்ந்து- அல்லது புதிய புதிய வாழ்க்கையின் மாற்றங்களினால், அறிமுகங்களினால் மூடப்பெற்று உள்ளே புதைந்து கொண்டிருந்த சமயத்தில், சற்று நேரத்துக்கு முன் திடீரென்று அவர்கள் இருவரும்- வாழ்க்கைச் சந்தியின் சாதாரண இயல்புக்கேற்பவே- பட்டணத்துச் சந்தடியின் நடுவே, இதற்கு முன் பார்த்தறியாத எத்தனையோ புதிய முகங்கள் ஆயிரக்கணக்கில் நிமிஷத்துக்கொரு அலையாய்க் கடந்து மறைந்து கொண்டிருக்கும் யந்திர இயக்கத்தில் எதிர் எதிரே மோதிக்கொள்வது போல் எதிர்ப்பட்டு, மோதலைத் தவிர்க்க நின்று, நேருக்கு நேர் முகம் பார்த்த போது அந்தச் சந்திப்பு நிகழ்ந்தது....

யந்திரம்போல் இயக்கம் கொண்டு விட்டதனால் மட்டும் மனித ராசி யந்திரமாகி விடுமா...?

அந்தச் சந்திப்பைத் தவிர்க்க நினைத்தவள் போல் தன்னையறியாமல் முகம் திரும்பிய பட்டு, அரை விநாடி நிலை குலைவுக்குப் பின்னர், நிலைமையைச் சமாளித்தவளாய் அந்த எதிர்பாராத சந்திப்பின் சந்தோஷ உணர்வை ஏற்றுக் கொண்டாள். அப்படித்தான் அவளால் முடிந்தது; அடுத்த விநாடியே அவ்விதத் தயக்கத்திற்காக அவள் உள்ளூற வருந்தினாள்.

மகிழ்ச்சியால் விளைந்த திகைப்பு என்றே அதை எண்ணினாள் ருக்கு. இந்த நிமிஷம் அதுதான் உண்மை...

இருவரும் பேசும் திறன் இழந்து, பாசத்தோடு ஒருவர் கையை மற்றவர் பற்றிக் கொண்டனர்.

'பட்டு... 'ருக்கு... என்று ஒருவர் பெயரை மற்றவர் மௌனமாக அழைத்துக் கொள்ளும்போது, பரஸ்பரம் இருவர் முகத்திலும் மனம் நிறைந்த புன்னகையின் விகசிப்பும் கைகளின் இணைப்பில் படிப்படியான இறுக்கமும் விளைந்தன.

சிறிது நேரம் கும்பலிலிருந்து ஒதுங்கி ஓர் ஓரமாய் நின்ற இருவரும் ஒருவரைப்பற்றி ஒருவர் அறிந்து கொள்ளும் முறையில் சில வார்த்தைகள் பேசிக் கொள்கையில், தங்களில் யாருக்குமே அவசர காரியம் ஏதுமில்லை என்று உணர்ந்தபின், வசதியாய் இருந்து பேச இடம் தேடியே அந்த ஓட்டலுக்குள் நுழைந்தனர்.

ஓட்டலின் தனியறையில் வந்து எதிர் எதிரே அமர்ந்தபின் ஒருவரை யொருவர் தீர்க்கமாயும் அவசரமில்லாமலும் பார்த்துக் கொள்ள முடிந்தது; அத்துடன் கண்ணாடியில் தெரியும் தத்தமது உருவங்களுடன் பக்கத்திலுள்ள ஒருவரை ஒருவர் ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ளவும் நேர்ந்தது.

திடீரென இருவரும் ஒரே சமயத்தில் ஒருவரை பார்த்து ஒருவர் பலமாகச் சிரித்துக்கொண்டனர். அந்தச் சிரிப்பின் இறுதியில் இருவர் முகத்திலும் உள்ளார்ந்த ஒரு சோகமே படர்ந்தது.

அவர்கள் இருவரிடத்தும் மகிழ்ச்சிக்குரிய மாற்றங்கள் ஏதும் இல்லை. ருக்குவின்- முந்தானையால் இழுத்து மூடப்பட்டிருந்த- கழுத்து வெறிச்சென்றிருந்தது. பட்டுவின் கழுத்தில் பகட்டானதும் மட்டமானதுமான முத்து மாலை கிடந்தது. ருக்குவின் நெற்றியில் வட்டமான குங்குமப்பொட்டு, பட்டுவின் நெற்றியில் செஞ்சாந்துத் திலகம். இருவர் அணிந்திருந்ததும் சாதாரண வாயில் புடவைகளே; எனினும் உடுத்தியிருந்த விதத்தில்தான் எத்தனை வித்தியாசம்! சாயம் போன தனது நீலப் புடவையினால் போர்வை யிட்டது போல் உடலை மூடி மறைத்திருந்த ருக்கு சேலைத் தலைப்பை இடுப்புச் செருகலில் இருந்து எடுத்து, பிடரியிலும் கழுத்துக்கடியிலும் கசிந்திருந்த வியர்வையைத் துடைத்து விட்டுக் கொண்டபின் தன் கையில் நீண்ட கருணையாக வைத்திருந்த ஒரு காகிதத்தை மேசையின் மேல் வைத்து விட்டு, தலைக்கு மேல் சுழலும் மின்சார விசிறியின் காற்றை அனுபவித்தாள். அவள் முகம் சுத்தமாய், வெண்மையாய், மங்கி ஒளியிழந்திருந்தது.

பட்டுவின் முகத்தில் அப்பியிருந்த பௌடரின் மேல் வியர்வை பூத்திருந்ததால் முகமெல்லாம் திட்டுத்திட்டாய் இருந்தது. அவள் அணிந்திருந்த கறுப்பு நிறப் புடவையில் பளபளக்கும் வெள்ளிப்பூக்கள் மின்னின பட்டுவின் தலையலங்காரம் ருக்குவின் பின்னலைப் .போல் ஒழுங்காக இல்லை... கூந்தல் கலைந்தது போலவே வாரப்பட்டிருந்தது; காதோர முடி மட்டும் கவனத்தோடு சுருளாக்கப்பட்டிருந்தது. கழுத்துப் பக்கம் இறங்கிய ரவிக்கை வெட்டு; வயிறும் புஜங்களும் வெளித் தெரிய அணிந்த சேலைக் கட்டு; இவை இருவருக்குமுள்ள வித்தியாசங்கள்.

எவ்வளவுதான் வாட்ட முற்றிருந்த போதிலும் மாறாத பொன்னிறம், இருபத்தைந்து வயதுக்கு மேல் பிராயம் தோற்றும் முகப் பொலிவு, மலர்ந்த விழிகள், கறுத்தடர்ந்த கூந்தல்- இவையாவும் இருவருக்குமுள்ள ஒற்றுமைகள்.

பட்டுவின் சிறப்பு, அந்த நீண்ட மோவாய்; வனப்புடன் மெலிந்து, அழகுற உயர்ந்த உருவம்.

ருக்குவுக்கு, வடிவாயமைந்த அதரங்கள்; வசீகரமிக்க புன்னகை; சிலை போன்ற சிற்றுருவத் தோற்றம்- மற்றப்படி ஓர் இளம் விதவையைப் போன்ற எளிமை- அதுவே ருக்குவின் சிறப்பு.

பேசுவதற்கு நிறைய இருப்பதனாலேயே, என்ன பேசுவது என்ற ஒரு பிரமிப்புடன் இருவரும் மௌனமாய் ஒருவரை ஒருவர் அளப்பது போலும், ஒப்பிடுவது போலும் பார்த்துக் கொண்டிருந்தனர்.

ருக்கு அன்பு வழியச் சிரித்தவாறே பேச்சை ஆரம்பித்தாள்! "பாட்டி....?" என்று அவள் இழுக்கவும், பட்டு தோள்களை உயர்த்தி உதட்டைப் பிதுக்கினாள்; 'ரெண்டு வருஷமாச்சு."

"அப்ப நீ தனியாகவோ இங்கே இருக்கே?.. நீ எப்ப, யாரோட பட்டணத்துக்கு வந்தே!" என்று பரபரப்போடு கேட்டாள் ருக்கு.

"பாட்டி செத்தப்புறம், அங்கே ஊர்ல யாரு இருக்கா எனக்கு?... நம்ம அரசமரத்தாத்து மாமிதான் அவா வீட்டிலே என்னை அழைச்சிண்டு போயி வெச்சிருந்தா... தேனொழுகப் பேசி, வெயர்வை வழிய வேலை வாங்கறதிலே மாமி ரொம்பக் கெட்டிக்காரி. அதனாலே என்னன்னுதான் இருந்தேன்.. ரெண்டு வேளை சாப்பாட்டுக்கும் துணிக்கும் மட்டுமில்லே, கௌரவமா ஒரு குடும்பத்தோட இருக்கமேன்னுதான்.. ஆனா அவாளும் நொடிச்சுப் போனா... அந்த மாமா யாருக்கோ ஜாமீன் கையெழுத்துப் போட்டு அவன் மோசம் பண்ணிப்பிட்டானாம்.. எல்லாம் போச்சு!.. அப்பதான் மாமியோட சொந்தக்காரா யாரோ வந்து 'பொண்ணே எங்களோட அனுப்புங்கோ' ன்னு சினிமாவிலே சேத்து விடறதா அழெச்சுண்டு வந்தா.. அப்புறம் அதெல்லாம் ஒண்ணும் சரிப்பட்டு வரலை... இப்ப நான் ஒரு சிநேகிதியோட தனியா இருக்கேன்"- அவள் பேச்சே யார் மீதோ குற்றப்பத்திரிகை வாசிப்பது போல் இருந்தது.

பட்டு பேசுகின்ற பேச்சிலிருந்த தயக்கமும் வரட்சியும் அவள் பொய் கூறுவது போல் புரிந்தது ருக்குவுக்கு.

"இப்ப யாரோடயோ இருக்கேன்னியே, யாரந்த சிநேகிதி!"

'ம்.... உனக்குத் தெரியாது" என்று கறாராய், 'நீ தெரிந்து கொள்ள வேண்டியதுமில்லை என்பது போல் கூறினாள் பட்டு.

'இந்தப் பத்து வருடங்களில் எனக்குத் தெரியாத, என்னிலும் அந்நியோன்யமான சிநேகிதிகள் இவளுக்கு ஏற்பட்டிருக்கக் கூடும்! சரி அதனால் என்ன? அதனால் என்னைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும் என்று இவளுக்குத் தோன்றாதா? நான்தான் அவளைப்பற்றிக் கேட்கிறேன்.. அவளுக்கு என்னைச் சந்தித்ததில் மகிழ்ச்சியில்லையா?" என்று ருக்கு எண்ண மிட்டுக்கொண்டிருந்த நேரத்தில் "உன் அப்பாவுக்கு உடம்பு குணமாயிடுத்தா?.. அவருக்கு வைத்தியம் பார்க்கத்தானே நீங்க ரெண்டு பேரும் ஊரை விட்டு இங்கே யாரோ சொந்தக்காரர் வீட்டுக்கு வந்தீங்க!" என்று பட்டு கேட்டதும், தன்னைப் பற்றி இவ்வளவு ஞாபகத்தோடு விசாரிக்கும் பட்டுவை ஒரு கணத்தில் தான் தவறாக எண்ணிவிட்டதைக் குறித்து வருத்தமுற்றாள் ருக்கு. எனினும் அடுத்த கணமே பட்டுவின் முகத்தில் தோன்றிய ஒரு வெறும் புன்னகையைக் கண்டதும் ருக்குவுக்குத் தோன்றியது; 'இவள் இரண்டு மனநிலையில், இரண்டு ஆளாய், இரண்டுங் கெட்டவளாய் இருக்கிறாள்..."

எனினும் அவள் கேள்விக்குப் பதில் சொன்னாள் ருக்கு! "அப்பவே- வந்து கொஞ்ச நாளைக்கெல்லாம் அப்பா காலமாயிட்டா...."

-அப்போது ஓட்டல் சர்வர் அறையின் கதவுக்கு மேல் தலை நீட்டிப் பார்த்து உள்ளே வந்தான்.

"என்ன சாப்பிடுவோம்?...." என்றாள் ருக்கு.

"வெறும் காப்பி.."

"ரொம்ப அழகா இருக்கு.. இவ்வளவு காலத்துக்கப்புறம் பார்த்திருக்கோம்" -என்று ஒரு குதூகலச் சிரிப்புடன் "ரெண்டு ஸ்பெஷல் ஸ்வீட் கொண்டு வாங்கோ" என்று சர்வரைப் பார்த்துச் சொன்னாள் ருக்கு.

ருக்கு.. சர்வரிடம் சொல்லிக் கொண்டிருந்த அந்தச் சிறிய இடை நேரத்தில் பட்டு தன்மயமாகி, ஏதோ சிந்தனையுடன் தலை குனிந்திருந்தாள். சர்வர் போன பின், அவள் நிலையை அனுதாபத்தோடு, என்னவென்று புரிந்து கொள்ள முடியாமல் வெறித்துப் பார்த்தாள் ருக்கு.

திடீரெனத் தலைநிமிர்ந்தாள் பட்டு. ருக்குவைப் பார்த்து மீ ண்டும் ஒரு வெற்றுப் புன்னகை காட்டினாள்... முகத்தில் ஒரு பொய்ப் பொலிவுடன் 'ம் நீ இப்ப அதே- அந்த சொந்தக்காரர் வீட்டிலேதான் இருக்கிறாயா?"

"ஆமாம், அந்த வீட்டிலேதான் இருக்கேன். ஆனா தனியா இருக்கேன்."

"தனியாகவா? அப்படீன்னா ஏதாவது உத்தியோகம் பார்க்கறயா?" என்று கேட்டவாறே ருக்குவின் கையருகே மேஜையின் மேலிருந்த நீண்ட காகிதச் சுருணையை எடுத்து, "பார்க்கலாமா?" என்றாள் பட்டு.

லேசான தலையசைப்பால் அனுமதியளித்த ருக்கு, பட்டுவை உள்ளும் புறமும் அளப்பது போல் தீர்க்கமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அப்போது சர்வர் இரண்டு தட்டுக்களில் ஸ்வீட்டைக் கொணர்ந்து வைத்தான். காபியும் காரமும் சொல்லி அவனை அனுப்பினாள் ருக்கு.

அந்தக் காகிதச் சுருணையைப் பிரித்துப் பார்த்த பட்டு அருவருப்பும் கலவரமும் அடைந்தவளாய், கையில் விரிந்திருந்த அந்த அகலமான காகிதத்துக்கு மேலாய்த் தலையை உயர்த்தி ருக்குவைப் பார்த்தாள்...

ருக்கு அமைதியாய்ச் சிரித்தாள்.

அப்போது அங்கே காலடி ஓசை கேட்கவே மீண்டும் அவசர அவசரமாக அந்தக் காகிதத்தைச் சுருட்டினாள் பட்டு. பாதி சுருட்டிய காகிதத்துடன் திருடியைப்போல் பட்டு விழித்துக்

கொண்டிருக்கையில், அந்த சர்வர் கொண்டு வந்த பலகாரங் களை மேசையின் மீது வைத்து விட்டு வெளியேறினான்.

அவன் தலை மறைந்தவுடன் படபடத்த குரலில் கேட்டாள் பட்டு; 'என்னடி இது அசிங்கம்?"

ருக்கு அவளைப் பார்த்துப் பெருந்தன்மையுடன் சிரித்தவாறே சொன்னாள்; "இது அசிங்கம்னா நீயும் நானும்- உலகமே அசிங்கம்தான்.. அதை நன்னா உத்துப் பார்.. பார்க்கவே ஏன் பயப்படறே!... தெளிவான மனசோட பார்...." என்றாள்.

பட்டு மீண்டும் சுளித்த புருவங்களுடன் அந்தச் சித்திரத்தாளை விரித்துப் பார்த்தாள்.

அதில், பிறந்த மேனியாய்- ஒரு பக்கம் சாய்ந்து மண்டியிட்டு உட்கார்ந்திருந்தது ஒரு பெண்ணின் உருவம்.

முதலில் பார்க்கும் போது பழக்கமற்ற கண்களுக்கு அந்த ஓவியம், மனத்திலிருந்த அழுக்கின் காரணமாய் 'சீ' என்று தோன்றியது. அதே படம் இப்போது சற்றுப் பொறுமையாய்ப் பார்க்கையில்- உட்கார்ந்திருக்கும் அந்தத் தோற்றமும், இடது புறம் மண்டியிட்டு நீண்டு கிடக்கும் முழங்கால்களின் அமைப்பும், இடுப்பின் வளைவும், வலது கையைத் தரையில் ஊன்றி, வலது புறக் கழுத்தை வலிந்து திருப்பி, தோளின்மேல் முகம் புதைந்து கிடக்கும் சிரமும், வயிறும் மார்பும், மதர்ப்பும் மடிப்பும், வரியும் நிழலும்- பார்க்கப் பார்க்க, சித்திரத்தின் அமைப்பும் அழகும் மட்டுமில்லாமல் அந்தத் தோற்றமே எதிரில் உட்கார்ந்திருக்கும் ருக்குவினுடையது என்றும் பட்டுவுக்குத் தெளிவாயின. பட்டு இரண்டு முறை படத்தின் முக விலாசத்தையும் ருக்குவின் முகத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தாள்.

"இது நீ தானே" என்ற பட்டுவின் கேள்விக்குப் பெருமி தத்துடன் தலையசைத்தாள் ருக்கு.

"இதை வரைஞ்சது ஒரு ஆம்பிளையா, பொண்ணா?"

ருக்கு லேசாகச்சிரித்தாள். "இதை வரைஞ்சது ஒரு ஆர்ட்டிஸ்ட்! இப்படிச்சொன்னா உனக்குத்திருப்தி ஏற்படாது

இல்லையா?" -என்று மீண்டும் சிரித்து 'ஆம்பிளைதான்" என்றாள் ருக்கு.

"இதுக்காக, உனக்கு அவன் பணம் தருவானா?

"ம்... தருவா. எனக்கு உத்தியோகம் என்னன்னு கேட்டியே, உத்தியோகம் இது தான்'' என்று ருக்கு சொல்லிக் கொண்டிருக்கையில், பட்டு ருக்குவையே வெறித்துப் பார்த்தாள். அவள் முதுகுக்குப் பின்னால் கண்ணாடியில் தெரியும் தன்னையும் பார்த்தாள். 'தன்னைவிடவும் எளிமையும் நல்ல குணமும் கொண்ட ருக்கு, கழுத்தையும் முதுகையும், வெளியில் வரும்போது இழுத்துப் போர்த்திக் கொண்டு வரும் ருக்கு-வயிற்றுக்காக எவன் முன்னாலோ போய் நிர்வாணமாய் நிற்கிறாளே' என்று நினைத்த பட்டுவின் கண்களில் நீர் சுரந்தது!

"ஆமா... நீ என்ன செய்துண்டு இருக்கே? அந்த சிநேகிதி என்ன உத்தியோகம் பண்றான்னு நான் தெரிஞ்சுக்கலாமா?" என்று ருக்கு கேட்கவும் பட்டுவுக்குத் துயரம் நெஞ்சில் அடைத்தது. உதட்டில் அழுகை துடித்தது.

ஆரம்பத்தில்- சந்தித்தவுடன்- தன்னைப் போலல்லாமல் கௌரவமாக வாழ்க்கை நடத்துகிறாள் ருக்கு என்று எண்ணிய பட்டு, அவளிடம் தன்னைக் காட்டிக் கொள்ளாமல், அந்தரங்கமாய் விலகி விலகியே பேசி வந்தாள். இப்போது தன்னைப் போலவே இவளும் கௌரவமற்ற, அவமானகரமான பிழைப்பு நடத்துகிறவள்தான் என்று தோன்றியபோது பட்டுவின் மனம் ருக்குவை நெருங்கி வந்தது. கௌரவமாய்ப் பிரிந்த தாங்கள் இருவரும் இவ்வளவு கேவலமாய்ச் சந்திக்க நேர்ந்த கசப்பில், திக்கற்ற தனக்கு ஒரு துணையாகவும், வெட்கப்படத் தக்க தன் தொழிலுக்கு ஓர் இணையாகவும், தன்னோடு மீண்டும் உறவு கொண்டு விட்ட ஒரு பழைய நட்பின் புதிய நிர்மாணத்திற்காக அவள் துயரம் கலந்த மகிழ்ச்சியே கொண்டாள்.

இருப்பினும், "நீ என்ன செய்துண்டு இருக்கே?" என்ற ருக்குவின் கேள்விக்குரிய பதிலை எண்ணிப்பார்த்த பொழுது பட்டு அவமதிப்பால் தலை குனிந்தாள்.

பட்டு, வருத்தப்படறியா? உன்னை வருத்தப்படற மாதிரி நான் ஒண்ணும் கேட்கலே. முடியுமானா என்னாலான உதவியைச் செய்யலாம்னுதான் கேட்டேன். எங்கே என்னைப் பாரு... என்று மேஜையின்குறுக்காக கை நீட்டிப் பட்டுவின் குனிந்த முகத்தை- அதன் அழகை ரசித்தவாறு- அவளது அழகிய நீண்ட மோவாயைப் பற்றி நிமிர்த்தினாள் ருக்கு. மையால் கரையிட்டு, சிவந்து மலர்ந்திருந்த விழிகளில் கண்ணீர் நிறைந்து இமை ரோமங்கள் நனைந்திருந்தன.

பட்டு திடீரென முகத்தை மூடிக் கொண்டு அழுதாள்! ருக்குவுக்கு அவள் நிலைமை நன்கு புரிந்தது. சிறிது நேரத்தில் முகத்தை துடைத்துக் கொண்டு, கம்மிய குரலில் பட்டு கூறினாள்; "ருக்கு, நான் என்னைப் பற்றி உன் கிட்டே மறைச்சு மறைச்சுத்தான் பேசினேன். யாரோ ஒரு குடும்பத்தோட வந்ததாப் பொய்தான் சொன்னேன். நம்ம ஊர்க்காரன் ஒருத்தனை நம்பி, சினிமாவிலே சேரலாம்னு நானேதான் அரசமரத்தாத்து மாமாகிட்டே சொல்லிக்காம ஓடி வந்தேன். அந்தத் துரோகத்துக்கு வேணுங்கறதை இந்த ஒரு வருஷமா அனுபவிச்சுட்டேன்... நான் என்ன தொழில் செய்து பிழைக்கிறேன்னு சொல்லிக்க நாக்கு கூசறது. ஒவ்வொரு நிமிஷமும் அந்த இடத்திலேருந்து ஓடிடணும்னுதான் மனசு துடிக்கிறது, எங்கே போவேன்? சொல்லு.. ம் தலைவிதியம்மா. தலைவிதி" என்று மேலே பேச முடியாமல் பெருமூச்சு விட்டாள் பட்டு.

ருக்கு மௌனமாய் ஏதோ யோசித்தவாறு தட்டிலிருந்ததைச் சாப்பிட்டாள். 'ம்... சாப்பிடு" என்று பட்டுவிடம் சொன்னாள். இருவரும் மௌனமாகவே டிபனைச் சாப்பிட்டனர்.

திடீரென்று ருக்கு சொன்னாள்; ...ம்... தலைவிதிதான். அதுக்கு யார் என்ன செய்யமுடியும்? தலைவிதி நம்மை ஏழையாப் பொறக்க வெச்சுடுத்து. நம்மை அநாதையாகவும் ஆக்கிடுத்து. ஒரு வேளை சாப்பாட்டுக்கும் ஒரு நல்ல புடவைக்கும் கூட வழியில்லாம நிர்க்கதியாகவும் நின்னிருக்கோம். தலைவிதியினாலே ஒரு பொண் எளிமையா

இருக்கலாம்; கேவலமா ஆயிடக்கூடாது. தலைவிதியின் பேராலே என்ன வேணும்னாலும் செஞ்சுடக்கூடாது. நீ ஏழையானதுக்குத் தலைவிதிதான் காரணம்னு சொல்லு; நீ கேவலமானதுக்குக் காரணம் தலைவிதியில்லே; நீ தான்!" என்ற ருக்குவின் நயமான, உறுதியான பேச்சைக் கேட்டு உதட்டைக் கடித்தவாறு குற்ற உணர்ச்சியோடு தலை குனிந்தாள் பட்டு.

ருக்கு தொடர்ந்து சொன்னாள்: "வறுமையில்தான் செம்மை வேணும். பலஹீனப்பட்டுப் போன உடம்பை நோய்க்கிருமிகள் வந்து தாக்கறமாதிரி. மனசை பலவீனப்படவிட்டா எல்லாக் குணக்கேடுகளும் வந்துவிடும். வறுமையினாலே மனம் பலப்படணும்; கஷ்டம் வந்துட்டுதுன்னு தப்பான வழியிலே போய் வாழ்க்கையை கெடுத்துக்கறதனாலே கஷ்டம் கொறைஞ்சுடுமா? அப்படி கெட்டுப் போறதே ஒரு கையாலாகாத்தனம், இல்லையா? இவ்வளவும் ஏன் சொல்றேன்னா, இப்படிப்பட்ட நிலைக்கு நானும் ஆளாயிருக்கலாம்-" என்று எதையோ அவள் விவரிக்க நினைத்த போது, சர்வர் குறுக்கிட்டான்.

"அப்புறம் காப்பிதானே?" என்று அறைக்கதவின் அப்புறத்திலேயே நின்று கேட்ட சர்வரிடம் 'ஆம்' என்று தலையாட்டினாள் ருக்கு.

அதே நேரத்தில் பட்டு யோசித்தாள்; 'ஒரு பெண் எளிமையாக இருக்கலாம்; கேவலமா ஆயிடக்கூடாதுன்னு நியாயம் பேசற இவளும் கேவலமான காரியத்தைத்தானே தொழிலா வெச்சிருக்கா-" என்ற நினைப்போடு கையில் சுருட்டி வைத்திருந்த அந்தச் சித்திரத்தாளை மீண்டும் ஒருமுறை கொஞ்சம் பிரித்துப் பார்வையைச் செலுத்திய பட்டு, உதட்டோரத்தில் லேசாகச் சிரித்துக் கொள்ளுவதை ருக்குவும் கண்ணுற்றாள்.

அந்தப் படத்தையே வெறித்துப் பார்த்தவாறு கைத்துப் போன உணர்ச்சியுடன் சொன்னாள் பட்டு; "நீ எப்பவும் எதையும் ஆற அமர யோசிக்கிறவள்; அடக்கமானவள்; என்னெ மாதிரி படபடன்னு நிக்கறவ இல்லை. இவ்வளவும் சொல்ற

உன் கதியும் இப்படித்தானே கேவலமா ஆயிடுத்து?" என்று கூறி விஷமத்தோடும் துயரத்தோடும் தலை நிமிர்ந்து ருக்குவைப் பட்டு நோக்கியபோது, பட்டுவின் அறியாமைக்கு வருந்துகிறவள் மாதிரி அவளுடைய அபிப்பிராயத்தை மறுக்கும் முறையில் தலையாட்டினாள் ருக்கு.

"நான் கேவலமான வாழ்க்கை நடத்தறேன்னு நீ சொல்றத்துக்காக நான் வருத்தப்படலே. ஏன் தெரியுமா? நானும் ஆரம்பத்திலே இதெப்பத்தி அப்படித்தான் நெனைச்சேன். சாதாரண மனுஷா யாருமே அப்படித்தான் முதல்லே நெனப்பா... என்று சொல்லி நிறுத்தியபோது சர்வர் காப்பி கொணர்ந்தான். காப்பியையும் 'பில்'லையும் மேசையின் மேல் வைத்து அவன் வெளியேறிய பிறகு- தன் மனத்தில் உள்ள- தன் தொழில் கேவலமானதல்ல; கௌரவமானதே- என்ற பலமான தீர்மானத்தைப் பக்குவமாய் இவளுக்குப் புரிய வைக்கத் திறனில்லாமல் வார்த்தைகளைத் தேடி மௌனமாயிருந்த ருக்கு, சில விநாடிகள் இடது கரத்தால் புருவத்தையும் கண்களையும் சேர்த்து மூடிக்கொண்டிருந்தாள்.

'ருக்கு அழுகிறாளோ' என்ற அச்சம் பிறந்து அவளையே பார்த்துக் கொண்டிருந்தாள் பட்டு. ஆனால் சிறிது நேரத்தில் ஒரு புன்னகையுடன் கூறினாள் ருக்கு, "நீ உன்னைப் பத்தி மறைச்சு மறைச்சு என் கிட்டே பேசினதா சொன்னே, இல்லையா? பொய்க்கூடச் சொன்னதாகச் சொன்னே இல்லையா? ஆனா, நான் உன்கிட்டே எதையும் மறைக்கல்லே; நான் செய்கிற தொழில் கேவலம்னு என் மனசிலே தோணியிருந்தா, இந்தப் படத்தை நீ பார்க்கவே அனுமதிச்சிருக்க மாட்டேன். அதில் இருக்கிறது நான்தான்னு ஒப்புத்திண்டிருக்கவும் மாட்டேன். நான் கௌரவமாகத்தான் வாழறேன்- ஆனா ஆரம்பித்திலே.... எனக்கு... இந்த யோசனையைக் கேட்டப்போ உடம்பெல்லாம் கூசிக்குறுகித்து; அழுகையே வந்தது" என்று சொல்லும்போது ருக்குவின் குரல் அடைத்தது; மொழி குழறியது.

சற்று மௌனமாய்க் காப்பியை ஆற்றி ஒரு மிடறு பருகிய பின் தெளிவான குரலில் பேசலானாள் ருக்கு;

"அப்பா செத்துப் போனதும் நானும் உன் மாதிரி அநாதையாயிட்டேன். 'ஊருக்குப் போயி, தெரிஞ்சவா நாலு பேரு வீட்டிலே உழைச்சுச் சாப்பிட்டேன்; பட்டணத்தில் உனக்கு என்ன வெச்சிருக்கு'ன்னு இடிச்சு இடிச்சு சொல்ல ஆரம்பிச்சாங்க அந்த வீட்டிலே. எனக்குன்னா தெரியும் அந்த ஊர்லேயும் எனக்கு ஒண்ணும் வெச்சில்லேன்னு. அப்பதான் நெனச்சுண்டேன்; அவசரப்பட்டு, எட்டாங்கிளாசோட படிப்பெ நிறுத்தினோமேன்னு. அந்த மாதிரி சந்தர்ப்பங்கள் வர்ரபோது தனக்குத்தானே உழைச்சுச் சாப்பிட்டுப் பழக்கமில்லாத ஓர் அநாதையான வயசுப் பொண்ணுக்கு உலகம் ரகசியமா ஓடி வந்து செய்யற உதவி- உனக்குக் கெடைச்சிருக்கிற தொழில்தான். ஒரு தடவை எக்ஸிபிஷன்லே ஒரு ஸ்டால்லே வேலைக்குப் போனேன். ஒரு நாளைக்கு இரண்டு ரூபாய் சம்பளம்னு கேட்டப்போ எனக்கு மனசு குளிர்ந்தது. அங்கே எனக்கு ஒரு வேலையும் இல்லை; வர்ரவா கேக்கற அவசியமுள்ள, அவசியம் இல்லாத அநாவசியக் கேள்விகளுக்கெல்லாம் சிரிச்ச முகத்தோட பதில் சொல்லிண்டு இருக்கணும்.

"நான் வேலைக்குப் போனது ஒரு பவுடர் ஸ்னோ ஸ்டால். வேலைக்குப் போன அடுத்த நாள் அந்த சேல்ஸ் மானேஜர், என்னைக் கூப்பிட்டுச் சொன்னார்- 'நம்ம ஸ்னோவையும் பவுடரையும் மத்தவாளை உபயோகிக்கணும்னு சொல்றதுக்கு முன்னே நாமும் கொஞ்சம் உபயோகிக்கணும்'னு அதனாலே நான் அலங்காரமும் செய்துண்டேன். இதெப் பார்த்து அந்தச் சொந்தக்கார மனுஷாள் எல்லாம் தப்பாத்தான் பேசினா. அப்புறம்தான் அந்த வீட்டிலேயே ஒரு ரூமை வீட்டுக்காரங்க கிட்டே கேட்டு வாடகைக்குப் பிடிச்சிண்டு தனியாகவே வாழறதுன்னு ஒரு முடிவு பண்ணினேன்.

"ரெண்டு மாசம் எக்ஸிபிஷன் முடியற வரைக்கும் என் வாழ்க்கை கஷ்டமில்லாம ஓடித்து. எக்ஸிபிஷன் முடியறதுக்கு முதல் நாள் அந்த சேல்ஸ் மானேஜர் என்கிட்டே வந்து ரொம்ப

ஆதரவோட என்னெப் பத்தி விசாரிச்சார். வயசிலே எனக்குத் தகப்பனார் மாதிரி இருந்ததாலே என்னோட நிராதரவான நெலமையை அவர் கிட்டே சொன்னேன். அவர் ஓர் அட்ரஸ் கொடுத்து மறுநாள் அங்கே வந்து சந்திக்கச் சொன்னார். மறுநாள் நான் அங்கே போனா... ம்ஹூம்! என்னத்தைச் சொல்றது? அவர் எனக்குக் காட்டின வழியே. இப்ப நீ இருக்கியே இந்தப் பிழைப்புத்தான். நான் யோசித்தேன்! இதுதானா வழி.. இது ஒண்ணுதானா வழி.. வேற வழியே கிடையாதா வாழறத்துக்குன்னு யோசிச்சேன்! இப்படி ஒரு வழி இருக்கிறதா நெனைச்சாலே வேற வழி புலப்படாது. பட்டினி கெடந்து அநாதைப் பொணமா சாகிறதானாலும் சரி, இந்தப் பிழைப்பே எனக்கு வாண்டாம்னு வந்துட்டேன்" என்று சொல்லித் தம்ளரில் ஆறிக் கொண்டிருந்த காப்பியை மடமடவெனக் குடித்தாள் ருக்கு.

"நான் இருக்கிற வீட்டிலே மாடி மேலே ஒருத்தர் குடியிருந்தார்!" என்று கூறுகையில் அவள் குரலில் ஒரு மாற்றமும், முகத்தில் ஒரு மலர்ச்சியும், கண்களில் ஒரு கலக்கமும் பிறந்ததைப் பட்டு கவனித்தாள்.

"நான் கஷ்டப்படறபோதெல்லாம், நிராதரவாய்க் கண்கலங்கி நிற்கும் போதெல்லாம், அந்தச் சொந்தக்கார மனுஷா என்னைச் சுடு சொற்களாலே வடுப்படுத்தின நேரத்திலே எல்லாம், அவர் என்னைப் பார்க்கிற பார்வையிலே எனக்கு ஒரு ஆறுதல் இருந்தது., அவர் எனக்கு உதவி செய்ய முடியும்னும் செய்வார்னும் தோணித்து. அன்னிக்கு சேல்ஸ் மானேஜரைப் போய்ப் பார்த்துட்டு மனம் உடைஞ்சு திரும்பி வர்ர போது அவரை வழியிலே பார்த்தேன்... என் நம்பிகைக்குத் தகுந்த மாதிரி அவர் உதவி செய்ய முன் வந்தார்.: 'நீங்க எங்கே போயிட்டு வர்ரீங்கன்னு எனக்குத் தெரியும்'னு அவர் என்கிட்டே பேச ஆரம்பிச்சார். 'ஐயோ தெய்வமே என்னைப் பத்தி அநியாயமா இவர் தப்பா நெனைக்கும்படி ஆயிடுத்தே'ன்னு நெனைச்சப்போ, எனக்கு அழுகையை அடக்க முடியலே...

"ஆனா அவர் சிரிச்சுண்டே சொன்னார்; "அதனாலே ஒண்ணும் தப்பில்லே- உங்களுக்குத் தெரியாமல்தான் நீங்க போயிருக்கீங்க. தெரிஞ்சவுடனே மனசுக்குப் பிடிக்காமத் திரும்பி வந்துட்டீங்கன்னும் எனக்குத் தெரியும். அடுத்தபடி என்ன செய்யப் போறீங்க'ன்னு கேட்டார்... என்னைப்பத்தி அவ்வளவு அக்கறை எடுத்துண்டு என்னை அவர் கவனிச்சுண்டு வர்றார்னு தெரிஞ்சப்ப "நீங்க சொல்றபடி கேக்கறேன்'னு சொல்லணும் போலத் தோணித்து. ஆனா என்னாலே ஒண்ணுமே சொல்ல முடியல்லே- பேசாம நின்னேன். அவரே பேசினார்; 'உங்களை, உங்க மனசை, அறிவை நான் நன்னாப் புரிஞ்சிண்டிருக்கிறவன்; சொன்னா- உங்களுக்கு ரொம்ப ஆச்சரியமா இருக்கும். எதையும் தப்பா நெனைச்சுக்க மாட்டீங்கன்னு நம்பறேன்; நாளைக்குக் காலையிலே என்னோட வர்றதானா உங்களை ஒரு கௌரவமான காரியத்தில் ஈடுபடுத்தலாம்னு ஆசைப்படறேன்'னு அவர் சொன்னப்ப, என் வாழ்க்கைக்கே விடிவு வந்துட்டதுன்னு நெனைச்சுப் பூரிச்சுப் போனேன்... என்று சொல்லி நெஞ்சு விரிய ஒரு நெடுமூச்சிழுத்தாள் ருக்கு.

அப்போது மீண்டும் சர்வர் வந்து எட்டிப் பார்க்கவே 'என்ன பட்டு, இன்னொரு காப்பி சாப்பிடுவோமா" என்று வினவினாள் ருக்கு.

'எனக்கு வேண்டாம்..." என்று பட்டு மறுத்ததும், "காப்பிக்காக இல்லே... இன்னும் கொஞ்ச நேரம் இருந்து பேசலாம்... அதுவும் இல்லாம முதல் காபி ரொம்ப ஆறிப் போச்சு- ஒரு காபியை ஆளுக்குப் பாதி சாப்பிடலாமே- ம்...ஒரு காபி கொண்டு வாங்க"- என்று அவளிடத்தில் பேசி, சர்வரிடம் கூறினாள் ருக்கு.

"அடுத்த நாள் அவரோட, அவர் அழைச்சுண்டு போன இடத்துக்குப் போனேன்... அதுவரைக்கும் எனக்குத் தெரியாது அவர் ஒரு பெரிய 'ஆர்ட்டிஸ்ட்'னு. அந்த இடமே ஒரு புனிதமான கோவில் மாதிரி இருந்தது. 'சித்ர சில்ப கலாசாலை'ன்னு கேள்விப்பட்டிருக்கியோ?... அங்கேதான் போனேன். வெளி வராந்தாவிலே பத்து இருபது மாணவர்கள்

மெழுகிலே சிலைகள் செய்துண்டிருந்தா.. உள்ளே ஒரு ஹாலிலே 'கிளாஸ்' நடந்துண்டிருந்தது. என்னை மேல் மாடிக்கு அழைச்சிண்டு போனார். அங்கே சுவரிலே மாட்டியிருந்த படங்களைப் பார்க்கறச்சே எனக்கு உடம்பெல்லாம் கூசித்து...

..."இதெல்லாம் பார்த்திண்டு இருங்கோ'ன்னு சொல்லிட்டு அவர் கீழே போனார். நான் அந்த ஹாலை நன்னா சுத்திப் பார்த்தேன்.. ஹால் நடுவே ஒரு பெரிய மேடை மாதிரி இருந்தது., அதுக்கு நாலு பக்கமும்- மேலே பெரிய லைட்டுகள்....அந்த மேடை இஷ்டப்படி திருப்பக் கூடிய சுழல் மேடை. அதைச்சுத்திலும் ஸ்டாண்டுகளும் பக்கத்தில் ஸ்டூல்லே சித்திரம் தீட்டறதுக்கான வர்ணம். பென்சில், பிரஷ்- என்னென்னவோ இருந்தன. அந்தப் படங்கள் எல்லாம் இப்ப நீ பார்த்தியே இதைவிடப் பெரிசா வர்ணம் தீட்டியும்- கரிக்கோட்டிலே வரைஞ்சதும்- பெண்கள், ஆண்கள் எல்லாமே நிர்வாணத் தோற்றமாவே இருந்தது.. அதில் ஆபாசம் இருக்கிறதாக அப்பத் தோணினது ஒரு பிரமைன்னு இப்பப் புரியறது; ஆனா அப்ப எனக்கு ஒண்ணுமே புரியல்லே. அந்தப் படத்துக்குக் கீழே ஒரு ஓரமா 'ருத்ரா'ன்னு எழுதி இருந்தது. ஆமா, அவர் பேரு அது தான்...

"கொஞ்ச நேரத்துக்கெல்லாம்- ரெண்டு கையிலேயும் ஐஸ் கட்டி மெதக்கற கூல்டிரிங்ஸ் தம்ளரை ஏந்தி என்னைப் பார்த்துச் சிரிச்சிண்டே அவர் வந்தார். எனக்கு அவரைத் தப்பாவோ அசிங்கமாவோ நெனைக்க முடியல்லே...

"அவர் என் கையிலே ஒரு தம்ளரைக் குடுத்துட்டு தன்கையிலே இருந்ததைக் குடிச்சிண்டே அங்கே இருந்த படங்களை எல்லாம் கவனமாப் பார்த்தார்... 'இவங்க எல்லாம் உங்களை மாதிரி கௌரவமான பெண்கள் தான்'னு சொன்னார்.. நான் பதிலே பேசல்லே.. அவர் சொன்னார்; 'இது ஒரு கோயில் மாதிரி. இங்கே அழகே தெய்வம். இயற்கையே அழகு. அழகான பசுவுக்கோ, மயிலுக்கோ, காளைக்கோ, மானுக்கோ பத்து முழத்துணியைச் சுத்தி வெச்சா. அந்த அழகுகள் எல்லாம்

எவ்வளவு ஆபாசமாயிடும்னு கற்பனை செய்து பாருங்கோ'ன்னார்...

'மனிதனின் அழகே அவன் உடுத்திக்கற 'துணி அழகாப்' போயிடுத்தே. துணிக்குத் தனியா அழகு உண்டு. இங்கே அதுக்கே ஒரு வகுப்பு இருக்கு; அங்கே டிசைன்ஸ், 'என்கிரேவிங்ஸ்' எல்லாம் படிக்கறா; மனிதனின் அழகுங்கறது துணியோட அழகு இல்லே.... இன்னும் சொல்லப் போனா துணியும் மணியும் நகைகளும் சிங்காரங்களும்தான் ரொம்ப ஆபாசம். அழகைக் கெடுக்கறதுக்குப் பேருதானே ஆபாசம்? இப்படி நான் சொல்லும் போது நீங்க ஒரு விஷயத்தைத் தெளிவாப் புரிஞ்சுக்கணும். இந்த நிர்ணயிப்புகள் எல்லாம் கலைச்சுடரின் முன்னே... அவை இந்த ஹாலின் புனிதத் தன்மைக்கு அப்பால் செல்லாது; செல்லவும் வேண்டாம்.

"கலைஞனின் இதயம் ஒளிமயமானது. உலகத்தின் இதயம் கபடும் சூதும் பொய்யும் நிறைஞ்சது. இந்த அழகின் பேரொளியை அந்தக் கண்கள் தாங்காது. ஆகையால் கள்ள மனம் படைச்சவங்களுக்கு அழகை ரசிக்கத் தெரியாது. இங்கே அழகு ஆராதனைக்கே தேவைப்படுகிறது. அங்கே தேவைன்னா எல்லா ஆபாசங்களும்- அது தேவைன்னா- 'அழகா'யிடறது. நல்லா யோசிச்சிப் பாருங்கோ. நிர்வாணம் ஓர் ஆபாசமா? யோசிச்சிப் பாருங்கோ. உங்க உடம்பின் அழகை நீங்க ரசிச்சதில்லையா, தனிமையிலே..? அந்த ரசனையில் ஆபாசமிருந்ததாக நினைக்கிறீர்களா? இல்லையே.. அந்த ஒருமை நிலையை உங்களோட- பிரபஞ்சத்தோட- கலைஞன் ஏற்படுத்திக் கொள்கிறான். அதுக்கப்புறம் 'நான் நீங்கற பேதமில்லை. நித்தியமில்லாத பொய்யான அழகிலிருந்து நித்தியமான ஒரு பிரதிமையை உருவாக்கவே கலைஞன் அழகை வழிபடுகிறான். மெய்யாகத்தோன்றும் உங்கள் உடலழகு நிலையில்லாத ஒரு பொய்... பொய்யாய் தோன்றும் இந்த ஓவியம் சாஸ்வதமான- நித்தியமான ஒரு மெய்! நீங்கள் கடவுளின் சிருஷ்டி; ஆனா கடவுள் சிருஷ்டிக்க முடிஞ்சது ஒரு பொய்யைத் தான். அதிலிருந்து மெய்யை வளர்த்தது மனுஷனின் கைகள்... மனிதன் சிருஷ்டிச்ச கலைதான் மெய்!.. இப்படிப்பட்ட ஒரு

மகத்தான பணியிலே அற்பமான எண்ணங்களுக்கு இடமே இல்லை. அந்த அற்ப விஷயங்கள் ஒரு பொருட்டுமில்லை. தீயில் விழுந்த சருகு மாதிரி அதெல்லாம்.

"இதோ இந்த மேடை மேலே நீங்க ஏறினவுடனேயே இயற்கையின் ஓர் அம்சமாய் மாறிவிடறீங்க. அப்போது உங்களுக்கு ஆடையிருக்கலாம்; இல்லாமல் போகலாம். அது பொருட்டல்ல. இங்கே அழகே ஓர் ஆடை! கலைஞனின் கடமை அதன் மீது ஆசைப்படுவதல்ல. அந்தப் பொய்யிலிருந்து மெய்யைப் படைக்க வேண்டியது அவன் கடமை. அப்போ பால் உணர்ச்சி அற்றுப் போகிறது. நீங்க ஒண்ணுமே தெரியாத குழந்தைபோல உட்கார்ந்தோ படுத்துக் கொண்டோ இருக்கீங்க; குழந்தை நிர்வாணமாய்த்தான் இருக்கும். குழந்தை ஓர் ஆபாச மில்லை. உங்கள் உருவத்தை வரைகின்ற கலைஞர்களில் யாராவது ஒருத்தன் முழுமையான கலைஞனாய் இல்லாமல் ஆபாச மனம் படைத்திருந்தால்தான் என்ன? எதன் பேரில் தான். உலகத்தில் தப்பு நடக்கல்லே? குழந்தையைப் பார்த்தும் கூட சில வக்கரித்த மனம் படைத்தவர்கள் ஆபாச ரசனையில் ஈடுபடலாம். அது குழந்தையின் பிரச்சனையல்ல. அது குழந்தையை எந்த விதத்திலும் பாதிக்கிறதுமில்லே. அது அவனையே பாதிக்கும்...."

'இப்படி, ரொம்ப நாழி பல விஷயங்களை விளக்கினார்-நான் ஒரு பதிலும் பேசலே. ஆனா வந்தவுடனே இருந்தது மாதிரி குனிஞ்ச தலையோட நிற்காம, நிமிர்ந்து அங்கிருந்த படங்களைப் பார்த்தேன். மனசிலே கூச்சமில்லே. அந்த அழகு எனக்குப் புரிஞ்சது.

"கடைசியிலே அவர் சொன்னார்; 'இது ஒரு தொழில் இல்லே.. இது ஓர் உயர்ந்த கலைப்பணி.. அதனாலேதான் அப்படிப்பட்ட ஓர் உயர்வான காரியத்துக்கு உங்களைப் பயன் படுத்திக் கொள்ளலாம்னு நெனைச்சேன். இதுக்கு நாங்க தர்ர பணம் ஒரு கலைஞருக்குத் தரும் சன்மானம் தானே ஒழிய, விலையோ சம்பளமோ இல்லே். இதை நீங்க புரிஞ்சுண்டு ஒரு 'மாடலா' இருக்கச் சம்மதிச்சா இருக்கலாம். இல்லேன்னாலும்

இங்கே வேறே ஏதாவது ஒரு உத்தியோகத்துக்கு முயற்சி பண்ணி விடலாம்னுதான் அழைச்சிண்டு வந்தேன். நீங்க இப்ப இல்லேன்னாலும் கொஞ்ச நாள்லே இந்தக் கலையைப் புரிஞ்சுண்டா இந்தக்கலைக்கு உதவ முடியும்'னு சொன்னப்ப, ஒரு விநாடி கூடத் தயங்காம, 'இந்தக்கலைக்கு நான் உதவமுடியும்னா அதைப் பெருமையா நெனச்சி- ஒரு 'மாடலா' இருக்கச் சம்மதிக்கிறேன்'னு சொன்னேன்."

-அப்போது காப்பி வந்தது. காப்பியை மேசையின் மீது வைத்து விட்டு, சர்வர் முதலில் கொண்டு வந்த பில்லை எடுத்துத் திருத்தி எழுதி வைத்தான் ருக்கு பழைய நினைவுகளைப் பற்றிப் பேசிய ஆர்வத்தில் முகமெல்லாம் வியர்த்திருந்தாள். அவள் காப்பியை ஆற்றிப் பாதியாய்ப் பகிர்ந்து பட்டுவிடம் தம்ளரை வைத்து வட்டாவில் இருந்ததை அருந்தினாள். ஒன்றுமே புரியாமல், திகைத்தவள் போன்று ஆழ்ந்த சிந்தனையுடன் உட்கார்ந்திருந்தாள் பட்டு,. அவள் மனத்தில் நிறைக்கப்பட்ட உண்மையானதும், புனிதமானதுமான செய்திகள் சுமையாய்க் கனத்து, சொல்லிழக்க வைத்திருந்தது அவளை. தன்னைப் போல் ருக்குவையும் கேவலமாய் நினைத்துப் பேசியதை எண்ணி வருந்தினாள் பட்டு. அவ்விதம் பேசியும் தன் மீது வருத்தம் கொள்ளாத ருக்குவின் பெருந்தன்மையையும் எண்ணி வியந்தாள். எல்லாவற்றுக்கும் மேலாக அவளது தனித்த, சொந்தப் பிரச்சனைகள் வேறு மனத்துள் குமைந்தவாறே இருந்தன. இவளைச் சந்தித்த பின்பு மீண்டும் அந்தக்கேவலமான இருட்டறைக்குத் திரும்பிப் போவதை எண்ணுகையில் தன் தலைவிதிக்கு ஒரு முறை குரலெடுத்து அழ வேண்டும் போலிருந்தது. அந்த உணர்ச்சியை விழுங்கியதால் அவள் முகமெல்லாம் சிவந்து கழுத்து நரம்புகள் புடைத்து கண்கள் கலங்கி இருந்தன.

காப்பியைக் குடித்துக் கொண்டே ருக்கு சொன்னாள்; "ஏதோ ஒரு புனித உணர்ச்சியிலே தைரியமாகச் சொல்லிட்டேனே ஒழிய, முதல் நாள் பத்துப் பதினைஞ்சு, 'ஆர்ட்டிஸ்ட்'டுகள் மத்தியில், மேடையிலே போயி, 'லைட்'டையும் 'ஆன்' பண்ணி, அங்கியைக் கழட்டிப் போடச் சொன்னவுடனே உதற

ஆரம்பிச்சுது. ஓடி வந்துடலாம்னு கூடத் தோணித்து. ஆனா அதுவும் முடியல்லே. காலே நகரல்லே... அந்தச் சமயத்திலே தான் அவர் சொன்ன வார்த்தைகளை நினைச்சுண்டேன்.

"இங்கே அழகே ஓர் ஆடை; ஒரு மகத்தான பணியில் அற்பமான எண்ணங்களுக்கு இடமே இல்லை. அந்த அற்ப விஷயங்கள் இங்கே ஒரு பொருட்டும் இல்லை. தீயில் விழுந்த சருகு மாதிரி அதெல்லாம். இதோ, இந்த மேடையிலே நீங்க ஏறினவுடனே, இயற்கையின் ஓரம்சமா மாறி விடறீங்க'- அந்த வார்த்தைகளை முழுமையான மனசோட ஏத்துண்டப்புறம் என் உடம்பிலே நடுக்கம் குறைஞ்சுது. என் காரியத்தைப் பத்தி நெனைக்க எனக்கு வெட்கமோ அவமானமோ இல்லே;. அவர் சொன்னது உண்மை. இது கேவலமான ஒரு தொழிலில்லே. உயர்ந்த கலைப்பணி" என்று கூறி, மௌனமாய் மேலே பேச யோசித்தவாறு இருந்தாள் ருக்கு.

இவ்வளவு நேரம் பேசாதிருந்த பட்டு 'சரக்'கென்று புதுத் துணியைக் கிழித்தது போல் ஒரு வார்த்தையைக் குத்தலான அழுத்தத்துடன் கூறினாள்; 'எல்லாம் வயித்துக்காகத்தானே?

"கலை- அது இது- அப்படி இப்படின்னு நீ என்ன பேசினாலும் வயிறுதானே உன்னைப் போயி அங்கே நிர்வாணமாய் நிக்க வெக்கறது?... ம்.. நீ அதையே கௌரவமா பேசிக்கலாம். அதே காரணத்தாலேதான் நானும்" என்று சொல்ல வந்ததை விழுங்கினாள் பட்டு.

"ஆமாம், நீ இருட்டிலே நிக்கறே! நான் வெளிச்சத்திலே நிக்கறேன்!... இருட்டுக்கும் வெளிச்சத்துக்கும் வித்தியாசம் உண்டுன்னு சொன்னால் போதுமா- இதுக்கு அது பூரணமாகவே மாறுபட்டது இல்லையா? அதனாலேதான் ஒண்ணு கௌரவம்; இன்னொண்ணு கேவலம். அது சரி; எல்லாம் வயித்துக்காகன்னு ஒரேடியா முடிவு செய்து விடாதே! கலைஞன் வயித்துக்கு இல்லாமக் காய்ந்தே போகலாம். இல்லாட்டா அவன் கலையின் மூலம் கோடி கோடியாய்ப் பணத்தைச் சம்பாதிக்கலாம். என்னை யாரும் கட்டாயப்படுத்தல்லே, யாரையும் திருப்திப்படுத்தறத்துக்காக

அந்தக்காரியத்தை நான் செய்யல்லே. அப்படிச் செய்ய முடியாதுடி. அதன் ஆத்மாவைப் புரிஞ்சுக்கணும்; அப்பத்தான் முடியும்.

"இன்னிக்கி நான் அங்கேயே உத்தியோகம் பண்ணிண்டிருக்கேன். இப்பவும் 'மாடலா' போயி நிக்கறதிலே எனக்கு ஓர் உன்னதமான சந்தோஷமிருக்கு; அது என்னிக்கும் இருக்கும். காரிலே வந்து 'மாடலா' நிக்கிற பெரிய மனுஷாளும் உண்டு. உனக்கு வயிறே பிரச்சனைனா கலை உன் வயித்தையும் நிரப்பும். ஆனால் கலையின் நோக்கமே கலைஞனின் வயித்தை நெரப்பறது இல்லே" என்று ருக்கு சொல்லிக் கொண்டிருக்கும் போது பட்டு பொலபொலவென்று கண்ணீருகுத்து அழுதாள். ருக்குவின் கையைப் பிடித்துக் கொண்டு சொன்னாள்; "எனக்கு என்ன தெரியும்? அறியாத்தனத்தாலே, நான் தப்பா ஏதாவது சொல்லியிருந்தால் மன்னிச்சிடு ருக்கு..." என்று அவள் பரிதாபமாய்க் கேட்ட போது, ருக்கு அவள் கரத்தை அழுந்தப் பற்றி 'அடி அசடே... என்ன பேசறே? உனக்கு நன்னாப் புரியும் படி விளக்கறதுக்குத்தான் இவ்வளவும் நான் சொல்றேன். உன் மேலே எனக்கு வருத்தம் உண்டாகுமா, என்ன?" என்று தணிந்த குரலில் சிரித்தாள்.

"நீ கல்யாணத்தைப் பத்தி யோசிக்கவே இல்லையா?" என்று பேச்சை மாற்றினாள் பட்டு. ருக்கு ஒரு நிமிஷம் யோசித்து விட்டுச் சொன்னாள்; "இல்லே.... அப்படி ஒரு ஆணை நான் இன்னும் சந்திக்கவே இல்லை."

ருக்குவின் பேச்சையும் அவளது நிலையையும் பார்க்க பட்டுவுக்கு உள்ளூறப் பெருமிதமாய் இருந்தது.

"சரி, என்னோட துணையாய் நீ வந்து இரேன். இந்த உத்தியோகத்தைச் சரியா நீ புரிஞ்சுண்டா, நாளைக்கே உன்னை நான் அழைச்சிண்டு போவேன். சம்மதமா?" என்று வினவினாள் ருக்கு.

தாழ்ந்து போன பெண் ஜென்மமான தன் எதிரே, ஆண் வாடையே படாத, ஒளி மிகுந்த பெண்மைச் சுடராய் நின்று

உதவிக்குக் கரம் நீட்டும் அந்த அழைப்பைப் பட்டுவால் மறுக்க முடியவில்லை.

புனிதமானதும் உயர்வானதுமான அந்த சித்ர சில்ப கலாசாலையின் மாடியிலுள்ள விசாலமான ஹாலுக்குள், பயந்து கூசித் தலைகுனிந்து நடந்தாள் பட்டு.

தலை நரைத்து, பட்டை பிரேம் கண்ணாடியணிந்து, நீண்ட அங்கியைப் போன்ற ஜிப்பாவுடன் எழுந்து வந்து அவர்-புரபஸர் ருத்ரா அவளைப் புன்னகையுடன் வரவேற்று ஹாலுக்குள் அழைத்துச் சென்றார். அந்த மேடைக்குப் பின்னாலிருந்த ஸ்கிரீன் மறைவுக்குப் போய், தனது உடைகளைக் களைந்து விட்டு, அங்கிருக்கும் நீண்ட அங்கியை அணிந்து கொள்ள வேண்டும் என்று ருக்கு அவளுக்கு விளக்கியிருந்தாள்.

அதன்படி அவள் ஸ்கிரீனுக்குப் பின்னால் மறைந்ததும்-வெளியே மணியடித்தது.

தடதடவென மாடிப்படிகளில் மாணவர்கள் வரும் சப்தம் கேட்டது.

ஸ்கிரீனுக்குப் பின் நின்றிருந்த பட்டு தலை நிமிர்ந்து சுவர்களிலிருந்த சில ஓவியங்களைப் பார்த்தாள். அவளுக்குக் கண்கள் கூசின. அந்த உருவங்கள் அழகாக இருப்பது போல் தோன்றினாலும் அப்படிப்பட்ட அழகோ தகுதியோ தனது உடலுக்கு இல்லையே என்ற தாழ்வுணர்ச்சியால் அவள் மனம் வதங்கியது. அவள் ருக்குவைப் பற்றி எண்ணிப் பார்த்தாள். புனிதமான தன் மேனியைப் பற்றி அவளுக்கு இருக்கும் பெருமிதம் தனக்கு இல்லையே என்று அவசியமில்லாமல் மனம் குமைந்தாள் பட்டு.

அப்போது அவர் ஸ்கிரீன் கதவில் மெள்ளத் தட்டி ஓசைப்படுத்தினார்.

அவள் தனது உடைகளைக் களைந்து அங்கியை எடுத்து அணிந்துகொள்ளப் போன நேரத்தில் மேடைக்குப் பக்கத்திலிருந்து ஒளி சொரியும் விளக்குகள் எரிந்தன; அவற்றுக்கு

'ஷேடுகள்' வைத்து நிழலும் ஒளியும் கலந்து விழுவதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன.

"ஐயோ! இவ்வளவு வெளிச்சமா?" என்று பதைத்து நின்றாள் பட்டு. ஸ்கிரீனின் இடைவெளியில் முகம் பதித்து ஒரு கண்ணால் வெளியே பார்த்தாள், இருபதுக்கும் மேற்பட்ட ஆண்கள் உட்கார்ந்திருந்தனர்.

பட்டுவின் உடலில் நடுக்கமும், மனத்தில் கலக்கமும் அதிகமாயின. தன்னால் அவ்விதம் நிற்க முடியாது. அந்தச் சக்தி தனக்கு இல்லை என்று தீர்மானமாகத் தோன்றியது அவளுக்கு. ஒளி சொரியும் விளக்குகள் பொருத்தப்பட்ட பின் மீண்டும் ஒரு முறை அவர் கதவைத் தட்டியதும்,

அவள் வெளியே வந்தாள்..

உள்ளே போகும் போது அணிந்திருந்த ஆடைகளையே மீண்டும் அணிந்து தலையைக் குனிந்து கொண்டே அவள் வெளியே வந்தாள்.

"என்னை மன்னிச்சிடுங்க... என்னாலே முடியல்லே" என்ற வார்த்தைகளை யாருக்கும் புரியாமல் குழறிவிட்டு, அவள் விடுவிடென்று அந்த வகுப்பறையினின்றும் வெளியேறி மாடிப்படிகளில் இறங்கும்போது கீழே நின்றிருந்த ருக்குவைப் பார்த்தாள்.

"பட்டு பட்டு" என்று அழைத்தவாறே ஓடி வந்தாள் ருக்கு.

"என்னை மன்னிச்சுடு ருக்கு.. நான் போறேன், என்னாலே முடியலேடி... ரொம்ப வெளிச்சமாயிருக்கு..." என்று சொல்லிக் கொண்டே ஓடினாள் பட்டு.

"ஓ! முடியல்லேன்னா பரவாயில்லே. இப்ப நீ எங்கே போறே?" என்று அவளைத் தடுத்தாள் ருக்கு.

"நான் போறேன்.. என் தலைவிதிப்படி" என்று கூறி விட்டு ருக்குவின் பதிலைக்கூட எதிர்பார்க்காமல் காம்பவுண்டைக் கடந்து தெருவில் இறங்கி ஓடினாள் பட்டு.

அவள் பின்னால் தொடர்ந்து செல்லவிருந்த ருக்குவின் எதிரே அவர்- ருத்ரா- வந்தார்.

"ப்ளீஸ் ஹெல்ப்! அங்கே ஸ்டூடன்ஸெல்லாம் காத்திண்டிருக்கா- நீங்களாவது வரணும்" என்று அழைத்ததும் ருக்கு மாடிப்படியேறி மேலே போனாள்.

சற்று நேரத்திற்குப் பின் அழகையே ஆராதிக்கும் அந்தக் கலா சந்நிதியில் இருபுறத்திலிருந்தும் பிரகாசமாய்ப் பொழியும் ஒளி வெள்ளத்தில் அழகையே ஓர் ஆடையாய்த் தரித்து, பலர் முன்னே தன் சுடர் மேனியைக் காட்டி நின்றிருந்தாள் ருக்கு.

அதே நேரத்தில் இருளைத் தேடி- அந்தப் போர்வையில் எவனோ ஒருவனோடு தன்னை மறைத்துக் கொள்ள நகரத்தின் ஓர் இருண்ட பகுதியை நோக்கி ஓடிக் கொண்டிருந்தாள் பட்டு.

# சாத்தானும் வேதம் ஓதட்டும்!

மத்தியானம் மூன்று மணிக்கு மேல் இரண்டு மணி நேரம் உறங்கி எழுந்து, குளித்து உடையணிந்து, வாரிய தலையின் ஈரம் உலருமுன் 'அது' அவருக்கு வேண்டும். ஒரு செவிலியைப் போல அவரைப் போஷித்து வரும் 'ஆடர்லி அப்புக் குட்டனுக்குத்தான் அந்த 'அது' என்பது மது மட்டுமல்ல என்று தெரியும். மற்றவர்களுக்குத் தெரிந்ததெல்லாம் மதுசூதனராவ் ஒரு குடிகாரன் என்பது மட்டும்தான்!

பங்களா மாடியில் முன்புறமுள்ள திறந்த வெளியில் தூய விரிப்புடன் கூடிய அந்த வட்டமேஜையைச் சுற்றிலும் மூன்று நாற்காலிகள் போடப்பட்டிருக்கும். ஆனால் அவர் அமரும் நாற்காலி தவிர மற்ற இரண்டும் எப்போதும் காலியாகத் தானிருக்கும். எனினும் அவை போடப்படவேண்டும் என்பதை அப்புக்குட்டன் அறிந்திருந்தான்.

அந்த மேஜையின் மீது சீல் உடைக்காத மதுப்புட்டியும், மேல் அகன்று கீழ் சிறுத்து, பீடத்தோடு கூடிய கண்ணாடி மதுக்கிண்ணமும், பக்கத்தில் அவருக்கெனப் பிரத்யேகமாய்த் தயாரிக்கப்பட்ட உறையூர் சுருட்டுகள் அடங்கிய பெட்டியும்– இவற்றுக்கு எதிரே தேர்ந்தெடுத்துக் கொணர்ந்த, உறைகளுடன் கூடிய மேற்கத்திய இசைத் தட்டுகளின் அடுக்கும் அழகுற வைக்கப்பட்டிருக்கும்.

'யூடி குலானின்' நெடி மணம் வீச, ஒரு கனத்த செருமலுடன் உள்ளறையினின்றும் அவர் வெளிப்பட்டு மாடியின் திறந்த வெளியில் அடிவைத்த மாத்திரத்தில் அங்குள்ள ஒற்றை

'டூம்லைட்' அவரை வரவேற்பது போல் எரிகிறது. அந்த நிகழ்ச்சியை ஆமோதிப்பது போல் சற்று நின்று 'ம்...!' என்ற ஒரு நிறைவுடன் மேஜையருகில் உள்ள மூன்று நாற்காலிகளில் ஒன்றில்- பங்களா கேட்டை நோக்கிப் போடப்பட்டுள்ள நாற்காலியில் அமர்கிறார் அவர். எப்போதும் அவர் அந்தத் திசை நோக்கித்தான் உட்காருவது வழக்கம். அங்கிருந்து பார்த்தால் கேட்டருகே ஆயுதபாணியாக சென்ட்ரி நிற்கும் காவலாளியையும், தன்னைத்தேடி வருவோரையும் மட்டும் இல்லாமல்- நிலாக் காலங்களில் சந்திரோதயத்தையும் காண முடியும்.

அவர் உட்கார்ந்த மாத்திரத்தில் ஸ்விட்ச் போர்டருகே நின்றுள்ள அப்புக்குட்டன் 'பட பட'வென மற்ற ஸ்விட்சுகளையும் பொருத்துவான். பங்களாத் தோட்டத்தில் ஆங்காங்கேயுள்ள மங்கிய ஒளிவீசும் லைட்டுகள் எரிந்து, அந்தப் பிரதேசம் முழுமையிலும் ஒருவிதக் கனவின் லயத்தைத் தோற்றுவிக்கும்;

-இது நிலாக் காலமல்ல; அதனால்தான் இப்படி. நிலாக்காலத்தில் அவர் விருப்பம் எப்படி என்பதை அப்புக்குட்டன் அறிந்திருந்தான்.

அடுத்த வினாடி அவரது உத்தரவிற்காக அவர் பக்கத்தில் வந்து நிற்கிறான்.

மேசை மீது அடுக்கி வைக்கப்பட்டுள்ள இசைத் தட்டுகளை எடுத்து ஒவ்வொன்றாய், வெளிச்சத்தில் பார்த்து, அப்போதுள்ள தனது மனநிலைக்கு ஏற்ப, 'இதன் பின் இது' என ஒரு வரிசைப்படுத்தி வைக்கிறார் அவர். அந்தக் காரியம் முடிந்ததும் அவளைப் பார்த்து லேசாகப் புன்னகை காட்டுகிறார்.

மதுசூதனராவுக்குச் சிரிக்கவும் தெரியும் என்றறிய இந்தச் சமயம் மட்டும்தான் சாட்சி.

அந்தப் புன்னகை வெகுமதிக்கு நன்றி பாராட்டுபவனாக 'எஸ் ஸார்!' என்று ஒரு சல்யூட் அடித்துவிட்டு அந்த

இசைத்தட்டு அடுக்கைக் கையில் ஏந்தியவாறு ஹாலுக்குள்-'ரேடியோ கிராம்' இருக்குமிடத்தை நோக்கி அவன் போகிறான்.

மீண்டும் ஒரு கனத்த செருமலுடன் தனது பெரிய நரை மிகுந்த முறுக்கு மீசையை ஒதுக்கிவிட்டுக் கொண்ட பின், சுருட்டுப் பெட்டியைத் திறந்து ஒரு சுருட்டை எடுத்து லேபிளைப் பிய்த்தெறிந்துவிட்டு மூக்கருகே வைத்து ரசித்தபின், அதன் ஒரு முனையை முன் பல்லால் கடித்தெடுத்த துண்டை மென்று, சற்றுக் கழித்து பக்க வாட்டில் திரும்பித் துப்புகிறார். அதற்குள் அப்புக்குட்டன் திரும்பி வந்து பாட்டிலைத் திறந்து கிண்ணத்தை நிரப்பி வைக்கிறான்.

அப்போது ஆரம்பமாகிறது இசை.

மீண்டும் அவர் முகத்தில் ஒரு புன்னகையுடன் மதுவை அருந்துகிறார்.

அவருக்கு மது அருந்த லைசன்ஸ் உண்டு என்பதாலும், அடிக்கடி ரேஸுக்குப் போகிறார் என்பதனாலும் அனுமதிக்கப்பட்ட காரியங்களை மட்டுமே அவர் செய்கிறார் என்று அர்த்தம் அல்ல. ரிடையராகப் போகும் வயதாகியும் கூட அவரது ஒழுக்க நடவடிக்கைகள் யாவும் ஓர் இளம் வயதுவிடலுக்கொத்தவை என்று ஊரே அபிப்பிராயம் கொண்டுள்ளது...

ஆனால் அவரோ இது பற்றிய கவலைகளே அற்றவர். அவரை யார் என்ன செய்துவிட முடியும்?. அவர் அதிகாரி—அதிகாரமும் பொறுப்பும் மிக்க சக்திவாய்ந்த ஓர் இலாகாவின் அதிகாரி. நூறு மைல் விஸ்தீரணத்திற்குட்பட்ட ஜில்லா வட்டத்தில் இவரே ஏகச் சக்ராதிபதி அந்தப் பீடத்திற்கு எவ்வளவு கண்டிப்பு வேண்டுமோ அவ்வளவு கண்டிப்பும் கண்காணிப்பும் உடையவர்தான்.

அவர் தனி வாழ்வில் எப்படி இருந்தால்தான் என்ன? எனினும் அவரது கண்டிப்பை முரட்டுத்தனம் என்றே அனைவரும் கருதினர். அவர்மீது எவருக்கும் நன்மதிப்பில்லாமற் போனதற்கும் காரணங்கள் உண்டு. அவர்

எவரிடத்தும் நன்மதிப்பை எதிர்பார்க்கவும் இல்லை. தன்னிடம் எல்லோரும் அஞ்சி, அடங்கி நடக்க வேண்டுமென்று மட்டுமே அவர் ஆசைப்பட்டார். அவர்களும் அவ்விதம் நடந்தார்கள். அவர்களை அவ்விதம் அவரால் நடத்தவும் முடிந்தது. அவ்வள்வுதான்! அந்த இலாகா அவரிடம் எதிர்பார்ப்பதும் அவ்வளவுதான். அவர் எப்படி இருந்தால் யாருக்கென்ன? அந்த இலாகாவுக்கு அவர் பெயர் ஓர் எச்சரிக்கை; அவரது பிரசன்னம் ஒரு குலை நடுக்கம்.

இந்தச் சந்தர்ப்த்தைக் தவிர மற்ற சமயங்களில் அவர் முகத்தில் ஒரு புன்னகையை எந்த மனிதனும் பார்த்திருக்க முடியாது.

இப்போது உள் ஹாலிலிருந்து அலைபோல எழுந்து வந்த இசை நர்தம்- இதயக் கமலத்தின் அடிப்பாகத்தில் கெட்டி தட்டிப்போன இடத்தில், கூரிய இளநகத்தால் லேசாய் வருடி இளக்கிக் கரைப்பது போல் அவர் உடலைச் சிலிர்க்க வைக்கிறது. கண்கள் மின்னுகின்றன.

அவர் மனிதன்தான் என்றறிய இந்தச் சந்தர்ப்பம் மட்டுமே இன்னொரு சாட்சி.

அந்த இசையின் ஒரு கதிக்கும் மறு கதிக்கும் இடைவெளியில் நிலவும் நிசப்தத்தில், அந்த மோன இசையின்- நிறைவைத் தாங்கொணாதவராய் உள்ளெல்லாம் கிளுகிளுத்து உணர்ச்சியின் குருத்தாகி வாய்விட்டுக் கலகலவெனச் சிரிக்கிறாரே-இப்போது அவர் ஒரு குழந்தை!

இந்த நேரத்தைத்தான் 'முகூர்த்த நேரம்' போல் பாராட்டி இதன் ரகசியமறிந்த சில பெரிய மனிதர்கள் மதுசூதனராவைப் பார்க்க வருவார்கள். அவரும், யார் பார்க்க வந்தாலும் 'வரச்சொல்' என்று அனுமதி வழங்கிவிடுவார். வருபவர்களில் பெரும்பான்மையாய், லாரி, பஸ் சொந்தக்காரர்கள், பெரிய வியாபாரிகள், தொழிலதிபர்கள்- இந்த ரகத்தினராகத்தான் இருப்பார்கள்.

அவரால் அவர்களுக்கும், அவர்களால் அவருக்கும் பரஸ்பர ஒத்துழைப்பும் லாபமும் கிட்டும்.

மாதா மாதம் 'மாமூலை'ப் பணமாகவும் பொருளாகவும் அவருக்கு வெகுமதிகளைப் பிரார்த்தனை செலுத்துவதுபோல் செலுத்துபவர்களும் வருவார்கள்.

ஆமாம்; அதற்குப் பெயர் மக்கள் பாஷையில் லஞ்சம்தான்!

இல்லாவிட்டால் எப்படி இந்த வாழ்க்கை நடந்த அவரால் இயலும்?

ஆயிரம் ரூபாய் வாங்கும் அதிகாரியாகத்தான் இருக்கட்டுமே. .இரண்டு பிள்ளைகளைக் காலேஜில் படிக்க வைத்துக் கொண்டிருக்கிறாரே! மனைவி இறந்த இருபது வருஷமாய் அவர்களை ஹாஸ்டலிலேதானே வளர்த்திருக்கிறார் என்னதான் 'பர்மிட்' இருந்தாலும் அதளவுக்கு மேல் எத்தனையோ மடங்கு குடித்துத் தீர்க்கிறாரே... அவர் மதுச் செலவுக்கு மட்டும் ஆயிரக்கணக்கில் ஆகுமே!.

லஞ்சம் வாங்காமல் முடியுமா?. மதுசூதனராவ் லஞ்சம் வாங்குகிறவர்தான்; குடிகாரர்தான். ஒழுக்க மில்லாதவர்தான்; சூதாடிதான்.

ஆனால், அவரது இலாகாவில் அவருக்குக் கீழ்ப்பட்ட எவரும் வாங்குவதையோ இலாகாவின் கௌரவத்துக்கு இழுக்கு உண்டாக்கும் வகையில் நடந்து கொள்வதையோ அவர் அனுமதிக்க மாட்டார்.

மதுசூதனராவ் அடிக்கடி சொல்லிக் கொள்வார் "நான் ஊழலுக்கு எதிரி" என்று.

அவ்விதம் சொல்லும் போதெல்லாம் அவர் மனத்தில் ஒரு குரல்- எதிரி மனத்தின் எதிரொலியே போல்- அமைதியாய் முனகும்; "சைத்தான் வேதம் ஓதுகிறது!"

எது எப்படியாகயிருப்பினும் ஒன்று மட்டும் நிச்சயம்; உண்மை. சகல விதமான அவப்பெயர்களுக்கும் அவர் ஆளாகி

இருந்தும், அவர் இலாகாவில் ஓர் ஊழியன்கூட ஒரு சிறு அவதூறுக்கும் ஆளாகாமல், மதுசூதனராவின் கண்டிப்பும் கட்டுப்பாடும் அவர்களைக் காப்பாற்றித்தான் வந்திருக்கிறது சந்தேகமேயில்லை.

"சார்" என்று வாய்க்குள் முனகியவாறு அப்புக்குட்டன் அவர் எதிரே வந்து நிற்கிறான்.

மதுசூதனராவ் கண்களை மூடிக் கிறங்கியவாறு கையிலுள்ளதைப் பருகவும் மறந்து இருக்கிறார். தூரத்து இசையாய் மோனத்தில் பிறந்து மாயம்போல் விம்மி விகஸித்துத் தன்னுள்ளே வந்து புகுந்து பேரிசை மீட்டுவது போன்ற- திரும்பத் திரும்ப ஒலிக்கும் ஒரே பல்லவியான. அந்த வயலின்களின் இசையில் தன்னைப் பறி கொடுத்திருக்கும் அவரது விழிகள் சற்றுமுன் காம்பவுண்டு கேட்டில் ஒளி வீசியவாறு நுழைந்த அந்தக் காரைக் கண்டன. இப்போது அப்புக்குட்டன் வந்து எதிரில் நிற்கிறான்... எல்லாம் அவருக்குத் தெரிந்துதானிருக்கிறது. இருப்பினும் அந்த நாதயோக உபாசனையைக் கலைத்துக் கொள்ளச் சம்மதமில்லாமல் அப்படியே சமைந்து போயிருந்தார் அவர்.

அவரைச் சலனப்படுத்தக் கூடாது என்ற உணர்வில், அப்புக்குட்டனும் சற்று நேரம் மௌனமாய் நின்றிருந்தான்.

தனது செக்கச் சிவந்த விழிகளை- அரைக்கண் திறந்து அவனை நோக்கினார் அவர். கைச்சாடையின் மூலம், 'வரச்சொல்' என்று காட்டிவிட்டு மீண்டும் கண்களை மூடிக் கொள்ளுமுன் கையிலிருந்ததைப் பருகியவாறே, இசையில் ஆழ்ந்திருந்தார்.

இப்போது அப்புக்குட்டன் நின்றிருந்த இடத்தில் விரல்களில் வைர மோதிரங்கள் மின்ன, மஸ்லின் வேட்டியும், ஸில்க் ஜிப்பாவும் அணிந்த ஒரு பெரும் புள்ளி நின்றிருக்கிறார்.

இசையில் லயித்திருந்த மதுசூதனராவின் மூடிய இமை விளிம்பில் ஒரு கோடு கண்ணீர் பளபளக்கிறது.

அவர் கண் திறந்தபோது, எதிரில் நின்றவரைப் பார்த்துக் கண்களைச் சிமிட்டிப் புன்னகை காட்டியவாறு, கூறினார்! "இந்தச் சங்கீதம் இருக்கிறதே இது, ஜடத்தில் உயிரூட்டும், உயிரில் ஆத்மாவைக் கலக்கும். ஆத்மாவில். ஓ! நீங்கள் சரியான பிஸினஸ் மேன். உங்களுக்கு ஏது ஆத்ம விசாரம்!" என்று கூறிச் சிரித்தார் மதுசூதனராவ். வந்தவர் இவர் கூறியது ஒன்றும் புரியாமல், 'ஹி. ஹி. ஹி' என்றவாறு கையைப் பிசைந்தவாறு நின்றார்.

மதுசூதனராவ் யாரையும் எப்போதும் உட்காரச் சொல்ல மாட்டார்; யாரும் உட்காரவும் மாட்டார்கள். இவர் மாமூலாய் வருபவர்தான். இவருக்குத் தெரியும். இந்தச் சமயத்தை எப்படிப் பயன்படுத்திக் கொள்வது என்று.

"ஐயா, ஒரு வாரமா ஊர்லேயில்லை" என்று கூறி எதற்கோ பீடிகை போட்டார் அந்த பிஸினஸ்மேன்.

"ஆமா. என்று கூறிச் சற்று நிதானமாய் எதையோ யோசித்து, "பெங்களூர் ரேசுக்குப் போயிருந்தேன். ." என்று கூறும்போது, அவர் செவிகளில் பந்தயக் குதிரைகளின் குளம்படி ஓசை கேட்பது போல். அவர் கண்களில்- முதற்குதிரையாகப் பறந்து வந்து, 'வின்னிங் பாயிண்ட்' அருகே நாலாவது குதிரையாகிவிட்ட 'கோல்டன் ஹெரால்' டைக் கண்டு, அன்போடு அனுதாபம் தெரிவிப்பதுபோல.

"ஹ்ஹோ! இட்டீஸ் ஆல்ரைட். ரேஸ்னா அப்படித்தான். .!" என்று தன் முகத்துக்கு நேரே கை வீசி அந்தச் சிந்தனைகளைக் கலைத்துக் கொண்டார். "ஏன். . நான் இல்லாத போது நீர் தேடி வந்தீரோ?" என்றார் மதுசூதனராவ்.

"ஆமாம் ஸார், அந்த லைசன்ஸ் விஷயமா. நீங்க 'ஸைன்' பண்ணிட்டுப் போயிருக்கீங்க. ஹெட்கிளார்க்கும் பாஸ் பண்ணிட்டார். ஆனா சாதாரண ஒரு க்ளார்க் இல்லே சார் கண்ணிலே விரல்விட்டு ஆட்டிட்டான்! அதுவும் உங்க டிபார்ட்மெண்டிலே, உங்க ஆபீசிலே. ஒரு க்ளார்க்- அந்த ஜோசப். 'நூறு ரூபா வெச்சாத் தாண்டா ஆச்சு, இல்லே, ஒரு

வாரம் கழிச்சு வா'ன்னிட்டானாம். நம்ம கணக்குப்பிள்ளை எம்பேரு-உங்க பேரு எல்லாம் சொல்லிப் பார்த்திருக்காரு. ம்ஹூம். ஒண்ணும் நடக்கல்லே. நம்ம பிஸினஸ்லே, அதுவும் அந்தக் காரியத்திலே ஒரு வாரம் காத்திருக்கிறதுன்னா, அந்தச் சமயத்திலே பல ஆயிரம் அவுட் ஆயிடுமே. என்ன பண்றது? சரி, ஐயா வந்தப்புறம் கவனிச்சுக்குவோம்னு, நூறு ரூபாயை அழுதுட்டு- உங்க ஹெட்க்ளார்க்குகிட்டே ஒரு ரிப்போர்ட்டும் எழுதிக்கொடுத்தேன் அவன் பேரிலேயே. ."

மதுசூதனராவ் ஆள்காட்டி விரலால் தனது மோவாயை நெருடியவாறு அவர் கூறியதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்துவிட்டு, ஒரு பெருமூச்சு விட்டார். "ம். இப்படி நடந்திருக்க வேண்டாம்" என்று தனக்குள் முனகிக் கொண்டார்.

"நூறு ரூபா இல்லே ஸார் பெரிய விசயம். நீங்க இந்த மாதிரி காரியத்தை நிச்சயம் அனுமதிக்க மாட்டீங்க வேற எப்படியாவது உங்களுக்குத் தெரிய வந்ததுனா அப்புறம் எம்மேலே வருத்தப்படுவீங்களேன்னுதான். இந்த ரிப்போர்ட்டை எழுதிக் கொடுத்தேன். மத்தபடி ரூபா என்ன ஸார். ரூபா?"

"இந்த விஷயம் என்கிட்டே வந்து ரெண்டு நாளாகுது நாளைக்கு இதன் பேரிலே நான் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று மதுசூதனராவ், தனக்குள் ஆங்கிலத்தில் சொல்லிக் கொண்டார். அது வந்தவருக்குப் புரிந்தது.

"அப்போ நான் உத்தரவு வாங்கிக்கிறேனுங்க" என்று கும்பிட்டவாறு தன் கையிலிருந்த ஒரு கவரை அந்த மேஜையின் மீது வைத்துவிட்டுக் குழந்தைச் சிரிப்புடன் நகர்ந்தார் அந்த பிஸினஸ்மேன். மதுசூதனராவ் சங்கீதத்தில் ஆழ்ந்தார்.

அவர் சென்ற அரைமணி நேரத்திற்குப் பிறகு அந்தக் கவரைப் பிரித்துப் பார்த்தார் மதுசூதனராவ். அதில் ஐந்து நூறு ரூபாய் நோட்டுக்கள் இருந்தன. அது மாமூல். அதைப் பார்த்துவிட்டு. அவர் சற்று வாய் விட்டுச் சிரித்தார். "தி டெவில் ஈஸ் கோட்டிங் ஸ்கிரிப்ச் சர்ஸ்(சாத்தான் வேதம் ஓதுகிறது) என்று முனகிக் கொண்டார்.

*அப்போது அவர் எதிரே அப்புக்குட்டன் வந்து நின்றான் "ஸார்!"*

*தமது சிவந்த விழிகளால் அவனைப் பார்த்தார்.*

*''யாரோ ஜோசப்பாம் ஸார்— ஆபிஸ் க்ளார்க்-பார்க்கணும்னு வந்திருக்கிறார்."*

*ராவ் சற்று நேரம் கண்களை மூடி யோசித்தார். அவர் முகம் சிந்தனையால் கறுத்தது. நெற்றிச் சருமத்தைச் சுருக்கிக்கொண்டு, "ஆபிஸில் வந்து பார்க்கச் சொல்" என்றார்.*

*அப்போது ஹாலிலிருந்து ஒலித்த சங்கீதத்தில் ஒரு ஒற்றை வயலின் அவலமாய் அழுது கொண்டிருந்தது!*

*அப்புக்குட்டன் வந்த ஆசாமியைத் திருப்பி அனுப்பு வதற்காக மாடிப்படிகளில் இறங்கிக் கொண்டிருக்கையில், அவரது கனத்த குரல் பின்னாலிருந்து கரகரத்து ஒலித்தது; "அப்பூ.*

*"ஸார்!" என்று திரும்பி ஒரே ஓட்டத்தில் வந்து நின்றான் அப்பு.*

*அவர் கையிலிருந்த சுருட்டைக் கொளுத்திக் கொண்டிருந் தார். தீக்குச்சி முழுவதும் சுருண்டு எரிந்து தீரும்வரை சுருட்டைத் திருப்பித் திருப்பிக்கொளுத்திப் புகை பரப்பிய பின், புருவங்களை உயர்த்தி அப்புவைப் பார்த்து "அவனை வரச்சொல்" என்றார்.*

*அப்பு சென்ற பிறகு அந்த க்ளார்க்கைப் பற்றி யோசித்தார்; 'எதுக்கு வந்திருக்கிறான்? வேணும்னு கெட்ட எண்ணத்திலே தன்னைப்பத்திக் கதை கட்டி விட்டுட்டுடாங்கன்னு அழுறதுக்கா? தெரியாம பண்ணிட்டேன்னு காலைப் பிடிப்பானோ? ஹும்! பயல்களுக்குத் தெரிந்திருக்கும், காலிலே விழுறதும், கண்ணீர் விடறதும் இந்த மதுசூதனராவிடம் பலிக்காதுன்னு... என்று நினைத்துக்கொண்டே இருக்கையில், அந்த ஜோசப் வந்து சல்யூட் செய்தவாறு நின்றான்.*

"நீ சர்வீசுக்கு வந்து எத்தனை வருஷமாச்சு?" என்று அவன் முகத்தைப் பாக்காமல் கையிலிருந்த சுருட்டைத் திருப்பித் திருப்பிப் பார்த்தவாறு கேட்டார் ராவ்.

"எட்டு வருஷம் ஸார்.

"உன் மேலே ஒரு லஞ்சப் புகார் வந்திருக்கே!"

"எஸ். ஸார்!"

"என்ன எஸ் சார்?" என்றவாரே தலை நிமிர்ந்தார் மதுசூதனராவ். எரிச்சலாலும் கோபத்தாலும் அவர் கண்கள் மேலும் சிவந்திருந்தன அவர் முகம் திடீரென மாற்ற முற்றிருந்தது.

"ஆமாம். ஸார். நான் லஞ்சம் வாங்கினேன்— அது உண்மைதான். எனக்குத் தெரியும். இதுக்கு அப்புறம் என்னென்ன நடக்கும்னு. அப்போ. வேற வழியில்லே. வாங்கிட்டேன். அந்தப் பிரச்னை தீர்ந்துட்டுது. அதுக்கு என்ன தண்டனையானாலும் நீங்கள் விதிக்கலாம்." அவன் பேசிக் கொண்டிருக்கையில் அவர் அவன் முகத்தை கூர்ந்து நோக்கினார்.

ம். அப்படின்னா நீ என்னத்துக்கு இப்ப இங்கே வந்திருக்கே?" என்று தன் பார்வையை அவன் முகத்தில் கூர்மையாய்ப் பதித்தவாறு கேட்டார்.

அவனுக்கே தான் எதற்காக வந்தோம் என்று புரியவில்லையோ?- ஒரு நிமிஷம் மௌனமாய் வெறித்த விழிகளுடன் நின்றிருந்தான். அவன் கண்கள் கலங்கின. நெஞ்சில் பெருகி வந்த துயரத்தை அழுத்தி விழுங்கும் போது கண்டச் சங்கம் 'கடக்' கெனக்குழிந்து எழுந்தது. அடைத்துக் கம்மிய குரலில் அவன் சொன்னான்;

"ஸார்... நான் லஞ்சம் வாங்கினேன்! காசு மேல ஆசைப்பட்டோ, ஆடம்பரச் செலவுக்கோ நான் லஞ்சம் வாங்கல்லே ஸார்... இது வரைக்கும் நான் வாங்கினதும் இல்லே. லஞ்சம் வாங்கிப் பழக்கப்பட்டுப் போனதனாலேயும்

வாங்கல்லே, இனி மேல், ஒரு வேளை தொடர்ந்து சர்வீசிலே இருந்தாலும், நான் வாங்கமாட்டேன். இது சத்தியம் சார்....அதைச் சொல்லிட்டுப் போகத்தான் வந்தேன். இதுக்கு மேலே நீங்க என்ன முடிவு பண்ணினாலும் நான் வருத்தப்பட மாட்டேன்.. எந்த்த் தண்டனைக்கும் உரியவன் நான்."

அவனை அவர் மிகுந்த கவலையோடு உற்றுப் பார்த்தார். அவன் கூறிய வார்த்தைகளை மீண்டும் ஒரு முறை தனக்குள் யோசித்துப் பார்த்தார்.

'நான் லஞ்சம் வாங்கினேன். காசு மேலே ஆசைப்பட்டோ, ஆடம்பரச் செலவுக்கோ நான் லஞ்சம் வாங்கல்லே. லஞ்சம் வாங்கிப் பழக்கப்பட்டுப் போனதானாலேயும் வாங்கல்லே..."

அந்த வார்த்தைகளை ஆழ்ந்து யோசித்தவாறு மேஜை மீதுள்ள- சற்று முன் அந்த பிஸினஸ்- மேன் கொடுத்து விட்டுப் போன கவரைப் பார்த்தார். ஒரு விநாடி தன்னைப் பற்றி நினைத்தார்.

"ம்... நான்சென்ஸ்" என்று தன்முகத்துக்கு நேரே கையை வீசித் தனது வேண்டாத சிந்தனையை விரட்டிக் கொண்டார்.

"நான் 'உன் பர்ஸெனல் பைலை' இன்னிக்குப் பார்த்தேன். ரொம்பவும் ஒழுங்கான ஆளா இருக்கிற நீ முன்னே பின்னே யோசிக்காம இப்படிச் செய்திருக்கே... என்ன இருந்தாலும் குற்றம்- குற்றம் தானே?" என்று தானே பேசிக்கொள்வது போல் கேட்டார்.

"எஸ்... ஸார்!"

"பின்னே ஏன் இந்தக் காரியம் செய்தே? என் பெயரைச் சொல்லியும் கூட, ஹெட் க்ளார்க் பாஸ் பண்ணின ஒரு காரியத்திலே நீ, அடமென்ட்டா குறுக்கே நின்னு லஞ்சம் வாங்கியிருக்கிறதனாலே- அந்த ஆளும் உனக்கு எதிரே சாட்சி சொல்றானே... ம்...... என்று யோசித்தவாறு கண்ணாடித் தம்ளரிலிருந்ததைக் குடித்தார். யோசனை பலமானதால் அவர் நெற்றி வியர்த்திருந்தது. நெற்றியைத் துடைத்து விட்டுக்

கொண்டு சுருட்டைப் புகைத்தார். அப்பு தம்ளரில் மதுவை ஊற்றிச் சோடாவைக் கலக்கினான். குனிந்து நின்றிருந்த அப்புவின் முதுகுக்கு மேல் தலையை உயர்த்தி, அதட்டுகின்ற குரலில் ஜோசப்பைப் பார்த்து, ஆங்கிலத்தில் கேட்டார் ராவ்: "எது உன்னை அப்படிப்பட்ட திமிரான குற்றத்தைச் செய்ய வைத்தது?- வாட் இஸ் தட்?"

அவனும் ஆங்கிலத்திலேயே அழுகை கலந்த துயரக்குரலில் பதில் சொன்னான்: "அது.. அது.. என் குழந்தை! இன்று காலை செத்துப் போயிற்றே... அது சார்!

திடுக்கிட்ட ராவ், "ஜோசப்! ஐ.. ஆம் சாரி!... என்று தலையைக் குனிந்தார். அவரால் சில விநாடிகள் தலையை நிமிர்த்தவே முடியவில்லை. அப்போது அவர் பின்னாலிருந்து இது வரை மெல்லென ஒலித்தவாறிருந்த அந்த இசையில் கூட துயரம் மிக்க ஒரு மௌனம் கனத்தது.

ஒரு பெருமூச்சுடன் தலை நிமிர்ந்தார் ராவ். அப்போது ஜோசப் முகத்தைத் துடைத்துக் கொண்டிருந்தான்.

"ஜோசப், இப்படி உட்காரு, பரவாயில்லை... என்று தன் எதிரே இருந்த நாற்காலிகளில் ஒன்றைச்சுட்டிக் கனிந்த குரலில் கூறினார் ராவ்.

"வேண்டாம் ஸார்... இப்படியே... என்று சற்றுத் தள்ளி வந்து நின்று கொண்டான் ஜோசப். கரகரத்தக் குரலில் விசாரித்தார் ராவ்.

"எத்தனை வயசு குழந்தைக்கு?"

"ஆறு வயசு ஸார்."

"என்ன உடம்புக்கு?"

"டிப்தீரியா... கவர்மெண்ட் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனேன்... ரொம்ப விலையுயர்ந்த ஊசியாம். வேற ஒரு கேசுக்குப் போட்டுட்டதினாலே, உடனே கைவசம் இல்லேன்னாங்க. பிரைவேட் டாக்டர் கிட்டே கொண்டு போயி, உடனே போடணும்னு சொன்னாங்க. என்கையிலே ஒரு சல்லி

கூட இல்லே.. ஓ! கேவலம் ஒரு குமாஸ்தாவின் குழந்தைக்கு வரக்கூடாத நோய்ன்னு அப்ப எனக்கு யோசிக்க நேரமில்லே. எங்கெங்கோ பார்த்தேன். இப்ப நான் லஞ்சம் வாங்கினேன்னு சாட்சி சொல்ல வந்த எல்லார்கிட்டேயும் கேட்டேன்,. அவங்ககிட்டேயும் இல்லே. ஆமா! அவுங்க என்ன லஞ்சமா வாங்கறாங்க?- எனக்கொரு நூறு ரூபாயைத் தூக்கிக் கொடுக்க? அப்பத்தான்- அவர் கிட்டே பிடிவாதமா முரட்டுத்தனமா ஒரு தப்பான காரியம் நாளைக்கு வேலையேப் போயிடலாம்னு தெரிஞ்சும்- எல்லாத்துக்கும் தயாராகி அந்த நூறு ரூபாயை வாங்கினேன்,. அப்படியும் அந்தக் கருணையுள்ள ஆண்டவன், 'லஞ்சம் வாங்கின ஒருத்தனின் மகனா இருக்க வேணாம்னு.."

அவன் சொல்லி முடிக்கவில்லை. "நோ... நோ.... அப்படிச் சொல்லாதே" என்று அவனை அடக்கினார் ராவ்: "ஜோசப்" என்று அவனை அழைத்து விட்டுச் சற்று நேரம் மௌனமானார். அந்த மௌனமான விநாடிகளில்... தான் குடிகாரனாக மாறாத காலத்தில், நாணயமான மூன்றாம் தர அதிகாரியாய் இருந்த போது, தன்னோடு வாழ்ந்த அன்பு மனைவியைப் பற்றி ஏனோ எண்ணினார். அவளை இழந்த சோகத்தில்தான்- நான் குடிகாரனாய், ஸ்திரீ லோலனாய், லஞ்சப் பேயாய் மாறிய பின் தன்னைப் பிரிந்து வளர்கின்ற இரண்டு பிள்ளைகளைப் பற்றியும் எண்ணினார். பிறகு ஒரு பலமான கனைப்பில் தன்னைச் சமாளித்துக்கொண்டார்: "ஜோசப், உனக்கேற்பட்ட சோகத்திற்காக நான் ரொம்பவும் துயரப்படுகிறேன்' என்று ஆங்கிலத்தில் கூறிய பின் தொடர்ந்து சொன்னார்: "நான் உன்னைப் பாராட்டுகிறேன். எஸ்.. உன் தைரியத்துக்காக: ' நான் லஞ்சம் வாங்கினேன்'னு சொல்ல முடிஞ்சுதே உன்னாலே- அந்த நேர்மைக்காக.. நான் உன்னைப் பாராட்டுகிறேன். அதனாலேயே "இனிமேல் ஒரு வேளை சர்வீஸிலிருந்தாலும் நான் லஞ்சம் வாங்க மாட்டேன்'னு சொல்றியே- அதை மனப்பூர்வமா நம்பறேன்.... உம்' என்று தன் வயமிழந்த குரலில் சற்றுப் பலத்த ஸ்தாயியில் பிரகடனம் செய்தார் ராவ்.

ஜோசப்புக்கு இப்பொழுதுதான் கையும் காலும் நடுங்க ஆரம்பித்தது.

மதுசூதனராவ் தன் மேஜையின் மீதிருந்த அந்தக் கவரைச் சற்று நேரம் வெறித்துப் பார்த்தார். பின்னர் கசந்த சிரிப்புடன் சொன்னார்; "நானும் கூட உன்னைப் போல லஞ்சத்தை-ஊழலை வெறுத்திருந்தவன் தான். இன்னும், இப்பவும் கூட நான் லஞ்சத்துக்கு எதிரிதான்" என்று கூறி. "இப்படி நான் சொல்றப்போ, என்ன இது' "சாத்தான் வேதம் ஓதுகிறதே'ன்னு உனக்குத் தோணுதில்லே" என்று கேட்டார். உடனே 'தான் அவ்விதம் சொல்லியிருக்கக்கூடாது' என்று நினைத்துக் கொண்டார்.

ஜோசப் பதில் சொல்ல இயலாமல் வாயடைத்து நின்றிருந்தான்.

அவர் அணைந்து போன சுருட்டைப் பற்ற வைத்துக் கொண்டபின் கூறினார்; "அநேகமாய், எவனும் லஞ்சம் வாங்க ஆசைப்பட்டு,. ஊழலை வளர்த்துக் கொள்ளணும்னு ஆசைப்பட்டு, வாங்கறதில்லை. ஒரு அவசரத்தேவையினாலேயே வாங்கலாம். ஆனால், எல்லோருக்கும் உன்னைப் போல அதை ஒத்துக்கிற ஆண்மையோ, இனிமே வாங்கறதில்லேன்னு முடிவு பண்ணிக்கிற உறுதியோ இருக்கிறதில்லை" என்று கூறிவிட்டு அவர் பல நிமிஷங்கள் மௌனமாய் யோசித்தார். ஆம்; தன்னைப் பற்றியே அவர் யோசித்தார்.

திடீரென ஒரு பெருமூச்சுடன் மௌனம் கலைந்து, "உம்... தேவைன்னு நெனச்சிட்டா அதுக்கு ஒரு எல்லையுண்டா? அதனாலேதான் இந்த டிபார்ட்மெண்டிலே எனக்குக் கீழே இருக்கிறவங்களை நான் கடுமையாகக் கண்டிக்கிறேன். என்னைப் பத்தி நீ எவ்வளவோ கேள்விப் பட்டிருக்கலாம். ஆனா... உங்களையெல்லாம் அந்தக்காரியத்தைச் செய்ய நான் அனுமதிக்கவே மாட்டேன்.... என்று அவர் ஆக்ரோஷமாக-சுருட்டு புகைந்து கொண்டிருக்கும் தனது கையை ஜோசப்பை நோக்கி நீட்டியவாறு கத்தினார்: "என்னால் அதைச் சகிக்க முடியாது."

திடீரென்று அவர் அமைதியடைந்தார்: கொஞ்சம் மதுவைப் பருகினார். சாந்தமான குரலில், ஆழ்ந்த சிந்தனை தேங்கிய

கண்களால் ஜோசப்பை உற்றுக் கவனித்தவாறு மீண்டும் பேசினார் அவர்;

"ஏதோ ஒரு தேவையினாலே எவனோ ஒருத்தன் ஒரு தடவை லஞ்சம் வாங்கினாலும், ஊழல்மலிஞ்சு கிடக்கிறத்துக்குக் காரணம்.. தேவையினாலே இல்லே, அது ஒரு பழக்கத்தினாலே தான்! எல்லாமே... ஆமா, எல்லாமே ஒரு வகைப் பழக்கம் தான்! இதோ, நான் சுருட்டுக் குடிக்கிறேன், பிராந்தி குடிக்கிறேன்- இது எல்லாமே ஒரு பழக்கம் தான். எது ஒண்ணுமே பழக்கமாயிட்டா, அதிலிருந்து மீள்றது.,. ஓ! நடக்காது ரொம்பக் கஷ்டம்! எனக்குக் கஷ்டம் இருக்கிறதானாலே நான் செய்யறது எல்லாம்சரின்னு நெனச்சுக்கிறதா? என் பிள்ளைகள் உருப்படுமா, அப்புறம்?... நான் ஏன் என் பிள்ளைகளை என்கிட்டயிருந்தே பிரிச்சேன்?... என்னைப் பார்த்து அவங்க கெட்டுப் போகக் கூடாதேன்னு தான்.. என் கதை இன்னும் கொஞ்ச நாளைக்கு. நான் ரிடையர் ஆயிடுவேன்.. என்னோட என் பழக்கங்கள் எல்லாமே ரிடையர் ஆயிடட்டும்.. நீங்க எல்லாம் இன்னும் ரொம்ப நாள் வாழப் போறவங்க. அதனாலே நீங்க தப்பு செய்யறதை நான் அனுமதிக்க முடியாதுங்கறேன்" என்று கூறி கம்பீரமாக எழுந்து நின்றார். அவர் நெஞ்சைக்குடைவது போல் சங்கீதம்- ஒரு கீழ் ஸ்தாயி வயலினும், மேல் ஸ்தாயி வயலினும், தர்க்கம் புரிந்தவாறு- முழங்கிக் கொண்டிருந்தன.

ஜோசப் விடை பெற்றுக் கொள்வதற்காகச் சல்யூட் அடித்து நின்றான், அதைக் கவனிக்காதவராய் மதுசூதனராவ், வானத்தைப் பார்த்தவாறு சொல்லிக்கொண்டார்: "சாத்தானும் வேதம் ஓதட்டுமே.. அதன் மூலம் புதிய சாத்தான்கள் உருவாகாமலிருக்குமல்லவா?... சாத்தானைப் பிடித்த பாவமும் சற்றுக் குறையுமல்லவா?... என்று தன்னுள் சிரித்துக் கொண்டார்.

"அப்போ நான் வரட்டுமா ஸார்?" என்று மீண்டும் ஒரு முறை சல்யூட் செய்து நின்றான் ஜோசப்.

'ம்' என்று எங்கோ பார்த்தவாறு விடையளித்தராவ் திடீரெனத் திரும்பி, 'இரு' என்று சொல்லி விட்டு, மேஜை மீதிருந்த கவரை எடுத்தார்; ஒரு விநாடி புன்னகையுடன் அதைப் பார்த்து அதனுள்ளிருந்து ஒரு நூறு ரூபாய்த்தாளை எடுத்து அவனிடம் நீட்டியவாறு விளக்கினார்: "நீ லஞ்சம் வாங்கவில்லை, கடன்தான் வாங்கினாய், அவனிடம் நாளைக்குத் திருப்பிக் கொடுத்து விடு. நீ போகலாம்!"

கை நடுங்க அதை வாங்கிக் கொண்டு கண் கலங்க அவன் விடை பெற்றுக்கொண்டான்.

போகும் போது அவன் அவரின் சார்பில் தன்னுள் சொல்லிக் கொண்டான். "இறைவா! எனக்குக் கீழ்ப்பட்டிருப்பவர்களை நான் மன்னிக்கிறேன். நீ என்னை மன்னிப்பாயாக?"

மதுசூதனராவ் அவன் முதுகைப் பார்த்தவாறு எழுந்து நின்றார். ஹாலிலிருந்து பெருகி வந்த இசை வெள்ளம் கூர்மை பெற்று ஒற்றை வயலினின் வில்லிழுப்பு அவர் நெஞ்சின் மேல் உரசி, அவரது ஆத்மாவோடு அந்தரங்க பாஷை பேசிற்று.

திடீரென பல வயலின்கள் ஒரே விம்மலில் ஓங்கி எழுந்து ஓசை கனத்து, உரத்து முழங்கி, நான்கு முறை எதையோ பிரகடனம் செய்து ஓய்ந்தன.

அடுத்த நாள் மதுசூதனராவ் ஆபீஸ் அறையிலிருந்து கையெழுத்தாகி வந்த பைல்களின் நடுவே இருந்து, வெகு ஆவலுடன் ஜோசப்பின் 'பர்ஸனல் பைலை' எடுத்துப் பிரித்துப் பார்த்தார் ஹெட் கிளார்க் ராமபத்ரன்.

அதில், 'இந்த இலாகாவில் பணியாற்றுகிறவர்களிலேயே மிக உண்மையான ஊழியன்' என்று எழுதியிருந்த வாசகங் களைக் காண, அவர் முகத்தில் ஆச்சரியத்தாலும் ஒரு வகை ஏமாற்றத்தாலும் கடுமை படர்ந்தது. 'இது ஒரு குடிகாரனின் உளறல்' என்ற நினைப்பில் முகம் சுளித்ததுத் தலை நிமிர்ந்தார் ராமபத்ரன்.

அப்போது மதுசூதனராவ் குடித்திருக்கவில்லை என்பதற்குச் சாட்சி அதோ- சிரிக்கத் தெரியாத மனிதராய் சிலை போன்ற முகத் தோற்றத்தோடு யாரையும் லட்சியப் படுத்தாமல் அகம்பாவத்தின் சொரூபமாய் ஆபீஸ் அறையினின்றும் வெளியேறி காரை நோக்கிப் போகும் அவரது வழக்கமான நடைதான்...!

அவர் காரில் ஏறிச் சென்ற பிறகும் கூட அந்தத் திசையையே வெறித்துப் பார்த்தவாறிருந்தனர் ராமபத்ரனும் ஒரு மூலை மேஜையருகே இருந்த ஜோசப்பும்.

இருவரும்தான் அவரைப் பார்த்தனர்: இரு வேறு கோணங்களிலிருந்து.

# பொய் வெல்லும்

அது எல்லோராலுமே 'கலைக்கோயில்' என்றழைக்கப்பட்டது. எதனாலோவெனில் அதன் பெயரே அதுதான். மற்றப்படி, பாமரரும் அதைக் கலைக்கோயில் என்றழைக்கக் காரணமாய் அங்கே கோபுரக் கூடங்களோ, சிகரக் கும்பங்களோ ஏதும் இல்லை.

ஒரு பர்லாங் சதுரப் பிரதேசத்தில் சவுக்கு மரங்களிடையே, ஊருக்கு வெளியில் அமைந்திருக்கும் அந்தப் பத்துப் பன்னிரண்டு ஓலைக் குடிசைகளினுள்ளேதான் கலைமகளே கோயில் கொண்டு கொலுவீற்றிருக்கிறாள் என்பதை உணர்வு பூர்வமாய் ஏற்றுக்கொண்டு அதைக் கலைக்கோயில் என்றழைப்போர் மிகச் சிலரே.

நாலு புறமும் முள் கம்பி வேலி இடப்பட்ட காம்பவுண்டுக்குள் கலைக்கோயில் மாணவர்கள் தங்குவதற்காகவும், நூல் நிலையத்திற்காகவும், ஆபீஸாகவும் அமைந்துள்ள பல குடில்களின் நடுவே, தென்னோலை வேய்ந்த பெரிய- எளிய- புனிதமான நாடக அரங்கம் ஒன்றும் அங்கு உண்டு. பெரிய என்றால், அங்குள்ள குடில்களை விடப் பெரியதென்றும்; எளிய என்றால், நமது சமுதாயத்திலே மிகச் சிறந்த பீடத்தில் வீற்றிருந்த அரை நிர்வாண சாது மகான்களைப் போன்ற, அல்லது நமது சமுதாயத்தின் அடிப்படையும் அச்சுமான கோவணாண்டி உழவர் பெருமகனைப்போல் எளிமையானது என்றும்; புனிதம் என்றால், சொல்லில் வடிக்கவொண்ணாத- அங்கே சென்று அந்த அரங்கின் முன் அமர்ந்தால் மட்டுமே அனுபவிக்கத்தக்க ஓர் உணர்வு என்றும் பொருள்.

அது தோன்றி இந்த இருபது வருட காலத்தில் அங்கு பல புதுமை நாடகங்கள் அரங்கேறியுள்ளன. நாடகங்கள் என்று குறிக்கும்போது, கலைக்கோயில் நாடகங்களைக் காணாதவர்கள் தங்கள் மனத்தில் நாடகம் என்றால் இன்னது என்று வைத்திருக்கும் வரையறையை உதறிவிட்டால்தான் கலைக்கோயில் நாடகங்கள் எத்தன்மையன என்று ஊகிப்பது சாத்தியமாகும்.

அந்த நாடகங்கள்- அவற்றின் அமைப்பும் நுணுக்கமும், அடர்த்தியும் செறிவும், ஆழமும் வீச்சும்- சமூக வாழ்க்கையில் வேரோடிப் பாய்ந்து விழுதூன்றி நிற்பன வாகும்.

அவை ஆரவார முழக்கத்துடன் திடீரென மின்னிக் காண்போரின் கண்ணைப் பறித்துப் பின் கண்ணுக்குத் தெரியாமல் மறைந்தொழியும் எரிசரங்கள் அல்ல; அவை நாடகம் என்ற அவற்றுக்கு அமைந்த எல்லையை மீறாமல் ஆட்சி கொண்டு, விபத்துக்கிடமற்ற சின்னஞ்சிறு மாடங்களில் என்றென்றும் நின்று எரியும் தன்மை மிக்க கலைச்சுடர்கள், ஆகவே, அந்த நாடகங்களுக்குக் கரமுழக்கமும் சீழ்க்கையொலி யும் கூட்டிப் பேயாட்டம் போடும் ரசிகப் பெருங்குழாமும் இல்லை. ஆண்களும் பெண்களும் குடும்ப ஸ்திரீகளும், குழந்தைகளும்- தங்கள் கடமைகளையெல்லாம் மறந்து, சதா இவற்றின் தியானமே மிகுந்து, பித்துற்றவர்போல் இரவென்றும், பகலென்றும், வெயிலென்றும் மழையென்றும் பாராமல் வெறிகொண்டு விழுந்தடித்து மோதி, உடைகளைக் கிழித்துக் கொண்டு, ஒருவரையொருவர் சாடிப் பகைத்துக் கொண்டு இந்த நாடகங்களுக்காகக் கலைக்கோயிலின் முன்னே கும்பல் கூடுவதுமில்லை. இன்னும் தெளியக் கூறினால், 'இங்கேயும் நாடகங்கள் நடக்கின்றன, அல்லது இங்கு நடப்பனவும் நாடகங்கள் தாம்' என்றுகூடத் தெரியாமலிருந்தனர் 'ரசிகப் பெருமக்கள்'! அப்படியே தெரிந்து இவற்றைப் பார்க்க நேர்ந்தால், இதுவும் நாடகம் என்று அவர்கள் நம்ப மறுத்து விடுவார்கள்.

இன்று எங்கும் பரவலாகக் கலையென்பதன் பேரால் கொடி கட்டியாளும் விவஸ்தையற்ற 'நேரம் கொல்லி'க் கூத்தெல்லாம்

கலையெனின், கலைக்கோயிலில் நடக்கும் நிகழ்ச்சிகள் யாவும் கலையல்லதான். அவை வேறு; பொதுவான போக்கினின்றும் மாறுபட்டு முரணிய சிறப்பான ஏதோ ஒன்று. அவை 'நாடகங்கள் அல்ல' என்று கூறிவிட்டால்தான் என்ன நஷ்டம்?...

பிறவற்றை நாடகம் என்றும் கலை என்றும் ஏற்றுக் கொண்டு வாழ்கிறோமே, அதைவிட நஷ்டமோ அவமானமோ வெட்கமோ ஏதும் ஏற்பட்டுவிடாது, கலைக்கோயில் நாடகங்களை 'நாடகங்கள் அல்ல' என்று கூறிவிடுவதனால்.

கலைக் கோயில் நாடகங்கள் பிரபலமற்றவை. அதில் நடிக்கும் நடிக நடிகையர் எல்லா மனிதரைப் போலவும் தெருவில் நடந்து திரிகிறார்கள்; ஆபத்து நேருவதில்லை. அவர்கள் உண்மையான கலைத் துறைக்குத் தவிர அரசியல் கட்சிகளுக்கோ, பவுடர் ஸ்னோ வியாபாரிகளுக்கோ சற்றும் பயன்படுவதில்லை. அந்த நாடகங்களால் அவர்களும், அவர்களால் அந்த நாடகங்களும் பிரபலமடையாமற் போய்விட்டன என்பதற்காக அவர்களோ, அந்த நாடகங்களோ வருந்துவதில்லை. அந்த நாடகங்களும் விளம்பரம் என்ற எல்லையை மீறித் தெருவுக்குத் தெரு மூலைக்கு மூலை விளக்கேற்றி வெளிச்சம் போட்டு ஆள் மயக்கும் காரியத்தில் இறங்குவதில்லை.

தினசரிப் பத்திரிகையில்- அதற்குரிய விளம்பரக் கட்டணமற்ற பகுதியில்- ஒரு செய்தி போல் 'கலைக்கோயில் அளிக்கும் நாடகம்'- 'இன்ன தேதியில் இன்ன நாடகம்' என்ற அறிவிப்பு வரும். அதற்கு மேல் கலைக்கோயில் வாசலின் முன்னே ஓர் அறிவிப்புப் பலகையும் இடம் பெறும். வண்ணக் கலவைகளால் பூசி மெழுகிய ஜோடனைகளில்லாமல், ஒரே வர்ணத்தில் வரிச் சித்திரமாய் கலைக்கோயில் மாணவர்களால் வரையப்பட்ட தரம் மிகுந்த அந்த விளம்பரப்பலகை எல்லோருடைய கண்களையும் ஈர்க்கும் சக்தி பெற்றது அல்ல. ஆனால் நகரத்தின் ஜனத்தொகையிலே சில நூற்றுக்கும் குறைவான சிலர், அந்த அறிவிப்புப் பலகைக்காகப் பல நாட்கள் காத்துக் கிடப்பார்கள். அதன் அளவுக்கு அதிகமான கூட்டம்

அங்கே கூடும். அந்த நாடகங்களை ரசிப்பதாகக் காட்டிக் கொள்வதில் ஒரு பெருமை என்று எண்ணி வருபவர்களும் உண்டு.

அதற்கென்ன, போலி என்பது எல்லாத்துறையிலும் பொதுவான ஒரு நிழல் தான்....

இந்த நூற்றாண்டுத் தமிழர் சமூகத்தின் விதிவிலக்குகளான அந்த ரசிகர் குழுவுக்கு அன்று ஒரு திருநாள்.

கலைக்கோயில் வாசல் முன் சில மாதங்களுக்குப் பின் ஒரு நாள்- வாடுகின்ற ரசிகர் தம் மனம் தழைக்க வருகின்ற அருள் மழைக்கு அறிகுறி போல்- அந்தப் பத்திரிகையில் அதற்குரிய இடத்தில் சின்ன எழுத்துக்களில் "கலைக்கோயில் அளிக்கும் 'கானல் வரி' முற்றிலும் புதிய முறையில் ஒரு பழைய நாடகம்" என்ற அறிவிப்பைக் கண்டதும் கலைக்கோயிலின் வாடிக்கை ரசிகர்கள் மிகவும் திகைப்புற்றனர்.

சமூக வாழ்க்கையின் சித்திரங்களே போன்று- வாழ்க்கைப் பிரச்னைகளையும், கூலிக்காரக் குடும்பங்களையும், மத்திய தர வர்க்க வாழ்க்கைகளையும் அடிப்படையாகக் கொண்டு கனமும் வேகமும் கொண்ட யதார்த்தக் கலை நிகழ்ச்சிகளையே அரங்கேற்றி வந்த கலைக்கோயில், திடீரென சிலப்பதிகாரத்தை நாடகமாக வழங்க முன் வந்துள்ள அதன் துணிச்சலையும் அதன் வழக்கத்திற்கு விரோதமான ஒரு முயற்சியையும் கண்டு அவர்கள் திகைப்படைந்தனர்.

எனினும் அவர்களுக்குத் தெரியும்; மரபு என்பதன் பேரில் வழக்கொழிந்த அசட்டுத்தனத்திற்கோ, புதுமை என்பதன் பேரால் அர்த்தமற்ற ஆர்ப்பாட்டத்துக்கோ பலியாகிக் 'கலைக்கோயில்' எந்த முயற்சியிலும் இறங்காது என்று.

அதே பத்திரிகையில் மற்றொரு பக்கத்தில் பிரசுரமாகியுள்ள ஒரு செய்தி: 'கலைக்கோயி'லின் வழக்கத்துக்கு மாறான இந்த நாடகத்துக்கான காரணத்தை விளக்குவதாய் அமைந்திருந்தது.

அது, கலைக்கோயில் ஸ்தாபகரும் தலைவருமான மேகநாதன் நிருபர்களுக்குத் தந்துள்ள பேட்டியின் விவரம்.

அந்த ரசிகர்களுக்கு ஏற்பட்ட சந்தேகம் நிருபர்களுக்கும் ஏற்பட்டிருக்கும் போலும்.

அவர், தான் சிலப்பதிகாரத்தின் ஒரு பகுதியை நாடகமாக்கியிருப்பதன் காரணத்தை அதில் விளக்கியிருந்தார். "நம் சமுதாயத்தின் பிரச்சனைகளையும் கஷ்டநஷ்டங்களையும், ஆசைகளையும் நம்பிக்கைகளையும் சித்திரித்து பல நாடகங்களை அரங்கேற்றி வந்துள்ள கலைக்கோயில், இப்படி ஒரு நாடகத் தயாரிப்பில் இறங்கியுள்ளது குறித்துப் பலரும் வியப்படை கிறார்கள் என்பதை நான் அறிவேன். உங்களுக்கு ஒரு விஷயம் தெரிந்திருக்க வேண்டும். தெரியாதிருந்தால் மகிழ்ச்சியுடன் இந்தச் சமயத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.... சென்ற ஆண்டு நமது ஆண்டு விழாவுக்கு வந்திருந்த சில அயல் நாட்டு நண்பர்களின் அழைப்பிற்கு இணங்கி, நமது கலைக்குழு இன்னும் சில மாதங்களில் வெளிநாடுகள் பலவற்றுக்குச் செல்லவிருக்கிறது. அங்கு சென்று பல நிகழ்ச்சிகள் நடத்தும் போது எல்லா நிகழ்ச்சிகளுமே நமது இன்றைய சீர்குலைவு களையும், பிரச்சனைகளையும் வாழ்க்கைச் சிக்கல்களையும் மட்டும் காட்டுவனவாக இருந்தால் அது இந்த நாட்டின் முழுமையான பிரதிநிதித்துவம் ஆகாது என்று நான் கருதினேன். கலையின் சங்கநாதத்தில் முக்காலத்தின் குரலும் ஒலிக்க வேண்டும் அல்லவா? இன்றைய மாற்றமும், நேற்றைய ஏற்றமும், நாளையத் தோற்றமும் நிலைபெற்றுக் காட்சி தருவன கலா சிருஷ்டிகள். இந்த தரிசனத்துடன்தான் நமது நாடகங்களை நாம் ஆராய வேண்டும். எனினும் நமது வாழ்க்கை முறையினின்று விலகியிருக்கும் வெளிநாட்டு நண்பர்களுக்கு நமது இறந்த காலப் பெருமைகள் அரங்கேற்றிக் காட்டப் பட வேண்டாமா? எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன் இருந்த எங்கள் கலைச் செல்வத்தின் புதுமை ஆக்கம் இதுவெனக் காட்டவே இந்த நாடகத்தை ஓர் ஒத்திகை போல் நடத்திப் பார்த்துக்கொள்கிறோம். இதே நாடகம் இருபது வருஷங்களுக்கு முன் நம் தமிழ்நாட்டில் அரங்கேற்றப்பட்டு அன்றைய ரசிகப் பெருமக்களின் ஏளனச் சிரிப்புக்கும் காலித்தனமான ஆரவாரத்துக்கும் இலக்காகி அரங்கிலிருந்தே விரட்டியடிக்கப்

பட்டது என்பதையும் இங்கு தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். அந்த ரசிகர்களின் சந்ததியினர் அவர்களையும் மிஞ்சும் அளவுக்கு, அளவிலும் அறியாமையிலும் இன்று வளர்ந்து கிடக்கிறார்கள் என்பதை நான் அறிவேன். எனினும் ஆபத்தில்லாத அரணுக்குள் நாம் பாதுகாப்பாய் இருக்கிறோம் என்ற தெம்புடன் இந்த நாடகம் இருபது ஆண்டுகளுக்குப் பின் அரங்கேறுகிறது...”

மேகநாதனின் அறிக்கை போன்ற பேட்டியில் அவர் அறிவித்துள்ள விவரங்களைக் கண்டு வியப்புற்ற-பல நெருக்கமாயுள்ள கலைக்கோயில் நண்பர்கள்- ஒரு நாள் முழுவதும் நேரிலும் ‘போனி’லும் அவரிடம் தங்கள் பாராட்டுதல்களையும், ஆச்சரியத்தையும் தெரியப்படுத்திக் கொண்டிருந்தனர். அந்தப் பாராட்டுரைகள் ஒவ்வொன்றிலும் இருபது ஆண்டுகளுக்கு முன் ஒரு கலைஞனின் முதற் கலா முயற்சி அவமதிக்கப்பட்ட, ஆத்ம வதை செய்யப்பட்ட, ஒரு நிகழ்ச்சிக்குத் தெரிவிக்கும் அனுதாப உணர்வே உள்ளோட்டமாய் அமைந்திருந்தது.

‘கானல் வரி’ அரங்கேறவிருக்கும் தினத்துக்கு முதல் நாள் இரவு மேகநாதனைச் சந்திக்க அவரும் வந்தார்.

அப்போது.

மறுநாள் அரங்கேறவிருக்கும் ‘கானல் வரி’ நாடகத்தின் ‘ஸ்டேஜ் ரிகர்ஸல்’ முடிந்து நடிகர்கள் அலங்கார அறையுள் குழுமி மேக்கப்பைக் கலைத்துக் கொண்டிருந்தார்கள். சற்று முன் திடீரென மின்சாரம் தடைப்பட்டு விட்டதால் ஆங்காங்கே மெழுகுவத்திகள் எரிந்து கொண்டிருந்தன.

மேகநாதன் நாடக அரங்கிலிருந்து தனது தனிக் குடிலுக்கு வந்து இருளில் ஜன்னல் கதவுகளைத் திறந்து வெளியே அடர்ந்திருந்த சவுக்குத் தோப்பினூடே தெரிந்த வானத்தையும் நட்சத்திரங்களையும் ஆழ்ந்த சிந்தனையோடு வெறித்துப் பார்த்தவாறு நின்றிருந்தார்.

சில நிமிஷங்களில், எதிர்ப்புற "ஆபிஸ்" குடிலிலிருந்து ஒரு மாணவி கையில் எரிகின்ற மெழுகுவத்தியைக் காற்றில் அணையாமல் ஏந்திக்கொண்டு, இருளில் தனது குடிலை நோக்கி நடந்து வரும் அழகையும் கண்டார் மேகநாதன்.

அந்தக் காட்சி- இருளின் பிரஜைகள் போல் அடர்ந்து நிற்கும் சவுக்குத் தோப்பினூடே, கைக்குள் நிற்கும் சுடர் காற்றில் அணைந்துவிடுமோ என்ற ஜாக்கிரதையுணர்வோடு அடிமேல் அடியெடுத்து வைத்து, இருளின் பின்னணியில் எதிர்ப்பட்ட முகத்தில் செவ்வொளி சிதர வருகின்ற அந்தப் பெண்ணின் தோற்றம் இருட்டுக் கலைஞர்களும் குருட்டு ரசிகர்களும் நிறைந்த காலத்தில் தனது ஒற்றைத்தனிக் கலை முயற்சியின் சங்கேதப் பிரதிமைபோல், அந்தப் பெண்ணின் வருகை அவருக்கு உருவகமாயிற்று.

திடீரென்று அவர் உடலும் மனமும் சிலிர்த்தது

'அவள் அந்தச் சுடரை இங்கு கொணரு முன் அது அணைந்து விட்டால்?... அணைந்து விட்டால் என்ன? மீண்டும் ஏற்றிக் கொள்வது. அணைவதும் ஓர் அறிகுறியானால்? மீண்டும் ஏற்றுவதும் ஓர் உருவகமாகாதா?... அவர் மனத்தின் அறிவுப் பகுதி இவ்விதம் விவாதித்த தென்றாலும் உணர்வு அந்தப் பெண் அதை அணையாமல் இங்கு கொண்டு வந்து சேர்த்துவிட வேண்டுமே என்று தவித்தது. அந்தத் தவிப்பிலும் ஆர்வத்திலும் அவர் பார்வை அவள் வருகையைத் தீர்க்கமாய் உற்று நோக்கியது.

அவள் மெள்ள மெள்ள வந்தாள்.

அப்போது 'உய்' யென்ற சீழ்க்கை ஒலியுடன் சவுக்கு மரங்களைத் தழுவி வந்த பெருங் காற்றால் மேகநாதன் உடல் நடுங்கினார். அவள் கைகளைக் குவித்து அசையாமல் காற்றின் நடுவே நிற்கையில், அவளது மேலாடை பறந்தது. சுடர் துடித்தது...

மீண்டும் அவள் அசைவு பெற்று நடந்து, கையில் ஏந்திய சுடருடன் மேகநாதனின் அறைக்குள் நுழைந்து மேசையின்

மீது உருகிய மெழுகில் ஒரு சொட்டு விட்டு, அதன் பிடிப்பில் அதை நிறுத்தி வைத்துத் தலை நிமிர்ந்த போது, மேகநாதன் அவளைப் பார்த்து நிறைவும் திருப்தியும் கொண்டவராய் புன்னகை பூத்தார்.

மேசையின் மீதுள்ள சுடரின் பிம்பம் கண்களில் ஒளி விட கம்பீரமாய் நிமிர்ந்து நின்று, உள்ளில் விளைந்த ஓர் உணர்ச்சிப் பரவசத்தால் அவரது நீண்ட மூக்கு ஒரு முறை விரிந்து சுருங்க "சபாஷ்!" என்று அந்தப் பெண்ணை அவர் பாராட்டும் போது தான்.

அவர் வந்தார்.

காம்பவுண்ட்வாசலில் ஒரு சைக்கிள் ரிக்ஷா வந்து நிற்கும் சப்தம் கேட்டது. ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தார் மேகநாதன். ரிக்ஷாவிலிருந்து ஒரு வயோதிகர் தட்டுத் தடுமாறி இறங்கி டாப்பைப் பிடித்துக் கொண்டு "இதுதானா இடம்?" என்று சைக்கிள் ரிக்ஷாக்காரனைக் கேட்டார்.

"ஆமா சார். இதுதான் அந்தக் கலெக்கோயிலு. 'கும்'முனு இருண்டு கெடக்கு... கையெப் புடிச்சுக்க. உள்ளே கொண்ணாந்து உடறேன்" என்று அந்தக் கிழவரின் கையைப் பிடித்து அழைத்து வந்தான் ரிக்ஷாக்காரன். அவனும் கிழவனாகத் தோன்றினான்.

அவனிடம் அந்தக் கிழவர்: "யாராவது இருந்தா, மேகநாதனைப் பார்க்கணும்னு சொல்லு" என்று கூறுவதைக் கேட்டதும், "யாரோ புதியவர், வயதானவர் இந்த நேரத்தில் தன்னைத் தேடிக் கொண்டு இருட்டில் வருகிறாரே' என்று மேகநாதன் குடிலிலிருந்து வெளியே வந்து "வாருங்கள்... இந்தப் பக்கம்" என்று குரல் கொடுத்தவாறு எதிர் கொண்டு அழைத்தார்.

"இங்கே மேகநாதன் எங்கிருக்கிறார்? அவரை நான் பார்க்கணும்..." என்று குரலில் ஒரு படபடப்புடன் கேட்டார் வந்தவர்.

தன்னை, அறிமுகமுள்ளவர் போல் தேடி வந்துள்ள இவர் யாரென்று தெரியாமல் மிகவும் அருகில் வந்து கூர்ந்து பார்த்தார் மேகநாதன்.

"நான்தான் மேகநாதன்.. வாருங்கள்.. உள்ளே போய்ப் பேசலாம்" என்று, வந்தவரின் கரத்தைப் பற்றிய மேகநாதன், அவர் கை தன் பிடிக்குள் நடுங்குவதை உணர்ந்தார்.

"இப்பத்தான் கரண்ட் கட்டாயிடுத்து- அதான் ஒரே இருட்டு- மெள்ள.. மெள்ள படி இருக்கு, பார்த்து ஏறுங்க..." என்று அவரைக் குடிலுக்குள் அழைத்து வந்து அங்கிருந்த நாற்காலியில் அமரச் செய்தார் மேகநாதன். அவர்களைப் பின் தொடர்ந்து வந்த சைக்கிள் ரிக்ஷாக்காரன் வாசற்படியிலேயே நிற்பது கண்டு, "எவ்வளவுப்பா சில்லறை தர வேண்டும்?" என்று வினவினார் மேகநாதன்.

"வேண்டாம், வேண்டாம்- அவன் நம்ப ஆள் தான்- இருந்து என்ன அழைச்சிக்கிட்டுப்போவான்" என்று தடுத்தார், வந்தவர்! "கபாலி.. வா. உள்ளே வாயேன்..." என்று நட்புடன் அவனையும் அழைத்தார்.

"சும்மா இருக்கட்டும் சார்.. நா. இப்படியே காத்தாட குந்திகினு இருக்கேன்..." என்று வரிசையாக இருந்த படிகளில் உட்கார்ந்து மேல் துண்டால் கழுத்திலும் முகத்திலும் வடிந்த வியர்வையைத் துடைத்து விட்டுக் கொண்டான் கபாலி.

மெழுகுவத்தியின் மங்கிய ஒளியில், தனது மூக்குக் கண்ணாடியைக் கழட்டிய பின் தலையை நிமிர்த்தி வெறித்துப் பார்த்தவாறு தலையை ஆட்டி ஆட்டி எதையோ ஆமோதிப்பவர் போல் தனக்குள்ளே வாய் விட்டுச்சிரித்தவாறு அமர்ந்திருந்தார் வந்தவர்.

"மிஸ்டர்.. மேகநாதன்.." என்று திடீரென்று கையை நீட்டினார்.

"சொல்லுங்கள்" என்று மீண்டும் அவர் கரத்தைப் பற்றினார் மேகநாதன்.

"எனக்கு நிச்சயமாய்த் தெரியுது.. நீங்க என்னை இன்னும் அடையாளம் கண்டு கொள்ளவே இல்லை, இல்லியா. என்றார் வந்தவர்.

மேகநாதன் சற்றுத் திடுக்கிட்டு அவர் முகத்தை உற்று நோக்கினார். அவர் கிழவரல்லர்.. தன் வயதொத்தவர்தான்... உடல் தளர்ந்து, கண் பார்வை இழந்தவர்... என்று இப்போது தெரிந்தது. மெழுகுவர்த்தியின் ஒளியில் தன் முகத்தை உற்றுப் பார்த்தவாறு மௌனமாக நின்றிருந்த மேகநாதனின் அருகில் எழுந்து நின்று "என் பெயரைச் சொல்லிக்கறதில் ஒண்ணும் பெருமையில்லேன்னு எனக்குத் தெரியும்.. இருந்தாலும் அந்தப் பெயர்..." என்று நிறுத்தி, மௌனமாகி, ஒரு பெரு மூச்சு விட்டு, லேசான- இன்ன உணர்வு என்று இல்லாத ஓர் உணர்வில்- புன்னகை புரிந்து, "யார் மறந்தாலும் என் பெயரை நான் மறக்கலியே! நான் தான் சத்யபாலன்... எனறு அவர் சொன்னதும் தன் முகத்தில் ஒரு மின்னலடித்தாற் போல் பிரமித்து நின்றார் மேகநாதன்.

அப்போது வெளியே வாசலில் உட்கார்ந்திருந்த கபாலி "சங்கீத கலாபூஷண, நாடக உலகச் சக்கரவர்த்தி ஸ்ரீசத்யபால்.." என்று தன் வாய்க்குள் முனகிக் கொண்டே வானத்தைப் பார்த்துத் தன்னுள் சிரித்துக் கொண்டான்.

ஒரு விநாடியில் ஏற்பட்டு விட்ட கனத்த துயரச் சூழ்நிலையை மாற்ற, சிரித்தவாறு சொன்னார் சத்யபாலன்: "இன்னக்கிதான் கேள்விப்பட்டேன்- கானல்வரி நாடகம் நாளைக்கு அரங்கேறப் போகுதுன்னு.. ஏதேதோ பழசெல்லாம் ஞாபகம் வந்தது. உங்களைப் பார்க்கணும்னு தோணிச்சு. பார்த்து 'மேகநாதன் சார்.. நீங்க அற்புதமான திருப்பணி செய்து வர்ரீங்'கன்னு சாகறதுக்கு முன்னே என் வாயால் ஒரு தடவை உங்களைப் பாராட்டி வாழ்த்தினா என்னோட பாவத்திலே கொஞ்சம் தீரும்... இல்லையா?"

மேகநாதன் அவருக்குப் பதிலேதும் கூற முடியாமல் கனக்கின்ற நெஞ்சமும் கலங்குகின்ற கண்களுமாய் சத்யபாலனை வெறித்தவாறு நின்றார்.

அவரால் எதிரில் உள்ள இந்தத் தோற்றத்தை நம்ப முடியவில்லை. அந்தப் பெயரைக் கேள்விப்படாத சமீப காலத்தில் அவர் இறந்து விட்டிருப்பார் என்று நினைத்திருந்தார்: அல்லது எங்கோ சாதாரண மனிதனாய்க் கலைத்துறையிலிருந்து ஒதுக்கப்பட்டு சுகஜீவனம் நடத்திக் கொண்டிருப்பார் என்றும் எண்ணி இருக்கிறார்... அந்தக் காலத்தில் இவருக்குக் கார்கள் எத்தனை! பங்களாக்கள் எத்தனை! செல்வம் எத்தனை! எல்லாம் ஒரு மாயா ஜாலம் போல் எங்கு போய் ஒழிந்து விடும்!... கொஞ்ச காலம் சினிமாவிலும் நடித்துப் பேரும் புகழும் குவித்தாரே! சத்யபாலனின் அழகில் வயப்பட்டு ஊர் விட்டு ஊர் வந்து அவரைத் தரிசனம் செய்த பெண்கள் எத்தனை! ஆண்கள் எத்தனை!.. அந்த சத்யபாலனா? செல்வத்தால் விளைந்த அந்தச் செருக்கே ஒரு சிங்காரமாய் இருந்ததா அப்போது?... என்ன கம்பீரம்! என்ன மிடுக்கு! எல்லாம் என்னவாயின? வேஷம் கலைப்பது போல் எல்லாவற்றையும் காலம் கலைத்து விடுமா?.... இன்று கந்தல் உடையும் கண்ணிழந்த கோலமும் வறுமையால் விளைந்த வயோதிகமும்.... நாற்பத்தைந்து வயதில் அறுபது வயதுக் கிழவனாகி, ஐயோ!.. இந்தக் கொடுமைக்கெல்லாம் பொறுப்பு யார்?... பாவம், இந்த மனிதர்தான் பொறுப்பு என்று இனியும் எப்படி நினைப்பது!.. என்று ஆயிரம் சிந்தனைகளில் மௌனமாகி, எதிரில் நின்றிருந்த மேகநாதன் திடீரென மௌனம் கலைந்து விசாரித்தார்.

"என்னை மன்னிக்கணும்... உண்மையில் எனக்கு அடையாளம் தெரியவில்லை... ஆனாலும் உங்களை நான் மறக்கலே... இப்போ எங்கே இருக்கீங்க? எப்படி இருக்கீங்க... என்று அர்த்தமற்ற விசாரிப்புகளை அன்பினால் அடைத்த குரலில் கேட்டார். அதிர்ச்சியும் துக்கமும் அடைந்த மேகநாதன் அவரிடம் என்ன பேசுவது என்று புரியாத தவிப்பில்- பிடரியில் கருத்தடர்ந்து தொங்கும் தனது சுருண்ட சிகையை அடிக்கடி பிய்த்துக் கொள்வது போல் இழுத்து விட்டுக் கொண்டார்.

சத்யபாலன் தனது குருட்டு விழிகள் வெறிக்க மோவாயைச் சொறிந்து சிறுநகை சிந்தியவாறு சொன்னார்: "இப்போ நான்

இருக்கேன்- இன்னும் நான் இருக்கேன் அவ்வளவுதான் எனக்குத் தெரியும். என்னைச் சுத்தி இருந்தவங்க எல்லாம் எங்கெங்கோ இருக்காங்க.. ம் இருக்காங்க! அன்னிக்கி லட்சம் லட்சமாகக் கூடுவாங்களே ரசிகர்கள், அவங்க்ளும்தான் இருக்காங்க.. ஆனா, என் கிட்டே இல்லே. வேறு யார் கிட்டேயோ மயங்கி இருக்காங்க... மயக்கம் தெளியற வரைக்கும் இருப்பாங்க. சரி விடுங்க. இப்ப எனக்கு ஒரே ஆதரவு, தோ இருக்கானே- கபாலி இவன் ஒருத்தன்தான்; அந்தக் காலத்து ரசிகன்... அப்போ என் கிட்டே வந்து நிக்க என்னென்னவோ பாடுபட்டிருக்கான்.. அப்போ நான் ரொம்ப ஒசரத்திலே இருந்தேன்... இவன் அண்ணாந்து பார்த்தே என் கிட்டே அன்பு செலுத்தி இருக்கான்.. அப்புறம், நான் அங்கேருந்து வீழ்ந்தப்புறம்தான் அவன் பக்கத்திலே வர முடிஞ்சிருக்கு. அவனுக்கும் கஷ்டப்பட்டு ஒழைக்க முடியாத வயசு... நான் ஒரு மாதிரியான யாசகத்திலே தான் இப்ப காலம் தள்ளறேன். அவன் கையிலே கடுதாசி குடுத்தனுப்புவேன்.. யாருக்கிட்டேயாவது பத்து இருபது வாங்கி வர.. கிடைச்சா ரெண்டு பேருக்கும்... ம்! தள்ளுங்க! இதெல்லாம் பெரிய விஷயமா? அப்படி ஒரு காலம், இப்படி ஒரு காலம்.. ம் காலம் ஒண்ணும் மாறிடலே... ஆளைத்தான் காலம் மாத்திக்கிட்டே இருக்கு... ஆனா ஒரே ஒரு விஷயத்துக்குத் தான் உங்களை நான் பாராட்டறேன்... முன்னே ஒரு தடவை செய்தது மாதிரி முட்டாள்களோடு போட்டி போடாம, தனியா சின்னதா ஒரு புத்திசாலிக் கூட்டத்தை உருவாக்கிக்கிட்டு ஒதுங்கி இருக்கீங்களே, இந்தக் காரியத்துக்குத்தான் உங்களை நான் பாராட்டறேன்... உலகத்திலே சத்தியம் போட்டிபோட்டுத் தன்னை நிரூபிச்சிக்க முடியாது.. போட்டியிலே.. பொய் தான் வெல்லும்; சத்தியம் தோத்துப் போகும். என்ன நான் சொல்றது சரிதானே?" என்றார் சத்யபாலன்.

"என்ன, சத்தியம் தோற்றுப் போகுமா... பொய்தான் வெல்லுமா?" என்று உதடுகள் அசையத் தனக்குள்ளேயே கேட்டுக் கொண்டார் மேகநாதன்.

"இல்லை; வாழ்க்கையில் உங்களுக்கேற்பட்ட கசப்பான அனுபவத்தெ வெச்சி நீங்க இந்த முடிவுக்கு வந்திருக்கீங்க" என்றார் மேகநாதன்.

திடீரெனப் பெருங்குரலில் சிரித்தார் சத்யபாலன்.

"மேகநாதன் சார்... இந்த முடிவுக்கு நான் இப்ப வரலே. இருபது வருஷங்களுக்கு முன்னே, தமிழ் நாட்டிலே நான் கொடி கட்டி ஆண்டனே அப்பவே- உங்கள் கானல் வரி நாடகத்தை மேடையை விட்டு விரட்டி அடிச்சு, எனக்குப் புகழ்மாலை சூட்டினாங்களே அப்பவே, என் மனசிலே இந்தக் கருத்து தோணிச்சு. ஆமா, தோணிச்சு! சார்.. நான் மோசமான கலைஞன் தான்- மனுஷன்ங்கிற முறையிலே எனக்கே தெரியாம என்னுள்ளே ஒரு நல்ல மனம் இருக்குமில்லையா? அதுக்குத் தோணிச்சு... 'பொய் வெல்லும்- சத்தியம் தோற்கும்...'

மேகநாதனின் கண்களில் கண்ணீர் விளிம்பு கட்டி நின்றது.

அவரது செவிகளில் ஆயிரக்கணக்கான ஜனக் கூட்டத்தின் ஏளனச் சிரிப்புகளும், விசில் சப்தமும் பேரோசையாய் ஒலித்தன; "உள்ளே போ! போ! போ!...."

தனது சிகையைப் பிய்த்திழுத்தவாறு சத்யபாலனின் அருகே கிடந்த நாற்காலியில் அமர்ந்து கண்களை மூடி யோசனையிலாழ்ந்தார் மேகநாதன்.

அப்போது கலைக்கோயில் பிறக்கவில்லை. மேகநாதன் ஒரு ஹைஸ்கூலில் தமிழ்ப் பண்டிதராய்ப் பணியாற்றிக் கொண்டிருந்தார்.

பள்ளியின் கட்டிட நிதிக்காக அந்தக் காலத்தில் மிகவும் பிரபலமாயிருந்த நாடக உலக சக்கரவர்த்தி சத்தியபாலரின் 'கோவலன்' நாடகம் நடத்தப்பட்டது.

எதிலுமே பங்குபெறாது தானும் தனது தனியான கருத்துக்களுமாய்த் தனித்தொதுங்கி இருக்கும் இளைஞரான மேகநாதனைப் பள்ளியின் தமிழ் ஆசிரியர் என்ற முறையில் நாடகத்தைப் பற்றி பேச வேண்டும் என்று கட்டளையிட்டார்

தலைமையாசிரியர். மூன்று மணி நேரம் நாடகம் என்ற பேரால் நடத்தப்பட்ட கலைச் சீரழிவைக் கண்டு உளம் கொதித்திருந்த மேகநாதன், அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக்கொண்டு ஆவேசமிக்க நாடக விமரிசனம் செய்ய ஆரம்பித்தார். ரசிகர் கூட்டம் கொதித்தெழுந்தது.

மானபங்கமுற்ற சத்தியபாலர், மேடைக்கு வந்து அவரது விமரிசனங்களுக்கு இறுதியில் தான் பதிலளிப்பதாகவும் அவர் பேசுவதைப் பொறுமையாகக் கேட்குமாறும் பலத்த கரகோஷத்தினிடையே பொதுமக்களைக் கேட்டுக் கொண்டதன் பேரில் மேலும் பத்து நிமிடம் பேசினார் மேகநாதன்.

நாடகக் கலையின் நசிவையும், மக்களின் ஆபாச ரசனையையும் காவியத்துக்குப் புறம்பான அற்பக் கருத்துக்களையும் சாடினார் மேகநாதன்..

"மேடையின் மீது ஆர்மோனியக்காரனின் பக்கத்தில் வந்து நின்று கொண்டு, மூன்று மணி நேரத்தில் பதினைந்து பாடல்களைக் கத்தித் தீர்ப்பது என்ன நடிப்பு?" என்று ஆணித்தரமாக அவர் கேட்ட போது, 'நீ பாடேன்!' பார்ப்போம்" என்று மகா ரசிகர்கள் கோபத்துடன் கத்தினார்கள். பள்ளி நிர்வாகத்தினர் யாவரும் கை பிசைந்து நின்று மேகநாதனைப் பார்த்துப் பல்லைக் கடித்தார்கள்.

கடைசியில் முடிந்த ஆரவார முழக்கத்தினிடையே ராஜ கம்பீரத்துடன் வந்து நின்ற சத்யபாலன் அவமானத்தாலும் ஆத்திரத்தாலும் சிவந்த விழிகளுடன் அமைதியாகப் பேசினார்:

"மதிப்பிற்குரிய தமிழாசிரியர், இது நாடகமல்ல வென்றும், இது நடிப்பு அல்லவென்றும் தாக்கிப் பேசினார். பேசுவது சுலபம். 'சொல்லுதல் யார்க்கும் எளியவாம்' என்ற தமிழ் மறை பயின்றவர் அவர். அவருக்கு நான் ஒரு அறைகூவல் விடுக்கிறேன். அவர் கூறுவது போன்று ஒரு நாடகத்தை அவர் அரங்கேற்றி மக்களின் நன் மதிப்பைப் பெற்று விடட்டும். நான் கலைத்துறையிலிருந்தே விலகி விடுகிறேன். நாடகத் தேதியை அவர் இங்கே இப்போதே அறிவிக்க வேண்டும், நாடகத்திற்கான

வசதிகளையும், செலவையும் நான் ஏற்றுக் கொள்கிறேன். அந்த வசூலையும் இந்தப் பள்ளியின் கட்டிட நிதியில் சேர்த்துக் கொள்ளலாம்...'' என்று அறிவித்ததும், அந்த நிமிஷமே சத்தியபாலன் வானுலக அமரனாயும் மேகநாதன் அற்பப் புழுவாகவும் தோன்றினர் அப்பெருமக்களுக்கு.

பகிரங்கமாக விடப்பட்ட சவாலை மேகநாதன் ஏற்க வேண்டியதாயிற்று.

"இந்தச் சவாலை நான் ஏற்கிறேன். அடுத்த மாதம் இதே தேதியில் நாடகம்" என்று மேகநாதன் அறிவித்ததும் அவரது நண்பர்கள் சிலரும் மாணவர்கள் சிலரும் மட்டுமே கரகோஷம் செய்தனர்.

அதன் பிறகு ஒரு மாதம் வரை நண்பர்களையும் மாணவர்களையும் அணுகி இரவு பகலாக உழைத்து அற்புதமான அந்த நாடகத்தை- இரண்டே மணி நேர நாடகத்தை அவர் தயாரித்தார்.

சிலப்பதிகாரத்தில் வரும் ஒரு பகுதியே நாடகத்திற்கு ஆன கதை.

கானல்வரியில் வரும் சில காட்சிகள்; யாழினை மீட்டி ஊழ்வினையால் கோவலனும் மாதவியும் ஊடிப் பிரிதல்; கோவலனின் பிரிவால் மாதவி வருந்துதல்; வசந்தமாலை தூது, மாதவியைக் கோவலன் பழித்த பின்- சிலம்பை உடைத்த கண்ணகியே போல் அதே நேரத்தில்- யாழை உடைத்து மாதவி கலை வாழ்வைத் துறத்தல்- என்ற அளவுடன் வரையறுத்த காட்சி அமைப்புகளுடன், பல்லோர் உழைப்பும் சிரமமும் பெற்று அந்த நாடகம் குறித்த நாளில் அரங்கேறியது.

கூட்டம் பெருமளவில் சேர்ந்தது எனினும் அது நாடகம் காண வந்த கூட்டம் அல்ல; நாடகத்திற்கு வந்துள்ள சத்யபாலனைக் காணவந்த கூட்டம் அது.

பார்வதி பரமசிவன் சம்வாதத்திலிருந்து தொடங்கி, 'கழுத்தில் விழுந்த மாலை கழட்ட முடியவில்லை' போன்ற

மக்களைக் கவர்ந்த பாடல்களையெல்லாம் பாடிக் கேட்டு, மதுரை நகரைக் கண்ணகி எரிக்கும் காட்சி வரை பார்த்து ரசித்த ஜனங்களுக்கு இந்த நாடகத்தை ஒரு நிமிஷம் கூடச் சகித்துக் கொள்ள முடியவில்லை.

முதல் காட்சி முடிந்து வீணையுங் கையுமாகக் கோவலன் வேடத்தில் மாதவியோடு உட்கார்ந்திருக்கும் மேகநாதனைக் கண்டதும் ஜனக் கும்பல் கூச்சலிட ஆரம்பித்தது;

"எழுந்து நின்னு, பாடு!"

"கழுத்தில் விழுந்த மாலை... பாடு'

"இது என்னா? கோவலன் கதையா?"

"சத்யபால் மேடைக்கு வரணும்"

"நீ உள்ளே போ...

"போ... போ....போ...போ..."

அதன் பிறகு ஊரும் அந்தப் பள்ளியும்- ஏன் அந்தக் காலமே 'போ போ' வென்று மேகநாதனை விரட்டியது.

மேகநாதன் அந்தப் பகிஷ்கரிப்பை ஏற்றார். தமது ஊரிலிருந்த சகல உறவுகளையும் உதறியபின்- தனது சொத்து, சுகம், வாழ்க்கை அனைத்தையும் முதலீடு செய்து இந்தக் 'கலைக் கோயிலை' ஆரவாரமில்லாமல் ஆரம்பித்தார்.

அது, அதற்குரிய அளவில் வாழ்ந்து வளர்ச்சியுற்றது; வளர்ந்து கொண்டே இருக்கிறது.

ஆனால் அன்றும் சரி, இன்றும் சரி- பரவலான சமூகத்தில் பொய்தான் வென்று கொண்டே இருக்கிறது... இன்றைக்கும் கலைக்கோயில் காம்பௌண்டுக்கு வெளியே போய் அவரது கலா முயற்சிகள் தமிழ்க் கலைஞர் பெருமக்களின் வெகு ஜனக்கலை முயற்சிகளுடன் போட்டிக்குப் போனால், கலைக்குப் புறம்பான மற்றப் பொய்கள் தான் வெல்லும். இந்த உண்மைக் கலை தோற்கும். இதற்குப் பரிசாக, ஏளனச் சிரிப்பும்

சீழ்க்கையொலியும் 'போ! போ!' என்ற தூஷணையும்தான் கிடைக்கும்.

ஆனால் உண்மையான கலை அன்பர்கள், அவர்கள் சிறுபான்மையினர் எனினும் உலகெங்கும் சிதறிக் கிடக்கிறார்கள். அவர்கள் சத்தியத்தை எல்லாத் திசைகளிலிருந்தும் நாடு, மொழி, பேதம் இன்றி ஆதரிப்பார்கள். கைநீட்டி வரவேற்பார்கள். பொய் எங்கும் உண்டு. எனினும் அதை ஏற்றுமதி செய்ய முடியாது. அவரவர்க்கு அவரவர் பொய்யே போதும். அதற்குப் புகலிடமும் இல்லை; போக்கிடமும் இல்லை. இந்த உண்மைக்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு உண்டு.

"என்ன சமாதானம் சொல்லி என்னைத் தேற்றிக் கொண்டாலும் நீங்கள் சொல்லுவது உண்மை என்றே தோன்றுகிறது. பொய்தான் வெல்லுமா?" என்று கேட்டவாறு தலை நிமிர்ந்தார் மேகநாதன்.

வெகு நேர மௌனத்திற்குப்பின் நம்பிக்கை வரண்ட குரலில் தன்னிடம் கேள்வி கேட்கும் மேகநாதனை அவரது குரல் வழியே கண்ட சத்யபாலன், புன்னகையுடன் கூறினார். "ஆமாம், அதில் என்ன சந்தேகம்? பொய்தான் வெல்லும். மூடர்களை நீதிபதிகளாக்கி, ஞானத்தின் மீது தீர்ப்பு அளிக்கச் சொல்லலாமா?... அப்போது பொய்தான் வெல்லும்.. ஏனெனில் பொய் ஒரு மயக்கம். அது மயக்கும் சக்தி பெற்றது. சத்தியத்தில் என்ன மயக்கம் இருக்கிறது? சத்தியத்தில் உணர்ச்சி மயங்கும்; அறிவு தெளியும்; பொய்யில் அறிவு மயங்கும்; உணர்ச்சி தேங்கும்; சிதையும்; அழியும்.... ஆகவே பொய்தான் வெல்லும். ஆனால் அந்த வெற்றியும் ஒரு மயக்கம்தான். ஏனெனில் பொய் சாகும். சத்தியம் வெல்லுவதுமில்லை சாவதுமில்லை. அது சிரஞ்சீவி. இதோ நீங்களும் நானும் அதற்கு உதாரணங்கள். இதைச் சொல்லத்தான் வந்தேன். நாளைக்கு உங்கள் நாடகத்தைப் பார்க்க நான் வருவேன்" என்று சொல்லி சற்று நிறுத்தினார் சத்யபாலன். "ஓ! இவனுக்குத்தான் கண்ணில்லையேன்னு யோசிக்கிறீங்களா? உங்கள் நாடகத்தைக் கண்ணாலும் பார்க்கலாம்; காதாலும் கேட்கலாம். ஏன்? அந்தக்

காலத்து என் நாடகத்தைக் கண்ணுள்ளவர்கள்தான் பார்த்தார்களாம். அந்த நாடகத்தைக் காட்டிய எனக்கு இந்தப் பாக்கியம் கிடைக்கலேங்கறதுக்காக நான் வருத்தப்படலாமா?" என்று அவர் கூறியதும்,மேகநாதன் விம்மிப் பெருமூச்சு விட்டார்.

சற்று நேரத்திற்குப் பின் சத்யபாலன் விடைபெற்றுக் கொள்ள எழும் போது, மேகநாதன் சொன்னார்; "உங்களுக்கு ஆட்சேபம் இல்லைன்னா நீங்க இங்கேயே தங்கி இருக்கிறதை நான் ஒரு பாக்கியமாகக் கருதுவேன்."

"ரொம்ப சந்தோஷம்.. அது சரியில்லை. உங்களுக்கு நான் பயன் படமாட்டேன்.." என்றார் சத்யபாலன்.

"நீங்கள் அப்படிச் சொல்லக் கூடாது. நீங்கள் சிறந்த சங்கீத மேதை என்கிறதிலே எனக்கு எப்பவும் இரண்டு அபிப்பிராயம் இருந்ததில்லை. நீங்க இங்கே.." என்று ஏதோ சொல்ல வரும் போது சத்யபாலன் குறுக்கிட்டுச் சிரித்தவாறு கூறினார்.

"நான் பாடறதில்லேன்னு தீர்மானம் பண்ணிட்டேன். ஏன் தெரியுமா? நான் அந்தக் காலத்திலே பாடறதைக் கேட்டு இப்ப ஒரு பாடகர் என் மாதிரியே பாடறார். கொஞ்ச நாளைக்கு முன்னே ஒரு டீக்கடையிலே என்னுடைய பாட்டைக் கிராமபோன்லே போட்டு, 'எவனோ சத்யபாலனாம்'னு ஆச்சரியத்தோடு இப்ப பாடறவன் பேரையும் சொல்லி 'இவனை மாதிரியே பாடி இருக்கான்'னு என்னெப்பத்திப் பேசறதை நானே கேட்டேன். சீ! இதுவும் நமக்குச் சொந்தமில்லையான்னு பாடறதையே நிறுத்திட்டேன். தனியா இருக்கும்போது நானே பாடிக்கிட்டாக்கூட என் குரலே எனக்கு இரவல் குரலாத் தோணுது" என்று பெருமூச்செறிந்தார் அவர்.

பிறகு ரிக்ஷா நிற்குமிடம் வரை, மேகநாதனின் கையைப் பிடித்துக் கொண்டு நடந்தார். வண்டியிலேறி அமர்ந்தவுடன் திருப்திகரமாய்ச் சிரித்தவாறு கூறினார். சத்யபாலன்; 'எனக்கு ஒண்ணும் வருத்தமில்லே. வாழ்க்கைன்னா இதுதான். வாழ்க்கை பொய்யோ மயக்கமோ இல்லே... பொய் செத்து, மயக்கம்

தெளிஞ்சு ஞானம் வர்ரதுன்னா கஷ்டப்படாம ஆகுமா? சரி வரட்டுமா?" என்று கும்பிட்டார்.

மேகநாதனும் கண்கள் கலங்க அவரை வணங்கினார்.

கபாலி பெடலை மிதித்தான்.

வண்டி திரும்பி நகர்ந்தது.

கபாலி, வண்டியை மிதித்துக் கொண்டே சொன்னான்; "அது இன்னா சார் அப்படிச் சொல்லிட்டே? இனிமே பாட்டுப் பாடறதில்லேன்னு... நீ எனக்குப் பாடு சார்.. நான் கேக்கறேன்- இப்ப எவன் சார் இருக்கான், அந்த மாதிரி பாடறத்துக்கு?... ஆ! 'கயுத்திலே வியுந்த மாலை, கயிட்ட முடியலியே" என்று தன்னை மறந்த உற்சாகத்தில் பாட ஆரம்பித்தான் கபாலி.

"வேணாண்டா கபாலி.. நீ பாடாதே. வேணும்னா ஒனக்காக நான் பாடறேன்.. பீச்சுக்குப் போ!" என்று சிரித்தாவாறே கூறினார் சத்யபாலன்.

அவர் பாடப் போகிறார் என்ற குதூகலத்தில் கடற்கரையை நோக்கி வண்டியை வேகமாக மிதித்தான் கபாலி.

# பத்தினிப் பரம்பரை

*அந்த வியவகாரத்துக்கு நான் புதியவன். வயசும், வயசுக்கே உரிய வெறியும் ஊர்ப்பெண்களைப் பார்த்துப் பார்த்து மனசில் விளைந்த தினவையும், ஸ்திரீயின் ஸ்பரிசக் கற்பனைக்கே பலியாகிக் கொண்டிருக்கும் உடலின் எழுச்சியையும் தீர்த்துக்கொள்ள ஒரு சந்தர்ப்பம் கிடைக்கிறதே என்ற சபல சித்தமும்– 'இது வேறு ஊர், அதிலும் நகரம்' என்ற தெம்பும் அந்த ரிக்ஷாக்காரன் துணையும் இருக்கின்ற தைரியத்தால் நான் அரைகுறை மனத்துடன், கொஞ்சம் பயத்துடன் ஒப்புக் கொண்டேன்; ஒப்புக் கொண்ட காரியத்தில் இறங்கி விட்டேன். அதாவது ரிக்ஷாக்காரனின் வேண்டுதலுக்கு இணங்கி வண்டியில் ஏறி உட்கார்ந்தேன்.*

*நகரத்தின் பெரிய வீதியில் என்னைச் சுமந்து கொண்டு அந்த ரிக்ஷா எனக்கு எங்கே என்று தெரியாத எந்த இடத்திற்கோ போய்க் கொண்டிருக்கிறது...*

*இன்னும் கொஞ்ச நேரத்திற்குப் பிறகு எனக்கு ஏற்படப் போகும் அந்த அனுபவத்தை எண்ணும் போது உடம்பு முழுதும் வியர்த்தது. காரணமற்று என் இடது கால் வெடவெடவென்று நடுக்குறும்போது மனசில் ஏற்படும் உணர்ச்சி, மகிழ்ச்சியா, பயமா? என்று புரியாத குழப்பம்!*

*ரிக்ஷா அந்தப் பாலத்தின் மீதேறி வலது புறம் ஓடிந்து அந்தப் பிரதேசத்தை நோக்கித் திரும்புவதைக் கண்டு நான் பயந்து போனேன்.*

"இந்தாப்பா இங்கே எங்கே போறே?"

"நீ சும்மா வா ஸார் அப்புடிக்கெல்லாம் தப்புத் தண்டா ஆளு நானில்லே... என்னமோ அந்தப் பொண்ணுக்காகத்தான் நானும் இந்தக் காரியம் செய்யிறேன்; இதுக்கு முன்னாடி நான் இப்படிக் காரியத்துக்குப் போனவனில்லே... இந்த ஒரு பொண்ணைத் தவுத்து வேறு யாரையும் எனக்குத் தெரியாது... என்னமோ அதுந்தலை எயுத்து.." என்று பெருமூச்செறிந்தவாறு வண்டியை இழுத்துச் சென்றான் அந்தக் கிழவன்.

ரிக்ஷா போய்க் கொண்டிருந்தது.

தெருவின் இருமருங்கிலும் சாக்கடைக் கால்வாய்கள்; அவற்றின் அருகே புகை மண்டும் காடா விளக்குகளின் வெளிச்சத்தில் கூடை நிறைய முறுக்கு மசால்வடை வைத்து விற்கும் 'மூசுண்டைக்காரி'கள்.. கார்ப்பொரேஷன் ராந்தல் அடியில் புழுதியில் புரண்டு கெக்கலிகொட்டி விளையாடும் கரிக்குழந்தைகள்.... ஆவேசம் வந்ததுபோல் ஆபாசமான வசைமொழிகளை நீட்டி முழக்கிக்கொண்டு பரஸ்பரம் கையையும் காலையும் உதறிக் கொண்டு ஒரு சிறு கும்பலின் நடுவே பேயாட்டம் போடும் இரண்டு பஜாரிகள் சம்வாதம்.... இடுப்பில் கூடையுடன் கடைக்குப்போய் 'மிளகாய் செலவு' வாங்கிக் கொண்டு ஒரு கை வீசி ஒய்யார நடை பயிலும் ஒரு பறைச்சேரிப் பேரழகி.. அவளைத் தொடர்ந்து வாயில் பீடிப் புகையோடு சீழ்க்கையொலியோடு 'இன்னாமேன்' குசலம் விசாரிக்கும் சில 'ஆப்பக்கார ' மைனர்களின் கூன் விழுந்த ஒய்யார நடை.. இவற்றினிடையே நான் ரிக்ஷாவில் போய்க் கொண்டிருக்கும்போது, 'இந்த' வீடாக இருக்குமா, இதுவாக இருக்குமா, இங்கேதான் நிறுத்தப் போகிறானா? இவள்தானா அந்தத் தொழில்காரி' என்று ஒவ்வொரு குடிசையையும் ஒவ்வொரு அலங்காரியையும் பார்த்து நினைத்து நினைத்து ஏமாற 'சஸ்பென்ஸ்' நீடித்துக் கொண்டிருந்தது

அங்கே ஒரு பெட்டிக்கடையருகே சிறு குடிசையொன்றின் வாசலில் குடிசைக் கதவைத் திறந்து வைத்துக் கொண்டு தலை நிறையக் கதம்பமும், வாய் நிறைய வெற்றிலைச் சாந்துமாய்

நின்று கொண்டிருக்கிறாளே- நெத்தியில் எழுதியல்லவா ஒட்டியிருக்கிறது- ஒன்றரைக் கண்ணி... என்னைப் பார்த்துச் சிரிக்கிறாள். சிரிக்கும் போது முகம் என்ன அருவருப்பாய் இருக்கிறது- அட தெய்வமே, இவன் வண்டியை இங்கேதான் நிறுத்துகிறானோ!

“இந்தாப்பா... ஒண்ணும் வேண்டாம்- வண்டியைத் திருப்பு போகலாம்... என்றேன்.

ரிக்ஷாக்காரக் கிழவன் ஆச்சரியத்துடன் திரும்பி என்னைப் பார்த்தான்; பிறகு அவளை- அந்தக் குச்சு வீட்டின் வாசலில் நின்றிருந்தவளைப் பார்த்தான்; “இன்னா ஸார் ரொம்ப அர்ஜண்ட் ஆசாமியா கீறியே? அப்பிடிக்கெல்லாம் பலான எடத்திலே இட்டாந்து உட்டுடுவேனா உன்னை? கொஞ்சம் வண்டியிலே குந்திக்கினு இரு ஸார்; வெளக்குக்கு எண்ணெய் போட்டுக்கினு வர்றேன். அது வேற எடம்; இன்னம் போவணும்...” என்று வண்டியின் ஏறுகாலைப் பதனமாய்த் தாழ்த்தித் தரையில் வைத்துவிட்டு, வண்டியிலிருந்த விளக்கைக் கழற்றிக் கையிலெடுத்துக் கொண்டு பெட்டிக் கடையை நோக்கிப் போனான் கிழவன்.

“இந்தாப்பா அப்படியே ஒரு சிகரெட்டு வாங்கியா?- வில்ஸ் ஒண்ணு” என்று சில்லறையைக் கொடுத்தேன்.

“வெச்சிக்க ஸார் துட்டை... எல்லாம் சேர்த்து வாங்கிக்கிறேன், விலுசா?” என்று கடைக்குப் போனவன் சில நிமிஷங்களுக்குப் பின் கடையருகே நின்றவாறு என் பக்கம் திரும்பி, “விலுஸ் இல்லியாம்.. ஷ்டார் வாங்கியாறேன் ஸார்...” என்று கூவினான்.

அந்தச் சேரியின் நடுவில் ரிக்ஷாவில் குந்தியிருப்பது எனக்கு எரிச்சல் தரவே, “எதையாவது வாங்கிட்டு வா’ என்றேன். பிறகு அவன் கொண்டு வந்த சிகரெட்டை புகைத்துக் கொண்டு மறுபடியும் எனக்கு ரிக்ஷா சவாரி தொடர்ந்தது.

“இன்னா ஸார்... அந்தக் குடிசையிலே உன்னை வுடப் போறேன்னா நெனச்சிக்கினே.. நான் உன்னைக் கூட்டிக்கினு

போற எடம் கல்லு வூடு ஸார்– கட்லு, மெத்தைல்லாம் ரொம்ப 'நீட்' டா இருக்கும்."

"கொஞ்சம் பேசாம போயேன்–" என்று வண்டியிலிருந்தவாறு யாராவது கவனிக்கிறார்களா என்று பார்த்தேன்."

"பேசினா இன்னா ஸார்... எவன் வந்து இன்னா பண்ணிடுவான்? இதெல்லாம் நம்ம பேட்டை ஸார். தெம்மா கொயிந்தயிலிருந்து இங்கே தான் ஸார் கீறேன்– எம்மாம் பெரிய ரௌடியாதான் இருக்கட்டுமே... 'யார்ரா' அது கன்னிப்பனா, நீ போப்பா'ன்னு ரெஷ்பெக்ட் குடுப்பானுவ... அத்தெப்பத்தி யெல்லாம் நீ ஒண்ணும் பயப்படாதே. வுடு..."– ரிக்ஷாக்காரன் சளசளவென்று பேசிக்கொண்டே வண்டியை இழுத்தான்.

ரிக்ஷா போய்க் கொண்டிருந்தது.

"அந்தக் கொயந்தை எப்பிடிக் கிளிமாதிரி இருக்கும்? நீ இன்னாடான்னா, கோட்டான் மாதிரி ஒருத்தி மூஞ்சியெப் பாத்துட்டுத் திரும்பிப் போடான்றீயே?... நானும் எல்லாரையும் இட்டாந்திட மாட்டேன். உன்னெமாதிரி கொஞ்சம் 'நீட்'டா இருக்கிறவங்களைத்தான் இட்டாருவேன்... அதெல்லாம் நல்ல குடும்பத்துப் பொண்ணு ஸார்... என்னமோ தலைஎயுத்து. அவ புருஷங்காரன் நல்ல ஜவான் மாதிரி– உன்னங்காட்டியும் ஸோக்கா 'ஸம்'னு இருப்பான் ஸார்.... மில்லிலே வேலை செஞ்சிக்கினு இருந்தான்... ஒருவாட்டி ஆக்ஷிடன்டிலே ஒருகால் பூடிச்சி ஸார்! த்ஸொ... பாவம்.. இந்தேப் பெரிசு பெரிசா பில்டுங்க போட்டு சுத்துது பார் சார், சக்கரம்– அதிலே மாட்டிக்கினு... சும்மா அப்பிடியே தூக்கி அடிச்சிடுச்சி... நல்ல அடி ஸார்.... ஒரு காலு– பீசக் காலு– மொயங்காலோட எடுத்திட்டாங்க. தலையிலேயும் அடி, மில்லுலே அடிபட்டா என்னவோ பணம் கிணம் தருவாங்களே், அதெல்லாம் ஒண்ணும் கெடைக்கிலே; ஏன்னா மிஷ்டேக் இவன் மேல்தான். இவந்தான் டூட்டி மேலே போனானே.... கயிதெ தண்ணி போட்டுட்டுப் போவலாமா ஸார்.. தண்ணின்னா இன்னா? அவங்கிட்டே போட்டிபோட இந்தப் பேட்டையிலே ஆளு கெடையாது... ஸார்... சீமான்தான் அந்த விசயத்திலே...!

பார்த்தான். இன்னா இன்னா யோசிச்சானோ ஸார்... ஆஸ்பத்திரியிலிருந்து வந்தானா... புத்தி மாறிப்போச்சு. புத்தி மாறிப் போச்சின்னா இன்னா? அவனாலே ஒண்ணும் பேஜார் கெடையாது... சொம்மா சொம்மா 'தண்ணி வாங்கிக் குடு'ன்றான். பாவம் அந்தப் பொண்ணு இன்னா பண்ணும்! எப்படியோ சம்பாரிச்சி, தான் வவுத்தைக் கயுவிக்கினு, அவனுக்கும் சோறு போடுது. இதிலே தண்ணிக்கும் காசு தருது... வேற இன்னா ஸார் பண்ண முடியும்?. பாவம் அந்தக் கொய்ந்தை, ரொம்பப் பொறுமைசாலி சார்... இதுதான் ஸார் வூடு; நீ வண்டியிலே குந்திக்க... நான் பாத்துக்கினு வர்ரேன்" என்று ரிக்ஷாவைத் தெரு ஓரமாய் நிறுத்தி விட்டு அந்தக் கூரை தாழ்ந்த சிறிய ஓட்டு வீட்டின் இருள் அடர்ந்த முன்புறக் கதவருகே நின்று தீக்குச்சியை உரசி, "கொயந்தே" என்று கூப்பிட்டான்.

"யாரது, கன்னியப்பனா?" என்ற ஒரு பெண்ணின் இனிய குரல் என் நெஞ்சில் சுமையேற்றியது.

என் கண்கள் இருளைத்துழாவின. அவர்கள் இருவரும் ரகசியம் பேசினார்கள்.... சற்று நேரத்தில், 'வா ஸார்' என்று ரிக்ஷாக்காரன் கூப்பிட்டான். நான் வண்டியிலிருந்து இறங்கி அந்த வீட்டிற்குள் நுழைந்தேன்.

கையில் ஒரு சிறு விளக்குடன், வெள்ளை உடை தரித்து கூந்தலில் மல்லிகைப் பூச்சரம் சூடியிருந்த அவள் அந்த அறைக்கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழையும் போது அவளது பின்புறம்தான் தெரிந்தது. அறைக்குள் சுவரில் விளக்கை மாட்டிவிட்டு அறை வாசற்படியில் வந்து நின்று என்னைப் பார்த்தாள் அவள். நானும் அவளைப் பார்த்தேன். நெற்றியில் அழகிய குங்குமப் பொட்டு. முகத்தில் மஞ்சள் பூச்சு. கண்களில் என்ன அமைதி! என்ன சோகம்!... இவள்.. இவளா? ரிக்ஷாக்காரன் சொன்னானே.. "என்னமோ அந்தக் கொயந்தை தலைஎயுத்து... ஆமாம்: அவள் முகம் குழந்தை மாதிரிதான் இருந்தது; அவள் தலை எழுத்து அந்தக் கண்களில் தெரிந்தது.

"இன்னா ஸார் அப்படியே நின்னுட்டியே... நா அப்பவே சொல்லலியே ?.... சரி நமக்குத் துட்டுக் குடு நான் போறேன்.. இருவது ரூபா குடு ஸார் கொயந்தை கையிலே. விடியகாத்தாலே வந்து நானே கூட்டிக்கினு போறேன்.... இன்னா கொயந்தெ நான் வரட்டா... என்று என்னிடம் இரண்டு ரூபாய் வாங்கிக் கொண்டு அவன் புறப்பட்டான். அவன் எதிரிலேயே அவளிடம் இருபது ரூபாய் கொடுத்தேன். அவனைப் பார்த்து அவள் நன்றியுடன் சிரித்துக் கொண்டாள். அப்புறம் ஏதாவது தருவாள் போலிருக்கிறது.

ரிக்ஷாக்காரன் போய் விட்டான். பிறகு ?....

அந்தச் சிறிய அறையில் புழுக்கம் அதிகம்... நான் உள்ளே நுழைந்ததும் சட்டையைக் கழற்றினேன். சட்டைப் பையிலிருந்து பர்ஸ் விழுந்தது. அவள் அதை எடுத்து என்னிடம் நீட்டினாள். நான். அவள் கண்களைப் பார்த்தேன்; அதில் அவள் தலை எழுத்து தெரிந்தது.

"நீ வெச்சிரு... போகும் போது வாங்கிக்கறேன்..."

"இதிலே நெறைய பணமிருக்கா ?"

'இருக்கு"

"எவ்வளவு?"

"நூறு ரூபாய்க்கு மேலே...

"என் கிட்டே நம்பி குடுக்கறியே...

"இதென்ன இப்படி மரியாதையில்லாமல் ஒருமையில் பேசுகிறாளே' என்று நினைக்கும் போது, அவளே திருத்தி 'நம்பிக் குடுக்கறீங்களே' என்றாள். நான் சிரித்தேன்... "என்னையே கொடுத்திருக்கிறேனே" என்றேன். சொல்லி முடித்தவுடன் நான் காதல் வசனம் பேசியது போல் இருந்தது எனக்கு.

அவள் என் கையிலிருந்த சட்டையை வாங்கி, சட்டைப் பையில் பர்ஸைப் போட்டு சுவரிலிருந்த ஆணியில் மாட்டினாள். நான் அதே சுவரில் மாட்டியிருந்த அந்தப்

போட்டோவைப் பார்த்தேன். இவள் தான். இவள் பக்கத்தில் நின்றிருப்பது இவள் புருஷனாக இருக்க வேண்டும். ரிக்ஷாக்காரன் சொன்னானே, "அவ புருஷங்காரன் நல்லா ஜவான் மாதிரி உன்னங்காட்டியும் ஸோக்கா ஸம்னு இருப்பான் ஸார்..."

நான் அந்தப் படத்தையே பார்த்துக்கொண்டிருப்பது அவளுக்குப் பிடிக்கவில்லை போலிருக்கிறது. என் தோளைப் பிடித்துத் தன் பக்கம் திருப்பி, "நீங்க சாப்பிட்டாச்சா?" என்று கேட்டாள்.

"உம்... சாப்பிட்டேன்.."

"எங்கே?"

"ஓட்டல்லே..."

"ஏன்; வீடு இல்லே.."

"இருக்கு. இங்கே இல்லே.. ஊரிலே."

"எந்த ஊர்?"

"செதம்பரம். நீ சாப்பிட்டாச்சா?"

"இல்லே..."

"ஏன்?"

"அது வந்தப்பறம்தான் சாப்பிடுவேன்... அது இல்லாம சாப்பிட்டுப் பழக்கமில்லே; மணி பத்தாவுதில்லே? இன்னம் காணோம் பாருங்களேன் அதை."

"அது'ன்னா?"

"எங்க வீட்டுக்காரரு- நான் பிரியத்திலே? 'நீ' 'நான்' னு தான் கூப்பிட்டுப் பழக்கம். அதனாலேதான் மொதல்லே உங்களைக் கூட 'நீ' ன்னு பேசிட்டேன்..."

"பரவாயில்லே.. பரவாயில்லே.."

"அது வர்ர வரைக்கும் பேசிக்கிட்டிருப்போம்; வந்தப்பறம் சோறு போட்டுட்டு, சாப்பிட்டுட்டு வந்துடறேன்...

"என்ன பேசறது?"

"ஐயய்யே, பேசறதுன்னா தெரியாதா? பேசறதுன்னா.." என்று என்னருகே நெருங்கி அவள் என்னவோ சொல்ல வரும் போது..

"கொயந்தே... கொயந்தே- வாசல் கதவை யாரோ தட்டினார்கள். என் தோள் மீது இருந்த கையை எடுக்காமல் தலையை மட்டும் கொஞ்சம் திருப்பி, "யாரது?" என்று எரிச்சலுடன் கேட்டாள்.

"நான் தான்.. குடக்கூலி வாங்கிட்டுப் போலாம்னு வந்தேன். இன்னிக்குத்தானே வரச் சொல்லியிருந்தே?"

"ஆமா- இது தான் நேரமாய்யா- காத்தாலே வந்து வாங்கிக்க" காலையில் வாடகை நிச்சயம் என்ற உறுதியும் அவள் குரலில் தெரிந்தன.

"சரி வாய்யா... உள்ளே ரொம்ப முக்கியமான வேலை போலிருக்கு... காலையிலே நிச்சயம் கிடைக்கும்" என்று ஒரு குரல் சிரித்தது.

சிறு கோபம் பொங்கியடங்கிய அவள் முகத்தில் என்னைப் பார்த்த போது புன்னகை மலர்ந்தது; "உங்களை எனக்குப் புடிச்சிருக்கு..."

"ஏன் பிடிக்கணும்"

"என்னமோ?...." என்று கொஞ்ச நேரம் கூரை முகட்டைப் பார்த்திருந்துவிட்டுச் சொன்னாள்... "உம்.. பணம்தானே, பணத்தைக் குடுத்ததினாலேதான் இவளோட நாம் இருக்க முடியுதுன்னு நெனைக்கறீங்க, இல்லே? ஆமா பணம்தான் முக்கியம். பணங்கற விஷயம் முடிஞ்சவுடனே வேறே என்னமோ ஒரு ஆசை உண்டாகுதே.. அது எல்லார்கிட்டேயும் எல்லாருக்கும் உண்டாகாது"- அவள் என்னமோ சொல்லிக் கொண்டிருந்தாள்.

எனக்கு ஒன்றும் புரியவில்லை. நான் இந்த விவகாரத்துக்கு ரொம்பப் புதுசு.

அப்பொழுது வாசற்படியில் 'டக்டக்' என்ற ஓசையும், "ஹே கொயந்தே, கதவைத் தெறடி" என்ற கர்ச்சனையுடன் தடால் எனக் கதவை இடிக்கும் சப்தமும் கேட்டது. நான் பயந்து எழுந்து அவள் கையைப் பிடித்தேன்...

"அது- எம் புருஷன் வந்திருக்கு... தோ... வந்துடறேன். நீங்க இங்கே இருங்க.. பயப்பட வேணாம்... அது கொழந்தை" என்று கூறிவிட்டு அறைக் கதவை மூடிக்கொண்டு தெருக்கதவைத் திறக்கச் சென்றாள்.

நான் ஜன்னல் கதவைக் கொஞ்சம் திறந்து வைத்துக் கொண்டு அதனூடே பார்த்தேன்.

ஷேக்ஸ்பியர் நாடகத்தில் வரும் ஒத்தெல்லோ பாத்திரம் போல் சிறு தாடியும் கனல்கின்ற கண்களுமாய் ஆஜானு பாகுவாய் அந்த உருவம்... ஒரு கட்கத்தில் தாங்குக் கட்டை யொன்றை ஊன்றிக் கொண்டு மறு கட்டையைத் தலைக்கு மேல் ஓங்கிக் கொண்டு "ஏண்டி இம்மா நேரம்?" என்று உறுமி யவாறு நின்றிருந்தது.

"உஸ்- சும்மா கலாட்டா பண்றியே- உள்ளே ஆள் இருக்காங்க, என்ன நெனச்சிப்பாங்க?" என்று ஓங்கிய கட்டையைப் பிடித்து இறக்கிக் கையைப் பிடித்து அழைத்துச் சென்றாள்.

"யாரு வந்திருக்காங்க?" என்று சுற்றிலும் பார்த்து விட்டு "ரூமுக்கா?" என்று அறைக் கதவைத் திறந்தான். நான் பயந்து நடுங்கியவாறு எழுந்தேன்.

"குட்மார்னிங் சார், இப்பத்தான் வந்தீங்களா? இவதான் என் மிஸஸ்.. குழந்தையம்மா... சரி சரி வந்து எனக்கு சாப்பாடு போடு. நீயும் சீக்கிரம் சாப்பிட்டுப்போ. ஸார் காத்துகினு இருப்பார். எக்சியூஸ் மீ, வாடி"- என்று மனைவியை இழுத்துக் கொண்டு போனான் அவன்.

என் நெஞ்சு கனத்தது.

அவள் அவனுக்குச் சோறு பரிமாறி, அவன் சாப்பிட மறுத்து அடம் பண்ணி தட்டைத் தூக்கி அடிக்க, அவனுக்குச் சமாதானம் கூறி, சோறூட்டி, வாய் கழுவி, தாழ்வாரத்தில் படுக்கை விரித்துப் படுக்க வைத்து, போர்வையை இழுத்துப் போர்த்தி விட்டு.. அவள் சாப்பிட உட்கார்ந்த போது மணி பதினொன்று அடித்தது. நான் அறையின் ஜன்னலருகே உட்கார்ந்து கனக்கின்ற இதயத்துடன் அவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

கடைசியில் ஒருவாறாக அவள் என் அறைக்குள் வந்து நுழைந்தாள்.

"ரொம்ப நாழி காக்க வெச்சிட்டேன்... வெத்திலை போடுங்க" என்று வெற்றிலைத் தட்டைக் கட்டிலின் மேல் வைத்து விட்டு புழுக்கம் தாங்காமல் உடலை இறுக்கும் ஆடைகளை நெகிழ்த்தி விசிறிக் கொண்டாள். நான் வெற்றிலைத் தட்டை எடுத்து சன்னலின் மீது வைத்து விட்டு அவளிடம் நெருங்கி உட்கார்ந்தேன்.

அவள் விசிறியைக் கட்டிலின் மீது வைத்து விட்டு என் மீது சாய்ந்து சுவரிலிருந்த விளக்கின் சுடரைக் குறைக்கும் போது..

எனது நெஞ்சு சந்தோஷத்தால் இன்பானுபவத்தால் படபடத்தது.

என்னையே நான் மறந்திருந்த அந்த நேரத்தில் எங்கிருந்தோ உருட்டித் தள்ளப்பட்டது போல்...

"ஏய் கொயந்தை.. கதவைத் தெறடி" என்ற குரலோடு அறைக் கதவு அதிர்ந்தது.

"ஐயோ, அது எம் புருஷன்... என்று எழுந்தாள் அவள். "எதுவா இருந்தா என்ன? அதைக் கொஞ்சம் நாழி சும்மா இருக்கச் சொல்லு" என்றேன் நான்.

அடுத்த வினாடி என்னை உதறித் தள்ளி விட்டு எழுந்து சென்று கதவைத் திறந்தாள் அவள்.

"எனக்குத் தூக்கம் வரல்லே, குடிக்கணும்... ரெண்டு ரூபா குடு!" என்று கெஞ்சியவாறு நின்றிருந்தான் அவள் புருஷன்.

அவள் உள்ளே திரும்பி வந்து விளக்கின் சுடரை உயர்த்தும் போது நான் எரிச்சலுடன் அவளைப் பார்த்தேன்.

அவளும் என்னை விழித்துப் பார்த்தாள். "நீ ஒரு மணி நேரத்துக்கு முந்தி வந்து இருவது ரூபா குடுத்தே.. அது ஒன்பது வருஷத்து முன்னே என்னைத் தொட்டு தாலி கட்டின எம் புருஷன்' என்று சொல்லுவது போல் என்னைப் பார்த்து விட்டுப் பெட்டியைத் திறந்து ரூபாய்களை எடுத்து அவனிடம் கொடுத்தாள்.

எனக்கு ஆத்திரமும் அழுகையும் வந்தது. சுவரில் தொங்கும் சட்டையை எடுத்து மாட்டிக் கொண்டு புறப்பட்டேன். எனக்கு முன்னே தெருக்கதவைத் திறந்து கொண்டு 'அது'- அவள் புருஷன்- டக் டக்கென்று ஊன்று கட்டைகளின் சப்தம் ஒலிக்கப் போய்க் கொண்டிருந்தது. நானும் அறைக் கதவை கடந்து தெருக்கதவருகே வரும் போது பின்னாலிருந்து அவள் குரல்.

"எதுக்குக் கோவிச்சிக்கிட்டுப் போறீங்க.. அதுக்காக நீங்க போறதானா உங்க பணத்தை வாங்கிட்டுப் போங்க."

பணம்?- என் கை சட்டைப் பையைத் தொட்டது. பர்ஸ் தான் இருக்கிறதே.... அவள் சொல்வது அந்த இருபது ரூபாயையா?

"நான் உன் கிட்டே கோவிச்சுக்கிட்டுப் போகல்லே.. அந்தப் பணத்தைத்தான் உனக்கு கொடுத்துட்டேனே" என்று நான் திரும்பி அவள் முகத்தைப் பார்த்துச் சொன்னபோது அவள் கண்களைக் கண்டேன். அதில் அவள் தலை எழுத்துத் தெரிந்தது.

அவள் என்னைப் பார்த்து உதடுகள் துடிக்கப் புன்முறுவல் காட்டினாள். அது- கேவலம் ஒரு விபசாரியின் வலைவீசும் சிரிப்பாக இருந்திருந்தால் அதில் இருந்து நான் தப்பி வந்திருப்பேன்..

# என்னை நம்பாதே!

தங்கவேல் ஆசாரி வழக்கம்போல் பட்டறைக்குப் புறப்பட்ட போது, "மரகதம், கதவைத் தாழ்ப்பாள் போட்டுக்க" என்று குரல் கொடுத்தார். மரகதம் உள்ளிருந்தபடியே 'சரி சரி' என்று சொன்னதும் மேல் துண்டால் திண்ணையைத் தட்டி விட்டுத் தூணில் சாய்ந்து உட்கார்ந்தார். அப்படி உட்காருவதும் அவருக்கு வழக்கமாகிவிட்ட செயல், இப்பொழுது நான்கு வருஷமாய்த்தான்.

வெந்நீரில் குளித்து விட்டு, சூடான நொய்க் கஞ்சியை இரண்டு தம்ளர் குடித்ததும்- அந்தச் சூடு வயிற்றில் குடலைக் கவ்வி உறைத்து, காலையில் எழுந்திருந்தது முதல் சுருக்கென்று அடிவயிற்றில் துடித்துக் கொண்டிருக்கும் சிறு வலியைக் குறைத்த பின் அப்படி ஓர் அயர்வு காணும். வலியையோ, அயர்வையோ மனைவியிடம் காட்டிக் கொள்ளமாட்டார் அவர். அந்த அசதியோடு துவைத்து உலர்த்திய மல் சட்டையை அணிந்து, மேலே போட்டுக்கொள்ளும் சிட்டைத் துண்டால் நெற்றியில் விபூதிப் பட்டை கலையாமல் முகத்தைத் துடைத்துக் கொண்டு திண்ணைக்கு வருவார். "மரகதம் கதவைத் தாழ்ப்பாள் போட்டுக்க" என்று குரல் கொடுத்த பின் இவர் திண்ணையில் சில நிமிஷங்கள் உட்காருவதோ, அதன் பின் எழுந்து இரண்டு பர்லாங்கு தூரத்திலுள்ள பட்டறைக்குப் போவதற்குள் இரண்டு இடத்தில் நின்று, ஒரு இடத்தில் உட்கார்ந்து இளைப்பாறிக் கொள்வதோ மரகதத்திற்கு ஒன்றும் தெரியாது.

உடம்பு அப்படிப் பொக்காகி விட்டது. நாலு வருஷத்திற்கு முன்பே டாக்டர்கள் கை விட்டு விட்ட உடல். அவருக்கு 'அல்ஸர்' என்ற ஒரு வகைக் குடற்புண் இருப்பதாய்க் கண்டு, மருந்தாலும் மாத்திரையாலும் சில காலம் உயிரூட்டி வந்த டாக்டர்கள் திடீரென்று ஆபரேஷன் செய்யச் சொன்னதும் மரகதம் பயந்து விட்டாள். ஐம்பது வயதுக்கு மேல் ஆபரேஷன் என்றதும் அவருக்கும் கொஞ்சம் பயமாகத்தான் இருந்தது. ஆனாலும் சிறுகச் சிறுக இந்த வேதனையால் துடிப்பதை விட இரண்டில் ஒன்று தீர்த்துக் கட்டிக்கொள்ளலாம் என்றுதான் அவருக்குத் தோன்றியது. சாவைக் கண்டு அவர் அஞ்சி விடவில்லை. தன் மரணத்துக்குப் பின் தன் மனைவியின் நிலைமையைப் பற்றிச் சிந்தித்து ஆபரேஷன் வேண்டாம் என்று முடிவு செய்து விட்டார். டாக்டரும்கூட அதைத்தான் சொன்னார். ஆபரேஷன் என்றால் செலவு அதிகமாகும்; நோய் தீரும் என்று நிச்சயம் செய்வதற்கில்லை. இப்போது இருக்கும் நிலையிலே தங்கவேல் ஆசாரி எந்த நிமிஷத்திலும் இறந்து விடலாம். இந்நிலையில் ஆபரேஷன் ஆபத்தானது- டாக்டர் சொன்ன அந்த வார்த்தையில் அவ்வளவு அர்த்தங்கள் இருந்தன. அது அவருக்கும் புரிந்தது. அவர் மனைவிக்கும் புரிந்தது. அவள் அழுதாள். அவர் அவளது கண்ணீரைத் துடைத்து விட்டுச் சொன்னார்.

"நீ எதை நெனைச்சும் அழாதே.. நான் உன்னை மோசம் பண்ணிடமாட்டேன். டாக்டரை விட, பெரிய டாக்டர் ஒருத்தன் இருக்கான்... அவனுக்குப் பேரு ஆண்டவன். அவன் கைவிட மாட்டான்... நீ நம்பு!" என்று ஆறுதல் கூறினார்.

அதன் பிறகு நாலு வருஷமாய் அவர் சாகாமல்தான் இருக்கிறார். ஆண்டவன் மீது அவர் வைத்த நம்பிக்கை வீண் போகவில்லை. ஆனாலும் அவர் மனசுக்கு உள்ளூறத் தெரியும்; இந்த நான்கு வருஷமாய் அவர் வாழ்ந்து கொண்டு இல்லை. கொஞ்சம் கொஞ்சமாய்ச் செத்துக் கொண்டுதானிருக்கிறார் என்பது-

'இந்த வேதனைக்குச் செத்தாலும் பரவாயில்லே நிம்மதி..." என்று திண்ணையில் உட்கார்ந்திருந்த தங்கவேல் ஆசாரி தன்னுள் முனகிக் கொண்டார். ஏன்? வேதனையைத் தாங்கித் தாங்கி மனம் மரத்துப் போய் விரக்தி கொண்டு விட்டாரா? விதி வந்த பின் சாவு துச்சமாய்த் தோன்றுவது தான் இயல்பா?

'அது சரி.. இன்னக்கி என்ன இவ்வளவு நேரம் இங்கேயே உட்கார்ந்திட்டேன்' என்று மனம் விழித்துக் கொண்டு கேட்ட போதிலும் உடல் எழுந்திருக்க மறுத்தது.

"பட்டறைக்குச் சொல்லி அனுப்பிடலாமா?... யாருகிட்டே சொல்லி அனுப்பறது?" அவருக்கு ஒன்றும் தோன்றவில்லை. முப்பத்தைந்து வருஷத்துக்கும் மேலாக வேலை தந்து கூலி தந்து ஆதரிக்கும் முதலாளியின் குடும்பமே கண் முன் நின்றது. அவருக்கு உடம்பு மோசமாகி விட்டபின் கடின வேலைகள் ஏதும் தராமல் மற்றவர்கள் செய்வதை மேற்பார்வையிடுவதற் கும், எடை போட்டு விற்பது, மற்றவர்கள் செய்த நகைகளை நிறுத்து வாங்குவது போன்ற வேலைகளுக்கு மட்டும் அவரை நியமித்து மாதா மாதம் சுளையாகச் சம்பளம் தருகிறார்களே, அந்த நன்றியுணர்வில் அவர் கண்கள் மின்னின.

தான் உயிரோடிருக்கும் வரை தன்னாலான உழைப்பைப் பெற்றுக் கொண்டு தனக்குத் தேவையான சம்பளம் தருவார்கள் என்பது நிச்சயம். செத்து விட்டால்?.... செத்தவனுக்கு வேலை தர முடியுமா, கூலி தருவதற்கு? தருவது நியாயம் என்று சொல்கிறார்கள். 'தர வேண்டும் என்று நினைப்பதே அநியாயம்' என்று கருதும் 'அந்தக் காலத்துத் தொழிலாளி' அவர். தந்தால் அது தானம் தானே? தானம் பெற்று உயிர் வாழும் அந்த நிலைக்கா தன் குடும்பத்தை- குடும்பமா? அவர் மனைவியைத்தான்- ஆளாக்கிவிட்டுச் சாவது? சீ, அது கேவலம். இந்த நினைப்பினால் தான் அவர் உயிர் வாழ்ந்தார்; சம்பாதித்தார். ஆனால், என்றாவது ஒரு நாள் தங்கவேல் ஆசாரி செத்துப் போவானே, அதன் பிறகு அவன் மனைவிக்கு ஆதரவு யார்?- என்ற நினைப்பு வந்து அவரை ஸ்தம்பிக்க வைக்கும். அப்பொழுதெல்லாம், அவர் அருகில் நெருங்கி வரும் சாவு ஒரு அடி விலகிப் போகும்...

'தனக்கு ஒரு குழந்தை பிறந்திருந்தால்' என்ற இனிய நினைவில் உடல் ஒரு முறை சிலிர்க்கும். 'அந்தத் துக்கிரி மரகதம்தான்- அதற்குக் கொடுத்து வைக்கவில்லை. என்ற பதில் நினைப்பில் உதட்டைப் பிதுக்கிக் கொள்வார். "பூவும் பொட்டுமாக எனக்கு முன்னால் அவள் செத்து விட்டால், அடுத்த நாளே போய் ஆபரேஷன் செய்து கொள்வேன்' என்று நினைப்பார், ஒரு சமயம்; அடுத்த சமயம் 'ஆபரேஷன் செய்து கொண்ட பின் சாகாமல் உயிர் பிழைத்து எழுந்து வந்துவிட்டால், ஐயோ! அவள் இல்லாமல் வாழ்வா?" என்று நினைக்கும் போது நெஞ்சு 'பகீர்' என்று பதைக்கும். கண்கள் கலங்கிவிடும்.

இப்படியே மனைவிக்குத் தெரியாமல் மனசில் எழுகின்ற வேதனையிலும், தளர்ச்சியிலும், நினைவுகளிலும், கற்பனைகளிலும், பயத்திலும், சமாதானங்களிலும் நான்கு வருஷங்கள் கழிந்து விட்டன.

'அது சரி' இன்னக்கி என்ன இங்கேயே இவ்வளவு நாழி உட்கார்ந்துட்டேன்....? என்று சிலுப்பிக் கொண்டு மனசு எழுகிறது, உடல் நகர மறுக்கிறதே....?

மணி எட்டரைக்கு மேலே இருக்குமே... அரை மணியா இங்கேயே இருந்தா?...

உடல் வீட்டுத் திண்ணையில் சாய்ந்து கிடந்தாலும் மனம் வழக்கமாகப் போவது போல...

பாதம் நோகாமல் மெள்ள மெள்ள நடந்து வீதி முனையில் அந்த விளக்குக் கம்பத்தைப் பிடித்துக் கொண்டு இரண்டு நிமிஷம் நின்று, சிட்டைத் துண்டால் விபூதிப்பட்டை கலையாமல் முகம் துடைத்துக் கொண்டு பெரிய வீதியில் திரும்பி, சில கஜ தூரத்துக்கப்பால் இருந்த நாயக்கர் கடையில் அரையணாவுக்குப் பீடி வாங்கும் சாக்கில் ஐந்து நிமிஷம் கடைக்கு முன் இருக்கும் சோடா ஸ்டாண்டைப் பிடித்துக் கொண்டு நின்று, பிறகு நாய்க்கரிடம் விடைபெற்றுக் கொண்டு நடந்து, அடுத்த வீதிக்குத் திரும்பியதும் குளத்தங்கரை அரச மரத்தடியில் நாகப்

பிரதிஷ்டைகளுக்குப் பக்கத்தில் சற்றுத் தள்ளி உட்காருவதற்கு வாகாய் அமைந்திருக்கும் மேடையின் மேல் துண்டால் தட்டி விட்டு உட்கார்ந்து ஒரு பீடியைப் பற்ற வைத்துப் புகைத்தெறிந்த பின்- நடையில் கொஞ்சம் வேகம் கூடி வரும். அதுதான் பீடிப் புகையின் மகிமை'. அந்த மகிமை மரகதத்துக்குத் தெரியுமா, டாக்டருக்குத் தெரியுமா? அவருக்குத் தெரியும்; அதனால்தான் டாக்டரின் உத்தரவையும், மரகதத்தின் வேண்டுகோளையும் மீறி அவர் அனுபவிக்கும் ரகசிய இன்பமாக இருக்கிறது அது. அந்த இன்பானுபவத்தில் நடையைக் கொஞ்சம் எட்டிப் போட்டு நடந்தால் சற்று நேரத்தில் 'முருகன் ஜுவெல்லரி மார்ட்'டுக்கு வந்து விடுவார். பக்கத்தில் இருக்கும் சந்தில் நுழைந்து போனால் பின்புறம் பட்டறை. இன்னும் மணி எட்டரை ஆகாததால் காத்திருக்கும் வேலையாட்கள் 'வாங்க அண்ணாச்சி' என்று வயதுக்கும் அனுபவத்துக்கும் மரியாதை காட்டி எழுந்து நிற்பர். சற்று நேரம் கடைப் பலகையில் சாய்ந்து உட்காருவார் தங்கவேல் ஆசாரி. 'பெரியவர் வந்தாச்சா?' என்று தங்கவேல் ஆசாரியைப் பற்றி விசாரித்துக் கொண்டே பக்கத்தில் உள்ள வீட்டிலிருந்து கடைச்சாவியைப் பையன் வசம் கொடுத்தனுப்புவார் முதலாளி. அநதக் காலத்தில் தங்கவேல் ஆசாரியை வேலைக்கு வைத்துக் கொண்டவரின் பேரன்தான் தற்போதைய முதலாளி.

திண்ணையில் உட்கார்ந்திருந்தவரின் மனம் கடைவரை சென்று ஆதரவு தரும் சின்ன முதலாளியையும், தன்னுடன் வேலை செய்யும் அன்பும் மரியாதையும் மிகுந்த தொழிலாளர் களையும் கண்டு குசலம் பேசி விடை பெற்றுக் கொண்டு திரும்பி வந்த பின்னும்கூட, இன்று அவரால் வீட்டுத் திண்ணையை விட்டு எழுந்திருக்க முடியவில்லை.

'விடைபெற்றுக் கொண்டா?... அதற்கு வேளை வந்து விட்டதா என்ன? நான் செத்து விட்டால் அப்புறம் மரகதத்துக்கு ஆதரவு யார்? இரண்டு வருஷத்துக்கு ஒரு முறை தூரத்திலிருக்கும் கிராமத்திலிருந்து கோணிப்பையில் இரண்டு படி வேர்க்கடலையைப் பிறந்த மண்ணின் சீதனமாகக் கட்டிச்

சுமந்து கொண்டு வந்து தங்கையைப் பார்த்து விட்டு ஒரு வேளைச் சாப்பாட்டில் கை நனைத்து உறவை உணர்த்தி விட்டுப் போகிறானே மரகதத்தின் அண்ணன் மாணிக்கவேல் ஆசாரி, அவனா தங்கையைக் காப்பாற்றிக் கரை சேர்க்கப் போகிறான்? பாவம், அவனைக் குத்தம் சொல்லிப் பிரயோசனமில்லை. எங்களை மாதிரி மலட்டுச் சென்மங்களா, என்ன?... புள்ளை குட்டிக்காரன். பாவம்! கிராமத்திலே என்ன பெரிசா வரும்படி வந்துடப்போவுது?... சுமையோட சுமையா தங்கச்சியையும் தாங்கிக்க வேண்டியதுதான்... "அண்ணே இனிமே எனக்கு யாரு?" ன்னு கூடப் பொறந்தவ காலடியிலே விழுந்து கதறினா, உடம்பொறந்த பொறப்பு "நான் இருக்கேம்மா"ன்னு குரல் காட்டாதா!

தூணில் சாய்ந்திருந்த தங்கவேல் ஆசாரி முக்கி முனகி எழுந்திருக்க முயன்ற போது பின் புறம் தாங்கி இருந்த தூணின் ஆதரவையும் விட்டு நகர்ந்ததனால் 'சடக்' கென்று நொடித்து, திண்ணையின் மீது ஒருக்களித்துச் சரிந்தார். நல்ல வேளையாக நெற்றிப் பொருத்தில் அடி படாமல் புஜம் தாங்கிக் கொண்டதால் தலைக்குக் கையை அண்டை கொடுத்துப் படுத்திருப்பது போல், ரொம்பச் சாதாரணமாய் ஓய்வுக்குப் படுத்திருப்பது போல், இருந்தது அவர் தோற்றம்.

அவர் மனசுக்குத் தெரிகிறது: 'தங்கவேல் ஆசாரி இனி மேல் எந்த நிமிஷத்திலும் செத்துப் போகலாம்' என்று நாலு வருஷங்களுக்கு முன் டாக்டர் சொன்னாரே- அவர் குரல் என் காதில் விழவில்லை என்று நினைப்பு- அந்த நிமிஷம் இப்போது என்னை நெருங்கிக் கொண்டிருக்கிறது... திடீர்னு நான் செத்துப் போய்ட்டா மரகதம் என்ன பண்ணுவாள்? அடித்துப் புரண்டு அழுவாள். அந்த வேதனையில் தன்னைப் பற்றியோ, தனது நிராதரவான நிலையைப் பற்றியோ அவளுக்கு நினைக்க நேரம் இருக்குமா? தனக்கு ஒரே ஆதரவு தன் அண்ணன்தான் என்பதை மறந்து அவள் இந்தச் சோகத்திற்கு இரையாகி அண்ணனுக்குச் சேதி தெரிவிக்க மறந்து போவாள்.. அவன் கிராமத்தான். இதற்காகக் கோபித்துக் கொண்டு

தங்கையைப் புறக்கணித்து விட்டால்?.... ஐயோ, உசிரு போகறதுக்கு முன்னாடியே அவகிட்டே சொல்லி மாணிக்கவேலுக்கு ஒரு கடுதாசி எழுதச் சொல்லிடணும்...இது என் கடைசிக் கடமை...."

துவைத்து மல்லிகைப் பூவாய் வெண்மையாக்கப் பட்ட உடையில் திண்ணையில் நிறைந்திருந்த தூசெல்லாம் படிந்திருக்க தங்கவேல் ஆசாரி எழுந்திருக்க மனமிருந்தும் உடம்பில்லாமல் அப்படியே மயங்கிக் கிடந்தார். இப்பொழுது சிந்தனையும் தடைபட்டு, உறக்கம் போல் மயக்கம் அவரை நிலை இழக்கச் செய்திருந்தது.

'அது சரி... இன்னக்கி என்ன இப்படி?..." என்றொரு கேள்வி அவரது உள் மனத்தில் உருவாகி, 'ஆமாம்.. இன்னக்கி இப்படித்தான் என்று தீர்மானமாகப் பதிலும் பிறந்தது.

அடிவயிற்றில் சுருக்கென ஒரு வலி தோன்றிப் புரண்டு மேலேறி நெஞ்சில் ஒரு பெரும் விக்கலாக அடைத்த போது, சற்று நேரத்துக்கு முன் சூடாகக் குடித்த நொய்க்கஞ்சி தொண்டையில் வழவழத்து நெருடியவாறு ஒருக்களித்துக் கிடந்த அவரது வாயோரமாக வழிந்து, கன்னத்தில் அண்டை கொடுத்திருந்த புஜத்தில் விழுந்ததும் அதில் இரண்டொரு ஈக்கள் மொய்த்தன. ஈக்களை விரட்ட உதடு 'அசைந்தது. அதை மனம் எண்ணியும் கை அசைய முடியாமல் மரத்துக் கிடந்தது.

கொல்லைப் புறத்திலிருந்து குளித்து விட்டு ஈரப் புடவையைக் கொசுவித் தோளிலிட்டுக் கொண்டு அடுக்களைக்கு வந்த மரகதம், அடுப்பிலேற்றியிருந்த ஆழாக்குப் பச்சரி குழைந்து போயிருப்பதைக் கண்டாள்.... வேறு புடவை கூட மாற்றிக் கொள்ளாமல் அடுப்பிலிருந்த வெண்கலப் பாத்திரத்தில் குழைந்து கொண்டிருக்கும் சாதத்தில் நாலு கரண்டி எடுத்து வேறு பாத்திரத்தில் விட்டுக் கரண்டியால் மத்திட்டுக் கரைப்பது போலக் குழைத்துக் குழைத்துக் கிளறினாள். பிறகு இடுப்பிலிருந்த ஈரத்துணியை முற்றத்துத் தூண்களில் சுற்றிச் சுற்றிக் கட்டி விட்டு, கொடியில் கிடந்த மாற்றுப் புடவையை எடுத்து அணிந்து கொண்டபின், மஞ்சள்

பூசிப் பளீரிடும் நெற்றியில் பெரிசாகக் குங்குமத்தை வைத்துக் கொண்டு முற்றத்தில் வந்து நின்று உச்சியில் தெரியும் சூரியனைக் கும்பிட்டாள். மறுபடியும் அடுக்களைக்கு வந்து அடுப்பில் கிடந்த பால்கஞ்சியில் சர்க்கரை போட்டு இறக்கிப் பளீரென்று விளக்கி வைத்திருக்கும் பித்தளைத் தூக்குச் சட்டியில் ஊற்றி மூடி வைத்தாள். பிறகு பாலை ஊற்று முன் வேறு பாத்திரத்தில் எடுத்து வைத்திருந்த வெறுங்கஞ்சியில் இரண்டு உப்பைப் போட்டுக் கரைத்து ஊறுகாய்த் துணையுடன் தானும் இரண்டு தம்ளர் குடித்தாள்.

நான்கு வருஷமாய் தங்கவேல் ஆசாரிக்குக் காலையில் நொய்க்கஞ்சியும், மற்ற இரண்டு வேளையும் பால் கஞ்சியும் தான் ஆகாரம். இரண்டு பேருக்கு இரண்டு விதமான சமையலா செய்து கொண்டிருக்க முடியும்? மரகதம் பாலை நீக்கி அந்தக் கஞ்சியையே குடித்து விடுவாள். என்றைக்காவது நாக்குச் செத்துப் போன உணர்வில் காரமாய், புளிப்பாய்ச் சாப்பிட எண்ணுவாள். அப்போது மட்டும் வத்தல் குழம்போ, புளிச்சாறோ செய்து கொள்ள அலுப்புத் தோன்றாது. மற்றபடி வாழ்க்கையில் பெரிய ஆசைகளுக்கு ஏது இடம் அவளுக்கு?

அவசர அவசரமாய்க் கஞ்சியைக் குடித்ததும் தூக்குச் சட்டியோடு ஈயம் பூசி வைத்திருக்கும் தம்ளரை எடுத்துக் கொண்டு புறப்படுவதற்கு முன் அஞ்சறைப் பெட்டியில் கடுகு சீரகத்துடன் நான்காய் மடித்துப் போட்டிருந்த இரண்டு பத்து ரூபாய் நோட்டுக்களையும், அரிசி டின்னுக்குள் கிடக்கும் "சேவிங் பாஸ் புக்' கையும் எடுத்து இடுப்பில் செருகிக் கொண்டாள். இன்று அந்த வேலையும் இருப்பதால்தான் கஞ்சியைக் குடித்து விட்டே புறப்படுகிறாள். இல்லாவிட்டால் பட்டறைக்குப்போய், புருஷனுக்கு இரண்டு தம்ளர் பால் கஞ்சியைத் தன் கையால் ஊற்றிக் கொடுத்து அவர் குடித்த பிறகு மீதத்துடன் வீட்டுக்கு வந்து இரண்டையும் சேர்த்துத்தான் குடிப்பாள்.

இந்த 'சேவிங்ஸ் பாஸ் புக்' விஷயம் அவருக்குத் தெரியாது. அவருக்குத் தெரியாமல் இந்தக் காரியத்தை ஆரம்பிக்க அவள்

மனம் ரொம்பவும் போராடியது. ஆனாலும் என்ன? "நீ செத்த பிறகு நான் வாழ்வதற்காக நீ சம்பாதித்துத் தரும் காசில் மிச்சம் பார்த்து நான் சேர்த்து வைக்கிறேன்' என்று சொல்ல எப்படித்தான் அவளுக்கு மனசு வரும்?

ஆமாம்; புருஷன் என்ற அன்பு, பக்தி, பதிவிரத்தன்மை எல்லாம் ஒருபுறம் இருக்கட்டும். அவன் செத்துப் போனால் அதற்குப்பின்னும் இந்தப் பொய்யான உலகில் பூதவுடலுடன் வாழ வேண்டியிருக்கிறதே!

ஆயிரம்தான் உறவு இருக்கட்டுமே, அவளை ஆதரித்து அன்பு காட்டினால்- அதனால் அவர்களுக்கு என்ன லாபம் என்று தெரிந்தால்தான் அருகில் வருவார்கள். கழுத்தில் கட்டிய கயிறுக்கும், கருவில் பிணைந்த நஞ்சுக் கொடிக்கும் இல்லாத உறவு, கலந்து கலந்து மாறிப் போன கால்வழி சொந்தக்காரர்களுக்கா வந்து விடப் போகிறது? அவளும் தன் ஐம்பது வருஷ வாழ்வில் எவ்வளவோ பேரைப் பார்த்து விட்டாள்.

நான்கு வருஷத்துக்கு முந்தித் தங்கவேல் ஆசாரியின் ஆயுள் கணக்கின் மீது டாக்டர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றியவுடன் மரகத்தின் மனசில், எதிர் வீட்டில்- புருஷன் உயிரோடு இருந்த காலத்தில்- செயலுடன் சிறப்பாக வாழ்ந்த வெள்ளையம்மாள், கையில் ஒரு காசில்லாமல் பட்ட சிரமமும், கூடப்பிறந்தவர்கள் கூடக் கைவிட்டு விட்டபின், தள்ளாத வயசில் கோயில் வாசற்படியில் பிச்சையெடுத்து வாழ்ந்ததும், பிறகு ஒரு நாள் ஆயிரங்கால் மண்டபத்தில் அனாதைப் பிணமாய்க் கிடந்ததும்தான்- சித்திரமாய்த் தெரிந்தது.

இதையெல்லாம் எண்ணிப் பார்த்துத்தான் புருஷனின் மறைவு என்ற மகா சோகத்திற்குப் பின்னும்தான் இந்த உலகில் வாழ வேண்டும் என்ற இயற்கையான, யதார்த்தமான நிலையை உணர்ந்து, தன் புருஷன் அப்படியே முழுசாகக் கொணர்ந்து தரும் மாதச் சம்பளம் எழுபத்தைந்து ரூபாயில் அவருக்கு ஒரு குறையில்லாமல் கவனித்து, வாயைக் கட்டி, வயிற்றைக் கட்டி,

மாதம் இருபது ரூபாய் தபால் ஆபீசில் கட்டி வைக்கிறாள் மரகதம். சில சமயங்களில் அவளுக்குத் தோன்றும். அந்தப் பணத்தைச் செலவு செய்து அவருக்கு மருந்து வாங்கிக் கொடுத்து வைத்தியம் செய்தால் இன்னும் கொஞ்ச நாள் உயிருடன் இருக்கமாட்டாரா என்று. அந்த அளவுக்குத் தியாகம் செய்ய உலகநிலை அவளுக்கு ஒத்து வரவில்லை. அதை நினைக்கும் போதுதான் புருஷனுக்குத் துரோகம் செய்வதாக எண்ணிக் கொள்வாள்.

திடீரென்று புருஷன் செத்து விட்டால் ஊரிலிருக்கும் ஒன்று விட்ட அண்ணனிடம் அடைக்கலம் புக வேண்டும். கையில் இரண்டு காசிருந்தால்தான் அங்கும் சற்று மதிப்பாய் வாழ்ந்து சாகலாம்....

அவள் 'பாஸ்புக்' கைத் திறந்து பார்த்தாள். இந்த நாலு வருஷத்தில் கிட்டத்தட்ட ஆயிரம் ரூபாய் சேர்ந்திருந்தது....

அந்த ரூபாய் அவள் புருஷனுக்கோ, அவளுக்கோ கூடச் சொந்தமில்லை. அவளை ஆதரித்து அவள் செத்த பின் கொள்ளி போடப் போகிறானே, அவள் அண்ணனோ அல்லது அவன் மகனோ, அவனுக்கு உறவின் பேரால் கிடைக்கப் போகும் லாபம். அதுதான் அவள் வாழ்க்கைக்கு இறுதி வரை புருஷனைக் காட்டிலும், அவர் மீது அவளும் அவள் மீது அவரும் கொண்டுள்ள பரஸ்பர அன்பைக் காட்டிலும் உத்தரவாதம் தருவது.

"சீ! என்ன அல்பம்!" என்று அவள் மனம் சலித்தது.

அல்ப உலகத்தில் பிறந்து அல்ப வாழ்வின் மீது பற்றும் வைத்து விட்டதால் அல்பப்பணத்தையும் போற்றத்தான் வேண்டியிருக்கிறது- என்ற உணர்வில் பணத்தையும் 'பாஸ் புக்' கையும் மடியில் கட்டிக் கொண்டு பூட்டையும் சாவியையும் எடுத்துக்கொண்டு, வாசற் கதவைத் திறந்தவள்- திண்ணையில் கிடக்கும் புருஷனைக் கண்டதும் "ஐயையோ! தெய்வமே!" என்று அலறினாள்.

அவள் அலறலைக் கேட்டு, தெருவில் போகும் யாரோ இருவர் ஓடி வந்தார்கள். அவரைத் தூக்கி உட்கார்த்தி வைத்தார்கள். மரகதம் அவர் தலையைத் தாங்கிக் கொண்டு சேலைத் தலைப்பால் வாயோரத்தைத் துடைத்தாள்.

அவர் லேசாகக் கண்களைத் திறந்து தன் தலைக்கு மேல் குனிந்திருந்த மரகதத்தின் முகத்தை விழிகளை உயர்த்திப் பார்த்தார்... அவர் முகத்தில் லேசான புன்னகை படர்ந்தது.

"உசிருக்கு ஆபத்தில்லையம்மா.... என்றார்கள் உதவிக்கு வந்தவர்கள்.

அவளுக்குத் தெரிந்தது. உயிருக்கு ஆபத்து வந்து விட்டது என்று.

வந்தவர்களின் உதவியுடன் தங்கவேல் ஆசாரியை வீட்டுக்குள் தூக்கிக் கொண்டு வந்து கிடத்தினாள். படுக்கையில் கிடத்தி, தூக்குச் சட்டியிலிருந்த பால் கஞ்சியைத் தம்ளரில் ஊற்றி அவர் வாயருகே கொண்டு போனதும் நெற்றியைச் சுருக்கி உதட்டை இறுக்கிக் கொண்டு 'வேண்டாம்' என்று மறுத்து விட்டார். அவர் நாவின் அசைவிலிருந்து அவருக்கு வெறும் தண்ணீர் வேண்டும் என்ற மனத்தின் சொல்லைப் புரிந்து கொண்டு மரகதம் உள்ளே ஓடி, தம்ளரில் கொண்டு வந்த வெந்நீரைப் புகட்டும் போது மனுஷன் வெறியோடு மடக் மடக்கென்று மூன்று நான்கு மிடறு குடித்தார்...

அப்புறம் லேசாகக் களைத்தார்... கண்களில் கண்ணீர் கலங்கிக் கலங்கி வழிய, தன் தலையை மடிமேல் தாங்கிக் கொண்டிருக்கும் மரகதத்தைப் பரிதாபகரமான புன்னகையுடன் பார்த்து, கம்மி ஸ்வரம் மாறிப் போன குரலில், 'பயப்படாதே மரகதம்..." என்று கூறினார்.

அதைக் கேட்டு உதவிக்கு வந்தவர்கள் பயம் தெளிந்து, "ஒண்ணுமில்லேம்மா, மயக்கம்தான்" என்று ஆறுதல் கூறி விட்டுப் போய் விட்டார்கள்.

தனிமையிலிருந்த கணவனும் மனைவியும் ஒருவரை ஒருவர் மௌனமாகப் பார்த்துக் கொண்டனர்.

அவள் முகத்தை உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கையில் மெள்ள மெள்ள தூக்கம் போல் மயக்கம் அவர் இமைகளைக் கிறங்கி மூட வைத்தது. அவர் அதை மரணம் என்று நினைத்து திடுக்கென விழித்தார். பிறகு அவள் முகத்தையே வெறித்தார்.

"சாப்பிட்டியா?" என்று முனகினார்.

"'அதுக்கென்ன? இப்ப... நீங்க பேசாம இருங்க" என்றாள் மரகதம்.

"சாப்பிடலேன்னா போயிட்டு வா அதுக்குள்ளே செத்துடமாட்டேன்" என்று மனம் அவளை வேண்டிக் கொண்டது.

"கொஞ்சம் பால் கஞ்சி சாப்பிடுங்களேன்... என்று தம்ளரிலிருந்த கஞ்சியை அவர் உதடுகளுக்கிடையே லேசாகக் கொஞ்சம் வார்த்தாள் மரகதம். அவர் சுவைத்து உண்பதைக் கண்டு இன்னும் கொஞ்சம் விடும்போது 'போதும்' என்று தலையைத் திருப்பிக் கொண்டார் அவர்.

பிறகு அங்கிருந்த பாத்திரங்களை எல்லாம் கொண்டு உள்ளே போட அவள் அடுக்களைக்குள் போகும் போது அவர் பார்வை அவளையே தொடர்ந்து சென்றது.

"ஏன் இப்படிப் பார்க்கிறீங்க... டாக்டரைக் கூட்டியாரவா?" என்றாள்.

தங்கவேல் ஆசாரி லேசாகச் சிரித்துச் சற்றுத் தெம்புடன் பேசினார்; 'டாக்டர்தான் நாலு வருஷத்துக்கு முன்னாடியே கை விட்டுட்டாரே.. இப்ப அந்த டாக்டருக்கெல்லாம் பெரிய டாக்டரு இருக்கான் பாரு... அவனும் கைவிடப் போறான்....

மரகதம் சேலைத் தலைப்பை வாயில் அடைத்துக் கொண்டு குமுறி அழுதாள்.

"மரகதம். நீ உலகம் தெரியாத குழந்தை. நீ ஒரு குழந்தையைப் பெத்து இருந்தீன்னா. அதுவாவது உனக்குச் சொல்லிக் குடுக்கும், உலகம்னா என்னான்னு... அது தான் இல்லாமப் போச்சே..." என்று சொல்லி விட்டு ஒரு நிமிஷம் மௌனமாக இருந்தார்.

சற்று நேரத்துக்குப் பின் கண்களில் கண்ணீர் கலங்கி வழிய, "என் கடமையை நான் சரியா செஞ்சிருக்கேனா இல்லையோ?. நீ எனக்குப் பட்ட கஷ்டத்தையெல்லாம் நினைச்சா. உன்னைத் தெய்வமா நெனைக்கிறேன் மரகதம்... என் சட்டைப் பையிலிருக்கிற ரூபாயை எடு... என்றார். மரகதம் அவரது பையில் கையை விட்டு எடுத்தாள். இரண்டு பத்து ரூபாய் நோட்டுகளும் ஒரு ஐந்து ரூபாய்நோட்டும் இருந்தன.

"என்னை மன்னிச்சிக்க மரகதம்... உங்கிட்டே எழுபத்தஞ்சி ரூபாய் சம்பளம்னு பொய் சொன்னேன்... நாலு வருஷமா எனக்கு நூறு ரூபாய் சம்பளம். உன் உழைப்பை எல்லாம் பெத்துக்கிட்டு உன்னை நடுத்தெருவிலே நிறுத்திட்டு நான் செத்துட்டா எனக்குப் போகிற வழிக்குக் கூடப் புண்ணியம் கிட்டாது. அதனாலே உம் பேர்லே "பேங்க் லே மாசம் இருவத்தி அஞ்சி ரூவா கட்டி இருக்கேன்... இது உனக்குத் தெரிஞ்சா உசிரோடே இருக்கும்போதே நான் சாகப் போறதை நெனைச்சி உனக்குப் பணம் சேக்கறேன்னு நீ வருத்தப் படுவேன்னு நான் உன்கிட்டே சொல்லலே.. உனக்குத் தெரியாமத்தான் செய்யணும்னு செஞ்சிட்டேன். உங்க அண்ணனுக்கு ஞாபகமா தந்தி குடு... இனிமே அவந்தான் உனக்கு.. என்னை இனிமே நம்பாதே... நான் செத்து..." தங்கவேல் ஆசாரிக்கு பேச்சு வரவில்லை.

"நான் பாவி.. பாவி...பாவி...!" என்று மடார் மடார் என்று தூணில் மண்டையை மோதிக் கொண்டு அலறித் துடித்தாள் மரகதம்.

நெற்றியில் ரத்தம் வழிந்தது. குங்குமமும் கண்ணீரும் முகத்தில் குழம்பி வழியத் தன் மடியிலிருந்த, வாழ்க்கைக்கு உத்தரவாதமான பணத்தையும் பாஸ் புக்கையும் எடுத்து

இரண்டு கைகளிலும் நீட்டிக் கொண்டு 'ஓ' வென்ற அழுகைக் குரலில் அவள் கதறினாள்:

"என் ராசாவே!... நான் உங்களை எந்தக் காலத்திலே நம்பினேன் இனிமே நம்பாமப் போக?- ஐயோ, நான் எவ்வளவு சுயநலக்காரி.. இதோ பார்த்தீங்களா! ஒண்ணும் தெரியாத கொழந்தைன்னு நீங்க நெனைக்கிற இந்தப் பாவி செய்திருக்கிற காரியத்தை!" என்று அவர் முகத்துக்கு நேரே பணத்தையும் பாஸ் புக்கையும் காட்டினாள்.

அதைப் பார்க்க அங்கே தங்கவேல் ஆசாரி இருந்தால் தானே?

"ஐயோ!. எனக்குக் காசு வேணாம்; பணம் வேணாம்... நீங்கதான் வேணும்..." என்று கையிலிருந்ததை வீசியெறிந்து விட்டு அவர் மேல் விழுந்து கதறினால் மரகதம்.

'மரகதம் உனக்கும் எனக்கும் காசோ பணமோ வேண்டாம். உலகத்துக்கு அது வேண்டும். நீ செய்தது தப்பில்லை. செத்துப் போகும் மனிதனை உலகம் நம்பாது. சிரஞ்சீவியாக இருக்கும் பணத்தைத்தான் நம்பும்' என்று செத்துப் போனபின் ஆவியாக மனிதர்கள் திரிவார்களாமே, அது உண்மையானால் தங்கவேல் ஆசாரி நிச்சயம் அவளுக்கு அன்போடு சொல்லி இருப்பார்.

ஆனால், அவள் ஒரு உலகம் தெரியாத குழந்தை என்று நம்பி இருந்தாரே, அந்த நம்பிக்கை மாறி இருக்கும். மரகதம் அழுவது கூட, அவரது சாவுக்காக மட்டுமல்ல; அந்த நம்பிக்கைச் சிதைவுக்கும் தான்...

# அன்புக்கு நன்றி

பஸ் ஸ்டாண்டில்- டிரங்குப் பெட்டியும், படுக்கைச் சுருணையும் வைத்துக் கொண்டு நின்றிருந்த அந்த இளைஞனைப் பார்த்ததும் ரமணி ஐயருக்கு மனசில் ஒரு மூர்க்க சந்தோஷம் பிறந்தது.

"நாம்ப வெச்ச வத்தி பத்தி எரிஞ்சுட்டுது போல இருக்கே..." முகத்தில் விஷமத்தனமான நமுட்டுச் சிரிப்பு விகஸிக்க இளைஞனின் அருகே வந்து நின்றார் ஐயர்.

அவன் எங்கோ பார்த்தவாறு நின்றிருந்தான் முகத்தில் துயரமும், திகைப்பும் கண்ணீர் கலங்கும் கண்களும்...

'இந்த மாதிரிப் பசங்களுக்கெல்லாம் பாவம், பரிதாபம் பார்க்கக் கூடாது..." என்று நினைத்துக் கொண்ட ரமணி ஐயர் தொண்டையைச் செருமியவாறு, "எங்கே ஸார் ஊருக்குப் பயணமோ?" என்று சற்றுக்கேலியான பாவத்தோடே கேட்டு வைத்தார்.

அந்த இளைஞன் ஐயரை ஏற இறங்கப் பார்த்தான் "தெரியலையே ஸார்- நீங்க யாரு?"

ரமணி ஐயருக்கு நெஞ்சில் உதைத்தது போல் இருந்தது.

"என்னைத் தெரியலியா... நீங்கதானே மெயின்ரோடு பதினேழாம் நெம்பர் வீட்டிலே முன் போர்ஷன் ரூம்லே குடியிருக்கிறவர்..."

"இருக்கிறவர் இல்லே ஸார். இருந்தவர்.." இளைஞனின் குரல் அடைத்தது.

"ஏன்? அந்த இடத்தைக் காலி பண்ணிட்டேளா?...

"நான் பண்ணலை. அவர் தான்- வீட்டுக்காரர் சுந்தரலிங்கம் இருக்காரே அவரை ஒண்ணும் சொல்லப்படாது- என் பொல்லாத விதி. நான் பொறந்த நேரம்னு ஒண்ணு இருக்கு பாருங்கோ. அதன் பலன்- திடீர்னு இன்னிக்கிக் காலையிலே வந்து 'மரியாதையா ரூமை விட்டுக் காலி பண்ணிடு' ன்னு முகத்திலே அடிச்ச மாதிரி சொல்லிட்டார்."

"என்ன காரணம்னு கேட்கலியா?"

"வாடகை கொடுக்கறவனா இருந்தா கேக்கலாம். என்னவோ புண்ணியத்துக்கு, ஏழைப் பையனாச்சேன்னு இடம் குடுத்தார். இவ்வளவு நாளு இருந்ததுக்கே நன்றி செலுத்தணும் ஸார்...

"ஏன்? நீங்க வாடகை குடுக்கறது இல்லியா ஸார்?"

"நான் எங்கே ஸார் போறது பணத்துக்கு? பொறந்தப்பவே அனாதையாயிட்டேன்.... நான் யார் யாரோட உதவியிலேயோ படிச்சேன்.. இன்னும் ஒரு வருஷம் டிரெயினிங் பாக்கி இருக்கு. இது முடிஞ்சுட்டா எங்காவது ஒரு ஸ்கூல்லே வேலை பாத்துண்டு சொந்தமா சம்பாதிச்சுச் சுயமாச் சாப்பிடலாம்.. அதுதான் ஸார் வாழ்க்கையின் லட்சியமா இருக்கு. இருபத்திரண்டு வருஷ காலமா பிறத்தியார் உதவியிலேயே இந்த உடல் வளர்ந்திருக்கு... திட்டினாலும் விரட்டினாலும் அவங்களைக் குறை சொல்லலாமா? எல்லாம் என் விதி ஸார், விதி!" கண்கள் சிவந்து கலங்க அடைத்துக்கொண்டு வந்த அழுகையை அடக்கிக் கொண்டான் அவன்.

ரமணி ஐயர் சிலை போல் நின்று கொண்டிருந்தார்.

"அப்படியானால்... உங்களுக்கு என்னைத் தெரியாதா?... என்றார் ரமணி ஐயர்.

"தெரியாது ஸார்.. இவ்வளவு அனுதாபத்தோட கேக்கறேளே.. யார்னுதான் யோசிக்கிறேன்..."

“சுந்தரலிங்கம் வீட்டுக்கு எதிர் வீட்டிலேதான் நானிருக்கேன்...” என்று சொல்லி விட்டு அவன் முகத்தில் ஏதாவது மாறுதல் ஏற்படுகிறதா என்று கவனித்தார் ஐயர்.

“அப்படியா... நான் பார்த்ததே இல்லை ஸார். நீங்க என்ன பண்றேள்?” என்று புன்னகையுடன் கேட்டான் அந்த இளைஞன்.

–அந்தக் குழந்தைத்தனமான புன்னகையைக் கண்டவுடன் ‘ஓ’வென்று அழுதுவிடலாமா என்றிருந்தது ஐயருக்கு.

“கலெக்டர் ஆபீஸ்லே கிளார்க்.. எதுக்கு உங்களை திடீர்னு காலி பண்ணச் சொன்னார் சுந்தரலிங்கம்.”

“எனக்குத் தெரியலை ஸார், என்னவோ புகார் வர்ரதாம். எங்கேயிருந்து வர்ரதோ?... என்னன்னு வர்ரதோ? நமக்கெதற்கு ஸார் இதெல்லாம்? பிடிக்கலைன்னா வந்துட வேண்டியது தானே?”

சில நிமிடங்கள் இருவரும் மௌனமாய் நின்றிருந்தனர்... மௌனமா?.... ரமணி ஐயரின் மனச்சாட்சி ‘ஓ’ வென்று அழுது கொண்டிருந்தது.

“நான் மகாபாவி... மூர்க்கன்.... இவனையா, இந்தக் குழந்தையையா, அதுவும் இந்த அனாதைக் குழந்தையையா நான் சந்தேகித்தேன்?.... இவன் வாழ்க்கையில் என்னால் ஒரு களங்கமா?... சே, சே! நான் என்ன மனிதன், என்ன மனிதன்!...”

“ஸார்... எனக்காகவா நின்று கொண்டிருக்கிறீர்கள்....”

“ம்.. பரவாயில்லை தம்பி.. உனக்கு ஆட்சேபணை இல்லேன்னா எங்க வீட்டிலே வந்து இருக்கலாம்.”

‘ஆமாம், ரமணிதான் சொல்லுகிறான்’ என்று தனக்குள்ளேயே அவர் முனகிக் கொண்டார்.

“ரொம்ப நன்றி ஸார். என் சினேகிதன் ஒருத்தன் வண்ணாரப்பேட்டையில் இருக்கான். அவன் ரொம்ப நாளா கூப்பிட்டுண்டே இருக்கான்... ஸார். எனக்கு உதவி செய்யறவா

ரொம்பப் பேர் இருக்கா... அதெ நெனச்சாதான் எனக்கு வருத்தமாக இருக்கு... நான் யாருக்காவது உதவி செய்யறவனா எப்ப மாறப் போறேனோ; உதவி செய்தவங்களுக்கெல்லாம் கசப்பைத் தராமல்.. யாருக்கும் தந்ததில்லே சுந்தரலிங்கத்தைத் தவிர- எல்லாம் என் விதி ஸார்.. விதி! பஸ் வந்துடுத்து சார்.. நான் போயிட்டு வர்றேன்.. உங்க அன்புக்கு ரொம்ப நன்றி ஸார்... ரொம்ப நன்றி!"

அந்த இளைஞன் பஸ்ஸிலேறிப்போய் விட்டான்.

"உங்கள் அன்புக்கு ரொம்ப நன்றி ஸார், ரொம்ப நன்றி" என்று ஒரு வல்லீட்டியை ரமணி ஐயரின் நெஞ்சில் ஆழச்செருகி விட்டு அல்லவா போய்விட்டான்!

ரமணி ஐயர் நெஞ்சைப் பிடித்துக்கொண்டு அப்படியே அங்கிருந்த பெஞ்சில் உட்கார்ந்து கொண்டார்.

ரமணி ஐயருக்கு வாய்த்த இரண்டாம் தாரம் ஜானகி ரொம்ப அழகி என்பது மட்டுமல்லாமல் அவரைவிட இருபது வயது இளையவள் என்பதனால், ரமணி ஐயர் ஊரிலுள்ள ஆண்களை எல்லாம் சந்தேகிப்பது என்ன நியாயம்?..

ரமணி ஐயர் உண்மையிலேயே ரொம்ப நல்லவர். மனைவியையோ ஊராரையோ அவர் என்றைக்கும் சந்தேகித்ததில்லை.

எதிர் வீட்டின் முன்னறையில் ஒரு வாலிபன் குடிவந்த பிறகுதான் அவர் அவனைச் சந்தேகிக்க ஆரம்பித்தார். பாவம், அவர் நிலை அப்படி ஆகிவிட்டதா, என்ன?

சந்தேகம் என்று ஒன்று மூண்டு விட்டால் எல்லாம் அதற்கேற்பத்தான் நடக்கும் என்பது எல்லாருக்கும் தெரிந்த ரொம்பப் பழைய. விஷயமாயிற்றே!

அப்படித்தான் ஆயிற்று.

'பயல் எப்பப் பார்த்தாலும் கையிலே ஒரு புத்தகத்தையும் வச்சிண்டு படிக்கிற சாக்கிலே ஜன்னலண்டையே நிக்கறானாம்- சுத்தக்காலிப்பயல்.. இவர் வந்ததைக் கண்டதும் புத்தகத்தாலே

முகத்தை மறைச்சிக்கறானாம்; நேரம் காலம் இல்லாம லைட்டைப் போட்டுண்டு இவர் ரூமையே 'வாச்' பண்றானாம்...' என்று நாளுக்கு நாள் ஐயரின் மனதில் வன்மம் வளரலாயிற்று.

கடைசியில் ஒரு நாள்... ரமணி ஐயர் ஆபீஸிலிருந்து வரும் போது- அன்று சீக்கிரமே வந்து விட்டார்- 'பயல் கையில் புஸ்தகத்தைக் காணோமே.. என்னத்தை அப்படி வெறிச்சிப் பார்க்கறான்.. திருட்டுப்பய, பார்வையை மாத்திப்பிட்டான்... மானத்தைப் பாக்கறான், மானத்தை! மானத்திலே என்னடா வச்சிருக்கு.. எனக்கா 'டேக்கா' குடுக்கப்பார்க்கறே?.... உன் வயசிலே நானும் எத்தனை திருட்டு 'லவ்' அடிச்சிருப்பேன்.... என்று செருமிக் கொண்டார்.

ஆமாம்; அதுதான் உண்மை! இன்று ஐயருக்குக் கோபம் அவன்மீது மட்டும் வரவில்லை.

'இங்கே மட்டும் என்ன வாழறதாம். இந்தக் கம்மனாட்டி முண்டையைப் பாரு- ஜன்னல் மேலே கண்ணாடியைச் சாத்தி வச்சிண்டு- தரித்திரமே! வேறே இடமில்லையா, உனக்கு?.... தலைவாரிக்கிறாளாம், தலை, ரெண்டு கையையும் தலைக்கு மேலே தூக்கிண்டு- சேசே, அவளைச் சொல்லியும் குத்தமில்லே; என் புத்தியை அடிக்கணும் செருப்பாலே... இந்த லக்ஷணத்தோட, கீர்த்தனை வேறே... ஆலாபண்ணை- தொடப்பக் கட்டை...'

ஐயருக்கு முகம் சிவந்து போயிற்று.

'ஓகோ' இது தினசரி நாடகம் போல இருக்கு. இன்னிக்குக் கொஞ்சம் முன் நேரத்திலே வந்ததாலே மாட்டிண்டா- ரெண்டு பேரும். உம்... இருக்கட்டும்.

"என்ன இன்னிக்கி சீக்கிரம் வந்துட்டேள்?" என்றாள் ஜானகி.

"உனக்கென்ன கஷ்டமா இருக்கா? போடி, போ, காப்பி கொண்டா?.... என்று விரட்டி விட்டு ஜன்னல் கதவைப் 'படா'ரென அடித்து மூடினார்.

மனம் ஒரு நிலையில் இல்லை. இப்படி ஒரு நிலைமை ஏற்படக் கூடாது; ஏற்பட்டு விட்டதே, என்ன செய்வது? என்ன செய்வது? என்னத்தைச் செய்து தொலைப்பது, எல்லாம் என் கிரஹச்சாரம்....!

யோசித்து யோசித்து முடிவுக்கு வந்து விட்டார். முடிவு சுந்தரலிங்கத்திடம் தெரிவிக்கப்பட்டது.

"அப்படியா, ரொம்ப நல்ல பையன் ஸார்... தப்புன்னா என்னான்னே அவனுக்குத் தெரியாது, குழந்தை ஸார் அவன்..." என்று படபடத்தார் சுந்தரலிங்கம்.

"குழந்தை என்னைக்குமே குழந்தையா இருந்துடுமா ஸார்?.... நான் ஒண்ணும் தப்புச் சொல்ல வரலே; ஒரு வயசுலே வர்ர சேஷ்டை.... நாம் அதுக்கு இடம் குடுக்கப் படாது பாருங்கோ..."

"இப்படிப்பட்டவனா இருப்பான்னு நான் நெனைக்கலை ஸார்–"

"நமக்கு எப்படி ஸார் இதெல்லாம் தெரியும்.... என் 'ஒய்ப்' சொல்லி ரொம்ப வருத்தப்பட்டு அழுதாள், ஸார்... அவளும் சிறிசு பாருங்கோ... பயப்படறா..."

"சரி ஸார் நீங்க போங்க... நான் பார்த்துக்கறேன்... என்று உறுமினார் சுந்தரலிங்கம்.

அந்த விளைவு?....

அவன் போய்விட்டான்.

"உங்கள் அன்புக்கு ரொம்ப நன்றி ஸார், ரொம்ப நன்றி".

ரமணி ஐயர் அழுது விட்டார்!

"நான் மகா பாவி... மகா பாவி" மனத்தை அழுத்திப் பிடித்துக்கொண்டு வீட்டை நோக்கி நடந்தார்.

வீட்டருகே செல்லும்போது, சுந்தரலிங்கத்தின் குரல் கேட்டது.

"ஸார்...."

*குற்றவாளிபோல் அவர் எதிரே நின்றார் ரமணி ஐயர்.*

*"பயலை அடிச்சி வெரட்டிப்பிட்டேன்... காலிப்பயல்! இதெல்லாங்கிட்ட சேக்கப்படாது ஸார்..."*

*அவர் சொல்லி முடிக்கவில்லை; ரமணி ஐயர் வீட்டுக்குள் ஓடினார்.*

*ஜன்னல் கதவு திறந்தே இருந்தது. எதிர் வீட்டுக் கதவு மூடிக் கிடந்தது.*

*"ஜானகி..."*

*"உம்..."*

*"எதிர் வீட்டிலே முன் ரூமிலே இருந்தான் பாரு அந்தப் பையன்... அவன் காலி பண்ணிட்டான் போலிருக்கு... அது தான் ஜன்னல் சாத்திக் கெடக்கு."*

*"உங்களுக்கு என்ன தெரியும்? ஆபீஸ்தான் தெரியும்.. அங்கே பையனுமில்லே; குட்டியுமில்லே. எப்பவும் அந்த ஜன்னல் சாத்தித்தான் கெடக்கு."*

*"ஐயோ!.... இவளும் ஒரு குழந்தைதானா?....*

*சுவருக்கு நேரே திரும்பி இருந்த ஐயர், சட்டையைக் கழட்டும் போது கண்களில் கரித்து நின்ற கண்ணீரைச் சட்டைக் குள்ளேயே துடைத்துக் கொண்டார். அவர் காதுகளில் அந்த அனாதைக் குழந்தையின் குரல் ஒலித்தது.*

*"உங்கள் அன்புக்கு ரொம்ப நன்றி ஸார், ரொம்ப நன்றி."*

# பித்துக்குளி

நானும் எனது நண்பரும் பலவிதமான வாதப் பிரதிவாதங்களுக்குப் பிறகு அந்த முடிவுக்கு வந்தோம்.

நான் 'வேண்டாம்' என்னும் போது 'அதற்கென்ன முயன்று பார்ப்போமே, இதனால் நமது கௌரவம் என்ன கெட்டு விடப் போகிறது?" என்பார் நண்பர். நான் 'சரி' என்னும் போது, "சே.. இருந்தாலும் அது மோசம் தான்!" என்பார் நண்பர். இருவரும் சேர்ந்து போவதென்று தீர்மானித்து விட்ட பிறகு 'பார்த்தீரா! காலம் நம்மைப் போகக் கூடாத இடங்களுக்கெல்லாம் போக வைக்கிறதே" என்று இருவரும் சலிப்புடன் முனகிக் கொண்டு காலத்தைப் பற்றிப் பிரலாபிக்க ஆரம்பித்து விடுவோம்.

இப்படியாக, வாதி- பிரதிவாதியாகவும், எதிர் தரப்பு வக்கீல்- பப்ளிக் பிராசிக்யூடராகவும் மாறி மாறி விவாதித்துக் கடைசியில் 'போகத்தான் போவது' என்று முடிவு செய்து கொண்டோம்.

அந்த முடிவின்படி மறுநாள் காலை நானும் நண்பரும் புரொட்யூஸர் புருஷோத்தமராவைச் சந்திக்க கிளம்பினோம்.

புரொட்யூஸர் புருஷோத்தமராவுக்குத் தமிழ் எழுதப் படிக்கத் தெரியாவிட்டாலும் தமிழ் பேசத் தெரியும். அது மெட்ராஸ் தமிழோ, திருநெல்வேலித் தமிழோ அல்லாத ஆங்கிலம் கலந்த அலாதியான ஆந்திரத் தமிழ்.

புருஷோத்தமராவுக்கு தமிழ் தெரியாவிட்டால் என்ன? தமிழில் அவர் எடுத்த படங்களுக்கு அதிக வசூல் கிடைத்தது

உண்மை! படவுலகில் அவர்தான் சிறந்த படாதிபதி என்பதும் உண்மை.

புருஷோத்தமராவ் அடுத்து எடுக்கவிருக்கும் படத்துக்குக் கதை தேவையாம் ஆமாம், சினிமா உலகில் கதையைப் படம் எடுப்பது வழக்கமில்லை, படத்துக்குத் தான் கதை! அதாவது அவரிடம் இரண்டு நல்ல ஜாதி நாய்க்குட்டியோ, அல்லது 'நல்ல முகவெட்டு' டைப் இரு சகோதரிகளோ, அல்லது அவரது 'அபிமான'த்துக்கும் 'ஆதரவு'க்குமுரிய இரண்டு நட்சத்திரங்களோ இருப்பார்கள்- கைவசமுள்ள அந்தச் சரக்குகளுக்கேற்ப கதை, பாத்திர சிருஷ்டி இருக்க வேண்டும். மூன்று இடங்களில் அவர் வாக்களித்து விட்ட எக்ஸ்ட்ரா நடிகைகளின் அபிலாஷைகள் பூர்த்தியாகும் வண்ணம் "குரூப்டான்ஸ்' களுக்கு 'சான்ஸ்' இருக்க வேண்டும். இப்படிப்பல விதங்களில் செருப்புக்குத் தக்கவாறு காலைத் தறித்துக் கதை எழுத வேண்டுமென்று நண்பர் ஒருவர் என்னிடம் கூறினார். அந்த நண்பர் ஏற்கனவே சூடு கண்ட பூனை.

இன்னிக்குத் தேதியில் கதையுலகின் வாரிசு நான்தான் என்றோ, தமிழ் நாட்டின் தலை சிறந்த நாடக, வசன எழுத்தாளனே நான்தான் என்றோ எனது தலையில் நானே அட்சதையைப் போட்டுக் கொண்டு என் திவ்ய மலர்ப் பாதங்களைத் தொட்டு எனது திருநயனங்களில் நானே ஒற்றிக் கொள்ளாவிட்டாலும்- "நானும் கதையெழுதுவேன்; நன்றாகவே எழுதுவேன்; கதையாகவே எழுதுவேன்" என்று சொல்லிக் கொள்ளும் தைரியமும், தெம்பும் திராணியும்- அல்லது பெரியவர்கள் சொல்லும் 'மண்டைக் கனமும்' என்னிடம் எப்போதும் கொஞ்சம் உண்டு.

பிழைப்புக்காக எழுதாமல், வாழ்க்கையே அதுவாக இருக்கும் போது 'அது கூடவா இல்லாது போகும்? இருந்தது; நிறையவே இருந்தது.

நண்பர் நாவலொன்றை முடித்திருந்தார். நல்ல நாவல். என்னிடம் ஒரு கதை இருந்தது. நாங்கள் என்ன செய்வது, எங்களிடம் பத்திரிகைக்கூடக் கிடையாதே!

வெறும் பேனா; நமத்துப் போன அப்பளம் மாதிரி நியூஸ் பிரிண்ட் காகிதம்- இதில்தான் நாவல், நாடகம், கவிதை, கதை எல்லாம். எங்கள் இலக்கிய சாம்ராஜ்யமே இதில் அடக்கம்.

நாங்கள் வாடகை கொடுக்க முடியாமல் வீட்டுக்காரனுக்கு ஜவாப் சொல்லி வாழ்ந்து வரும் அந்த 6X8 அடிக் குச்சுக்குள் தான் எங்கள் கற்பனை சாம்ராஜ்யம் விரிந்து படர்ந்து வியாபித்து இப்படி ஏதாவது கனவு கண்டு கொண்டிருந்தால் போதுமா? வாழ வேண்டிய அவசியத்தை வயிறு அல்லவா வலியுறுத்துகிறது! சினிமா உலகம் 'வாரி வழங்கும் வள்ளல்' என்று கேள்விப்பட்டு அங்கே செல்வதென்று முடிவு செய்தோம். சபலம்தான் யாரை விட்டது?

புரொட்யூசர் புருஷோத்தமராவைச் சந்திக்க நாங்கள் சென்றபோது எங்களை 'முகம் மலர்ந்து' வரவேற்றவன் காவல்காரக் கூர்க்கா!

பாவம் அவனுக்குத் தமிழ் தெரியுமா, தமிழ் எழுத்தாளனை தெரிந்து கொண்டு உபசரித்துக் கௌரவிக்க? அவன் வெறும் 'நாய்' களைத்தானே கண்டிருக்கிறான்?

கூர்க்காவின் கெடுபிடியிலிருந்து ஒருவாறு சமாளித்துக் கொண்டு உள்ளே சென்றோம்.

"புரொட்யூஸர்' அவர்கள் மின்சார விசிறிக்குக் கீழே அட்டகாசமாக ஆரோகணித்திருந்தார். நண்பரும் நானும் உள்ளே சென்று 'டமில் ரைட்டர்ஸ்' என்று சுய அறிமுகம் செய்து கொண்டோம்.

"ஆல்ரைட் உட்காருங்க,' என்று மேல் நோக்கிச் செல்லும் புகைச் சுருள்களுடன் பேசிக் கொண்டார் புருஷோத்தமராவ்.

நண்பரும் நானும் உட்கார்ந்தோம். வந்த விஷயத்தைக் கூறினோம். அவர் 555 சிகரெட் புகைச்சுருள்களுடன் அளவளாவிக் கொண்டு எங்கள் பக்கம் ஒற்றைச் செவியை மடுத்தார்.

பிறகு...!

"ஸார், உங்கள் நாவலுக்கு 'ஸினாப்ஸிஸ், (கதைச் சுருக்கம்) ஒன்று எழுதிக் கொடுங்கள்" என்று கட்டளை பிறப்பித்தார்.

'தயாராக வைத்திருக்கிறோம்.. என்று நண்பர் தம் 'பைலை'ப்புரட்டி எடுத்தார்.

"சரி, அதைப் படியுங்கள், கேட்போம்... என்று தன் 'கிரேப் ஸோல் ஷூஸ்' அணிந்த பாதங்களைத் தூக்கி மேசையின் மீது வைத்துக் கொண்டார் எங்கள் முகங்களுக்கு நேராக அல்ல; சற்றுத் தள்ளித்தான்.

நண்பர் கொஞ்சம் உணர்ச்சி வசப்பட்டவர் அவர் முகத்தோற்றம் அவ்வளவு நன்றாக இல்லை. நண்பர் கதைச்சுருக்கத்தை வாசிக்கத் தொடங்கினார். தொடக்கமே நன்றாக இருந்தது. புரொட்யூஸருக்கு நிச்சயம் பிடித்து விடும் என்று நான் நினைத்துக் கொண்டேன்.

'கிணிங்.... கிணிங்... என்று மேசை மணியை அடித்தார் புரொட்யூஸர்.

நண்பர் படிப்பதை நிறுத்தினார்.

"நீங்க படியுங்கோ ஸார்.... என்று சொல்லி விட்டுத் தன் அருகே வந்து நின்று சல்யூட் அடித்த பையனிடம் "காப்பி" கொண்டு வரப் பணித்து விட்டு ஏதோ ஒரு ஆங்கில சஞ்சிகையின் அரை நிர்வாணப் படத்தை திருப்பித் திருப்பிப் பார்த்து என்னத்தையோ தேடிக் கொண்டிருந்தார்.

நண்பர் கதைச் சுருக்கத்தைப் படித்து முடித்தார். காப்பி வந்தது; மூன்று பேருக்கும்தான்.

நாங்கள் 'வேண்டாம்' என்றோம்.

அவர் மிகவும் பிரியத்துடன் உபசரித்து காப்பியைக் குடிக்கச் சொன்னார். காப்பி கசந்தது; எக்ஸ்ட்ரா ஸ்ட்ராங்.

"சார், ஒங்க கதை நல்லாத்தான் இருக்கு... ஆனா இந்த மாதிரி சென்டிமெண்ட் படத்துக்கு ஸூட்டாகாது- ஒங்க பாஷை சுகமாத்தான் இருக்கு... 'அப்கோர்ஸ்' படம் வேறே...

'பிலிம் லைனே' தனி சார்... ஐ வில் கிவ் யூ அனதர் சான்ஸ்" யூ பிளிஸ் கிவ் யுவர் அடரஸ் ஹியர்" (உங்களுக்கு அடுத்த முறை வாய்ப்பளிக்கிறேன். உங்கள் விலாசத்தைக் கொடுத்து விட்டுப் போங்கள்)

நண்பரின் விசுவாமித்திர சொரூபத்தைக் காண முடியாமல் '555' புகைமண்டலம் வியூகமிட்டது.

டெலிபோன் மணியடித்தது.

புரொட்யூஸர் கைக்கடிகாரத்தைப் பார்த்தார். 'எனக்கு டூ-டு- ஸெவன் ஷூட்டிங்' இருக்கு... அடுத்த முறை பார்ப்போம்" என்று தமக்கே உரிய பாணியில் கூறி விட்டு எழுந்தார்.

நாங்களும் எழுந்து வெளியே நடந்தோம். எங்களுக்கு முன் அவர் கார் எங்கள் கண்ணில் மண்ணை வாரி விட்டெறிந்தவாறு விரைந்து மறைந்தது.

எங்கள் ரூமை நாங்கள் அடையும் பொழுது மற்றொரு 'தலைவலி' அங்கே காத்திருந்தது.

சில்க் ஷர்ட், கையில் பைல் சகிதமாகக் காத்திருந்த அந்தத் 'தலைவலி' வீட்டுக்காரரர் அல்ல; எழுத்தாளர் பட்டியலில் இடம் தேட 'மடலேறும்' பித்துக்குளி ராமதாஸ்.

ராமதாஸுக்கு எழுதவும் தெரியாது. படிக்கவும் தெரியாது. அவருக்குத் 'தமில் எலுத்தாளராக' மாற வேண்டும் ஆர்வம் சொல்லில் அடங்காது. துப்பறியும் கதை நன்றாக எழுதுவேன் என்று எல்லோரிடமும் சொல்லிக் கொள்ளுவார். சில கத்தைக் காகிதங்களை எப்படியோ எழுதி நிரப்பி வைத்திருப்பார். அநேகமாக ஏதாவது பழைய புத்தகத்திலிருந்து எடுத்து எழுதிய திருட்டுச் சரக்குகளைப் படித்துக் காட்டி நமக்குத் தலைவலியை உண்டாக்குவதில் அவருக்கு அதிகத் திருப்தி. அவரை நாங்கள் என்ன செய்யமுடியும்? ஒரு சமயம் நண்பர் அவரிடம் "எழுதுவதை விட நீங்கள் படிப்பது நல்லது" என்று கூறிவிட்டது தான் தாமதம்.

"நான் எழுதுவதில் இந்த ஆளுக்குப் பொறாமை" என்று ஊர் பூராவும் சொல்ல ஆரம்பித்து விடடார். அதிலிருந்து அவரை 'பித்துக்குளி' என்று எங்களுக்குள் அழைத்துக் கொண்டோம். பொழுது போக்குக்கும் அவர் தேவையாக இருந்தார் வீண் பொல்லாப்பு எதற்கு என்று அவர் கோமாளித்தனத்தை ரசிக்க ஆரம்பித்தோம். அதன் பிறகு எங்களுக்கு இடையறாத தலைவலிதான்.

"சார்! அந்த நாவலை எழுதி முடித்து விட்டேன். முந்தி வந்துதே சினிமா, பதிபக்தி.... அந்த மாதிரியே எழுதியிருக்கேன் சார்.. படிக்கறேன். கேக்கறிங்களா? கொஞ்சம் இலக்கணப்பிழை இருக்கும். திருத்தணும்.." என்று ஆரம்பித்து விட்டார் ராமதாஸ்.

"எழுத்துப் பிழை இருந்தா என்னங்க? கருத்து இருந்தா சரி" என்று கிண்டி விட்டார் நண்பர்.

"நல்லா சொன்னீங்க ஸார்... அத்தனையும் கருத்துத்தான்... அந்தக் கடைசி சீனைப் படிக்கிறேன் கேளுங்களேன்.. அதாவது கணவன் கிட்டே பொன்சாதி கெஞ்சறா. இதை எழுதும் போது எனக்கே கண் கலங்கிப் போச்சுது சார்.. பாருங்களேன்...

"கைப்பிடித்த நாளிலிருந்து கண்ணீர் விட்ட வாழ்க்கை தானே..கணவனிடம் களிப்புக் கண்டேனா? இல்லை.. இல்லை. வாழ்வில் புளிப்புத்தானே கண்டேன்.... எத்தனை விதமான புளிப்புக்கள்..! வறுமைச் சுளிப்பில் வண்ணமணிக் குழந்தையை வாரிக் கொடுத்து வாளக்கிடந்த இந்த வனிதையைப் பார்... சமூகமே பார்!... சரிந்துப் போன ஏ சமூகமே! உளுத்துப் போன ஏ உலகமே! கட்டிய மனைவியை நட்டாற்றில் தள்ளும் கட்டளகனைப் பார்! தீர்ப்புக் கூறு....

ராமதாஸ் படித்துக் கொண்டே சென்றார்.

"சபாஷ்.... சபாஷ்... வெளுத்து வாங்கி விட்டீரே" என்று அடைக்கும் சிரிப்புடன் ராமதாஸின் முதுகில் தட்டிக் கொடுத்தார் நண்பர். ராமதாஸின் வதனத்தில் 'சிருஷ்டியின் மேதமை' எக்களித்தது.

"மிஸ்டர் ராமதாஸ்! புரொடயூஸர் புருஷோத்தமராவுக்கு நல்ல கதை வேணுமாம்... நீர் முயன்று பாருமேன்..." என்று கொம்பு சீவி விட்டேன் நான்.

"ஆமாம்.... நல்ல யோசனை, நாளைக்கே போங்கோ ஸார்" என்று நண்பர் வாலை முடிக்கி விட்டார்.

ராமதாஸுக்குத் தலை கிறங்கி ஆடியது! "நாளைக்குப் போகட்டுமா ஸார்" என்றார் வாயெல்லாம் பல்லாக.

"நிச்சயம் போங்கோ.. கதைச்சுருக்கம் ஒன்று எழுதி எடுத்துக் கொண்டு போயிப் படிச்சுக் காட்டுங்கோ.... அது புடிச்சுப் போச்சுன்னா, உடனே அட்வான்ஸ்... என்று மேலும் முடுக்கினார் நண்பர்.

ராமதாஸுக்கு ஏக குஷி தலையைப் பரபர வென்று சொறிந்து கொண்டு தன்னை மீறிய ஆனந்தத்தில் வாய் பிளந்து சிரித்தார். மறு நாள் சாயங்காலம் சந்திப்பதாகக் கூறி விட்டு நடையைக் கட்டினார்; அவர் போன பிறகு நாங்கள் வயிறு வெடிக்கச் சிரித்தோம்.

"மோதிரக் கையால் குட்டுப் படட்டும்... அப்போதான் பித்துக்குளிக்குப் புத்தி வரும்" என்று நண்பர் கூறினார்.

"என்ன சார், ராத்திரி சோற்றுக்கு ஏதாவது வழி உண்டா?" என்று கேட்டுக் கொண்டே பாயை விரித்துப் படுத்தார் நண்பர்.

அதற்கு நான் என்ன பதில் சொல்லுவேன் என்று அவருக்குத் தெரியும்.

"இன்னிக்குக் காலையிலே வீட்டுக்காரர் வந்தார். 'அமுதவல்லி' பத்திரிகையிலிருந்து வந்த சன்மானம் அவர் கைக்குப் போய் விட்டது" என்று கூறி என் 'கையறு நிலை' யைத் தெரிவித்துக் கொண்டேன்.

"அமுதவில்லி! நீங்கள் சொன்னபிறகு தான் எனக்கு நினைவு வருகிறது.. அதில் வந்துள்ள 'மலை' என்ற கவிதை தன்னுடையது என்று கூறிக்கொண்டதே, நமது பித்துக்குளி. உண்மையில் அதை

எழுதியது வேறொருவராம். அமுதவல்லி ஆசிரியரே என்னிடம் சொன்னார்."

"அட திருட்டு ராஸ்கல்"

"வரட்டும் கழுதை"

"இவன்களை என்ன ஸார் பண்றது?"

"வந்தது வரட்டும்னு செருப்பைக் கழற்றி அடிக்கணும்."

நண்பரின் ஆத்திரத்தை எதிரொலிப்பது போல் எங்கள் ரூம் வாயிலருகே ஒரு டாக்ஸி உருமிக் கொண்டு நின்றது.

"நம்ம ரூமுக்கு யாரோ டாக்ஸியில் வருகிறார்களே" என்று தலையை நிமிர்த்திப் பார்த்தேன். ஸ்ரீமான் பித்துக்குளி அவர்கள் டாக்ஸி டிரைவருக்குப் பணம் கொடுத்து விட்டு ஆர்ப்பாட்டமாக உள்ளே நுழைந்தார்.

"ஸார்... புரொட்யூஸர் புருஷோத்தமராவுக்கு நம்ம கதை புடிச்சுப் போச்சு... அடுத்த மாதம் ஷூட்டிங் ஆரம்பிச்சுடுவார். அட்வான்ஸ் வாங்கிட்டேன். என்ன பிரமிச்சு நிக்கிறீங்க? வாங்க சார்... காப்பி சாப்பிட்டு வரலாம்..." என்று ஏக தடபுடல் செய்தார் பித்துக்குளி.

"இல்லை, இப்பத்தான் சாப்பிட்டோம்" என்று ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு பதில் சொன்னார் நண்பர்.

"வாங்கோ சார்... கூப்பிடறேன், ஒரேயடியா பிகு பண்றீங்களே...?" என்று கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு வெளியே நடந்தார் ராமதாஸ்.

நாங்கள் என்ன செய்வது? பித்துக்குளிகள் மாதிரி அந்த 'வசனகர்த்தா' வின் பின்னே நடந்து சென்றோம்; காப்பி சாப்பிடத்தான்.

ராமதாஸ் சிரிக்கிறார். அவருடைய பர்ஸில் பணம் சிரிக்கிறது. நாங்கள் அழவில்லை. அவனா பித்துக்குளி? சீச்சீ; சத்தியமாக அவன் இல்லே! நாங்கள்தான்– இந்தப் பித்துக்குளி உலகத்தைப் புரிந்து கொள்ளாத நாங்கள்தான் பித்துக்குளிகள்.

# பிம்பம்

"மது!"

அந்தக் குரலின் அழைப்பில் என்ன கனிவு, என்ன காதல்! அழைப்பது அவர்தான்.

பத்து வருஷங்களுக்கு முன் பௌருஷத்தின் சொரூபமாய் என் முன் தோன்றி வெறும் புன்னகையால் என்னைக் கன்னியழித்துப் பின் மாலையிட்டு ஆறு மாதங்கள் ஊன் பொதிந்த உடலின் அதிர்ச்சியிலும் உருவ மற்ற உள்ளத்தின் சிலிர்ப்பிலும் எனக்கும் அவருக்கும் விளைந்த உறவின் நித்யத்வத்தை என் ஹிருதயத்தில் முத்திரையிட்டு விட்டுப் பின்னொரு நாள் பத்து நாள் கொள்ளையில் உடல் செயலற்று உள்ளம் சீரழிந்து படுக்கையில் கிடந்த போது உள்ளம் நலுங்காமல் உணர்ச்சியைத் தேனாய்த் தேக்கிய ஆண்மையின் நாதக் கரகரப்புடன் அவர் என்னை அழைத்த அந்தக் குரல்.....

"மது.... என்று ஒலித்த அவர் குரலில் கலக்கம் இல்லை. ஒலிக்காத என் குரலில், நெஞ்சுக் குழியில் சுழித்து அழிந்து போன அந்த விம்மலில் எதிர் காலத்தில் இன்று வரை நான் அனுபவிக்கும் தனிமைத் துயரின் தவிப்பும், இனி இறுதிக்காலம் வரை படவிருக்கும் அவஸ்தைகளும் அவருக்குப் புரிந்து விட்டனவா?

கட்டிலின் மீது பஞ்சு மெத்தையில் உடல் தளர்ந்து புதைந்து கிடக்க, கழுத்துவரை வெண்ணிறப் போர்வை மறைந்திருக்க - ஐயோ ஒரு வாரத்துக்குள் அவர் எப்படி உருவழிந்து போனார்! படுக்கைக்குத் தலை முளைத்திருப்பது போல் இருந்த அந்தக்

கோலத்தைக் கண்டு பொருமி, கண்ணீர் பெருக்கியவாறு உட்கார்ந்திருந்த என்னை அவர் அன்போடு அழைத்து, வற்றி உலர்ந்து, குச்சுக் குச்சாய் நீண்டிருந்த விரல்களால் என் கன்னத்தை வருடியவாறு சொன்னார்; " மது...! நான் செத்துப் போனால், நீ வேற... வேற கல்யாணம்... பண்ணிக்கொள், வாழ்வை வீணாக்கி விடாதே."

நான் குமுறி அழுதேன்.

அவர் மறுபடியும் அமைதியாகக் கண்களை மூடிக் கொண்டு உலர்ந்த உதடுகள் ஒட்டி ஒட்டிப் பிரிய, கரகரத்த குரலில் மிகவும் சிரமத்துக்கிடையே பேசினார்;

"அழாதே, மது... அழறதனாலே சாவு திரும்பிப் போயிடாது. இன்னும் ஒரு மணி நேரத்துக்கு அப்புறமோ, இன்னக்கி ராத்திரியோ, இல்லாட்டி நாளைக்குக் காத்தாலையோ நான் செத்துப் போறது நிச்சயம். நேத்து ராத்திரியே பயங்கரமா விக்கல் வந்து படுத்திச்சே ஒரு மணி நேரம், டாக்டர் ஒரு ஊசி போட்டு விக்கலை நிறுத்தினாரே, அதுக்கப்புறம் நான் உயிரோடு இருந்தாலும் கொஞ்சம் கொஞ்சமாகச் செத்துக்கிட்டே இருக்கேன்னு நல்லாத் தெரியுது. அழாதே மது... சாவை செத்துப் போகிறதை நினைச்சு நான் எத்தனை தடவை பயந்திருக்கிறேன் உனக்குத் தெரியுமே... நீ தூங்கிக் கொண்டிருக்கிற போது திடீர்னு உன்னை எழுப்பறப்போ, நீ திடுக்கின்னு எழுந்து 'என்ன என்ன?' ன்னு கேக்கிறப்போ முகமெல்லாம் வேர்க்கும்... பயந்து போய்க் குழந்தை மாதிரி உன்னை இறுகக் கட்டிக்கிட்டு. 'நான் செத்துப்போற மாதிரி கனவு கண்டேன்'னு சொல்றப்போ, என்னென்னவோ பேசிச் சிரிச்சி விளையாடி என்னை வதைக்கும் அந்த உணர்ச்சியைப் போக்கிப் போக்கித் தூங்கவைப்பியே. உண்மையிலேயே மது... சாவு அப்படி ஒண்ணும் இப்போ பயமா இல்லே. அது சுகமாகவே இருக்கு. உடம்பு லேசாப் பஞ்சு மாதிரி தோணுது... ஒவ்வொரு அங்குலமா பூமிக்கும் எனக்கும் இருக்கிற உறவு 'பட்பட்'னு விட்டு விலகிக்கிட்டே இருக்கு... அழாதே, மது.... நான் செத்துப் போனப்புறம் நீ அழலாம், இப்போ நீ என்னோட

பேசு... ஆறு மாசம் நீ என்னோட வாழ்ந்திருக்கே.. என்னோட உன் வாழ்க்கையே அஸ்தமிக்க வேண்டாம். எனக்குப் பிறகு நீ வேற...

நான் குமுறி அழுதபோது அவர் வார்த்தைகள் என் காதில் விழவில்லையோ? அல்லது அவரே அதற்கு மேல் சொல்லாமல் நிறுத்திக் கொண்டு விட்டாரோ....?

சற்று நேரத்துக்குப்பின் நான் அழுது ஓய்ந்து அழுகையின் தொடர்ச்சியாய் விட்டு விட்டு விம்மிக் கொண்டிருக்கையில் அவர் மீண்டும் என்னை அழைத்தார்.

"மது- இதோ கால் பக்கமிருக்கே அந்தத் தலையணையை எடுத்துக் கழுத்துக்குக் கீழே வெச்சிக் கொஞ்சம் நிமிர்த்தின மாதிரி என்னை சாத்தி வையேன்"

உடம்பு வெறும் எலும்புக் கனமாயிருந்தது. அவரைத் தூக்கிக் கட்டிலின் தலைப்பாகத்தில் தலையணையை நிறுத்தி அவர் சொன்னது போல் உட்கார வைப்பதற்குள் எவ்வளவு சிரமம்! அவருக்குச் சிரமம் தெரியவில்லையோ? கழுத்தைத் திருப்பிக் கொண்டு எக்கச்சக்கமாய் முகவாய்க்கட்டை நெஞ்சுக்குழியில் புதைந்து.. நான் பதறிப் போய் அவர் முகத்தை நிமிர்த்துகையில் அவஸ்தையோ, அவசரமோ இல்லாத ஒரு புன்னகையே அவர் முகத்தில் தவழக் கண்டேன்!

வரண்டிருந்த அவர் முகத்தில் வளர்ந்திருந்த ரோமங்களில் நான் முகத்தைப் புதைத்துக் கொண்ட போது உலர்ந்து தோலுரிந்த உதடுகள் என் கன்னத்தை ஸ்பரிசிக்க, அவர் குரல் என் செவி அருகே கரகரத்தது: "மது.. உணர்ச்சிகள் பொய்யென்று நான் சொல்லலலே; ஆனா உண்மையை அது மறைக்கிற அளவு பெருகிடக் கூடாது. செத்துப் போகிறவன் கிட்டே பேசாமல் அவன் சாவை நினைச்சு அழறது அசட்டுத் தனமில்லையா? சொல்லு மது...

"நீங்கள் என்னென்னமோ சொல்றதைக் கேட்டா எனக்குப் பயமாயிருக்கு.. நீங்க நல்லபடி பிழைச்சு எழுந்திடுவீங்க. என்னை

வருத்தப்படுத்தும்படியா ஒண்ணும் சொல்ல வேண்டாம்” என்று நான் விம்மினேன்.

“சரி, மது.. எனக்கு மட்டும் இல்லையா அந்த ஆசை? இனிமே அந்த ஆசைக்கு அர்த்தமில்லை. நான் பிழைச்சி எழுந்தால் சரி; இல்லைன்னா நான் செத்துப் போனப்புறம் நீ என்ன பண்ணுவே?...

எனக்குக் கொஞ்சம் கோபம்கூட வந்தது.

“என்ன பண்ணுவேன்? என் அம்மாவும் பாட்டியும், இன்னும் ஒவ்வொரு ஹிந்து ஸ்திரீயும் என்ன செய்தாளோ அதையேதான் நானும் செய்வேன். இது என்ன துக்கிரிப்பேச்சு..” என்று சொல்லி அவரிடமிருந்து சற்று விலகி அவர் முகத்தைக் கோபமாகவே வெறித்து நோக்கினேன்.

அப்போது அவர் கண்கள் மூடியிருந்தன. நெற்றியில் இரண்டொரு சுருக்கங்கள் நெளிந்தன. பிறகு இலேசான குறட்டை ஒலியுடன் அவர் கழுத்துச் சற்று ஒருக்களித்த போது, “அப்படியே படுத்துக் கொள்ளுங்கள்’ என்று சொல்ல நினைத்து, அவர் மீது கை வைத்த போது, உசுப்பி விட்டது போல் அவர் விழித்துக் கொண்டு, “மது”-

“மனசைக் குழப்பிக்காமல் படுங்க...

“மருந்து சாப்பிட இன்னும் ஒரு மணி நேரம் இருக்கு. அதுவரையில் நீங்கள் கொஞ்சம் தூங்கினால் நல்லது.....”

“இல்லை மது... நான் தூங்கக் கூடாது. இப்பக்கூடத் தூக்கம் வருதுன்னு தெரிஞ்சுதான் முழிச்சேன்....சாவும் அப்படித்தான் வரும். நான் உன்னோடு பேசிக்கிட்டே.. இல்லை மது.. அதை நான் சொல்லலை” என்று என் முகமாறுதலைக் கண்டு தம் பார்வையை வேறு பக்கம் திருப்பிக் கொண்டார். பார்வை மாறியது போல் பேச்சும் மாறிற்று.

“உன் அம்மாவும் பாட்டியும் ஒவ்வொரு ஹிந்துப் பெண்ணும் உன்னைப்போலவா தங்கள் இஷ்டப்படி கலியாணம் செய்து கொண்டாங்க? ஒரு கிறிஸ்தவனையா மணந்து கொண்டாங்க?

யாருமில்லாமல் தனியா எங்கோ ஒரு ஸ்கூல்லே டீச்சரா இருந்த உன்னை ஒரு ஹிந்துப் பெண்ணுன்னு தெரிஞ்சோ அல்லது அதையே காரணமாகக் கொண்டோ நான் காதலிச்சேனா? ஹிந்து மதத்தினர் சொல்றது போலவோ எங்கள் மத வழக்கப்படியோ நாம் கலியாணம் செய்து கொள்ள வில்லையே! யோசித்துப் பார், மது. எனக்கும் பெற்றோர்கள் இல்லாததால் நான் ஒரு கிறிஸ்தவனாகப் பிறந்திருந்தும் நீ ஒரு ஹிந்துப்பெண்ணாக இருந்தும் சட்டத்தின் முன்னே கல்யாணம் செய்து கொண்டோம். அந்தச் சட்டம் உன்னை எனக்கப்புறம் ஒரு கல்யாணத்துக்கு அனுமதிக்கும், என் மதமும் அனுமதிக்கும்...

அவர் மட்டும்தான் பேசிக் கொண்டிருக்க வேண்டுமா? நானும் பேசினேன். அவர் விருப்பம் அது தானே?

"எந்தச் சட்டப்படி எந்த மதத்தினனை நான் கலியாணம் செய்து கொண்டாலும் நான் உங்களை விரும்ப, காதலிக்க எந்தச் சட்டத்தின் உத்தரவையும் எந்த மதத்தின் அனுமதி யையும் எதிர்பார்த்தில்லை. நான் ஒரு பெண்! என்னை இதற்கு நீங்கள் வற்புறுத்துவது அழகில்லை!" என்று பேசினேன்...

அவர் என் முகத்தைக் கூர்ந்து பார்த்தார். அவர் கண்களின் இமை ஓரத்தில் பாதரஸம்போல் கண்ணீர் பளபளத்து முகத்தில் ஒட்டாமல் உதிரும்போது உதடுகள் சோகத்தாலோ உணர்ச்சி மிகுதியினாலோ நெளிந்தன. நான் அவர் கைகளைப் பிடித்து முகத்தில் வைத்துக் கொண்டு அழுதேன்.

''நாம் என்னவெல்லாம் பேசுகிறோம்.. இப்படிப் பேசலாமா?....." என்று அழுகையினூடே நான் கெஞ்சினேன். அவர் விரல்கள் என் கன்னத்தை வருடின.

"மது, என்னை மன்னிச்சுக்கோ... என்று சொல்லி விட்டு அவர் கண்களை மூடி மௌனமானார். பிறகு சில நிமிஷங்கள் கழித்து நெஞ்சில் கலகலக்கும் ஓர் இலேசான சிரிப்புடன் கண்களைத் திறந்து என்னைப்பார்த்தார்; "மது... மனுசன் ரொம்பச் சுயநலக்காரன். எந்த மதத்தைச் சேர்ந்திருந்தாலும்,

என்ன என்ன சட்டத்தை உண்டாக்கியிருந்தாலும் ஒரு ஆண் ஒரு பெண் என்ற உறவில் ரொம்ப அசிங்கமான சுயநலக்காரன் மனுசன். தனக்குப் பின்னும்- தன்னை அவன் இழந்த பின்னும் தனதை இழக்க மனசில்லாமல்- இல்லாத 'தனக்கு' இருக்கின்ற 'தனதாக' அது இருக்க வேண்டும் என்று பேராசைப்படும் சுயநலக்காரன்- அதுதான் வைதவ்யம்! இப்படித்தான் மது நான் நினைச்சிருந்தேன்; நினைச்சிருக்கேன்... அதனாலே தான்.. உன்னை இவ்வளவு தூரம் வற்புறுத்தினேன். நீ இவ்வளவு நிச்சயமா, தீர்க்கமா, சாகக் கிடக்கும் என்னிடம் கோபப்படும அளவுக்கு உறுதியாக நான் இல்லாமல் போனப் புறம், இல்லாத எனதாக இருப்பேன்னு சொல்றப்போ அதைக் கேக்கறப்போ ஒரு சந்தோஷம், ஒரு ஆத்ம நிறைவு ஏன் ஏற்படுதுன்னே புரியலை மது! மது!.... நானும் சுயநலக்காரன் தானா? அந்தக்கேவலமான, அல்பமான, அர்த்தமில்லாத சுயநலத்துக்கு நானும் ஆளாகி விட்டேனா?

"இல்லை... என் மனைவி எனக்கே, என்னுடையவளாகவே இருக்கணும் என்று ஒருத்தர் நினைக்கிறது சுயநலமில்லே. அப்படிப் பார்த்தா, எனக்கு ஒரு மனைவி வேணும்னு கலியாணம் பண்ணி ஒருத்தியைத் தனக்கே தனக்குன்னு ஆக்கிக்கிறது கூடத்தான் சுயநலம்.."

அவர் கண்கள் கூரை முகட்டை வெறித்தவாறிருக்க கண்ணீர் பெருகி வழிந்து கொண்டே இருந்தது.

"நீங்க வீணா எதுக்கு வருத்தப்படுறீங்க?" என்று அவர் முகத்தைத் துடைத்தேன்.

மது...சாவு இப்பத்தான் ரொம்பப் பயங்கரமா இருக்கு. மது, என்னை நம்பியே என்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு வாழ்க்கை முழுதும் ஆனந்தமாகக் கழிச்சுடலாம்னு எவ்வளவு கற்பனைக் கனவுகளோடு எனக்கு நீ மாலையிட்டிருப்பே? அதையெல்லாம் பொய்யாக்கிட்டு மறுபடியும் உன்னை அனாதையாக விதவையாக்கிட்டு நான் போயிடப் போறேனே மது...

"நீங்க நிச்சயம் நல்லாயிடுவீங்க.. இவ்வளவு தெளிவா எல்லாத்தைப் பத்தியும் பேசற நீங்க செத்துப் போவோம்னு நினைச்சு வருத்தப்படலாமா?"

"மது! 'நீ சாக மாட்டேன்னு' நம்பிக்கை தரும் சொல் சாவுக்கு மருந்தாகாது. நான் இவ்வளவு தெளிவாகப் பேசறதுக்குக் காரணமே நான் செத்துப் போவேங்கிறதைத் தீர்க்கமா தெரிஞ்சிக்கிட்டதனாலேதான். நீ உன் மத வழக்கப்படி விதவையாகி விடக்கூடாதுங்கிற நினைப்பிலேதான் இவ்வளவு பேசினேன் என்று சொல்லும்போது அவர் முகம் வேர்த்திருந்தது. நான் சேலைத் தலைப்பால் முகத்தைத் துடைக்கும் போது, சாதாரணமாகவே சற்று மேலெடுத்த அவரது கூரிய மூக்கு மரத்தாலானது போல கடினமாய்த் தட்டுப்பட்டது.

"என்ன, மூக்கு இப்படிக் கனத்திருக்கு? வலிக்கிறதா?" என்று அவர் நெற்றியிலிருந்து மூக்கின் நுனிவரை ஒரு விரலால் இலேசாக வருடினேன். எப்போதும் அப்படி வருடுவது எனக்குப் பிடிக்கும். எங்களுக்குள் அது ஒரு விளையாட்டு. அவருக்கு ரொம்ப அகலமான நெற்றி. ரொம்ப நீளமான கூரான மூக்கு!

"வலியா? என் மூக்கையும் நெற்றியையும் நீ தொடறேன்னு நினைக்கிறேன் யூகிக்கத்தான் முடியுது.. அப்பிடி மரத்துப்போச்சு!" அவர் குரலும் கம்மியிருந்தது.

நான் மறுபடியும் விலகி நின்று அவர் முகத்தைக் கவனித்தேன். சவக்களை என்பார்களே அது தெரிந்தது. என் நெஞ்சு வெடித்து விடுவதை என்னால் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாதது போல் தவித்தேன். அழுதால் அவர் மிகவும் வருந்துவார்.

நீங்கள் பிழைத்து விடுவீர்கள்' என்று சொல்ல இப்போது எனக்கு வாய் வரவில்லை.

'நீ உன் மத வழக்கப்படி விதவையாகி விடக் கூடாது' என்று சொன்ன அவர் வார்த்தைகள் மனசில் தோன்றின. சாகப் போகிறோம் என்று தெரிந்து இவ்வளவு வியவகார ஞானத்தோடு

பேசுபவரிடம் அழுவது தவறு என்ற நினைப்புடன் பதில் கூறினேன்.

“கட்டாய வைதவ்யம்தான் மத வழக்கம், அது கொடுமையும் கூட... இப்போது கட்டாய வைதவ்ய மறுப்பு என்பது சமூக வழக்கமாகி விட்டதும் கூட உண்மையில்பெண்களுக்கு ஒரு வரப்பிரசாதம் தான். இந்த நிலையில் ஒருத்தி. வாழ்ந்த வாழ்வின் இனிப்பான நிகழ்ச்சிகளை எண்ணி வாழ்வைக் கழிச்சுடலாம்னு முடிவு பண்ணி வைதவ்யத்தைத்தானே வலிய ஏத்துக்கறதிலே யாருக்கும் நஷ்டமில்லே. அதிலே வாழ்க்கை முழுவதும் யாருக்கும் கேட்காத ஒரு தூரத்து இசையை- ஒரு நிமிஷம் கூர்ந்து கேட்டால் ‘இசையே இல்லை இது உன் நினைப்பு’ என்று அறிவு உணர்த்தும் ஒரு பொய்யான- உணர்ச்சிக்கு இதமான ஒரு பிரமையில் பிரமைக்குட்பட்டிருக்கும் போது உலகமே ஒரு பிரமையாகத் தோன்ற வைக்கும் அந்தப் பிரமையில் லயித்து, அந்த இனிய மெல்லிய, அரூபமான இசைக்கு அடிமையாகி வாழ்வதில் ஒரு தனிப்பட்ட பெண்ணுக்கு ஆத்ம நிறைவும் வாழ்வின் நிம்மதியும் கிட்டும். அதனால் நீங்கள் இறந்தாலும் இறந்து விட்டீர்கள் என்ற நினைப்பைத் தவிர, என்னோடு வாழ்பவராவீர்கள்!”

நான் பேசப் பேச அவர் கேட்டுக் கொண்டே இருந்தார். அவர் முகத்தில், இவ்வளவு ஆழ்ந்த அன்பும் தனியான குணநலனும் கொண்டவளை மனைவியாகப் பெற்ற பெருமிதம் குடி கொண்டிருந்தது...

நான் கடிகாரத்தைப் பார்த்தேன். மருந்து கொடுக்க வேண்டிய நேரம் வந்து விட்டதை அறிந்து அவுன்ஸ் கிண்ணத்தில் மருந்துடன் வந்து அவரை எழுப்பிய போதும் அவர் தூங்கிக் கொண்டேயிருந்தார்...

அவரது வெற்றுடலை நான் வெறித்து நோக்கியவாறு நின்றிருந்தேன்...

“மது!”

யாருடைய செவிப்புலனுக்கும் எட்டாமல் எனக்கு மட்டும் கேட்கும் தூரத்து இசையாய், ஒரு நிமிஷம் கூர்ந்து கேட்டால் 'இசையே இல்லை- இது உன் நினைப்பு' என்று அறிவு உணர்த்தும் பொய்யாய், உணர்ச்சிக்கு இதமான அந்தப் பொய்யில் லயிக்கும் போது, உலகமே ஒரு பிரமையாய்த் தோன்ற வைக்கும் அந்த அரூபமான இசைக்கு அடிமையானேன்!

"மது.

அந்தக் குரலுக்கு உரியவர் ஒரு கிறிஸ்தவர்.

அந்தக் கிறிஸ்தவரின் அன்பு மனைவியாய் வாழ்ந்து அவருக்கு ஒரு ஹிந்து விதவையானதில் எனது வாழ்வு நிறைவுற்றது.

ஆண்டுகள்தான் பத்து ஆகிவிட்டனவே தவிர என் வயது இன்னும் முப்பதைக்கூடத் தாண்டவில்லை. இதோ என் படுக்கைக்கு நேரே நான் உறங்கப்போகும் முன்னும், உறங்கி விழித்த பின்னும் பார்க்கும் போதெல்லாம், உள்ளம் நலுங்காமல் உணர்ச்சியைத் தேனாய்த் தேக்கிய குரலில், ஆண்மையின் நாதக் கரகரப்புடன் 'மது!' என்று அழைக்கும் அவர் பிம்பம் - அந்தப் புகைப்படத்தில் இருக்கும் அவருக்கு இருபத்தியேழு வயதுதான் அவரை விடவும் மூத்தவளாகி விட்டேன் நான். இப்போது நான் அவருடைய விதவை. விதவையாகி விட்டவள் வயதால் மூத்த தமக்கையாகி, தாயாகி, பாட்டியானாலும் இளைஞனாய் இறந்துபோன ஒருவருக்கு மனைவியாகத்தான் இருக்க வேண்டும்.

ஆம்! தன்னிலும் இளையவனைக் காதலிக்கும் உரிமை விதவைக்கு உண்டு! கணவனோடு வாழ்கிறவள்தான் தன்னோடு வாழ்ந்து வரும் கிழவனையும்கூடக் கிழவியாகக் காதலிக்க வேண்டும். எனக்கு எவ்வளவு வயதானாலும் நான் காதலிக்கும் எனது அன்பருக்கு இருபத்தியேழு வயதுதான்.

அந்த இளமைக்காதலை, வாலிபக் குரலை ஒவ்வொரு நிமிஷமும் நாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறேன்.

படுக்கையிலிருந்து அன்று நான் கண் விழித்த போது அறையில் ஒரே இருள். அவர் பிம்பம் கண்களுக்குத் தெரிய வில்லை. பொழுது விடியவில்லையோ என்ற எண்ணம் எழும் போது கடிகாரத்தின் மணியோசையும், தெருவில் ஏற்பட்ட சந்தடியும் செவிக்கு எட்ட, இரவு மழை பெய்ததால் சன்னல் கதவுகளையெல்லாம் மூடி விட்டுத் தூங்கிய நினைவு வந்தது. நான் படுக்கையில் படுத்தவாறே ஜன்னலைத் திறந்த போது...

எதிர் வீட்டு மாடியில், பத்து வருஷங்களுக்கு முன் பௌருஷத்தின் சொரூபமாய் என் முன் தோன்றிய அவரது இன்னொரு பிம்பமாய்...

அகன்ற நெற்றியும், ரொம்ப நீளமான, கூரான மூக்கும் அவரைப் போலவே இருந்த அந்தப் பிம்பத்தைப் பார்த்துக் கொண்டே இரு என்று அந்தக் கண்கள் இடும் கட்டளையை என்னால் மீறிப் போக முடியவில்லை...

"மது" என்ற அந்தத் தூரத்து இசையில் என் நெஞ்சு குழைகிறது.

வெறும் புன்னகையால் என்னைக் கற்பழிப்பது போல், அதே சிரிப்பு...

அவரே தான்..

நானும் புன்முறுவலித்தேனோ?...

என் உடல் பயத்தாலோ, மகிழ்ச்சியாலோ, திகைப்பாலோ பதறியது...

வீட்டின் எந்த மூலையில் நான் நின்றாலும் ஏதோ ஒரு கோணத்தில் நின்று என் உடலெல்லாம் தேன் பொழிந்து சிலிர்க்க வைக்கும் அந்தக் கண்களின் தாக்குதலிலிருந்து என்னால் தப்ப முடியவில்லை. தப்புவதற்கு நான் விரும்பவும் இல்லை.

வீட்டுக்குள் ஊடுருவி என்னைப் பிடிக்கும் அந்தக் கண்கள் வீதியில் என்னை விட்டு விடுமா?

நான் பள்ளிக்கூடம் போகும் போது அந்தக்கண்கள் என்னைத் தொடர்ந்தன. வகுப்பில் பாடம் நடத்த இயலாமல் என்னை வருத்தியது எது?.....

இது என்ன தவிப்பு? இவ்வளவு நாட்கள் இல்லாத இன்பமும் துன்பமும் கலந்த, அல்லது இரண்டுமே அற்ற இந்த உணர்ச்சிகளுக்கு நான் எப்படி இரையாகிப்போனேன்?

எனக்கு இப்போது பயம் பிறந்து விட்டது.

நான் என்னவாகிக் கொண்டிருக்கிறேன் என்று எனக்குப் புரிய ஆரம்பித்தது.

வகுப்பு முடிந்து மணியடித்ததும் நேரே வீட்டுக்குப் போய், வீட்டின் எந்த மூலையில் நான் நின்றாலும் என்னைப் பற்றிப் பிடிக்கும் அந்தக் கண்களிலிருந்து தப்பித்துக் கொள்ளத்தான் வேண்டும் என்று என் உணர்வு மீறிய அறிவு உரைத்தது.

எங்கோ, எங்கோ போய்க் கொண்டிருந்தேன். அங்கே அந்த யாருமற்ற தனிமையில் பாறைகளும் செடிகொடிகளும் மண்டிக் கிடந்த, ஊருக்கு ஒதுக்கமாய் இருக்கும் அந்த இடத்தில் நின்று அருகில் தெரியும் கோயிலின் சிகரக் கும்பத்தை அர்த்தமற்று நான் வெறித்து நிற்கையில் என் அருகே யாரோ வந்து.. யாரோவா?....

"யார் நீ?"

அவன் இலேசாகச் சிரித்தான்.

'ஐயோ, அப்படிச் சிரிக்காதீர்கள்! வேண்டாம், வேண்டாம். நான் பார்க்க மாட்டேன்!" என்று மனம் அலறியது. நான் முகத்தை மூடிக் கொண்டேன்.

"என்னைத் தப்பா நெனைக்க வேண்டாம்... நான் உங்கள் வீட்டுக்கு எதிரில் இருந்து எப்பவும் உங்களைப் பார்த்து... பார்த்து... வெட்கத்தாலும் பயத்தாலும் அந்த இளைஞன் தவிப்பதைக் கண்டபோதும் எனக்கு அவர் நினைவு வந்தது.

"நான் செத்துப் போனா நீ உன் வாழ்வை வீணாக்கிடாதே" என்ற அவர் வார்த்தைகள் இவ்வளவு நாட்களுக்குப் பிறகு எனக்கு ஏன் நினைவு வர வேண்டும்?

"உங்கள் பெயர்?" அவன் என்னைப் புரிந்து கொண்டு விட்ட தைரியத்துடன் இனிமையாய்க் கேட்டான்.

"மதுரம்"

"மது.." என்று உள்ளம் நலுங்காமல் உணர்ச்சியைத் தேனாய்த் தேக்கிய குரலில் ஆண்மையின் நாதக் கரகரப்புடன் அவன் அழைத்தான்; "மது!"

அந்தத் தூரத்து இசை அருகே ஒலிக்கும்போது நாராசமாய் ஒலித்தது. நான் காதுகளைப் பொத்திக்கொண்டு விலகி ஓடினேன்.

"மது!" என்று மீண்டும் அவன் அழைத்த போது நான் நின்று திரும்பினேன். அவன் கண்கள் கலங்கி என் உள்ளத்தைக் கலக்கின.

"நான் விதவை!" என்றேன்.

"தெரியும்!" என்றான்.

"தெரிந்துமா?.... என்று ஏதோ நான் கேட்கையில்...

"தெரிந்துதான்" என்று சொல்ல முடியாமல் சொல்லி முடித்தான்.

நாங்கள் பேசவில்லை; ஆனால் புரிந்து கொண்டோம்.

இந்தத் தனிமையில் நான் இந்த இடத்தில் இருப்பதை எண்ணி அச்சமுற்றேன். அவனைப் பார்த்துக் கொண்டே நிற்கத்தான் மனம் விரும்பியது.

"தயவு செய்து மன்னித்து விடுங்கள்... நான் வருகிறேன்.. நாளைக் காலை வீட்டுக்கு வாருங்கள். தவறாக நினைக்கக் கூடாது!" அந்தத் திவ்ய முகத்தை பயமற்றுப் பார்க்க வேண்டும் என்ற ஆசையால் என்னை அறியாமல் கூப்பிட்டதற்காகத் தலை

குனிந்தவாறு திரும்பினேன். அப்போது அந்த இளைஞன் சொன்ன வார்த்தைகள் என்னைப் பிடரியில் அடித்துத் துரத்தின.

“மது... நாளை உங்கள் வீட்டுக்கு வருவதை ஒரு பாக்கியமாகக் கருதுவேன்... ஆனால், உங்களது அழகான நெற்றியில் குங்குமம் வைத்த கோலத்துடன் உங்கள் வாழ்க்கையின் விருந்தாளியை வரவேற்க வேண்டும்!”

அந்த வார்த்தைகளின் மூலம் அவன் அவரைப் போலவே எவ்வளவு உயர்ந்த பண்பும், ஞானமும், நயத்தக்க நாகரிகமும் கொண்டவன் என்பதை நான் புரிந்து கொண்டேன்.

ஆனால் அவன் என்னை எவ்விதம் புரிந்து கொண்டானோ?

உறங்கும் போதும் விழிக்கும் போதும், நான் தரிசிக்கும் அந்தத் தூரத்து இசையையே மெய்யாக்கி, உலகத்தையே ஒரு பிரமையாக்கி என்னுள் ஒலிக்கும்- அந்தத் திருவுருவத்தின் முன் கையில் குங்குமச்சிமிழுடன் நின்றிருக்கிறேன்.

“இது நீங்கள் எனக்குச் சிபாரிசு செய்ததும் நான் நிராகரித்ததுமான முடிவு” என்று- எனக்குத் தகுந்தபடி கொடுத்த வாக்கை மனசால் அழிக்க முயலுகிறேன்.

அன்று அவரது தீர்க்கமான யோசனையை நிராகரித்ததன் மூலம் என்னை ஒரு ஹிந்துப் பெண் என்று பிரகடனப்படுத்திக் கொண்டேனே.. இன்று?

நான் அன்று அவருக்குக் கூறியதெல்லாம் ஏமாற்றா? செத்து, தெய்வமாகக் கிடந்த அவர் முகத்தில் ஒளி வீசிய நம்பிக்கையும், பெருமிதமும்.. இறந்தவருக்குத் துரோகம் செய்கிறேனா?

“இல்லை. நான் பெண்! ஹிந்துப் பெண்!” என்று உறுதியாகத் தலையை உலுப்பிக் கொள்ளும் போது என் கையிலிருந்த குங்குமச் சிமிழ் கீழே விழுகிறது...

அப்பொழுது வாழ்க்கையின் விருந்தாளி வந்துவிட்டதைக் கதவை இடிக்கும் மெல்லிய ஓசையில் உணர்ந்த நான் போகிறேன், விருந்தாளியை வரவேற்கவா?.....

நான் கதவைத் திறந்ததும் புன்முறுவலோடு எதிரில் நிற்கும் அவன் முகம் வதங்கிப் போகிறது. அந்தப் புன்முறுவல் என்னை ஒன்றும் செய்யவில்லை இப்போது. அது வெறும் பிம்பம். உண்மையல்ல!

அவன் திரும்பிச் செல்கிறான்.

"உள்ளே வரலாம், விருந்தாளியாக அல்ல. ஒரு விஷயத்தைப் புரிந்து கொண்டால் இருவருக்கும் நல்லது.

அவன் மௌனமாய் உள்ளே வருகிறான்.

"இதைப் பாருங்கள்!" என்று நான் அவர் படத்தைக் காட்டும் போது அவன் கண்கள் திறக்கின்றன.

"என்னைப் போலே...."

"ஆமாம், உங்களைப் போலவேதான்: நீங்கள் அல்ல. தயவு செய்து என்னைத் தவறாக நினைக்க வேண்டாம். என் விதவைக் கோலத்துக்கு யாரும் பொறுப்பல்ல. நானே மனப்பூர்வமாய் விரும்பி ஏற்றுக் கொண்டது. நான் உங்களைப் பார்த்துச் சலனமுற்றது உண்மை; இதன் பிம்பமாய் நீங்கள் இருந்ததனால் தான். என் கணவருக்கு நான் துரோகம் நினைத்ததால் விளைந்தது அல்ல. அந்தச் சலனம். அவரை நான் இன்னும் அதிகமாக நேசிப்பதன் விளைவே இந்தச் சலனம்."

அவன் போய் விட்டான், பிம்பம் மறைந்தது. மூல புருஷனின் உருவம் என் நெஞ்சில் நிலைத்தது.

'மது!" மதுரமிக்க அந்தக்குரல் என் செவிப்புலன்களைக் கடந்து, என் இதயத்தில் ஒலிக்கிறது. நான் என்னை, உலகை, அந்தப் பிம்பத்தை- எதையும் மறக்காமல் என் நினைவு என்ற மெய்யில் லயிக்கிறேன்!

# ஆளுநகை

அவன் அவளுடைய படத்துக்கு நேரே படுக்கையை விரித்து, மல்லாந்து படுத்திருந்தான். படத்துக்கும் அவனுக்கும் நடுவே விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அமைதியான இரவில், ஓசையிட்டவாறு சுவரிலிருந்த கடிகாரத்தில் மணி அப்போது ஒன்றேகால்.. அவன் விழிகள் அந்தப் படத்தையே வெறித்துக் கொண்டிருக்க, அவன் உதடுகளில் புன்னகையும் அவளோடு பேசுகின்ற தனி மொழிகளும் மௌனமாக நெளிந்து கொண்டிருந்தன.

அவனுக்கு அவளே நினைவாகி, அந்தப் படமே அவளாகிப் பதினைந்து நாட்களாகின்றன.

அவளது இழப்பின் சோக நினைவுகளுடன் முன் நேரத்திலேயே உறங்கிப் போன அவனை, சற்று முன் அவள் வந்து அன்புடன் அவன் தோளை வருடிச் செவியருகே உஷ்ண மிக்க சுவாசத்துடன் குனிந்து, “என்ன இது, பச்சைக் குழந்தை மாதிரித் தூக்கம்?... ம்... கண்ணைத் தெறந்து எழுந்து உக்காந்து பாலைக் குடிங்க...?” என்று எழுப்பினாள்.

“ம்...ஹூம்... என்று சிணுங்கியவாறு புரண்டு புரண்டு படுக்கையின் மீது அவன் நெளிந்த போது அவள் கலகலவெனச் சிரித்து, அவன் பிடரியில் கையைக் கொடுத்து தன் மார்பில் அவனது முதுகைத் தூக்கி அமர்த்துகையில், வளையல்களின் ஒலி அவன் செவியில் ரீங்கரிக்கிறது. மல்லிகையின் போதை மணம் சற்றுக் கலைந்த உறக்கத்தையும் சமன் செய்து கண்களைக் கிறங்க வைக்கிறது.

-அவன் உதடுகளில் பால் தம்ளர் அழுந்துகிறது. அரை உறக்கத்தில் பாலின் சுவை உதடுகளில் ஊறி நாவில் படிந்து, வாய்க்குள் வழிந்து தொண்டையில் இறங்கியபோது அவன் ஒரு மடக்கு விழுங்கினான்...

"அப்பா.. போதும், போதும்.. எனக்குக் குழந்தையில்லாத கொறையே உங்களாலேதான் தீருது.. ம், ஒரு கொழந்தையும் வந்துட்டதோ, ரெண்டு பேரும் சேர்ந்து மனுஷி உயிரை வாங்கிடுவீங்க.." என்று அலுத்துக் கொண்டே, அவன் நெற்றியில் சரிந்த முடியை ஒதுக்கி அவனை உட்கார வைத்துப் பால் தம்ளரைக் கையில் கொடுத்து, "உம்.... தம்ளரைப் பிடிங்க- நான் போயி அடுக்களையைச் சுத்தம் பண்ணணும்" என்று அவசரப் படுத்துகிறாள்.

'நீ போயி... நீதான் போயிட்டியேடி பட்டு.. நீ செத்துப் போயிடல்லே? மறுபடியும் பொழச்சு வந்துட்டியா?' என்று கேட்கும் போது நெஞ்சில் பெருகிய இன்ப உணர்வு உடனே வடிந்து வரண்டது. 'அது எப்படி? உன் உடம்பைத்தான் கொளுத்தியாச்சே; நான்தான் பக்கத்திலே இருந்து பார்த்தேனே..." என்று தூரத்து நினைவோட்டம் மனவெளியில் கானல் போல் அலைகிறது.

அப்போது இரண்டு முறை மணியோசை கேட்கவே அவன் துயில் கலைந்தான்... அதாவது கண் திறந்தான். தூக்கத்திலிருந்து விழிக்கும் போது, படுக்கையில் தான் உட்கார்ந்திருப்பதைக் கண்டு திடுக்கென அச்ச முற்றான். விளக்கு எரிகிறது. கடிகாரம் ஓசையிடுகிறது. படுக்கைக்கு நேரே அவள் படம் அவனைப் பார்த்துச் சிரிக்கிறது. அது அவள் சிரிக்கும் போது எடுத்த படம்தான்...

...அதென்ன உதடுகள் அசைந்து மெள்ள மெள்ள புன்னகை விகசிக்கிறதே!'

-அவன் படுக்கையில் நிமிர்ந்து உட்கார்ந்தான்.

அறையின் ஒரு மூலையிலிருந்து லேசான 'களுக்கு'ச் சிரிப்புச் சிதறிய ஓசை கேட்டுத் திரும்பினான்.

அவன் முகமெல்லாம் வேர்த்திருந்தது. கடிகாரத்தைப் போல இருதயத்தின் தாளமும் செவியில் கேட்கிறது.

மீண்டும் படத்தைப் பார்க்கும் போது அவள் முக விலாசத்தில் உதடுகள் விரிந்து விழிகள் அசைந்து அந்தப் படம் சிரிப்பது எவ்வளவு பயங்கரமாக இருக்கிறது!

அந்த வீட்டின் தனிமையில் இந்த நிசியில் உறக்கம் கலைந்தபின் அவனை யாரோ வேட்டையாட வருவது போல், அவன் அஞ்சி, உடல் குறுகிப் படுக்கையில் எழுந்து உட்கார்ந்திருந்தான்...

"பட்டு! நீ எவ்வளவு அழகா சிரிக்கிறே தெரியுமா?" என்று அவன் எத்தனையோ முறை அவளிடம் கூறியதுண்டு. ஆனால் பட்டு இல்லாமல் அவள் படம் மட்டும் சிரிப்பதென்றால்?

அதோ...

உள்ளறையிலிருந்து மல்லிகைப் பூவின் மணம் எப்படிப் பெருகி வந்து நெஞ்சைக் கவ்வுகிறது!

'டக்... டக்...' கென்ற அவளது மெட்டியின் சப்தம்.

வளையல்கள் குலுங்கும் கிண்கிணியோசை...

பட்டுப் புடவையின் சரசரப்பு!...

இங்கே உட்கார்ந்து கொண்டு எத்தனை முறை உன் கூந்தலிலிருந்து வருகின்ற மணத்தையும் உனது மெட்டி யொலியையும், வளையல் குலுக்கையும், பட்டுப் புடவையின் மிருதுத் தன்மையையும் ரசித்திருக்கிறேன்...'

'நீ இல்லாமல்... நீ இல்லையென்று அறிவு நம்பிய பின். என் உணர்ச்சிகளை நீ இவ்விதம் ஆளுகை கொண்டிருப்பதன் வேதனை, பயங்கரம், பீதி, யாவும் எனது இரவையே நரகமாக்குகிறதே, பட்டு!'

அவள் தனது அறைக்குள் பீரோவைத் திறப்பது போலும் சாவிக்கொத்தைக் குலுக்குவது போலும் ஓசை கேட்கவே, அவன் செவிப் புலனைத் தீட்சண்யப்படுத்திக் கொண்டு உற்றுக் கேட்டான்.

ஆம்; அதோ, அந்தச் சப்தம் கேட்கிறதே!.

'இது பொய். அவள்தான் செத்துப் போய் விட்டாளே. இப்போது நீ மட்டும் தனியாய்த்தானே இந்த வீட்டில் இருக்கிறாய்?. வேறு யாருமே இல்லை... என்று பேசுகிறது அறிவு.

'ஆனால் அதோ கேட்கிறதே அந்தச் சப்தம்!... மெட்டியின் வளையலின், சாவிக் கொத்தின் ஓசை.. அதோ வருகிறதே மல்லிகையின் வாசனை' என்று தவிக்கிறது உணர்வு.

அந்தத் தனிமையுணர்வின் குரூரத்தைத் தாங்க முடியாமல் தேகாந்தமும் நடுநடுங்கப் படுக்கையில்கூட அவனால் படுத்திருக்க முடியவில்லை.

அந்தப் படுக்கையில், ஸ்பரிசம் இழைய இழைய எத்தனை இரவுகள் அவளுடன் கிடந்திருக்கிறான்.

அவன் முகமெல்லாம் வியர்வை துளித்து நெஞ்சை அடைக்கிறது.

படீரென்று அவளின் அறைக் கதவைப் பாய்ந்து திறக்கிறான். இருள்!

பிறகு வெளிச்சம்!

விளக்கின் வெளிச்சத்தில்...

அவளுடைய பீரோ!

கொடியில் அவள் உடுத்திக் களைந்த சேலைகளும் அணிந்து கழற்றிய ரவிக்கைகளும் கிடக்கின்றன.

அந்தப் பீரோவின் கதவில் அவள் கரத்தால் கடைசி முறையாகத் திறந்து மூடியபின் அப்படியே தொங்கிக் கொண்டிருக்கிறது சாவிக்கொத்து.

கொடியில் கிடந்த சேலைகளை ஒவ்வொன்றாய் உற்றுப் பார்க்கையில்; அவை ஒவ்வொன்றையும் ஒவ்வொரு சமயத்தில் உடுத்திக் கொண்டு வண்ண வண்ணக் கோலத்தில் அவன்

எதிரில் வந்து வந்து அவள் நின்றதெல்லாம் மனத்தில் தோன்றிப் பார்வையில் நிழலாடுகின்றன.

'நினைவாயும், நிழலாயும், கனவாயும், மருளாயும் போய் விட்ட அவள் இனிமேல் இல்லை' என்ற உணர்வுடன் இழந்து விட்ட தனது இனிய பாதியை எண்ணும் போது, தானே குறைபட்டு தலையற்ற கவந்தனைப் போல் தனித்துத் திரியும் கொடுமையை அந்த நிமிஷம் அவனால் தாங்க முடியவில்லை.

கொடியில் கிடந்த சேலையைக் கைகொள்ளாமல் சேர்த்து முகத்தோடு அணைத்துக் கொண்டான். அவனது தோள்கள் லேசாய்க் குலுங்கின...

திடுக்கிட்டவனாய், தன்னை யாரோ பின்னால் வந்து தழுவியது போலிருந்ததால், இமைகளில் படர்ந்த ஈரத்துடன் இருபுறமும் திரும்பித் திரும்பிப் பார்த்தான். ஒரு விநாடி அப்படியே நின்று எதையோ யோசித்தபின் கையிலிருந்த புடவைகளை மோப்பம் பிடிப்பதில் ஆர்வம் கொண்டு மீண்டும் முகத்தருகே அவற்றை ஏந்திக் கொண்டான்.

'அவள் இல்லை. அவள் நினைவு என்னை ஆள்வது போல், இந்தப் புடவைகளில் 'அவள் மணம்' குடிகொண்டிருக்கிறது!'

ஆமாம்; அவளுக்கு ஒரு மணம் உண்டு; அது அவனுக்கு மட்டுமே தெரியும்.

மணி மூன்றடித்தது.

தன்னை நினைக்க அவன் பயம் கொண்டான். தினந்தோறும் இந்தப் பதினைந்து நாட்களாக இரவெல்லாம் விழித்துக் கொண்டு, அவள் நினைவில் பித்தனைப்போல் உழன்று கொண்டிருக்கும் தனது பரிதாபத்தை எண்ணும் போது, தன்னிரக்கத்தால் தானே அழுதான்.

இப்போது அவனுக்குப் பின்னால் சற்று முன் அவன் படுத்திருந்த படுக்கையில் அவள் கிடந்து புரள்வதுபோல் சலசலப்பும், 'களுக்கு'ச் சிரிப்பு ஒலியும் கேட்டது.

அவனுக்கு மூச்சு முட்டுவது போல் அவள் நினைவே அந்த வீட்டினுள் கவிந்து அவனை அமுக்கிக் கொல்வது போல் உயிரே திணறியது.

அவன் அங்கிருந்து மெல்ல நகர்ந்து மூடியிருந்த அறையின் ஜன்னல் கதவுகளைத் திறந்தான். வெளியே இருளும் வானத்தில் நட்சத்திரங்களும், தனிமையில் வாடி வெம்பிப் போனது போல் ஒளியிழந்து மூளி நிலாவும் தூரத்தில் தெரிந்தன. சில்லென வீசிய விடியற்காலைக் காற்று அவன் முகத்தில் துளித்திருந்த உஷ்ணமான வியர்வைத்துளிகளைப் பனித் துளிகளாக்கியது. அவன் வெகுநேரம் அங்கேயே நின்று அந்த வானத்தையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

வீட்டிற்குள் மல்லிகை மணமும், வளையலின் ஓசையும், மெட்டியணிந்த பாதங்களின் டக்டக் ஓசையும், பட்டுப் புடவையின் சரசரப்பும், களுக்குச் சிரிப்பின் குலுக்கலும் ஏகமாய் அமர்க்களப்பட்டுக் கொண்டிருந்தது.

அசையவும் அஞ்சி உடலும் மனமும் நடுக்கம் கொண்டு நிற்கும் அவனுக்குத் திரும்பிப் பார்க்கவும் தைரியம் வரவில்லை.

வெள்ளி முளைத்த நேரத்தில் வீதிகளில் பால்காரர்கள் மாடுகளை ஓட்டிச் சென்று கொண்டிருந்தபோது, தூரத்தே சேவலின் கொக்கரிப்பைக் கேட்ட பிறகு அவன் முகமெங்கும் பயத்தால் பொங்கிப் பொங்கிப் பிரவகித்த வேர்வை சற்று அடக்கம் கண்டது. அவன் தயங்கித் தயங்கி நடந்து வந்து மீண்டும் தனது படுக்கையில் போய்ப் படுத்தான். ஜன்னல் வழியே சூரியனின் வெப்பமான கதிர்கள் முகத்தில் வீசும் வரை தூங்கிக் கொண்டிருந்தான்.

பகல் வந்த பிறகு அவன் தனது தனிமைச் சிறையினின்றும் விடுதலையாகி, வாழ்க்கைச் சந்தடியில் பொதுவியக்கம் கொண்டான்.

ஆனால் மீண்டும் இன்று இரவு வரும் என்ற நினைவிலேயே அவன் மனம் நடுங்கினான்.

"ஐயோ! இனிமேல் வாழ்க்கை முழுதும் எனக்கு இப்படித் தானோ? இரவெல்லாம் எனக்கு நரகந்தானோ? நான் பயந்து

பயந்து இரவு முழுவதும் தவிக்கிறேன் என்று நினைக்கவே பகலில் எனக்கு வெட்கமாயிருக்கிறது. என் பயத்தைக்கூட பகிர்ந்துகொள்ளத் துணையற்ற தனிமையில் எவ்வளவு காலம் ஏங்கிப் புழுங்குவது! இதைவிட, என் மீது அவள் இத்தகைய பயங்கரமிக்க ஆளுகை கொண்டு வதைப்பதைவிட, அவள் தன் வழியில், தான்போன பாதையில், தான் இருக்கும் சூன்யத்தில் என்னையும் அழைத்துக் கொண்டால் அந்த மரணத்தில் பூரணமான நிம்மதியாவது கிடைக்குமே?' என்று அவன் ஏங்கினான்.

## 2

சில நாட்களுக்குப் பின் ஒரு நாள் இரவில் தனது படுக்கையில் உட்கார்ந்திருந்தான்.

படுக்கைக்கு நேரே அவள் படம் இருக்கிறது. நடுவில் விளக்கு எரிகிறது. அவன் உட்கார்ந்து அந்தப் படத்தை ஆழ்ந்த சிந்தனையுடன் பார்த்தவாறு இருக்கிறான்.

அந்தப் படத்தில் அவளது விகஸிக்கும் புன்னகை மாயம் போன்றோ, மயக்கம் போன்றோ இப்போது தோன்றவில்லை. அவளுடைய அந்தப் புன்னகையே பார்க்கப் பார்க்க விகஸிக்கும் தன்மையது என்று அறிவும் உணர்வும் ஒன்றித் தெளிவுறுகின்றன இப்போது.

உள்ளறையிலிருந்து மெட்டியின் ஓசை கேட்கிறது; வளையொலி குலுங்கி உதிர்கிறது. மல்லிகையின் மணம் மிகுந்து வந்து நெஞ்சைத் தழுவுகிறது.

அவன் அச்சம் கொள்ளவில்லை.

ஏனெனில், இவையாவும் நினைவல்ல; நிஜமே!

—என்ன?. அவள் இறந்து ஒரு மாதமாகவில்லை! அதற்குள் இவளா? சீசீ! இவன் என்ன மனிதன்.'

ஊரும் சுற்றமும் இப்படிப் பேசுவதை அவனே கேட்டான்.

'பட்டு! உலகம் கிடக்கிறது, தள்ளு! இது என் பிரச்னை... என் சம்பந்தப்பட்ட உன் பிரச்னை... உணர்வுப் பிரச்னை... உலகப் பிரச்னையல்ல... பட்டு. அவர்கள் சொல்வதைக் கேட்க எனக்குச் சிரிப்புத்தான் வருகிறது... உன் மேலே எனக்கு ஆசையே இல்லையாம்; அதனால்தான் நீ எப்ப சாவேன்னு இருந்த மாதிரி ஒரு மாசத்துக்குள்ளே நான் இன்னொரு கல்யாணம் பண்ணிக்கிட்டேனாம். பட்டு, எனக்கு ஹிருதயமே இல்லையாம்... அவர்கள் சொல்கிறார்கள்.

'அடீ, பட்டு! அவர்கள் சொல்வதுபோல் எனக்கு உன் மேலே ஆசையில்லாமலிருந்தால். எனக்கு ஹிருதயமே இல்லாதிருந்தால். இந்தக் கல்யாணமே நடந்திருக்காது!

'என் உணர்ச்சிகளிலே, என் ஹிருதயத்திலே உன் ஆட்சி எவ்வளவு சக்திகொண்டு இருந்ததுங்கறது அந்த சிம்மாசனம் காலியாகிப் போனஅப்பறம் தெரியுது. ஓ! சில விஷயங்கள் ஆளப்படுவதற்காகவே இருக்கின்றன. அவற்றின் மீது ஆளுகை அற்றுப்போனால் அவை அர்த்தமில்லாமல் போயிடும். அது போலத்தான் நான் பத்து வருஷம் உனது ஆளுகைக்கு உட்பட்டு, அதில் சுகம் கண்டு பழகிப் போயிட்டேண்டி, பட்டு! திடீர்னு நீ என்னை அனாதரவாய் விட்டுட்டுப் போய்ட்டா, நான் துறவு கொண்டு விடணும்னு சம்பந்தமற்றவர்கள் எதிர்பார்க்கிறாங்க.

'எவன் ஆளுகிறானோ அவனுக்கே தனது ஆளுகையை உதறிவிட்டுத் துறவு பூணுவதும் சாத்தியம். ஆனால் ஆளப்பட்டவனுக்கு அந்தச் சக்தி ஏது?.

'பட்டு!... தாயின் அரவணைப்பும் அன்பும் எப்படி இருக்கும் என்கிறதை நான் அனுபவிச்சதில்லை. அனுபவிச்சிருந்தால் ஒரு மாற்றாந்தாய்க்குச் சிறு வயதில் நான் ஆசைப்பட்டிருப்பேன்...

மனைவி என்பவளை மிகவும் கொச்சையாக உலகம் புரிந்து கொள்கிறது... நான்கூட அப்படித்தான் நினைச்சிருந்தேன். உடலில் விளைந்த உறவு உடலோடே நின்று விட்டால் அது வெறும் விபச்சாரம்தான்... உடல் ஆத்மாவின் வீடு என்பார்கள் வேதாந்திகள்... உலகில் மிகப் பலர் தோலிலே சுவை கண்டு விட்டவர்கள். தோல் சுளைக்குத் காப்பு என்பதை

அறியாதவர்கள் என்றே தோன்றுகிறது. தாயிடம் பெற்று அறியாத அவற்றை எல்லாம் தாயாகித் தந்தாய் நீ. தாய் தரமுடியாத ஒன்றையும் தந்தாய் நீ. அந்தச் சுகமெல்லாம் வெறும் வெளி மயக்கா? ஏமாற்றா? கனவா? மருளா?

'இல்லை... இல்லை... அவை மெய்யுணர்வுகள்; சத்திய மான சுகங்கள். அதனால்தான் அறிவுக்கு நீ இல்லாமல் போனவளே எனினும், உணர்வுக்கு ஆயிரம் மடங்கு அதிக வேகத்துடன் உனது ஆளுகையின் முற்றுகை எனக்கு வேதனையும் தவிப்பும் அளிக்கிறது.

'தாயற்ற பிள்ளை, தாயின் அரவணைப்பையும் சுகத்தையும் அனுபவித்த மதலை. மாற்றுத் தாய்க்கு ஆசைப் பட்டால் அது குற்றமாகுமா?

'தன்னால் தவிக்கவிடப்பட்ட அந்தக் குழந்தையைத் தாயைப்போல் பரிவு காட்டி ஒருத்தி அணைத்துத் தேற்றுவது காண அந்தத் தாயின் ஆன்மா இந்த மாற்றுத் தாயை வாழ்த்தாதோ?.. போட்டிக்கு இங்கு இடம் உண்டா?. சொல்லுடி பட்டு.

'பட்டு! கதைகளில், சினிமாக்களில் கூறுவதுபோல நான் இறந்துவிட்டால் நீ வேறு கல்யாணம் செய்து கொள் அல்லது என்னைத் தவிர வேறு யாரையும் நினைக்க மாட்டேன் என்று சத்தியம் செய்துகொடு என்று நாம் பரஸ்பரம் வாக்குத்தத்தம் செய்து கொண்டோமில்லை. அப்படிப்பட்ட பைத்தியக் காரர்களாய் நாம் வாழவில்லை. அதுவுமில்லாமல், நீ இறந்த பிறகு நான் உன்னோடு உறங்கிய படுக்கையில் தனித்துக் கிடந்து, நிம்மதியாக உறங்க முடியுமெனில் உன்னோடு உறங்கிய இரவுகள் எல்லாம் அர்த்தமற்ற இரவுகள் என்றல்லவா ஆகிவிடும்? உன்னிடம் நான் கண்ட, நீ எனக்கு அருளிய சுகங்களை எல்லாம் நான் துறந்துவிட முடியுமென்றால் அவை அனைத்தும் அற்பத்தினும் அற்பமென்றல்லவோ ஆகி விடும்... உனது ஆளுகைக்கு ஓர் அர்த்தமில்லை என்றல்லவா ஆகிவிடும்! ஆனால் உண்மையில் உன்னோடு கழித்த இரவுகள் எல்லாம் சுவர்க்கத்தில் கழித்த விநாடிகள் என்றும், உன் மடியில் நான் அனுபவித்த, நீ எனக்கருளிய அந்தரங்க சுகமெல்லாம் சகல

போகங்களிலும் மகத்தானவை என்றும் நீ இல்லாத போதுதான். உன்னை நான் இழந்த பின்தான் முழுமையாக உணர்ந்தேன். நீ இல்லாமல் உனது நினைவுகளே அவ்விதம் உணர்த்த முடிந்தது என்றால் உனது ஆளுகையின் அர்த்தம்தான் எவ்வளவு மகத்தானது!

'சுகத்தையும் ஆனந்தத்தையும் தந்த உனது நினைவுகளால் நான் மனம் குலைந்தேன். அஞ்சினேன்... சித்தம் குலைவுற்றவன் போலும் பேய் பிடித்தவனைப் போலும் தொடர்ந்து பல இரவுகள் உறக்கமின்றி அலைக்கழிந்து கொண்டிருந்தேன்... இவைதானா உனக்கு நான் செலுத்தும் நன்றி?...

யாரை நினைத்து உடல் புல்லரிப்பேனோ அவளை நினைத்து மெய்விதிர்க்க ஆரம்பித்தது என்ன கொடுமை! எவளுடைய வருகை, எவளுடைய பிரசன்னம், எவளுடைய புன்னகை, எவளுடைய உடல் மணம் எனக்கு சுவர்க்கமோ, அவை எல்லாம் எனக்கு ஒரு பேய்க் கனவாகவும் அசுர வேட்டையாகவும் மாறுவது எனின், நான் என் ஆத்மாவுக்கே துரோகியாகிறேன் என்பதைத் தவிர வேறு என்ன பொருள், சொல்லுடி பட்டு?'

'இது உனக்குச் சம்மதமாகாது என்பதையும் நான் உணர்ந்தேன். .'

'நாம் இருவரும் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் ஆண்டு கொண்டு, ஆள்கிறோம் என்ற உணர்வே அற்று ஆளப் படுகிறோம் என்ற உணர்வு மட்டுமே கொண்டு வாழ்ந்தோம். உன் பிரச்னை உனக்குத்தான் தீர்ந்துவிட்டது. ஆனால் எனக்கு நீ பிரச்சனையானாய். அதுமட்டுமா? எனக்கு நானே ஒரு பிரச்னையானேன்.

'உன்னை, உன் மீது கொண்ட அன்பை, நீ அளித்த இன்பங்களை வழிபடவும், உனது ஆளுகையிலிருந்து விடுபட்டது ஒரு மகிழ்ச்சிகரமான விடுதலையல்ல என்பதனாலும் மீண்டும் நான் ஆளப்படவே தவியாய்த் தவித்தேன்.

'நான் இவளை மணந்து கொண்டேன். ஏன்? உன்னை நான் காதலிப்பதனால் மட்டுமேதான்! ஆம், என் உணர்வின் மீதுள்ள உனது ஆளுகை என்னை நிர்ப்பந்தித்தது; கட்டளை

யிட்டது. நான் பணிந்தேன். திடீரென சகலவற்றையும் வெறுத்துத் துறவு கொள்ள ஏற்றதான துன்பம் மிகுந்த இல்வாழ்க்கையை எனக்கு நீ அளிக்கவில்லை... எனக்கு ஹிருதயம் இருக்கிறதடி பட்டு..

'இவள் உனது பிரதிநிதி!. உனக்கு சமர்ப்பிக்கப் பட்டு விட்ட என்னை உனது பிரதிநிதி ஆளுகிறாள்.

'உலகம் கிடக்கிறது உலகம். இது ஒன்றில் இணையும் இரண்டு இனிய பாதிகளின் பிரச்னை!. யாருக்கும் சொந்த மற்ற உலகத்தின் பொதுப் பிரச்சினையல்ல!..'

அப்போது அவனருகே மல்லிகையின் போதைமணமும் பட்டுப் புடவையின் சரசரப்பும், மெட்டியின் மெல்லிய ஓசையும் வந்து சூழ்ந்தன.

அவன் கண்களை மூடி அமர்ந்திருந்தான்.

'களுக்'கெனக் குறுஞ் சிரிப்புத் தெறிந்து உதிர, "என்ன இது குழந்தை மாதிரி உக்காந்தபடி தூக்கம்?..." என்று, அடங்கிய குரலில் வினவியவாறு அவன் அருகே அமர்ந்து அன்புடன் அவன் தோளை வருடி, செவியருகே குனிந்து உஷ்ணமிக்க சுவாசத்துடன் "ம். பாலைக் குடிங்க..." என்று வேண்டினாள் அவள்.

அவன் மோனமாக உட்கார்ந்திருப்பது கண்டு, ஒரு புன்னகையுடன் கையிலிருந்த பால் தம்ளரை அவன் உதடுகளில் பொருத்தி, அவனது பிடரியில் வளையொலிக்கும் கரத்தைத் தாங்கிப் பாலைப் புகட்டினாள்.

பாலின் சுவை உதடுகளில் ஊறி நாவில் படிந்து, வாய்க்குள் வழிந்து தொண்டையில் இறங்கிய போது அவன் கண் திறந்து, எதிரிலிருந்த படம் தன்னை நோக்கித் தாய்போல் கனிவுடன் சிரிப்பதைப் பயமற்றுப் பார்த்தான்.

துணையிருந்தால் பயமேது?

# ஹீரோவுக்கு ஒரு ஹீரோயின்

கண்ணாடியின் முன்னே நின்று படிய வாரிய கிராப்பின் மேல் சீப்பின் பின்புறத்தை வைத்து அழுத்தி வளைவுகள் ஏற்படுத்தும் முயற்சியிலேயே கடந்த பதினைந்து நிமிஷமாய் முனைந்திருக்கிறான் சீதாராமன்.

ஹேர் ஆயில், ஸ்னோ, பவுடர், செண்ட் ஆகியவற்றின் கலவை மணம் ஒரு நெடியாய்க் கமழ்கிறது அந்த அறையில்.

கண்ணாடிக்குப் பக்கத்தில் அந்தச் சிறிய மேஜையின் மேல் அவனது அலங்கார சாதனங்கள் நிறைந்து கிடக்கின்றன. அவற்றின் நடுவே அவனது 'ஷேவிங் · ஸெட்' சுத்தம் செய்யப்படாமல் அப்படியே சோப்பு நுரையுடன் கிடக்கிறது. அலங்காரம் செய்து கொள்ள அரைமணி நேரத்துக்கு மேல் செலவழிக்கும் சீதாராமனுக்கு அந்த ஷேவிங் ஸெட்டைக் கழுவி வைக்க நேரமோ, பொறுமையோ இருப்பதில்லை. அதற்கு அவசியமும் இல்லை. அப்படிப்பட்ட, காரியங்களை யெல்லாம் செய்வதற்கே தவம் கிடந்து வந்தவள் போல் அதோ காத்து நிற்கிறாள் மதுரம்...

மதுரத்துக்குத் தன் கணவன் சீதாராமனைப் பற்றி உள்ளூற எத்தனையோ விதமான பெருமைகள்;...

காபி தம்ளருடன் காலை நேரத்தில் அவன் கட்டிலருகே நின்று எழுப்பும் போது... இவ்வளவு நேரம் தூங்கும் கணவனைப் பார்த்து ஒருவகைப் பெருமிதம்!

வேலைகளையெல்லாம் முடித்துவிட்டுக் குழாயடியில் நின்று, கொஞ்சமும் மடிப்புக் கலையாத அவனது சட்டைகளை மீண்டும் ஒருமுறை துவைக்கும் போது- அதனுள்ளிருந்து தண்ணீரில் நனைந்து அகப்படும் சிகரெட் பாக்கெட்டை எடுத்துப் பார்க்கும்போது- தன் எதிரே இல்லாத கணவனை எண்ணிச் சிரித்த முகத்தோடு கண்டிருக்கிறாளே- அப்போது ஒருவகைப் பூரிப்பு.

ஒவ்வொரு நாளும் ஆபீசுக்குப் புறப்படும்போது ஒரு கர்ச்சிப்பைக் கொடுத்து, முதல் நாள் கொடுத்த கர்ச்சிப் என்னவாயிற்று என்று கேட்கையில் அவன் அசடு வழிய சிரிக்கிறானே- அப்போது ஒரு மகிழ்ச்சி.

இரண்டு குழந்தைகளுக்குத் தகப்பனான தன் கணவனின் இது போன்ற பொறுப்பில்லாத செயல்களில் அலுப்போ சலிப்போ இல்லாமல் ஒவ்வொரு நாளும் பூரிப்பும் பெருமிதமும் கொண்டு தொடர்ந்து பணிவிடை புரிகிறாளே இதன் ரகசியம்தான் என்ன?

இரண்டு உள்ளங்களுக்குத் தெரிந்த எந்த விஷயமும் ஒரு ரகஸியம் ஆகாது. ஆகவே அது அவளுக்கு மட்டும்தான் தெரியும்! ஆம், அவனுக்குக் கூட தெரியுமா என்பது சந்தேகம் தான். அது பற்றிய ஞானமோ சிந்தனையோ இருந்தால், தன்னருகே நின்று பார்த்துப் பார்த்துப் பூரித்துப் போகும் அவளது உழைப்பையும் பணிவிடைகளையும் பெற்றுக் கொண்டு தன் போக்கில் போய்க்கொண்டிருக்க முடியுமா அவனால்?

ஆனால், அவனது போக்கை அலட்சியம் என்று கருதமாட்டாள் மதுரம். அவன் எப்பொழுதுமே அப்படித் தானாம். அவனது நடை, பேச்சு, பார்வை, தோரணை- எல்லாமே மிடுக்காக, கம்பீரமாக இருப்பதால் ஒரு அலட்சியம் போல் தோன்றுமாம்!... அவனைப் பற்றி அவளுக்கு ரொம்பத் தெரியுமாம்...

"சீதாராமன் மகா அதிர்ஷ்டசாலி" என்று அவன் ஆபீசில் வேலை செய்கிறவர்கள் கூறுவது, அவன் மனைவியைப் பற்றி இவ்வளவும் தெரிந்ததனால் அல்ல.

ஆபீசில் 'ஹீரோ சீதாராமன்' என்றுதான் எல்லோரும் அவனை அழைப்பார்கள்.

அவன் ஆபீஸ் ரிக்ரியேஷன் கிளப் நாடகங்களில் நடிப்பான்; ஹீரோவாகத்தான் நடிப்பான். அந்தத் தகுதி அவனைத் தவிர வேறு யாருக்கும் இல்லை என்று அவனும் நினைக்கிறான்; ஆபீசில் உள்ள மற்றவர்களும் சொல்கிறார்கள்.

'ஹீரோ சீதாராம'னுக்கு இருக்கும் அழகுக்கும் அதிர்ஷ்டத் திற்கும் அவனுக்கு நிச்சயமாக சினிமாவில் ஒரு சான்ஸ் அடிக்கத்தான் போகிறதாம்.

அந்த ஆபீசில், தான் ஒரு குமாஸ்தாவாக இருப்பதில் தன்னால் ஆபீசுக்கே ஒரு பெருமை என்ற தோரணையுடன் தான் அவன் தனது இருக்கையில் உட்கார்ந்திருப்பான். வேலை ஏதும் செய்யாமல் அவுட்டுச் சிரிப்பும் அட்டகாசப் பேச்சுமாய் அவன் அரட்டை அடித்துக் கொண்டிருப்பதை எல்லாருமே அனுமதிக்கிறார்கள். வேலை ஏதும் செய்யாமல் பேசிக் கொண்டிருக்கும் அவனிடம் முதுகு ஒடிய உட்கார்ந்து எழுதிக் கொண்டே பல்லிளித்துப் பேசிக் கொண்டிருப்பதில் மற்ற குமாஸ்தாக்களுக்கு ஒரு சுகம்!

அங்கே வேலை செய்யும் ஜூனியர் கிளார்க்குகள் கலியாணமாகாத தனிக் கட்டைகள் கூட- இரண்டு குழந்தைகளுக்குத் தகப்பனும் கிட்டத்தட்ட நாற்பது வயதானவனுமான சீதாராமனைப் போல் உடையணிந்து கொள்ளவும், சினிமா பார்க்கவும், செலவுகள் செய்யவும் முடியவில்லையே என்று பொருமுவதும் உண்டு.

அவர்களுக்குத் தெரியுமோ இவன் இப்படியெல்லாம் இருப்பதற்குக் காரணமே- இரண்டு குழந்தைகளுக்குத் தகப்பனாகவும், மதுரத்தைப் போன்ற ஒருத்திக்குக் கணவனாகவும் அவன் இருப்பதனால்தான் என்று ...?

அவர்கள் அதை உணரவேண்டிய அவசியமுமில்லை; உணராதிருந்தால் ஒரு பொருட்டுமில்லை. ஆனால் மதுரத்தைப் பொருத்தவரை அவன்கூட அவற்றை உணரவேண்டிய

அவசியமோ அவன் உணராதிருந்தால் ஒரு பொருட்டோ அல்லதான்; எனினும் அவனைப் பொருத்த வரை- அவனது ஆத்ம உயர்வுக்கு அவன் அதை உணர்ந்திருக்க வேண்டாமா?

'ஹீரோ சீதாராமனை'ப் பொருத்தவரை வாழ்க்கையும் உத்தியோகமும், குடும்பமும் மனைவியும்- எல்லாமே ரொம்ப அலட்சியமாகத்தான் இருக்கின்றன. அவனுக்கிருக்கும் லட்சியமெல்லாம் ஒன்றுதான்! சினிமாவில் கிடைக்கப் போகும் அந்த ஹீரோ சான்ஸ்!

அவன், ஆபீசில் சம்பளம் வாங்கிக்கொண்டு, அதில் தன்னை ஒரு நவயுக வாலிபனைப்போல் அலங்கரித்துக் கொண்டு திடீர் என்று ஒரு நாள் வரவிருக்கும் அந்த சினிமா சான்ஸுக்காகக் காத்திருப்பவனாகவே தன் இருக்கையில் அமர்ந்திருக்கிறான். ரொம்பப் பேர் வாழ்க்கையில் அப்படி வந்திருக்கிறதாமே!.

அவன் கண்களில் மற்ற எதைப்பற்றியுமே- சதா ஓர் அலட்சிய பாவமே மின்னிக் கொண்டிருக்கிறது.

அந்தக் கண்கள் ரொம்ப அழகாய் இருக்கின்றன என்று எண்ணி அவன் அழகிலும் புகழிலும் மயங்கிப் பெருமூச்செறிந்து கொண்டிருக்கும் டைபிஸ்ட் கமலா இந்த ஹீரோவுக்குப் பொருத்தமான, ஹீரோயினாக, சில மாதங்களுக்கு முன் நடந்த ரிக்ரியேஷன் கிளப் டிராமாவில் நடித்தாள்.

இதோ, இப்போது அறையில் கண்ணாடியின் முன்னால் நின்று அலங்காரம் செய்து கொள்ளும் இந்த ஹீரோவைப் பார்த்து மகிழ்ந்து நிற்பதுபோலத்தான், அன்றும் அந்த நாடகத்தில் அவளோடு அவனைப் பார்த்துப் புளகாங்கிதம் அடைந்தாள் மதுரம்.

கழுத்தில் கிடக்கும் மைனர் செயின் வெளித் தெரிய அணிந்த ஸில்க் ஜிப்பா, காலிலுள்ள அழகிய செருப்பை மறைத்துப் புரளும் வேட்டி இத்தியாதி அலங்காரங்களுடன் கண்ணாடி யின் அருகிலிருந்து சற்றுப் பின்னால் வந்து தன் முழுத் தோற்றத்தையும் பார்த்துக்கொண்ட போது— அறையின் ஒரு மூலையில், புகையும் வியர்வையும் படிந்த முகத்தையும், ஈரக்

கைகளையும் முந்தானையில் துடைத்தவாறு நின்றிருக்கும் மதுரத்தைக் கண்ணாடியினூடே பார்த்தான் சீதாராமன்.

அவன் தன்னைப் பார்ப்பதைக் கண்ட மதுரம் கண்ணாடியில் தெரியும் அவன் முகத்தை நோக்கிச் சிரித்தாள். சிரித்துக் கொண்டே அவனருகில் வந்த மதுரம் ஆதரவான குரலில் சொன்னாள்: "பாருங்க, நான் இந்த மாசத்திலிருந்து சாப்பாட்டுக்காரியை ஏற்பாடு பண்ணப் போறேன். நீங்க காலையிலேயே சாப்பிட்டுட்டு போங்கன்னாலும் கேக்கறதில்லே. காலையிலே டிபன் சாப்பிட்டதோடப் போயி கண்ட ஓட்டல்லேயும் சாப்பிட்டா உடம்பு என்னத்துக்காகும்?" என்று அவள் சொல்லிக் கொண்டிருக்கும்போது, அவள் சொல்லும் வார்த்தைகளே காதில் விழாதவன் போல் அவள் பக்கம் திரும்பிய சீதாராமன், எதிரில் நிற்கும் மதுரத்தின் தோள்களின் மீது இரண்டு கைகளையும் ஊன்றி அவள் முகத்தையே கூர்ந்து நோக்கினான்... அந்தப் பார்வையில், வழக்கத்திற்கு மாறாக ஆழமானதொரு சிந்தனை தேங்கியிருந்தது.

"என்ன அப்படிப் பார்க்கிறீங்க?" என்று நாணமுற்றவள் போல் சற்றுத் தலைகுனிந்தாள் மதுரம்.

"ம். நீ என்னமோ சொன்னியே. நான் கவனிக்கல்லே. என்று தன் மனத்தில் இருப்பதை, சொல்ல வந்த விஷயத்தைச் சொல்ல முடியாமல் ஒரு பேச்சுக்குக் கேட்டு வைத்தான் சீதாராமன்.

"அப்படி என்ன யோசனை? ஏதாவது புது நாடகத்துக்கு ஏற்பாடோ" என்று சிரித்தவாறே அவள் கேட்டபோது, அதை மறுத்து அவன் தலையாட்டுகையில் அவனது நெற்றியில் படிந்த சுருண்ட கேசம் அசைகின்ற அழகை ரசித்தவாறே மதுரம் விளக்கினாள்:

"நீங்க எதுக்கு ஓட்டல்லே சாப்பிட்டு உடம்பைக் கெடுத்துக்கணும்னு நான் ஒரு சாப்பாட்டுக்காரியை ஏற்பாடு பண்ணியிருக்கேன். நாளையிலிருந்து ஆபீசுக்கே சாப்பாடு வந்துடும்... என்ன சரிதானே என் ஏற்பாடு?" -அவன் தனது

யோசனையைப் பாராட்டுவான் என்று அவள் எதிர்பார்க்க வில்லை. அவனும் ரொம்ப அலட்சியமாக, "சாப்பாட்டுக்கு என்ன, ஏதாவது செய்..." என்று அந்த விஷயத்தை ஒதுக்கிவிட்டு, மீண்டும் என்னவோ சொல்வதற்குத் தயங்குகிறவனாகவே அவள் தோள் மீது வைத்த கைகளை எடுக்காமல் "மதுரம்... என்று கனிந்த குரலில் அழைத்தான்.

"என்ன வேணும்?" என்று அன்புடன் கேட்டாள். அவன் பதிலுக்குப் புன்னகை காட்டினான்.

ஆபீசுக்குப் போகிற நேரத்தில் அவசர அவசரமாக சீட்டியடித்தவாறு அவளைக் கவனிக்காமல் ஓடுகின்ற சீதாராமன், இன்று வழக்கத்துக்கு மாறாய், தன்னிடம் தயங்கித் தயங்கி நிற்பதற்கான காரணம் புரியாமல் நின்றிருந்தாள் மதுரம்.

சீதாராமன் மௌனமாக சிந்தனையோடு தன் கைப்பையைத் திறந்தான். நேற்றே வீட்டுச் செலவுக்குக் கொடுத்திருக்க வேண்டிய சம்பளப் பணம் அதிலிருக்கும் நினைவு அப்போதுதான் வந்தது அவனுக்கு. அந்த ரூபாய்களை எடுத்து அவளிடம் நீட்டினான். அவள் அதனை வாங்கி எண்ணிப் பார்த்தாள்! ஐம்பது ரூபாய்கள் இருந்தன.

'என்ன இது? இவ்வளவுதானா?' என்பது போல் அவள் அவனைப் பார்த்தாள். அவன் மீண்டும் சிரித்தான்; அவளும் திருப்தியடைந்து சிரித்துவிட்டாள்.

அவ்வளவுதான்! அந்த விஷயம் முடிந்துவிட்டது.

இப்படிப்பட்ட புருஷனின் சம்பளப் பணத்தை நம்பியா ஒருத்தி குடும்பம் நடத்த முடியும்?...

மதுரத்தின் தாய் சாகும்போது இந்த வீட்டை மகளுக்குக் கொடுத்துவிட்டுக் கண்ணை மூடினாள். அதன் ஒரு பகுதியைத் தங்களுக்கு வைத்துக் கொண்டு பின்கட்டு முழுவதையும் மூன்று போர்ஷன்களாக்கி வாடகைக்கு விட்டிருக்கிறாள்; இரண்டு மாடுகள் வாங்கி வைத்து வீட்டுக்குள்ளிருக்கும் குடித்தனக் காரர்களுக்கு வாடிக்கைப் பால் அளக்கிறாள். தன் இரண்டு

குழந்தைகளையும் இந்தப் புருஷனையும் வைத்துப் போஷிக்க அவள் படும் கஷ்டங்களை அவள் கஷ்டமாகவே நினைப்ப தில்லை. அவளுக்கு அதுவே சுகமாக இருப்பினும் 'நூத்தி எழுவது ரூபாய் சம்பளத்தை இவர் என்னதான் பண்ணுகிறார்!' என்று ஒரு நினைப்பு உள்ளே எழுந்தாலும், 'ம், ஆண் பிள்ளைகளுக்கு எவ்வளவோ செலவு, போகட்டும்' என்று அந்தப் புன்னகையிலேயே எல்லாவற்றையும் மறந்து விடுகிறாள் மதுரம். எனினும் அதை லேசாகவாவது அவனுக்கு உணர்த்தாவிட்டால் சரியில்லையல்லவா?

"இதுக்குத்தான் சொல்றேன்- காசுக்குக் காசும் செலவு; ஒடம்பும் கெட்டுப் போகும். மத்தியானச் சாப்பாடு வெளியே சாப்பிட ஆரம்பிச்சதிலிருந்து உடம்பே பாதியாய்ப் போச்சு- நாளையிலேருந்து சாப்பாட்டுக்காரியை நான் ஏற்பாடு பண்ணிடறேன்..." என்று அவள் திரும்பத் திரும்ப அந்த ஒரு விஷயத்தையே கூறுவதைக் கேட்டதும் சலிப்புற்ற அவன், திடீரெனப் பொறுமை இழந்து கத்தினான்!

"சரி, சரி, சரி!... அதுதான் ஒரு தடவை சொன்னியே... நீ அனுப்பறதையே திங்கறேன்; இனிமே ஓட்டலுக்குப் போய்த் தின்னு தொலையலே- சரிதானே-" என்று கத்திக் கொண்டே புறப்பட்டான் சீதாராமன்.

தான் சொன்னதைத் தப்பாய் எடுத்துக்கொண்டு அவன் போவதைக் கண்டு- ஆபீசுக்குப் புறப்படுகிற நேரத்தில் அவனுக்குக் கோபம் வருவதுபோல் தான் நடந்து கொண்டதை எண்ணி- மதுரம் கண் கலங்கி நின்றாள்.

ஆனால் கோபித்துக் கொண்டு வேகமாய் வெளியேறிய சீதாராமன், வழக்கத்திற்கு மாறாக, அவள் ஆச்சிரியம் கொள்ளும் விதத்தில் அறைவாசலில் ஒருவிநாடி நின்றான். அந்த ஒரு விநாடியில் அமைதியடைந்து திரும்பிப் பார்த்தான்.

மதுரம் கலங்கிய கண்களுடன் தலைகுனிந்து நின்றிருந்தாள்.

அவன் அவளருகே வந்து அவள் தோளை நெருக்கி அணைத்து ஒரு சிறு குலுக்கலுடன் கேட்டான்: 'வருத்தமா?'

மதுரத்துக்கு மேலும் மேலும் வியப்பாக இருந்தது.

“எனக்கு என்னத்துக்கு வருத்தம்?” என்று நனைந்த இமைகளுடன் சிரித்தாள் மதுரம். தன் கணவன் ஏதோ ஒரு காரியத்துக்காகத்தான் இவ்வளவு பீடிகையும் போடுகிறான் என்று உணர்ந்த அவள், ‘என்னிடம் காரியம் சாதிக்க இதெல்லாம் எதற்கு’ என்று யோசித்தவளாகக் கையிலிருந்த ரூபாய் நோட்டுக்களை வெறித்துப் பார்த்தவாறு நின்றிருந்தாள்.

“மது... மது... உள்ளே வாயேன்- உன்கிட்டே ஒரு விஷயம்” என்று ஒருவகைப் பொய்க் குதூகலத்துடன் அவள் தோள் மீது போட்ட கையுடன் அவளை அணைத்தவாறு அறைக்குள் வந்தான் சீதாராமன். அவளை அழைத்தபோதும் அறைக்குள் நுழைந்தபோதும் இருந்த ஆர்வமும் வேகமும் திடீரென்று தணிந்து, ஆழமான யோசனை வயப்பட்டவனாய்க் கட்டிலின் மீது அமர்ந்தான் அவன்.

“என்ன விஷயம், சொல்லுங்கோ” என்று அவன் எதிரே இடுப்பில் கையை ஊன்றி நின்று மதுரம் கேட்டபோது அவள் கைப்பிடியில் அந்த ரூபாய் நோட்டுக்கள் இருந்தன. அதைத்தான் அவன் கேட்கப்போகிறான், ‘இந்தாங்க’ என்று கொடுத்து விடலாம் என்று தயாராய் நின்றிருந்தாள் அவள்.

“ஒண்ணுமில்லே- நான் ரொம்ப யோசித்துப் பார்த்துத்தான்- அதனாலே உனக்கும்கூட நல்லதுதான்” என்று சொல்ல வந்த விஷயத்தைச் சொல்ல முடியாமல் அவன் தவிப்பதைக் கண்டு, ஒரு புன்னகையுடன் அவன் பக்கத்தில் நெருக்கமாய் உட்கார்ந்தாள் மதுரம்...

“என்னத்தை இப்படி மென்னு மென்னு முழுங்கறீங்க ம்... என்ன வேணும்’ என்று அவன் மோவாயைத் தன் பக்கம் திருப்பினாள். ‘கேட்டதைத் தருகிறேன்’ என்ற நம்பிக்கை தரும் நல்லுணர்ச்சி அவள் கண்களில் மின்னிற்று. அவன் அப்போதும் மௌனமாய்த் தலை குனிந்து இருப்பதைக் கண்டதும், “சரி, சரி... எனக்கு வேலை கெடக்கு...” என்று கொஞ்சம் பிகுவுடன் எழுந்தாள்.

"இரு- இரு" என்று அவள் கையைப் பிடித்து அருகே இழுத்து அவளைத் தழுவிக் கொண்ட சீதாராமன் உணர்ச்சி வயப்பட்டவன் போல அவள் முகத்தருகே குனிந்தான்.

"மது... நீ சொல்வியே... என் சந்தோஷம்தான் உன் சந்தோஷம்னு, நெஜந்தானே?" என்று கேட்கையில் அவனது சுவாஸம் அவள் கன்னத்தைத் தகித்தது.

"அதுக்கு இப்ப என்ன? ஆபீசுக்குப் புறப்பட்ற நேரத்திலே சட்டையெல்லாம் கசக்கிக்கிட்டு.." என்று அவன் பிடியிலிருந்து விலக முயன்றாள் மதுரம்.

அவள் மனத்துள் 'இந்த மாசம் ஐயா ரொம்ப தாராளமா செலவு பண்ணிட்டார் போல இருக்கு... கையிலே இருந்த பணத்தை ஒப்புக்குக் காட்டிட்டுத் திரும்பவும் வாங்கிக்கறதுக்கு இவ்வளவு சாகஸமா? ஓ! இந்த ஐம்பது ரூபாய் இல்லாட்டித் தான் என்ன? கஷ்டத்தோட கஷ்டமா நான் கவனிச்சுக்குவேன். இவர் தயங்கறதையும் கெஞ்சறதையும் பார்த்தா பாவமா இருக்கு! சரி, இப்படி சம்பளம் பூரா என்னதான் செலவு பண்றார்?...' என்று எண்ணினாலும் ஒரு ஆண் பிள்ளையை, அதுவும் புருஷனை, அவன் சம்பாதிக்கும் பணத்தைப்பற்றி அப்படிக் கணக்குக் கேட்பதற்கு, தனக்கு அதிகாரமில்லை என்றும், அப்படிக் கேட்பது அழகில்லை என்றும் அவள் உணர்ந்த பண்பினால் ஒரு துயரத்துடன் அவனைப் பார்த்துச் சிரித்தாள்.

அவன் அவளது காதோரத்தை உதடுகளால் லேசாக ஸ்பரிசித்தவாறு சொல்லிக் கொண்டிருந்தான்:

"நீ ஒரு உதவி செய்யணும்... உதவின்னா அது எனக்குச் செய்யற உதவி மட்டும் இல்லே; அதனாலேதான் தயக்கமா இருக்கு... உனக்குத்தான் தெரியுமே- எங்க ஆபீஸ் டைப்பிஸ்ட் கமலா இல்லே, கமலா..." என்று கூறுகையில் தொண்டை அடைத்துக் கொண்டது அவனுக்கு.

'யாரு- உங்க ஹீரோயின் கமலாவா" என்று கேலியாக விசாரித்தாள் மதுரம்.

-'ம்ஹும்... இந்த மனுஷன் பண்ற செலவு போதாதுன்னு அவளுக்கும் இவளுக்கும் வேறே கைமாத்து கொடுத்தாகிறது போல இருக்கு... எல்லாம் வீண் ஜம்பம்!' என்று மனத்துள் முனகிக் கொண்டாள். அதே நேரத்தில் 'உங்க ஹீரோயின் கமலாவா?' என்று கேட்டதன் கேள்விக்கு அவனிடமிருந்து ஒரு பதிலையும் எதிர்பார்த்தாள் மதுரம்.

அன்று- நாடகம் முடிந்து வீட்டுக்கு வந்ததும், 'எப்படி நம்ப ஹீரோயின்' என்று மதுரத்தை அவன் கேட்ட போது!...

"கேள்வியைப்பாரு. நம்ம ஹீரோயினாம்!" என்று மதுரம் போய்க் கோபத்தோடு முகம் திருப்பிக் கொண்டவுடன்-

"மது... நாடகத்திலே அவள் எனக்கு ஹீரோயின்... வாழ்க்கையிலே எனக்கு நிஜமான ஹீரோயின் நீதானே" என்று சொன்னானே, அந்தப் பதிலைத்தான் மீண்டும் ஒரு முறை எதிர்பார்த்து இப்போதும் அவள் அவ்விதம் கேட்டாள்.

ஆனால் அவனோ பதிலேதும் சொல்லாமல் எதையோ சற்று நேரம் தலை குனிந்து யோசித்து "ம்... அவளுக்குத் தான். இன்னக்கி மத்தியானம் அவ வருவா... இங்கே... நீயே அவள் கேட்கிற உதவியை தாராள மனத்தோட செய்யணும்... எனக்காகச் செய்வியா?... அவள் உன்னைத்தான் நம்பியிருக்கா. அந்த உதவிக்குத் தகுந்த மாதிரி உன்கிட்டே அவ நடந்துக்குவா- பாவம், அவ ரொம்ப நல்லவ.. அவளுக்கு யாருமில்லே.." என்று அவன் இவ்வளவு கரிசனையுடன் கேட்கும்போது, அந்தக் கரிசனை மதுரத்துக்குப் பிடிக்கவில்லை; கொஞ்சம் எரிச்சல் கூட வந்தது.

"சரி... சரி. அவள் வரட்டும்... உங்களுக்கு நாழியாகலியா?" என்று பேச்சை மாற்றினாள் மதுரம்.

"அப்போ நான் வரட்டா?" என்று அவளிடமிருந்து பிரியா விடை பெற்றுச் செல்கிறவன் போல் அவன் வெளியேறினான்..

மதுரத்துக்கு ஒன்றுமே புரியவில்லை. அவள் மனத்தில், அன்று நாடகத்தில் சீதாராமனின் ஹீரோயினாக நடித்த கமலாவின்

குழந்தை முகம் தோன்றியது... இவருக்கு ஏன் இவளுக்குக் கடன் கொடுக்க இவ்வளவு கரிசனை என்ற கேள்விக்கு எழுந்த பதில்களையெல்லாம் எண்ணி 'சீ' சீ, நான் எவ்வளவு மோசமாக ஒரு பெண்ணைப் பற்றி நினைக்கிறேன்' என்று தன்னைத் தானே கண்டித்துக் கொண்டாள்...

அது அவள் சுபாவம். தன் புருஷன் விவகாரமாகட்டும், வீட்டுப் பிரச்னையாகட்டும் குழந்தைகளின் தொல்லை யாகட்டும்- எல்லாவற்றுக்கும் ஏதோ ஒருவகையில் ஒரு சமாதானம் தேடிக்கொள்ள முடியும் அவளால்.

இல்லாவிடில் இதுபோன்ற நினைவுகளிலேயே அவள் நின்றிருக்க முடியுமா? இன்னும் ஒரு மணி நேரத்தில் அவளது இரண்டு பெண் குழந்தைகளும் பள்ளிக்கூடத்திலிருந்து பசியோடு ஓடிவந்து நிற்குமே...

சோப்புப் பவுடரில் ஊறவைத்த- கணவனின், குழந்தை களின்- துணிகளையெல்லாம் அலசிப்போட வேண்டுமே....

அடுப்பில் உலை கொதித்துக் கொண்டிருக்கிறதே...

மாடுகளுக்குத் தீவனம் வைக்க வேண்டுமே...

'எவ்வளவு வேலைகள் இருக்கின்றன' என்ற மலைப்பும், வேலைகளைச் செய்ய வேண்டும் என்ற துடிப்பும் பிறந்தது அவளுக்கு! உடனே அவள் மற்ற எல்லாவற்றையும் மறந்தாள். முதல் வேலையாக கணவன் அப்படியே போட்டு விட்டுப் போன ஷேவிங் செட்டை எடுத்துக்கொண்டு பாத்ரூமை நோக்கிப் போனாள் மதுரம்.

மத்தியானம் இரண்டு மணிக்குமேல்தான் மதுரத்துக்கு சிறிய ஓய்வு. அந்த ஒரு மணி நேரத்துக்கும் குறைவான சந்தர்ப்பத்தில் ஹால் நடுவே, பின்கட்டு வாசற்கதவுக்கு நேரே நன்றாகக் காற்று வரக்கூடிய வழியில் வாசற்படியில் தலை வைத்து முந்தானையை விரித்துப் படுப்பாள்... கொஞ்ச நேரத்துக் கெல்லாம் போதுமென்றாகிவிடும். எழுந்து போய் முகம் கழுவிக் கொண்டு வந்து தலைவார உட்கார்ந்து கொள்வாள். அந்த

நேரத்தை விட்டால் அவளுக்குத் தலைவாரிக் கொள்ளும் சந்தர்ப்பமே இல்லாமற் போய்விடும். அதனாலென்னவென்று இருந்துவிட முடிகிறதா அவளால்? சாயங்காலம் அவர் வரும்பொழுது என்னதான் வெட்டி முறிக்கும் வேலை கிடந்தாலும், தலை ஒரு வேஷம் துணி ஒரு கோலமுமாய் நின்றால் வீடு உருப்படுமா?... அதற்காகத்தான் மூன்று மணிக்கே தனது அலங்காரத்தை முடித்துக் கொள்வாள் மதுரம்.

...அதற்கு என்ன அர்த்தம்? அவன் வருகையை மூன்று மணியிலிருந்தே எதிர்பார்க்கிறாள் என்பதுதானா? நாலு மணிக்குப் பூக்காரி வருவாள்! அது வாடிக்கை! இரண்டு பெண் குழந்தைகள் இருக்கின்றனவே! அவர்களுக்கும் சேர்த்துத்தான் வாங்குகிறாள்; ஆனால் அவர்களுக்காகவே வாங்குவதாகச் சில சமயங்களில் சொல்லிக் கொள்கிறாளே, அது அவ்வளவு உண்மையல்ல.

பொழுது சாய்ந்ததும் அவள் வாசற்படியில் வந்து வந்து பார்த்துவிட்டுத் திரும்பிக் கொண்டிருப்பாள்; அவன் காலையில் அலங்காரம் செய்துகொண்டு போகும்போது பரட்டைத் தலையும் அழுக்குத் துணியுமாய் நின்று கொண்டிருந்தாளே, 'அவள் தானா இவள்' என்று வீட்டுக்குள் நுழைந்தவுடன் ஒரு விநாடி நின்று அவன் பார்க்க வேண்டாமா?...

அவன் பல சமயங்களில் அவளைக் கவனிக்காமலேயே போவான்; அவள் அந்த அலட்சியத்தைப் பொருட்படுத்த மாட்டாள். சில சமயங்களில் அவளது அலங்காரத்தைக் கண்டு அவன் சிரிப்பான்; அந்தக் கேலியை அவள் புரிந்து கொள்ள மாட்டாள்.

மத்தியானம் மூன்று மணிக்குக் கூடத்து ஹாலில் கண்ணாடியைச் சுவர் அருகே சாய்த்து வைத்துக் கொண்டு அவள் தலைவார ஆரம்பித்தபோது, வழக்கமாகக் கவனிக்கின்ற அந்த முன்புற நரையை, கூந்தலை வகிடாய்ப் பிரித்து ஒரு முறை பார்த்துக் கொண்டாள் மதுரம்... எண்ணெய் தடவி வாரிவிட்டால் அந்த நரைதான் மறைந்து கொள்கிறதே!

அவள் எண்ணெய் தடவிக் கொள்ளும் போதுதான் அவள் வந்தாள். அந்த ஹீரோயின் கமலா, தனது நரைத்த கூந்தலைப் பார்த்துவிடக்கூடாது என்ற பதைப்பில் சீப்பை எடுத்துக் கொண்டு விடுவிடென்று உள்ளே நுழைந்து, அறையிலுள்ள நிலைக்கண்ணாடியில் அவசர அவசரமாய்த் தலையை வாரிக் கொண்டையிட்டுக் கொண்ட போது மதுரம் தன்னுள் பேசிக்கொண்டாள்; 'ஏன்? இவள் பார்த்தால் என்ன! எதற்கு இவள் எனது நரையைப் பார்க்கக்கூடாது என்று நினைக்கிறேன்.'

அந்த ஹீரோவுக்குப் பொருத்தமான ஹீரோயினாய் மேடையில் தோன்றிய கமலா, வாழ்க்கையில் இப்படிப் பொருத்தமில்லாத ஒரு ஹீரோயினோடு அவன் வாழ்கிறான் என்று நினைத்துவிடக்கூடாது என்ற அச்சத்தினாலா...:

அவள் உள்ளே வந்தாள்!

"வாம்மா அன்னிக்கி நாடகத்திலே பார்த்ததுதான். எங்க வீட்டுப் பக்கம் வரக்கூடாதோ- உட்காரு. இதோ வந்துட்டேன்!" என்று முன்புறக் கூந்தலை ஒரு தடவைக்கு மூன்று தரம் சீப்பால் அழுந்த வாரிக் கொண்டையிட்டுக் கொண்டபின், நட்பு முறையில் புன்னகை தவழும் முகத்துடன் ஹாலுக்கு வந்தாள் மதுரம்.

"உட்காரம்மா நிற்கிறாயே... என்று ஹாலில் கிடந்த பிரம்பு சோபாக்களில் ஒரு இரட்டைச் சோபாவை அவளுக்குக் காட்டி, தானும் ஒன்றில் அமர்ந்து கொண்டாள் மதுரம்.

-யாராவது புதிய மனிதர்கள் வரும்போதெல்லாம் அவள் அங்கே உட்கார்ந்து பேசிக் கொண்டிருப்பாள்.

அவள் எதிரே இரட்டைச் சோபாவில் உட்கார்ந்திருந்த கமலா ஹாலை ஒரு முறை சுற்றிலும் திரும்பிப் பார்த்து, "எங்கே குழந்தைகளைக் காணலே" என்றாள்.

"இன்னும் பள்ளிக்கூடத்திலிருந்து வரல்லே."

"ஓ! சின்னவளும் போறாளா ஸ்கூலுக்கு?"

"ஆமாம்- இப்பத்தான் சேர்த்தேன். ஒரு நாளைக்குப் போவா; ஒரு நாளைக்கு 'மாட்டேன்'னு அடம் பிடிப்பாள்... என்று கூறிச் சிரித்தாள் மதுரம். பதிலுக்கு அவளும் சிரித்தாள். அதன் பிறகு ஒரு விநாடி என்ன பேசுவது என்று புரியாமல் திகைத்த மதுரம், தொடர்ந்து தன் இளைய மகளைப் பற்றிக் கூறினாள்: "பள்ளிக்கூடம் போகலேன்னா வீட்டிலே அவ பண்ற அட்டகாசம் தாங்க முடியறதில்லேம்மா... பெரியவ ரொம்ப சாது. இது என்னவோ இப்படி வந்திருக்கு- உடம்பிலே சட்டை இருக்கப்படாதுங்கறா- பள்ளிக்கூடத்திலே'ருந்து வந்ததும் கவுனை ஒரு மூலையிலே, ஜட்டியை ஒரு மூலையிலே அவுத்து எறிஞ்சுட்டுத்தான் சுத்தி சுத்தி வரா... நானும் எவ்வளவோ அடிச்சுப் பார்த்தாச்சு; ம்ஹூம்" என்று சிரிப்பிற்கிடையே விவரித்தாள்.

"கொழந்தைதானே" என்று கூறியவாறே தன் கைப் பையிலிருந்து ஒரு பிஸ்கெட் டின், இரண்டு பெரிய சாக்லெட் பாக்கெட் முதலியவற்றை எடுத்து சோபாவின் மேல் வைத்தாள் கமலா.

'கடன் கேட்க வந்தவள் இதையெல்லாம் ஏன் வாங்கி வந்திருக்கிறாள்' என்று யோசித்தாள் மதுரம்.

'முதல் தடவை வீட்டுக்கு வரும்போது வெறுங்கையோட வரலாமா?' என்று, எதிலுமே ஒரு சமாதானம் தேடிக் கொள்ளும் தன் இயல்புக் கேற்ப யோசித்துக் கொண்டிருந்த மதுரம் "இதெல்லாம் எதுக்கம்மா?. வீண் செலவு" என்றாள்.

"நீங்க என்ன அக்கா, யாரோ விருந்தாளிகிட்டே சொல்ற மாதிரி சொல்றீங்களே!" என்று உரிமையான பாவனையில் மதுரத்தைப் பார்த்தாள் கமலா.

மதுரம் நன்றி கலந்த புன்னகையுடன் கமலாவை, அவளது அலங்காரத்தை, உடை மோஸ்தரை, கூந்தல் சிங்காரத்தை யெல்லாம்- தங்க நகையை எத்தனைமாற்று என்று எடை போடும் பொற்கொல்லன் மாதிரிப் பரிசீலித்துக் கொண்டிருந்தாள். நடுவில் ஒருமுறை உள்ளே எழுந்து போய்க்

காப்பிக்கு அடுப்பு மூட்டிவிட்டு மீண்டும் வந்து உட்கார்ந்து கொண்டாள்.

இவ்வளவு நேரமாய் வந்த காரியத்தைப் பேச கமலா தயங்கிக் கொண்டிருப்பதைக் கண்டதும் தானே ஆரம்பித்தாள் மதுரம்:

"அவர் காலையிலேயே சொல்லிட்டுப் போனார்' என்றதும் கமலா, முகத்தில் ஒரு மாற்றத்துடன், "என்ன சொல்லிட்டுப் போனார்?" என்று கேட்டாள்.

"ஒண்ணுமில்லை, நீ வருவேன்னு சொன்னார்; ம். அப்புறம் உனக்கு யாருமே இல்லேன்னு சொன்னாரே.. நான் அவர் கிட்டேயே கேக்கணும்னு நெனச்சேன்; நேரமில்லே அப்போ. ஆமா, நீ இப்போ யார் வீட்டிலே இருக்கே.. சொந்த ஊர் எது? தாய் தகப்பன் இல்லாட்டியும் சொந்தக்கார மனுஷாள் இருப்பாங்க இல்லே?' என்று ஒரு அடுக்கு விஷயத்தை இரண்டு மூன்று கேள்விக்குள்ளே திணித்துக் கேட்டாள் மதுரம்.

கமலா. மதுரத்தின் கேள்விகளுக்கு உடனே பதில் சொல்லி விடவில்லை. ஒரு நிமிஷம் மௌனமாய்த் தலை குனிந்து உட்கார்ந்திருந்தாள்.. குனிந்த தலை குனிந்து குனிந்து தாழ்ந்தது. கழுத்து நரம்புகள் புடைத்துப் புடைத்து விம்மின. காதோரம் சிவந்தது...

அவள் தலைநிமிர்ந்து பார்த்த போது கமலாவின் கண்கள் கலங்கிச் சிவந்திருப்பது கண்ட மதுரம் திகைத்தாள்.

'நாம் ஏதாவது தப்பாகக் கேட்டு விட்டோமோ?' என்ற அச்சத்துடன் அவளருகே வந்து "ஏம்மா வருத்தப்படறே. " என்று ஆறுதலாகக் கேட்டாள் மதுரம்.

"என்கூடப் பொறந்த சகோதரியைப் போல நெனைச்சுத்தான் உங்களைப் பார்க்க வந்தேன்" என்று உணர்ச்சியால் அடைத்த குரலுடன் கூறி, அதற்குமேல் சொல்ல முடியாமல் உதட்டைக் கடித்துக் கொண்டாள் கமலா...

"பெத்தவங்களைச் சின்ன வயசிலேயே பறிகொடுத்திட்டு மாமா வீட்டிலே படாதபாடுபட்டு எப்படியோ படிச்சு

முடிச்சுட்டு ஒரு வேலை கெடைச்சதும் அந்த நரகத்திலேருந்து விடுதலையானேன் ஒரு ஹாஸ்டல்லே தங்கி- ஒரு அநாதையாகவே துணையில்லாத வாழ்க்கை எவ்வளவு காலத்துக்கு வாழறது?" என்று சிவந்த நாசி விரிந்து துடிக்க அவள் கேட்டபோது, மதுரத்துக்கு அந்த நிலைமையின் சோகத்தைப் புரிந்து கொள்ள முடிந்தது.

"ஏன்? ஒரு கல்யாணத்தைப் பண்ணிக்கிட்டு, குடியும் குடித்தனமுமா ராணி மாதிரி இருக்கலாமே நீ? உனக்கென்ன குறைச்சல்? என்னை மாதிரி எழுத்துவாசனை இல்லாதவன்னாலும் சொல்லலாம்?. இதுக்கா வருத்தப்படறே?" என்று தைரியம் கூறினாள் மதுரம்.

கமலா ஒரு பெருமூச்செறிந்தாள்;

"அதுக்கெல்லாம் சொந்தக்காரர்களோ, வேறே பொறுப்பான பெரியவங்களோ இருந்தாத்தானே நடக்கும்... அப்பிடி எனக்கு யாரும் இல்லியே... இந்த இருபத்தாறு வயசுக்குள்ளேயே எனக்கு அதெல்லாம் குடுத்து வெக்கலேங்கற தீர்மானத்தோட இப்படியே வாழ்ந்துடலாம்னுதான் இருந்தேன். ஒரு ஆதரவும் இல்லாத எனக்கு எல்லாவிதமான உதவியும் செய்யறதுக்கு அன்பா, ஆதரவா இருக்கிறவர் ஆபீசிலேயே இவர்- மிஸ்டர் சீதாராமன்- ஒருத்தர்தான்... என்று அவள் கூறி நிறுத்தியதும் இருவரும் கவனமாய் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

மதுரத்துக்கு திடீரென என்னவோ விபரீதமாய் ஒரு கற்பனை. ஓர் எண்ணம்- ஒரு தீர்மானம் உள்ளூற எழுந்தது! அது கொஞ்சம்கூட வெளியே தெரியவில்லை. வெளியே தெரியாத, சலனம் காட்டாத அது அவளைச் சிலைபோல் ஸ்தம்பித்து நிறுத்தி, கமலாவின் உள்ளே ஊடுருவுவது போல் அவளைப் பார்க்க வைத்தது. தான் சொல்ல வந்த விஷயத்தைச் சொல்லாமலேயே இவள் புரிந்து கொண்டு விட்டாளோ என்ற திகைப்பில், கமலாவும் அவளையே வெறித்துப் பார்த்தாள்.

'இவள் மறுத்துவிட்டால்?... தன்னைத் தூஷித்துத் துரத்தி விட்டால்... தன் மானத்தைக் கெடுப்பதுபோல் ஊர் கூட்டி

நியாயம் கேட்டுவிட்டால்... என்ற திகில்கள் படிப்படியாய் விளையவே, திடீரெனக் குமுறி, வாய்விட்டுக் கதறியழுதவாறு மதுரத்தின் கரங்களில் முகம் புதைத்துக் கொண்டாள் கமலா!

இப்போது 'ஏன் அழுகிறாய்? எதற்கு வருந்துகிறாய்?' என்றெல்லாம் மதுரம் கேட்கவில்லை. அவள் நின்றிருக்கும் போது வெறித்ததுபோலவே, இந்த இடத்தைவிட்டு விலகி வந்து தன் கரத்தில் முகம் புதைத்தழும்போதும்- அவள் பார்வை வெறித்து நிலைகுத்தியிருந்தது...

மதுரத்தின் கைகளை இறுகப்பற்றி அழுதுகொண்டே அவள் தெளிவான குரலில் சொல்லிவிட்டாள்: "உங்க வாழ்க்கையிலே பங்கு கேட்கிறேன், அக்கா!"

–அழுகையென்ற கேடயத்தை ஏந்திக் கொண்டு அந்தக் கூரியவாளை 'சரே'லென மதுரத்தின் இருதயத்தில் ஆழமாகச் செருகிவிட்டாள் கமலா.

"இந்த அநாதைக்கு வாழ வழி காட்டணும்... என் மானமே உங்க கையிலே இருக்கு. உங்களுக்கு நான் செஞ்ச துரோகத்தை மன்னிச்சு நீங்க என்னைக் காப்பாத்தணும்... உங்க குழந்தை வேறே; என் வயித்திலே இருக்கிறது வேறே இல்லே அக்கா!...

செருகிய வாளை உருவி, மீண்டும் பாய்ச்சியபோது, தன் மனோ பலம் முழுவதையும் திரட்டி, பல்லைக் கடித்துக் கண்களை மூடித் தாங்கிக் கொண்டாள் மதுரம்.

"இந்த நன்றியை உயிர் உள்ள வரைக்கும் நான் மறக்க மாட்டேன்.. உங்களுக்கும்- நம்ப குடும்பத்துக்கும்" என்று கமலா கூறுவதை இடைமறித்து அமைதியான குரலில் மதுரம் முனகினாள்:

"போதும் கமலா... ஐயோ, என்னாலே, தாங்க முடியலியேடி அம்மா..." என்று படுகாயமுற்றவள் போல் அந்தச் சோபாவில் கிடந்து அண்ணாந்த தலையை இடமும் வலமும் புரட்டிப் புரட்சி உலுப்பியவாறு துடித்தாள் மதுரம்.

அரைமணி நேரம் வரை மதுரம் அசையவில்லை; விழிகளைத் திறக்கவில்லை.

சொல்ல வேண்டியதைச் சொல்லி விட்ட பிறகு, அவளது சம்மதிப்பை, பதிலை எதிர்நோக்கி உள்ளூற ஒரு தவிப்பும், பார்வையில் ஒரு திகைப்பும் கொண்டு உட்கார்ந்திருந்தாள் கமலா.

மதுரத்தின் நிலையைப் பார்க்கும்போது, அவளுக்குப் பயமாகவும் வருத்தமாகவும் இருந்தது. தான் நினைத்து எதிர்பார்த்தது போல் அவள் ஆத்திரமோ வெறுப்போ கொண்டு தன்னைத் தூஷிக்கவோ, சபிக்கவோ செய்யாததால்- இந்த நல்லவளின் இதயத்தை நொறுக்கிவிட்ட, குற்றம் புரிந்து விட்ட உணர்ச்சியில் அவளுக்குக் குமுறிக் குமுறி அழுகை வந்தது.

வெகு நேரம் மௌனமாய் அழுதுகொண்டிருந்த பின் இவளருகே வந்து "அக்கா... அக்கா..." என்று அழுது கொண்டே உசுப்பினாள் கமலா.

ஒன்றுமே நடக்காததுபோல் தெளிவான முகத்தோடு, உறுதியான பார்வையோடு நிமிர்ந்து உட்கார்ந்தாள் மதுரம். அவள் கண்களிரண்டும் தாமரை இதழ் போல் சிவந்திருந்தன.

"நீ ஏம்மா இப்படி அழறே? தைரியமாய் இரு" என்று சொல்லிவிட்டு எழுந்து அறைக்குள் போனாள். அவளுக்கு ஏனோ சற்றுத் தனிமையிலிருக்க வேண்டும் போலிருந்தது. அறையில் கிடந்த கட்டிலையும், ஸ்டாண்டில் கிடந்த அவனுடைய துணிமணிகளையும் அவள் பார்வை வெறித்தது.

அவள் அறைக்குள் புறங்கைகளைக் கட்டியவாறு மேலும் கீழும் நடந்து நடந்து திரும்பி உலாவுவதை ஹாலிலிருந்து பார்த்துக் கொண்டிருந்தாள் கமலா.

அவள் அறையின் நிலைக் கண்ணாடியின் முன் நின்றாள். அவளது ஆசைக் கணவன் அலங்காரம் செய்து கொள்வானே அதே இடத்தில் நின்று தன்னைப் பார்த்துக் கொண்டாள்.

அவசரமாக வாரியதால் சரியாக மறையாத அந்த முன்புறம் நரைத்த சிகை ஒரு கொத்தாய் இப்போது வெளியே கிளம்பி இருந்தது. முகத்தில் சுருக்கம் கண்டுவிட்டது. உடம்பு ஸ்தூலப்பட்டு வயதுக்கு மீறிய தோற்றம் தட்டி விட்டது...

அவர் எப்படி இருக்கிறார்! 'அன்னக்கிப் பார்த்தது போலவே... என்று எண்ணியவாறே அவள் ஹாலில் உட்கார்ந்திருக்கும் கமலாவை ஓரக்கண்ணால் பார்த்தாள்.

'இவள் அவருக்குப் பொருத்தம்! நான்தான் கிழடாகி விட்டேன்... அது எப்படி? அவரைவிட வயசு குறைந்த நான் எப்படி அவரைவிடக் கிழமானேன்? ஆமாம்; நான் கிழவியானது முதுமையால் அல்ல; என் மூடத்தனத்தால்... அறிவில்லாத, புத்தியில்லாத' -அவள் நறநறவெனப் பற்களைக் கடித்துக் கொண்டாள்.

-வாழ்க்கை முழுதும் அவனைப் பற்றிய நினைவில் அவள் தன்னை மறந்திருந்தாள். அவன் அலங்காரம் செய்து கொண்டு இளமையோடு திகழ்வதைப் பார்த்துக் கொண்டு நிற்கின்ற போதே, தான் முதுமையடைந்து கொண்டிருப்பதை அவள் அறியாமற் போனாள்.

அவள் அவற்றையெல்லாம் இப்போது சிந்தித்துப் பார்த்தாள். அவள் மனத்தில் இப்போது குடைந்து கொண்டிருந்த உணர்ச்சி, தன் புருஷனை வேறு ஒருத்தி அபகரித்துக் கொண்டாளே என்பதல்ல, தான் எவ்வளவு ஏமாளியாய் ஒரு பொய்யை நம்பி, வாழ்க்கையின் இனிய பகுதிகளையெல்லாம் வீணாயும் விழலுக்குழைத்த வேதனையாயும் மாற்றிக் கொண்டோம் என்ற கசப்பான உண்மை அவளை ஒரு வெறிச்சியைப்போல் விழிக்க வைத்தது.

அவள் நின்று நின்று பெருமூச்செறிந்தாள். வாயால் பேச வார்த்தையில்லை- எனினும் பேசினாள்.

'குடும்பத்தின் சுமையெல்லாம் நான் சுமந்து கொண்டால் ஏன் தலை நரைக்காது? அவரைப்போல ஒரு கவலையும் இல்லாமல் இருந்தேனா? எல்லாவற்றுக்கும் குறுக்கே நின்று

நான் பாதுகாத்தால் அவர் என்றைக்குமே ஹீரோவாக இருக்க மாட்டாரா என்ன?... எனக்குத்தான் என் நினைவேயில்லை; எனக்கு அவர் நினைவே போதும். அவருக்கு அப்படியா? அவர் நினைவுக்கு நான் போதுமா? ஆ! எவ்வளவு பெரிய மோசடி? எவ்வளவு மோசமான சுரண்டல்? வாழ்ந்ததை நினைத்தால் குடலைப் புரட்டுகிறதேடி, அம்மா! ...சீ, இனிமேல் அவர் முகத்தைப் பார்க்கும் பாபம் எனக்கு வேண்டாம். அந்தக் கெட்ட சொப்பனம் தீர்ந்தது' என்றெல்லாம் வாய் விட்டு முனகிக்கொண்டாள்.

அவள் நேரே ஹாலுக்குள் வந்து கமலாவின் எதிரே உட்கார்ந்து அவளை அனுதாபத்தோடு உற்றுப் பார்த்து விட்டுச் சொன்னாள்.

"கமலா! உன் தலை எழுத்துக்கு நான் என்ன செய்ய முடியும்?... நீ என் வாழ்க்கையிலே பங்கு கேக்கறே! நான் வாழ்ந்தேனா என்ன? நான் உன்னைக் கையெடுத்துக் கும்பிட்டுக் கேட்டுக்கறேன்- தயவு செய்து முழுக்க எடுத்துக்கோ! பதினைஞ்சு வருஷம் நான் அவரோட வாழ்ந்தவ. இந்தப் பெரிய கணக்குக்கு விடை- பூஜ்யம்னு இப்பத்தான் தெரிஞ்சிருக்கு... ஓ! நான் என்னென்ன பாடு பட்டிருக்கேன்! போகட்டும்! நீ சீக்கிரம் போயி, அவரை.. இனிமேலே இந்த வீட்டில் அவருக்கு இடமில்லேன்னு சொல்லிடம்மா! அந்த முகத்தை நான் பார்த்தேன்னா அலறிச் செத்துடுவேன் துரோகத்தை அனுபவிக்கிறது கூடக் கஷ்டமில்லேம்மா துரோகியின் சிரிப்பைச் சந்திக்கிறது ரொம்பக் கொடுமை! நானும் என் குழந்தைகளும் யாரையும் நம்பி இல்லேன்னு நீயும் புரிஞ்சுக்கோ! ஆமா, இந்தப் பதினைஞ்சு வருஷமா அவர் மேலே இருந்த நம்பிக்கையிலே நான் வாழ்ந்திருக்கலாம்; ஆனா அவரை நம்பி இங்கே யாரும் வாழலே, வாழ முடியாது... அவர் அப்படி! சீக்கிரம் போயி அவரை இங்கே வரவேண்டாம்னு சொல்லிடு.. ம், போ!... மத்தப்படி உன் தலை எழுத்துக்கு நான் என்ன செய்ய முடியும்- இந்த ஹீரோயின் கதை முடிஞ்சுது- அவருக்கு இன்னொரு ஹீரோயின் வேண்டாமா, என்ன?" என்று சொல்லிவிட்டு எழுந்தாள் மதுரம்.

அவள் குரலில் இருந்த தெளிவும், அவள் வார்த்தைகளில் தோன்றிய நிதானமும்- அவள் கூறுவது வெறும் உணர்ச்சி வயப்பட்ட முடிவு அல்ல என்று கமலாவுக்குப் புரிந்தது. கமலா தலை குனிந்து கை விரல்களின் நகங்களை பிய்த்தவாறு உட்கார்ந்திருந்தாள். எழுந்து நின்ற மதுரம் இரக்க உணர்ச்சியால் கண்கலங்கக் கமலாவைப் பார்த்தாள்.

சற்றுமுன் 'என்கூடப் பொறந்த சகோதரி.. இந்த அநாதைக்கு வாழ வழி காட்டுங்க- அக்கா' என்றெல்லாம் அவள் மன்றாடிக் கேட்ட வார்த்தைகளை எண்ணிப் பார்த்தாள் மதுரம்.

"கமலா.. என்னைச் சகோதரியா நீ நெனைச்சிருக்கே. உனக்கு வாழ வழிகாட்டச் சொல்றே... நான் எப்படியம்மா அதைச் செய்ய முடியும்? என் தாய் அப்போ இருந்தாங்க. 'இவரைத்தான் கல்யாணம் செய்து கொள்வேன்'னு நான் பிடிவாதமாய் இருந்தப்போ- எங்கம்மா எவ்வளவோ புத்தி சொன்னாங்க- எனக்கு ஏறலியே- அம்மா!" என்று கூறித் தனது இறந்துபோன தாயை எண்ணிக் கண்கலங்கினாள் மதுரம்.

"இப்படியெல்லாம் வரும்னு நெனைச்சித்தானோ என்னமோ தனக்குச் சொந்தமான இந்த வீட்டை வேற பிள்ளைகளுக்குத் தராமே எனக்குத் தந்துட்டுப் போனாங்க. எனக்கும் என் குழந்தைகளுக்கும் கஞ்சி ஊத்தறது இந்த வீடுதானம்மா. இந்த வீடும் அந்த ரெண்டு மாடுகளும்தான். கமலா! அந்த மாட்டின் மேலே வைக்கவேண்டிய பாசத்தை, இந்த வீட்டின் மேலே வைக்கவேண்டிய பக்தியை, இத்தனை வருஷமா வீணடிச்சிருக்கேன்" என்று தானே பேசிக் கொள்வது போல் சொல்லிக் கொண்டிருந்த மதுரம் திடீரெனக் கடுமையான குரலில் கோபாவேசமாகக் கத்தினாள்; "இது என் வீடு! இந்த வாசற்படியை யாரும் மிதிக்கக்கூடாது..."

அந்தச் சத்தத்தையும் அவள் தோற்றத்தையும் கண்டு கமலா திகைத்துப் போனாள்.

தான் அங்கேயே இருந்தால் கமலாவின் முன்னே இன்னும் என்னென்ன அந்தரங்க தாம்பத்திய விஷயங்களையெல்லாம்

ஆத்திரத்திலே பேசிவிடுவோமோ என்ற அச்சத்துடன், மதுரம் எழுந்து சென்று அறைக்குள் போய்க் கதவை மூடிக்கொண்டாள்.

கமலா அந்த அறையின் மூடிய கதவை வெறிக்கப் பார்த்தாள். முகத்தை மூடிக்கொண்டு குலுங்கக் குலுங்க அழுதாள்.

அவள் இப்போது எதற்காக அழுகிறாள்? தன் தலை எழுத்துக்கா?

'இந்த ஹீரோயின் கதை முடிஞ்சது; அந்தக் கெட்ட சொப்பனம் தீர்ந்தது' என்று இவ்வளவு வைராக்கியத்தோடு அவனை நிராகரித்துவிட்ட மதுரத்தை அவள் எண்ணிப் பார்த்தாள்.

'ஆ! இவளல்லவோ பெண்' என்று கமலாவின் ஹிருதயம் விம்மியது.

தன்னைப்போல் படித்தவளோ, 'எங்கே சென்று ஒரு டைப்ரைட்டரின் முன்னால் உட்கார்ந்தாலும் மாதம் நூத்தைம்பது ரூபாய்' என்ற வாழ்க்கை உத்தரவாதமோ இல்லாத அவளுக்கு இருக்கும் அந்த உறுதியைக் கண்ட பிறகுதான், தான் ஒரு அநாதையுமல்ல, யாரிடமும் போய் எதையும் யாசிக்கவேண்டிய நிலையிலும் தான் இல்லை என்பதை உணர்ந்து தன்னம்பிக்கை கொண்டாள் கமலா...

'தன் வாழ்க்கை மேலும் கெட்டுப்போக வேண்டுமா?' -என்ற கேள்விக்குப் பதிலாய் அவன் உருவமே அவள் மனத்தில் தோன்றியது. அந்த அலட்சிய உணர்ச்சி மிகுந்த கண்கள் என்ன சொல்கின்றன? என்று இப்போது அவளுக்குப் புரிந்தது.

இவ்வளவு நல்ல. மனைவியை, இவள் உழைப்பை, இவள் அன்பை, இவள் பெருந்தன்மையை எல்லாம் பயன்படுத்திக் கொண்டு அவன் என்ன காரியம் செய்திருக்கிறான்- என்று ஒரு மூன்றாவது மனுஷியாகவே நின்று பார்க்கையில் அவன் மீது அவளுக்குத் திடீரென்று ஒரு வெறுப்பே உண்டாயிற்று!

அந்த வெறுப்பு விஷம் போல் ஏறி வளர்ந்தது!

ஆம், அவன்மீது விருப்பம் கொள்வதற்குத்தான் காரணம் இல்லை, அது ஒரு பலஹீனம். அவனை வெறுப்பதற்கு நினைத்து நினைத்துப் பார்க்க ஆயிரம் காரணங்கள்- இந்த சில மாதப் பழக்கத்திலேயே- அவளுக்கு ஏற்பட்டிருந்தன.

'ம்.. மதுரம் நல்லாச் சொன்னாங்க ஒரு வார்த்தை- எவ்வளவு மோசமான சுரண்டல்! வாழ்ந்ததை நெனைச்சா குடலைப் புரட்டுதேடி அம்மா. என்று. அந்த வார்த்தைகளின் ஆழமும் அர்த்தமும் உணர்ந்து யோசிக்கையில் தனக்கும் கண்கள் திறந்தது போல் இருந்தது கமலாவுக்கு.

கமலா தலை நிமிர்ந்து உட்கார்ந்தாள். அவள் கண்களில் ஓர் அலட்சியமே சுடர்விட்டது.

'ம். இரண்டு குழந்தைகளும் தாயுமாய் இருப்பவளுக்கு இல்லாத கவலையா, பிறக்காத குழந்தைக்கும் எனக்கும் வந்துவிடப் போகிறது? அப்படி வருவதை இவரா தாங்கித் தடுத்து விடப்போகிறார்?' என்று எண்ணி 'இரண்டாவது ஹீரோயின் கதையும் முடிந்தது' என்று முணுமுணுத்துக் கொண்டே தன் கைப் பையைத் திறந்து காகிதமும் பேனாவும் எடுத்துத் திடமான தீர்மானத்தோடு கீழுதட்டை அழுத்திக் கடித்துக் கொண்டு கடிதம் எழுத ஆரம்பித்தாள் கமலா.

இரவு ஏழுமணிவரை அந்த பார்க்கில் கமலாவுக்காகக் காத்திருந்தான் சீதாராமன். ஆறு மணிக்கு நல்ல செய்தியுடன் தன்னை வந்து சந்திப்பதாகச் சொல்லியிருந்த கமலாவை இன்னும் காணாததால் அவன் சற்றும் பதட்டப்படவில்லை. வாழ்க்கையில் வெற்றிகளைத் தவிர வேறெதுவும் தனக்கு ஏற்படப் போவதில்லை என்ற உறுதியான அசட்டு நம்பிக்கையுடன் இருப்பவனாகையால், இந்த விஷயத்திலும் அவன் பூரண நம்பிக்கையுடனிருந்தான்.

'சம்பாதிக்க ஒரு மனைவி; பணிவிடை செய்ய ஒரு மனைவி' என்ற சுயநலம் நிறைவேறப் போகிற மகிழ்ச்சியில் வழக்கம் போலவே சீட்டியடித்துக் கொண்டு இரவு எட்டு மணிக்கு

அவன் வீடு வந்து சேர்ந்தான். இன்று தன்னை இரண்டு பேர் இனிய முகத்தோடு வரவேற்பார்கள் என்ற குதூகலம்!

அவன் வீட்டின் முன் ஹாலுக்கு வந்தபோது அவன் எதிர்பார்த்தபடி அங்கே கமலாவையும் காணோம்; மதுரத்தையும் காணோம். அவனது இரண்டு பெண் குழந்தைகள் மட்டுமே இருந்தனர். பெரியவள் உமா, சோபாவில் உட்கார்ந்து பாடம் படித்துக் கொண்டிருந்தாள். சின்னவள் லதா பிறந்த மேனியாய் சோபாவின் பின்புறம் வந்து நின்று உமாவின் பின்னலை இழுத்துக் குறும்பு செய்து கொண்டிருந்தாள்.

அந்த சோபாவின் ஒரு பகுதியில் பிஸ்கட் பாக்கெட் பிரிந்து கிடந்தது; பிஸ்கெட்டுகள் இறைந்து கிடந்தன.

சீதாராமன் வீட்டிற்குள் நுழைந்ததும் 'பட' ரென சமையலறைக் கதவை அறைந்து சாத்திய சப்தம் அவனுக்கு நெஞ்சில் உதைத்தது போலிருந்தது.

அவன் சமையலறைக் கதவைநோக்கி நடந்தான்.

மூடிய கதவின்மேல் லேசாகத் தட்டி, "மது... மது" என்று அழைத்தான்.

உட்புறம் கதவின் மேல் முதுகைச் சாய்த்து அவள் திரும்பி நின்று கொண்டிருக்கிறாள் என்று கதவிடுக்கில் தெரிந்தது.

உள்ளேயிருந்து அவள் குரல் ஸ்பஷ்டமாக ஒலித்தது;

"மானமுள்ள ஆம்பிளையா இருந்தா- என் வீட்டை விட்டுக் கீழே இறங்கிடணும், இங்கே உங்களுக்கு இடமில்லை; இது என் வீடு!"

"மது! கதவைத் திற! சொல்றேன்" என்று அழுவது போன்ற குரலில் கெஞ்சினான் அவள் கணவன்.

"முடியாது... உங்கள் முகத்தைப் பார்த்தா -ஐயோ! வேணாம்... புருஷனின் முகத்திலே காறித் துப்பினவங்கற பேர் எனக்கு வேணாம்!..."

-சீதாராமனுக்குச் செவிட்டில் அறைந்தது போலிருந்தது. முகமெல்லாம் வியர்த்தது. தன் வாழ்க்கையிலே முதல் தடவையாய் ஒரு முதல்தரமான விபரீதம் நிகழ்ந்திருப்பதை அவன் அனுபவித்தான்.

அவனுக்குக் கோபமும் வந்தது...

"என்னடீ பேசறே? போகல்லேன்னா என்ன செய்வே?" என்று அந்தக் கதவை எட்டி உதைத்தான்.

கண்ணாடிப் பாத்திரம் நொறுங்கியது போல் உள்ளே இருந்து அவள் ஒரு ஹிஸ்டீரியா சிரிப்புச் சிரித்தாள். பிறகு, கலகலத்துப் பெருகிவரும் அந்தச் சிரிப்பிடையே சொன்னாள்: "நல்லது: இங்கேயே இருங்க. அந்த ரெண்டு குழந்தைகளுக்கு ஒண்ணு அப்பன் இருக்கணும், இல்லே அம்மா இருக்கணும்... நீங்களே இருங்க..." என்று அவள் கூறிக் கொண்டே கொடிக் கயிற்றைப் 'படா'ரென்று இழுத்து அறுக்கும் சப்தம் கேட்டது சீதாராமனுக்கு.

அவனுக்குக் கையும் காலும் நடுங்கி விறைத்தன. 'எக்ஸ்ரே' சித்திரம் போல் மூடிய கதவுக்குப் பின்னால் நடக்கும் காரியம் அவன் கண்களுக்குத் தெரிந்தது. தனது ஒவ்வொரு நிமிஷப் பிரசன்னமும் அவள் கழுத்தில் இறுகப் போகிறது என்றறிந்ததும் அவன் 'ஓ'வென்ற குரலில் அலறினான்.

"மதுரம், நான் போயிடறேன்! நான் போயிடறேன்... இதோ நான் போயிடறேன்..." என்று கதவின்மேல் இரண்டு கரத்தாலும் தடதடவெனக் குத்திக்கொண்டு கத்தினான் சீதாராமன்.

"போ!" என்று ஒருமையில் கூறிக் கையிலிருந்த கொடிக் கயிற்றால் மூடிய கதவின்மேல் 'சவுக்'கென்று அவள் அடித்ததன் வேகமும் வெறுப்பும் அவனுக்குப் புரிந்தது.

'நான் சாகிறேன் என்று சொன்னதும் அவன் இப்படி அலறுவதற்குக் காரணம் தன் மீது கொண்ட பாசமல்ல; இநத இரண்டு குழந்தைகளின் சுமையும் தன் தலையில் விடியுமே என்ற கோழைத்தனம்தான்' என்றெண்ணிய மதுரம், 'சீ' என்று அருவருத்து உடல் சிலிர்த்தாள்...

-இப்போதுதான் முதல் தடவையாக- அவளது சுபாவப்படி எந்த ஒரு 'சமாதான'மும் தேடிக்கொள்ளாமல் அவனது பலஹீனத்தைப் பச்சையாய் அவள் புரிந்து கொண்டாள்.

சீதாராமன் தன் அறைக்குள் ஓடி அவசர அவசரமாகத் தனது துணிமணிகளையெல்லாம் வாரி இரண்டு சூட்கேசுக்குள் அடைத்துக் கொண்டு ஹாலுக்கு வந்தான்.

அப்போது கடிதப்பெட்டியில் ஒரு கடிதம் நீட்டிக் கொண்டிருப்பதைப் பார்த்து இரண்டு சூட்கேசுகளையும் கீழே வைத்துவிட்டு நடுவில் நின்று கடிதத்தை எடுத்துப் பிரித்தான்.

குழந்தைகளிரண்டும் தங்களைச் சுற்றி என்ன நடக்கிறது என்று புரியாமல் கமலா வாங்கிவந்த பிஸ்கெட்டுகளையும் சாக்லெட்டுகளையம் தின்று கொண்டிருந்தனர். ஒரு பெரிய 'காட்பரீஸ்' சாக்லெட்டைக் கடித்துப் பக்கத்தில் வைத்து விட்டு சிலேட்டில் என்னவோ மும்முரமாய் எழுதிக் கொண்டிருந்தாள் பெரியவள்.

சின்னவள் பதுங்கிப் பதுங்கி அவளருகே வந்து அவள் கடித்து வைத்த சாக்லெட்டை, அவளறியாமல் தானும் எடுத்து ஒரு கடி கடித்தாள்.

"ஏண்டி என்னோடதை எடுக்கறே? அப்பா, இங்கே பாரு" என்று அருகிலிருந்த தகப்பனை அழைத்தாள் உமா.

அவள் கத்தியதும் சின்னவள் லதா தான் கடித்த சாக்லெட்டை மீண்டும் அவளருகிலேயே வைத்துவிட்டுத் தள்ளி நின்றாள். உமா அதை எடுத்து, திருப்பித் திருப்பிப் பார்த்து "சீ! எச்சில் எனக்கு வேணாம்" என்று சின்னவளிடமே அதைத் திருப்பிக் கொடுத்தாள்.

சின்னவள் லதா அதை வாங்கிக் கொண்டு விழித்தாள்.

அவள் அதைத் தனக்கே திருப்பித் தந்ததும் எச்சிலைத் தின்னக்கூடாது என்றும் சற்றுமுன் அவள் எச்சிலைத்தான் தின்றோம் என்றும் அறிந்ததும், லதாவும் தன் கையில்

மூளியாய்க் கடிக்கப்பட்டு இருந்த அதே சாக்லெட்டைத் திருப்பித் திருப்பி அருசையுடன் பார்த்து,

"தூ! எச்சில்!... என்று தன் கையிலிருந்ததை வீசி எறிந்த பின், வாயிலிருந்ததையும் துப்பிவிட்டு வாயைத் துடைத்துக் கொண்டாள்!

அந்த எச்சில் சாக்லெட் சீதாராமனின் காலடியில் வந்து விழுந்தது.

அவன் அதைப் பார்த்தான். கையிலிருந்த கடிதத்தைப் பிடித்த பிடியில் கசக்கி எறிந்துவிட்டுத் தனது சூட்கேஸ்களை இரண்டு கைகளிலும் தூக்கிக்கொண்டு வாசற்படியில் விடுவிடென இறங்கினான்.

"இங்கே வாடி உமா- அப்பா 'ஓ' "போறார்" என்று கத்திக் கொண்டே பிறந்த மேனியாய் தெரு வாசற்படிக்கு ஓடிவந்தாள் லதா. அவள் பின்னாலேயே உமாவும் வந்து நின்றாள்.

தெருவில் இறங்கிய சீதாராமன் திரும்பிப் பார்த்தவுடன் அந்தக் குழந்தைகள் இருவரும் தங்கள் வழக்கப்படி தலைக்கு மேல் கையை உயர்த்தி "அப்பா... டாட்டா" என்று கூவி விரலசைத்தனர்.

சீதாராமனின் கண்களில்- சதா ஓர் அலட்சியமே மின்னி அந்த அலட்சியத்தையே ஒரு அணியாக அணிந்து அதுவே ஓர் அழகாக அமைந்து பலர் நடுவே அவனை ஒரு ஹீரோவாக்கிய அதே கண்களில்தான்- குளமாய்க் கண்ணீர் நிறைந்தது!

# சலிப்பு

அன்று ராசாக்கண்ணுக்கு ஏக குஷி! ஆமாம், வாரத்துக்கு ஒரு நாள் அவனுக்கு அப்படி ஒரு வியாதி வருவது வழக்கம். வியாதி வருவதற்கு நேரமென்றும் காலமென்றும் உண்டா? ராசாக்கண்ணுவைப் பொறுத்தவரை உண்டு.

அந்த நோய் பிரதி சனிக்கிழமை தோறும் காலை அரும்பி பகலெல்லாம் ஜெபமாகி மாலை மலரும்.

மாலை கழிந்துவிட்டால், அதன் பிறகு நோயின் உக்ரம். அதன் விளைவுகள் பல.

அந்தப் புனித தினமான, சனிக்கிழமையன்றுதான் அவனுக்கு வாரச் சம்பளமாக ரூபாய் மூன்று கிடைக்கும்.

மூன்று ரூபாய்!....

அடேயப்பா; வெள்ளிக்கிழமை இரவிலிருந்தே அவன் மனம் குதியாட்டம் போட ஆரம்பித்துவிடும்.

“சும்மா மொறைக்காதே... நாய்னா! ஒனக்கு ரெண்டு ரூபா தானே பாக்கி? என்னமோ ஒரேடியாக பேசிக்கினே போறியே! நாளைக்கு சம்பளம் வாங்கி மொதல்லே ஒங்கடனைத் தீர்த்திட்டுப் போறேன். அப்பாலே ஒனக்கும் எனக்கும் பாக்கி சாக்கி இல்லே...” என்று வெத்திலை பாக்குக் கடைக்காரனிடம் ஜவாப் சொல்லி விட்டு ‘மொதல்ல இந்த பய சள்ளையெத் தீர்க்கணும்?’ என்று மனத்திற்குள் முனகிக் கொள்வான் அதெல்லாம் மறுநாள் வரப் போகும் சனிக்கிழமையை நினைத்துக் கொண்டுதான்...

சனிக்கிழமை காலையில் வேலைக்குப் புறப்படும் போது, வரும் வழியில் ஆப்பக்கார கிழவி ராசாக்கண்ணுவைப் பார்த்து விடுவாள். ராசாக்கண்ணு மெல்ல மறைவான்.

"டேய், திருட்டு சோமாறி! கெய்வியே ஏச்சுப்புட்டுப் போவலாம்னு பாத்தியா?... அந்தப் பஜனையெல்லாம் எங்கிட்டே நடக்காதுடா, மவனே... மரியாதையா துட்டெக் கீயே வையி..." என்று சிம்மக் குரலில் கர்ஜிப்பாள்.

"ஏ! ஆயா, உன் துட்டைத் தூக்கிக்கினா பூடுவேன்? ஒரேடியா அய்வுறியே... ஒனக்கு எம்மாத்தம் பாக்கி? நாலு ரூபாதானே?... சாயங்காலம் சம்பளம் வாங்கி ரெண்டு ரூபா குடுக்கறேன். மீதி அடுத்த வாரந்தான்... சர்த்தானா... ஆயா... நாழியாச்சி... வேலைக்குப் போவணும்" என்று அவசரப்பட்டுக் கொண்டே கிழவியிடமிருந்து தப்பியோடுவான்.

கிழவி ஆபாச வார்த்தைகளால் அர்ச்சனை செய்தவாறே திரும்புவாள்.

"சும்மா கத்தாதே; சாயங்காலம்... வாங்கிக்க ஆயா..." என்று தூரத்திலிருந்து குரல் கொடுப்பான் ராசாக்கண்ணு.

அவன் வேலைக்குப் போகும் வழியில் ஒரு கல்லூரி. அங்கு நடமாடும் 'நாகரிகக் கோமான்களை' அவன் பார்வை வெறித்து வட்டமிடும்.

"அந்த மாதிரி 'புளு'விலே ஒரு புஷ்கோட் தைக்கணும்; நல்லதா ஒரு 'டவுசர்'; காலுக்கு ஒரு செருப்புனாச்சும் வாங்கணும்..." என்று அவன் மனசில் ஆசை நெளிந்து புரளும்.

"ஹூம்! சாயங்காலம் பணம் வாங்கிப் பார்த்துக்கலாம்.

"டிங்... டிங்" என ரிப்பன் பில்டிங் மணிக்கூண்டு நாதம் முழங்குகிறது.

"ஐயோ நாழியாச்சே!..." என்று பதறி ஓடுகிறான்.

அவன் வேலை செய்யும் சோப்புத் தொழிற்சாலையருகே ஒரு பெரிய சினிமா விளம்பரம். "அட, புதுப் படம்...

நாயித்திக்கிழமை தானே? நாளைக்கு... அதுக்கென்னா? போனாப்போச்சி.. குட்டி ஸோக்கா போஸ் குடுத்து நிக்கிறாளே.. அவளுக்கும்... க்கும் தான் ஜோடி?... இந்த மலையாளத்துக் குட்டிங்கதான் எப்படிகீறாங்க? நம்மூர்ப் பொம்பளைங்களையும் பாக்கலே... இதுங்க மூஞ்சியும் மோரையும்...

"ஏய், ராசாக்கண்ணு... நாழியாவலெ? சினிமாக்காரியப் பார்த்துக்கினே நிக்கிறியே. நாளைக்குக் கொஞ்சம் வச்சிக்கப்பா...

"யார்யா அது?"

சக தொழிலாளி மாணிக்கம் தான்.

"மாணிக்கம் ஒரு நாலணா இருந்தா குடு. 'டீ' குடிச்சிட்டு ஓடியாறேன்..."

"ஏங்கிட்ட ஏதுப்பா துட்டு?"

"சரிதாம்பா. குடு.. சாயங்காலம் சம்பளம் வாங்கிக் குடுத்துடறேன்"

"சொன்னா நம்ப மாட்டே. இப்பத்தான் 'டீ' குடிச்சிட்டு அரையணா பீடி வாங்கிக்கிட்டு வந்தேன். மீதி ஒண்ரையணா தான் இருக்கு. "

"அதெனாச்சும் குடு. என்று வாங்கிக் கொண்டு டீக் கடையை நோக்கி நடக்கிறான் ராசாக்கண்ணு.

'ஹூம். அவந்தான் இன்னா பண்ணுவான்? வாரச்சந்திக்கட்டு. சாயங்காலம் மாணிக்கத்துக்குத் திரும்பிக் குடுத்துட்டா போச்சி" என்ற சமாதானம் மனத்திற்குள்.

அன்று முழுவதும் அவனுக்கு வேலை மும்முரமாக ஓடுகிறது. மாலை மணி ஐந்து.

மானேஜர் ரூம் அருகே நிற்கும் வாரச் சம்பளக்காரர்கள் கூட்டத்தில் முதலிடத்தில் நிற்பவன் ராசாக்கண்ணு.

"ராசாக்கண்ணு" என்று கேஷியர் கூப்பிட்டவுடன் 'ஸார்' என்று ஒரே துள்ளலில் மேசையருகே போய் நின்றான்.

மூன்று ரூபாய்!

அவன் கையில் மூன்று ரூபாய்!

அவ்வளவுதான்! அதன் பிறகு ராசாக்கண்ணுவை யார் பார்க்க முடியும்?

மாணிக்கம், வெற்றிலை பாக்குக் கடைக்காரன், ஆப்பக்காரக் கிழவி எல்லோர் கண்களுக்கும் அவன் மாயமனிதனாக மாறிவிடுவான்.

அன்று அவன் கம்பெனியைவிட்டுத் திரும்பிப் போகும் வழியே புது வழியாக இருக்கும்.

கையிலே மூன்று ரூபாய்.

மனசில் ஏக குஷி!

அதுதான் சனிக்கிழமை!

அதோ! ராசாக்கண்ணு பிராட்வேயில் பிளாட்பாரத்தின் மீது பாதத்தருகே தார் தாராகக் கிழிந்து தொங்கும் முழுக்கால் சட்டையின் பாக்கெட்டுக்குள் கைகளை நுழைத்துக் கொண்டு சிரம் நிமிர்த்தி அலட்சியமாக நடக்கிறான். அவன் சட்டையும் நிஜாரும் கிழிந்து, அழுக்கின் தடிப்பேறித்தான் இருக்கின்றன. அதைப்பற்றி அவனுக்கு இப்பொழுது லக்ஷ்யமில்லை. கையில்தான் ரூபாய் இருக்கிறதே.

அவன் மனசில் என்னென்னவோ அர்த்தமற்ற சிந்தனைக் குழப்பங்கள். ஆனால் அவன் என்னதான் குஷியாயிருந்த போதிலும் தன் வயதொத்த நாகரீக வாலிபர்களை அவன் மனம் வெறுத்தது. கையில் சல்லிக் காசு இல்லாத சமயத்தில் அவன் மனம் அவர்களைக் கண்டு வியந்தது. பணம் இருந்தால் அவர்கள் மீது என்ன வெறுப்பு! "சீ, என்னா மனுசனுங்க? ஸ்டைல் என்னா ஸ்டைல்... நாறப்பசங்க!" என்று சலித்துக் கொண்டான்.

"சீ! இது வேறே நடக்கச்சே தடுக்குது–" பாதங்களுக்கருகே நைந்து கிடக்கும் கால் சட்டையின் கிழிசலைப் பக்குவமாகப் பிய்த்தெறிந்தான். கையிலிருந்த மங்களூர் பீடியை ஒரு 'தம்' இழுத்து விடுகிறான். மார்பைக் கொஞ்சம் முன்னுக்குத் தள்ளி, தன் உடைகளை ஒருமுறை பார்த்துக் கொண்டு திருப்தியோடு நடக்கிறான்.

சட்டையின் தோள்பட்டையிலிருந்து மார்புவரை நாலு அங்குலத்திற்கு ஒரு கிழிசல்... என்னதான் சேர்த்து வைத்தாலும் காற்று அடிக்கும்போது விலகிக் கொள்கிறது. உடம்பெல்லாம் தெரிகிறது. அசிங்கம் பிடித்த மாதிரி!

சட்டையை இழுத்துவிட்டு ஒருவாறு அதை மறைத்துக் கொள்கிறான்.

'வயித்தெப் பசிக்குதே? மத்தியானம்கூட சாப்பிடலே."

எதிரே ஒரு முஸ்லீம் ஹோட்டல். உள்ளே நுழைகிறான். ஒரே கூட்டம்; பீங்கான் தட்டுகளும், கண்ணாடித் தம்ளர்களும் இடிபடும் ஓசை!

கரகரத்த ரேடியோ சங்கீதம் ஏதோ ஹிந்திப் பாட்டை... வெடித்துக் கிளப்பிப் பொரிகிறது!

ஹோட்டலுக்குள் நுழைந்த ராசாக்கண்ணு, கை கழுவி, முகம் கழுவி பேசின் அருகேயுள்ள கண்ணாடியில் முகம் பார்க்கிறான். தலையைச் சரிப்படுத்திக் கொள்கிறான். சட்டைப் பையில் சில்லறை குலுங்குகிறது. மேஜையருகே உட்காருகிறான்.

"யாரப்பா அது? அரைப் பிளேட் பிரியாணி குடு" என்று உத்திரவு போடுகிறான்.

ரேடியோவில் ஹிந்திப் பாட்டு தாளத்தோடு அவனை ஆகர்ஷித்தது.

"ஹம்ஸே னா பூச்சோ பூச் பியார் கியாஹை! பூச் பியார் கியா ஹை! பூச்சோ பஹாரு ஸே... ஏ... ஏ...! பூச்சோ பஹாருஸே... ஓஹ்ஹஹிஹோ....' அந்த அடிகளைப் பாடிக்கொண்டு மேஜை மீது தாளம்போடுகிறான், ராசாக்கண்ணு. அவன் மனம்

இப்பொழுது சந்தோஷமாக, நிர்விசாரமாக இருக்கிறது– ஆனால் இந்த 'வியாதி' அவனுக்கு நிரந்தரமானது அல்ல.

பாட்டு முடிந்தது.

"ஏய், யாரப்பா அது... பிரியாணி கேட்டேனே... சை! என்னடா ஓட்டல் நடத்துறீங்க?" என்று அலுப்புடன் சர்வரை நோக்கி முறைக்கிறான்.

"என்னய்யா, ரொம்ப அவ்ஸரப்படறே?–" என்று பதிலுக்கு முறைக்கிறான் அருகே நின்றிருந்த சர்வர்.

"டேய், மூஞ்சியெப் பேத்துடுவேன்!... சோமாறி... எவ்வளவோ நாழி மனுசன் ஒக்காந்திருப்பான்?... கேட்டா மொறைக்கிறே!..." என்று எரிச்சலுடன் எழுந்திருக்கிறான். பக்கத்திலிருந்தவர்கள் அவனைச் சமாதானப்படுத்துகின்றனர்.

"என்னடா நெனைச்சிக்னே, ஒம் மனசுலே?" என்று கருவுகிறான் ராசாக்கண்ணு.

ஹோட்டல் முதலாளி உருதுவில் என்னவோ சொல்லி சர்வரை விரட்டுகிறார்.

சிறிது நேரத்தில் பிரியாணி வருகிறது. வெங்காயமும் மசாலா நெடியும் சேர்ந்து ஒருவித கந்தத்தை ஆவி கிளப்புகிறது!

"என்னாங்கடா கறியையே காணாம்?... இந்த ஓட்டல் மகா மட்டம்!" என்று சர்டிபிகேட் கொடுத்து விட்டுக் கையைக் கழுவுகிறான்.

"ஒரு 'டீ' கொண்டாய்யா...

"ஏக் சிங்கிள் சாய்...

டீயைக் குடித்துவிட்டு மேசை மீதுள்ள பில்லைப் பார்க்கிறான்.

பதிமூன்றணா.

பில்லுக்குப் பணம் கொடுக்கிறான்.

"என்னாப்பா, பிரியாணியிலே கறி என்னா மரமாட்டம்?"

"என்னா சார், இன்னிக்கி 'பஸ்ட்கிளாஸ்' கறியாச்சே?"

"மூஞ்சி எரிஞ்சிது... நீயும் ஒன் கறியும்... என்று முனகிக் கொண்டே சில்லறையை எறிந்து விட்டு வெளியே வருகிறான். அருகே வெற்றிலை பாக்குக்கடை, பைக்குள் கை விடுகிறான். அவன் விரல்களில் ஒரு மங்களூர் பீடி. 'சீ! தரித்திரம்! இன்னிக்குமா பீடி?' அதை ஒடித்து எரிகிறான்.

"ஒரு பீடா குடு... ஒரு 'வில்ஸ்' குடு... சிகரட்டைப் பற்ற வைத்துக் கொண்டு சைனா பஜார் பக்கம் வருகிறான்.

அவன் இப்பொழுது யாரையும் மதிக்க மாட்டான். சாதாரண காரியத்திற்கெல்லாம் அவனுக்கு ஒரே கோபமாக வரும். இப்பொழுது எவனாவது சற்று நேரம் அவனை உற்றுப்பார்த்தால்... அவ்வளவுதான்! அதுதான் சனிக்கிழமை வியாதியின் பலன்!

எதிரே காலேஜ் மாணவிகள் கூட்டம் ஒன்று வருகிறது பல வர்ணங்கலில் 'டிஸ்யூ' ஜார்ஜெட் கிரேப்ஸில்க்!... தாவணிகள் காற்றில் பறக்க மோகப் பரவச நிலையில் சிரித்துப் பேசிக்கொண்டு ஒரே இரைச்சலுடன் 'எங்களுக்கு நிகர் எவரே' என்ற ரீதியில் வருகின்றனர் அப்பெண்கள்.

ராசாக்கண்ணு சட்டையின் காலரை உயர்த்தி விட்டுக் கொள்கிறான் ஒரு பெரிய ஏப்பம் விட்டுக் கொண்டே அவர்களை ஒரு மாதிரியாகப் பார்க்கிறான். அவன் மனசில் என்னமோ ஒரு வெறி; ஒருவித அரிப்பு! அவர்களை வெறித்துப் பார்த்த வண்ணம், ஒரு மூச்சு, பலமாக சிகரட்டை இழுக்கிறான்.

புகைச் சுருள்கள் உள்ளே புகுந்து, தொண்டைக் குழியில் சுழன்று திரும்பி. 'குபுகுபு' வென்று வெளியே வருவதில்தான் என்ன ஆனந்தம்!

அவன் பார்வை அவர்களை என்ன செய்து விடும்? இது போன்ற எத்தனை விதமான, எத்தனை பேருடைய பார்வை

களுக்கு அவர்கள் ஈடு கொடுத்திருக்கிறார்கள்! அவர்கள் அவனுக்குச் சளைத்தவர்களா? விறைத்த பார்வையும் வெகுளிப் பார்வையும் மோதித் தெறிக்கின்றன. அவன் மனசில் எதுவோ சுண்டித் தெறித்தது போல், விண்ணனெறு நெக்கு விட்டது போல் என்னவோ ஒரு உணர்ச்சி! கழுத்து நரம்புகள் புடைத்துக் கொள்கின்றன. "ஹிருதய தாளம் கட்டு மீறித் தட்டுத் தடுமாறுவது போன்ற உணர்ச்சி! அவர்கள் 'பக்'கென்று சிரித்து விட்டனர்.

அவன் முகத்தில் ரத்தம் குழம்புகிறது. தலையைக் குனிந்து கொள்கிறான். அது அவனை மீறிய உணர்ச்சி! அவர்களைக் கடந்து செல்கிறான். திரும்பிப் பார்க்கிறான். அவர்கள் அவனைப் பார்த்துச் சிரிக்கின்றனர்.

அவன் மனசில் எங்கோ போய் ஒளிந்து கொண்ட குறும்புத்தனம் தலை கிளம்புகிறது....

"ஹம்ஸேனா பூச்சோ... பூச்பியாருக் கியா ஹை. என்ற ஹோட்டல் ரேடியோ பாட்டை முணுமுணுக்கிறான்.. பஸ் வருகிறது.

காலேஜ் மாணவிகள் பஸ்ஸில் ஏறுகின்றனர். அவனும் ஓடி அதே பஸ்ஸில் ஏறுகிறான்.

அவனைக் குறித்து அவர்கள் ஆங்கிலத்தில் ஏதோ பேசிக் கொள்கின்றனர்; சிரிக்கின்றனர். தலைக்கு மேல் தொங்கும் தோல் வார்ப் பிடியை பிடித்துக் கொண்டு அவன் அலட்சியமாக வெளியே பார்த்துக் கொண்டிருக்கிறான்.

"டிக்கட்!"

"ஒரு டிரிப்ளிகேன்!" கடைசி வரைக்கும் வாங்கிக் கொண்டால் எங்கே வேண்டுமானாலும் இறங்கிக் கொள்ள லாம் அல்லவா?

அவர்கள் என்னவோ பேசுகிறார்கள்! அவனுக்கு எரிச்சல் பற்றிக் கொண்டு வருகிறது. எல்லோரும் அவனைப் பார்த்துத் தான் சிரிக்கிறார்கள். ஆங்கிலம் தெரிந்த வேறு சில

பிரயாணிகளும் அவர்கள் பேசுவதைப் புரிந்து கொண்டு அவனைப் பார்த்து நகைக்கின்றனர்.

ஒருத்தி முதுகில் ஒருத்தி விழுந்து முகத்தை மறைத்துக் கொண்டு சிரிக்கின்றனர்.

ஏன் சிரிக்கிறார்கள்?

அவனுக்கு ஆத்திரம் தாங்க முடியவில்லை.. தன்னையே ஒரு முறை பார்த்துக் கொண்டான். ஒரு கையை மேலே உயர்த்திக்கொண்டு அவன் நிற்கும் பொழுது வலது மார்பிலிருந்த நீளக் கிழிசல் விலகி, இடைவெளியே சருமம் தெரிந்தது... அவ்வளவுதான்.

அவன் உடனே கிழிசலை மறைக்க முயன்றான்.

சிரிப்பு பெருகிற்று

ஏதோ ஒரு ஸ்டாப்பில்-

எவனோ ஒருவன்- நாகரிக யுவன்- ஏறினான். லினன் பேண்ட், ஸ்லாக் ஷர்ட், மூக்குக் கண்ணாடி, கையில் சிகரெட்... கடைசி முறையாகப் புகையை இழுத்துவிட்டுக் கொண்டே உள்ளே ஏறினான். அவனைப் பார்த்த நாகரிகச் சீமாட்டிகள் 'ஹல்லோ' என்று ஒரு முகமாக வரவேற்றனர். என்னவோ பேசினர். அவனும் சிரித்தான்.

'ஹும். நா ஆம்பளை. என்மாரு வெளியே தெரிஞ்சா என்னவாம்? இந்தச் சிறுக்கிங்க ரெண்டையும் தெறந்து போட்டுகினு வர்ராளுங்களே!. .தூ!' என்று தனக்குள் சொல்லிக்கொண்டே வெளியே காறி உமிழ்ந்தான் ராசாக்கண்ணு.

"ஹேய்... இடியட்! பார்த்துத் துப்பக்கூடாது!" என்று முகம் சுளித்தான் மைனர்.

ராசாக்கண்ணுக்குப் பொன்னான சந்தர்ப்பம், நழுவ விடுவானா?

"ஏண்டா, பொறுக்கி நாயே? சோமாறிக் கய்தே!... இன்னாடா சொன்னே?. என்று பல்லைக் கடித்துக் கொண்டு அவன் மீது பாய்கிறான். அவனுக்கிருந்த ஆத்திரமெல்லாம் மூன்று நான்கு குத்துகளாக மாறி அந்த மைனரின் முகத்தில் வலுவுடன் விழுந்து, தன் ஆண்மைக்கு விட்ட சவாலை ஏற்றுக் கொள்கிறது.

"ஏண்டா?. பேண்ட் போட்டுக்கினா இன்னா வேணும்னாலும் பேசலாம்னு நெனைப்பா?. ." என்று உறுமுகிறான் ராசாக்கண்ணு.

மைனர் தடுமாறி நிற்கிறான். கைகால் உதற வாய் குழறுகிறது அவனுக்கு.

"இடியாட்டமில்லே. இடியட்!" என்று கருவுகின்றான் ராசாக்கண்ணு.

கல்லூரி மாணவிகள் நாகரிக சீமாட்டிகள் ஹாய்... ஹாய்... என்று அலறுகின்றனர். கண்டக்டர் ராசாக்கண்ணுவைப் பிடித்துச் சமாதானப்படுத்துகிறான்.

மைனருக்கு கண்கள் கலங்குகின்றன. "பின்னே இன்னா சார்... எடுத்த எடுப்பிலே 'இடியட்'டுன்னிட்டாரே. என்று எல்லோரும் ராசாக்கண்ணுவுக்குப் பரிந்து பேசுகிறார்கள்.

அடித்தவனுக்குப் பரிந்து பேசுவது 'மெட்ராஸ்' வழக்கம்!

"ஸ்டாப்பிங் ஹோல்டான்!" என்றான் ராசாக்கண்ணு. பஸ் மவுண்ட்ரோட்டில் நின்றது!

ராசாக்கண்ணு கீழே இறங்குகிறான்.

"டிரிப்ளிகேனாம், டிரிப்ளிகேன்... அங்கே என்னாடா நமக்கு வேலை...?" என்று டிக்கட்டைக் கசக்கி ஏறிகிறான்.

பஸ் நகர்கிறது!

பஸ்ஸின் பின்புறக் கண்ணாடி வழியாக காலேஜ் மாணவிகள் அவனை வெறித்துப் பார்க்கின்றனர். ஆனால் சிரிக்கவில்லை!

"தூ!"வென்று காறித் துப்பிவிட்டு, காசினோ தியேட்டரை நோக்கி நடக்கிறான் ராசாக்கண்ணு.

சனிக்கிழமை போய்விட்டது! ஞாயிற்றுக்கிழமையும் ஓடிவிட்டது!

அன்று திங்கட்கிழமை! கையில் சோற்று மூட்டை, அதே கிழிந்த நிஜார்; கந்தல் சட்டை, ராசாக்கண்ணு வேலைக்குப் போகிறான்.

அவன் மனம் நிர்விசாரமாகத்தான் இருக்கிறது. அவனுடைய ஆசைகள் மிகவும் குறைவானவை! அவை நிறைவேறாத பொழுது அவன் பெருந்த நஷ்டமேதும் அடைந்து விடவில்லை.

அவனுக்கென்ன பிக்கலா, பிடுங்கலா?

அவன் அம்மா எங்கோ அவனைப் போலவே கூலி வேலை செய்கிறாள். அவளுக்கும் அவனுக்கும் தாய்-மகன் என்ற உறவு மட்டுமே! பிறகு என்ன பிதுரார்ஜித சொத்து சம்பந்த உறவா இருக்கும்? அதற்குத்தான் வக்கில்லையே! சமயத்தில் இரண்டணா நாலணா உறவு ஏற்பட்டு விட்டாலே பெரும் ரகளை ஆரம்பமாகிவிடும்!

மணி ஒன்பதரை.

கம்பெனிக்கு லேட்டாக வந்திருக்கும் ராசாக்கண்ணுவைப் பார்க்கிறார் மானேஜர்.

"ஏய்... ராசாக்கண்ணு, ஏண்டா நாழி? கூலி மட்டும் கருக்கா வாங்கறே இல்லே? இந்த மாதிரி வந்தா ஒண்ணும் நடக்காது... ஆமா... சொல்லிப்பிட்டேன்.

"அதில்லே சார்...

"சரி... சரி... போடா, போயி வேலையெப்பாரு...

"அடேயப்பா இந்த நொள்ளக் காசு மூணு ரூபாயிக்கு அதிகாரத்தைப் பாரு... கூலி! தூ!... மானங்கெட்ட பசங்களா! இருங்கடா...? கேப்மாறிகளா...! ஒங்களுக்கும் ஒரு நாளு வருது... என்று முணுமுணுத்துக் கொண்டே வேலையில் முனைகிறான்.

*அவனும் என்றோ ஒரு 'நாளை' எதிர்பார்க்கிறானா? அது எந்த நாள்?*

*அவனுக்கு ஏன் அத்தனை சலிப்பு?*

*அன்று திங்கட்கிழமை!*

*இன்னும் ஒரு வாரத்திற்கு மாடாய் உழைத்தால் அவன் சொல்லுவது போல், 'நொள்ளக் காசு மூணு ரூபாய் கிடைக்கும். சனிக்கிழமை வீட்டுக்குப் போகும் போது வழிச் செலவுக்குக் கூட காண்பதில்லை அது.*

*இது நொள்ளைக் காசு தானே? இல்லாமல் வேறென்ன? மனுஷனுக்குச் சலிப்பு வராமல் என்ன செய்யும்? வரும், நன்றாக வரும்; வரத்தான் வரும்! வெள்ளிக்கிழமையன்று தானாகவே போகும். "சீ! என்ன பொழைப்பு?..." என்று சலித்துக் கொள்கிறான் ரா்சாக்கண்ணு.*